Koviloor Digital Library

ஒரு சொல் விளக்கம் (ஆன்மீகம்)

Acc No:-
36034



சிவசந்திரசேகரன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-2

பணிந்துரை

எல்லாம் வல்ல இறைவனின் திருக்கருணையினால் பதராய் திரிந்த எம்மை, பதர் தன்மை நீக்கி, தன் கருணை ஒளியைத்தந்து, இறையாற்றல் என்ன என்பதை உணர்த்தி, மனம் எல்லாம் அவன் வசமாய் மாறில்லா அன்போடு குறைவில்லா நிறைவோடு எந்நேரமும் அவன் நினைவாக்கி சிறை பெறா நீர் போல அவனது கருணை நீர் அருந்தப் பெற்றதினால் தெளிவான சிந்தனை தரப்பட்டு, வயப்பட்டு, பண்பட்டு, உடன்பட்டு, வழிப்பட்டு, நின்று, இருந்து, கிடக்கும் எம்மை ஆளாக்கிய எம்பெருமானின் திருக்கருணையின் பயனாய் "*சொல்லின் வொருள் உணரும்*" பண்பைக் கொடுத்து அதனை எம் அடியார்க்கு தெரிவிக்க விருப்பம் ஊட்டி சில ஆண்டுகளாய் அதனை கணிணி வழி அனுப்பிக்கொண்டிருந்தோம். அதனை தொகுத்து எமது புதல்வி செல்வி **C.S.கலைவாணி**யின் திருமண நிகழ்வு செல்வன் **V. பிரசாத்** அவர்களுடன் 04-12-2011ல் நடைபெறும் தினத்தில் வெளியீடு செய்வதில் மிக்கமகிழ்வுகொள்கிறோம்.

"வேண்டும் இன்ப அன்பு"

சிவ. சந்திர சேகரன்
சிவ சத்தியவேணி
சிவ கலைக்கோவன்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 36034

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-2

பதிப்புரை

இறைவனின் அருட்கடாட்சம் பல விதமாய் இருக்கின்றது. ஆதலால் பலரும் இறைவனின் அருளை பலவிதங்களில் பெறுகின்றனர். அவ்வகையில் **"ஒரு சொல் ஒரு விளக்கம்"** என்ற இந்நூல் சொற்களின் விளக்கத்தை ஆன்மீக வழியில் விளக்கம் தருவதாக இருப்பது மிக மகிழ்வாக இருக்கின்றது. இம் மகிழ்வை அனைவரும் பகிர்ந்து கொள்ளும் விதமாய் அய்யா **சிவ. சந்திரசேகரன்** அவர்களின் இவ்விளக்க நூலை அவர்களின் புதல்வி **C.S. கலைவாணி** அவர்களின் திருமண நாளில் வெளியிடுவதை மிக பெருமையாக எண்ணுகிறோம்.

இந்நூலின் சொல்லப்பட்டுள்ள விளக்கம் பலவகை பொது கருத்துகளாய் உள்ளது. புதிதாய் உள்ளது. அனைவரும் பயன்படும் வகையில் இருக்கின்றது. அனைவரும் இவ்விளக்கத்தைப் படித்து அறிய விரும்புகிறோம்.

J. ஹரிகிருஷ்ணன்
ஸ்ரீ சித்துக்கண் ஆப்செட் பிரிண்டர்ஸ்
திருச்சி - 8
செல். 96889 72001

பிரதிக்கு :-
ஆசிரியர் மற்றும் பிரிண்டரை அணுகவும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

1.இறையாற்றல்

இறைவனின் ஆற்றல் அளவிடமுடியாது. இது அனைவரும் அறிந்த ஒன்றுதான். இருப்பினும் அது ஏன் வெளிப்படவேண்டும் என்ற கேள்வி நம்முள் எழுந்து கொண்டே இருக்கிறது. இது மனதினால் முடிவு காண இயலாத வினாவாக ஒளிர்ந்து கொண்டே இருக்கிறது. அவ்வாறு ஆற்றல் வெளிப்பட்டால் அதன் இடம் பொருள் நேரமென்ன என்பதைப்பற்றி நம்மனம் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறது. இந்த ஆசை நிறைவேறா வரையில் அது சாந்தம் அடையப்போவதில்லை. நாம் இதன் விடையை காண முயன்று பார்ப்போம்.

அவரின் ஆற்றலைக்கான திருமாலும் பிரம்மாவும் காண ஆசைப்பட்டு வேறு வேறு உருவங்கள் எடுத்தும் காணமுடியாது பின் இறைவனின் அருளாலே அவன் தாள் பணிந்து எண்ணுதற்க்கு எட்டாத அவரின் கழலை இறைஞ்சியே விண்ணிற்க்கு சென்ற பிரம்மாவும் மண்ணிற்க்கு சென்ற திருமாலும் அவரின் ஆற்றலைகண்டனர் என்பதும் உண்மை.

ஆக இறைவனின் ஆற்றலைக்காண யாது செய்ய வேண்டும்? யாதாய் ஆகவேண்டும்? எப்போது காண முடியும்? என்பது சுட்டெரித்து கொழுந்து விடும் கேள்விகள். இதனை சுருக்கமாக கூறுவதென்பது வைரத்தை விட கடினமானது. இதனை விளக்குவதற்க்கு சிவபுராணத்தின் துணையை நாடினால் விடை கிடைக்கும் என்று தோன்றுகிறது.

நம்மை படைக்கும் போது நமது உயிருடன் அறம் பாவம் என்ற அருங்கயிற்றால் கட்டி அதன் மேல் ஒரு உருவம் தரும் பொருட்டு ஒரு பொம்மையை உருவாக்கும் பொருட்டு தன் கைப்பாவையாய் ஆட்டுவிக்கும் பொருட்டு புறத்தோல் போர்த்திவிட்டு புழுக்களின் உணவாக தசைகளையும் நார்களையும் கொண்டு கட்டி அதனை இயக்கும் கருவிகளாக மலம் சேர்ந்த இந்த உயிரிலிருந்து மலத்தை குற்றத்தை வினையை அறுப்பதற்க்கு மெய் வாய் கண் மூக்கு செவி மலவாய் ஜலவாய் கருவாய் மற்றும் மனம் என்ற ஒன்பது வாயில்களை அமைத்து அவற்றின் மூலம் உயிர் பண்பட்டு சுத்தமடைந்து யார் உருவகித்தார்களோ அவரிடமே உயிர் சுத்தமாய்

Koviloor Digital Library

சேர வழிமுறைகள் அமைத்து இந்த மண்ணுலகில் சுழல விட்டவரே ஆற்றல் உடையவர்.

அவர் இந்நிலத்தின் மேல் வந்து அருளி அவரது நீள்கழலினை காண நாம் என்ன செய்ய வேண்டும்? மன்றாடவேண்டும். முறையிடவேண்டும். மன்றாடி முறையிடும் நிலைக்கு நாம் தயார் ஆகிக்கொள்ளவேண்டும். எப்படி?. இந்த விலங்கு மனத்தால் உண்டான நிலையில்லா எண்ணவோட்டங்கள் கற்பனைகள் பயங்கள் நினைவுகள் தயக்கங்கள் சந்தேகங்கள் அனைத்தையும் நீக்கி அவர் அருளிய அந்த ஒன்பது வாயில்களான ஒன்பது பொறிகளை நல்ல விதமாக உபயோகப்படுத்தி நமது வினைகளை களைந்து அவன் முன் நிற்க வேண்டும். அதனை எவ்வாறு சாத்தியப்பட வைப்பது?.

இப்பொறிகளை இறைவன் இகபர சுகங்களை அனுபவிக்கத்தான் கொடுத்தார் என்றால் அது மூடத்தனம். இகபர சுகங்களை கொடுத்தது சுகித்து அதில் இறைவனின் ஆற்றலை கண்டு கொள்ளத்தான். நீரைக்கொடுத்தார் அதன் ருசியை அனுபவிக்க. அதனை நிறமின்றி படைத்தாரே அவரின் ஆற்றலை தெரிந்து கொள்ள. அதே நீரை பிற உயிர்களுக்கும் உதவும்படி அமைத்தாரே அவர் கருணையை உணர்ந்து கொள்ள. பூமியின் எல்லாப்பகுதியிலும் ஒரே மாதிரி நீரைக்கொடுத்தாரே அவர் ஈகையை புரிந்து கொள்ள. அந்த நீருனுள் ஆயிரமாயிரம் இயக்கங்கள் வைத்தாரே அவர் அன்பை அனுபவிக்க. இது போன்று தான் அவர் பஞ்ச பூதங்களை படைத்தார். இப்பஞ்சபூதங்களில் இறைச்சிந்தனையோடு இணைந்து இந்த மண்ணுலகிலேயே சொர்கத்தை காண விழைந்தார். அதுமட்டுமா? அஞ்ஞானம் தன்னை அகழ்விக்கும் நல்லறிவு கொடுத்தார். உண்மையில் அவர் பதம் இந்த மண்ணுலகில் தான் நிரந்தரம். நாம் இங்கு உள்ளவைகளை அனுபவிக்கும் முறையே அதனை உணர்த்தும்.

புல்லின் நிலையாக புழுவின் மனமாக மரத்தின் வைராக்கியமாக பல்விருகத்தின் பயனாக பறவைகளின் உணர்வாக பாம்புகளின் தன்மையாக கல்லின் வன்மையாக பேயின் குணமின்றி கணங்களின் சேவை செய்து அசுரரின் தொண்டு செய்து முனிவரின் யோகதவமியற்றி தேவரின் நிலையை அடைய வைப்பவரே அவர்தான். நாம் உணரவேண்டியதெல்லாம் பொய்யாயின எல்லாம் என்பதே.

ஆக நம்முடைய முறையீடு மன்றாடல் இறைவனிடத்தில் போக்குவாய் என் வினைதனை புகுவிப்பாய் நின்தொழும்பில் என்ற நிர்ணயத்தில் இருக்க வேண்டும். நல்ல காரியங்களுக்காக நமக்கு நன்மைகள் செய்வதற்காக இறைவனால் கொடுக்கப்பட்ட இந்த ஒன்பது கள்ளபுலக்குரம்பைகள் நமது கட்டுப்பாட்டில் இல்லாமல் செய்யும் சேட்டைகளை குற்றங்களை அழித்து ஏற்றுக்கொள்ள மன்றாடவேண்டும். இங்கு நல்ல விதமாய் இருக்க ஆக்கிய நம்மை அல்லல் பிறவி ஆகியதை அறுக்க அவரை தினம் வேண்ட வேண்டும்.

நாம் ஒன்றை மட்டும் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். ஏதும் நமதில்லை என்பதே. அனைத்தும் ஈசனாரின் வெளித்தெரியா ரகசியம் கண்களுக்கு புலப்படா காட்சி உணரவேண்டிய சூட்சும விளக்கம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். கறந்த பாலின் உள்ளே நீக்கமற கலந்து கிடக்கும் நெய் போல உள்ள இறைவனை அடியார்களின் உருவில் காணலாம். சிறந்த அடியார்கள் தரும் சிவசிந்தனைகளின் வாயிலாக அறியலாம்.

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி என்றே எந்நாளும் அவர் அருளிய அந்த கள்ள புலக்குரம்பைகளை அவரை தொழவே பயன்படுத்தி அவன் அருளால் உண்டான உயிர்களும் பொருள்களும் தான் நம்முடன் இருக்கின்றன என்ற சிவசிந்தனையில் அனைவரையும் சிவசெல்வர்களாய் அடியார்களாய் எண்ணி பலன் கருதாத சேவையை செய்ய வேண்டும். சிரம் குவிவாரினை ஓங்குவிக்கும் அச்சீரோன் நிச்சயமாக நம்மில் உள்ள குற்றங்களை போக்கி தன் பதத்தில் புகுவிப்பான்.

எந்த ஒரு ஆக்கமும் ஆக்கப்பட்ட மூல இடத்தை சென்றே அடையும் என்பது உண்மை. நிறங்கள் ஐந்துடைய எம்ஈசனா ஆக்கிய அந்த பஞ்ச பூதங்களின் சேர்கையான இப்பிறவி அவரை கலந்து அன்பாகி கசிந்து உள்ளம் உருகி நீர்கட்டி(பனிக்கட்டி) போன்ற நமது மனத்தை நீராய் உருக்கி நம் ஆருயிராய் நிற்பார். அவருக்கு ஏது இன்பம் துன்பம். அவர் அனைத்தும் கடந்த அத்தன் ஆற்றின்ப வெள்ளம் தோற்றச்சுடரொளி சொல்ல ஒண்ணாத நுண்ணுணர்வு அள்ள அள்ள உண்ணுவார்க்கு உண்ணார் அமுது அளவில்லா பெருமான் நள்ளிருலிலும் நட்டம் பயின்றாடும் நாதன் அவன்தான் தில்லையுள் கூத்தன்.

இப்பூமி தோற்றுவித்த காலம் தொட்டு எவ்வாறெல்லாம் மாறிவந்திருக்கிறது. இம்மாற்றங்களுக்கு காரணம் யார்?. இதை யார் செய்தார்கள் அல்லது யார் செய்து கொண்டு இருக்கிறார்கள்?

மாற்றமாம் இவ்வையகத்தின் வெவ்வேறு மாற்றங்களுக்கு ஏற்றபடி இறைவன் வந்து கொண்டேயிருக்கிறார். யுகதர்மங்களுக்கு உட்பட்டு அவரும் வந்து நின்று நிலைத்து வழிநடத்தி செல்கிறார். இரவு பகல் நுகராது நள்ளிருலிலும் நட்டம் பயின்றாடும் நாதனின் ஆற்றல் என்னவென்று உரைப்பது. அவர் வற்றாத அமுது. குன்றாத குணகுன்று. எண்ணிக்கையில் அடங்காத எண்ணிறைந்த எல்லை. விண்ணுமிறைந்து மண்ணும் நிறைந்து மிகுந்த விளக்கின் ஒளி போல் எங்கும் எப்போதும் பிரகாசமாக உள்ளவர். நிறங்கள் ஐந்து கொண்டு மண்ணில் வாழ்வோர் தொழவுமின்றி விண்ணோர் தொழவும் நிறைந்து உள்ளார். விண்ணோர்கள் அவரை நிறங்களாய் தான் காண முடியும் போலும். விண்ணின் ஜாலங்களிலும் அவன் நிறைந்து நிற்கின்றான் போலும்.

நாயினும் கீழாய் கிடந்து அலைந்து கொண்டு இருக்கும் நமக்கு இந்த பூவுலகில் தாயை முதன்மையாக கொண்டு வாழ்ந்தாலும் அத்தாயில் சிறந்த தாயாக நிற்கும் அத்தயாபரனைக் காண யாது வேண்டும்?. ஆதியாய்யில்லாமல் அந்தமாயிமில்லாமல் நீள அகலமில்லாமல் நெடுந்துயரான அவரை எவ்வாறு காணுதல் நன்று?. அவரின் திருவடியையே எண்ணி நடக்கும் எல்லாம் அவரின் நாடகமே என்று தியானித்து நமது அறிவை மெஞ்ஞான வழியில் நல்வழியில் செலுத்தி செய்யும் பணியை சிவனார்க்கு என்ற நிலை கொண்டு கூர்த்த மெஞ்ஞானம் பெற்று அந்த ஞானம் கொண்டு உணர்வதே முடிவானதாகும். ஈசன் உணர்வுபூர்வமானவர். ஆத்தன் அன்பு ரூபமானவர். விடங்கன் விடியலைத் தரவல்லவன். அய்யன் அருகில் இருப்பவன். பரமன் பாசத்தை பலன் கருதாது தருபவன். தானே வந்து நம்மை தக்க நேரத்தில் ஆட்கொள்பவன். நள்ளிருளிலும் நமக்காக நட்டம் பயின்றாடும் நாதன். ஆவனே தில்லையுள் கூத்தன். அன்பன். நண்பன்.நம்மை வழிநடத்த பண்படுத்த அவரினை உணர்ந்த அவரின் அவதாரம் சிவமாய் ஒளிர்ந்த மாணிக்கவாசகப்பெருமானார் அருளிய சிவபுராணம் நம் வாழ வேண்டிய நெறி முறையை தத்துவத்தை 95 வரிகளில் தொகுத்தளித்தார். இம்மந்திர பதிகமான சிவபுராணத்தினை ஓதி உணர்ந்தார் நிச்சயம் ஈசனாரின் இறையருளையும் மெய்யருளையும் பெறுவர் என்பது திண்ணம்.

Koviloor Digital Library

2.கருணை

நாம் வாழ்ந்து கொண்டு இருப்பதே ஈசன் கருணைதான் என்பதை அறியாதார் யாரும் இருக்க முடியாது. கருணை என்பது என்ன? கண்ணால் காண இயலுமா? காதால் கேட்க முடியுமா? அது ஒரு உணர்வு. அது ஒரு விளங்க இயலாத இன்பம். நிறமில்லாத அமுதம். வாசம் இல்லாத நறுமணம். பேச இயலாத சொல். பிரிக்க இயலாத அவன் செயல். அவன் மறக்காது நமக்களித்த பரிசு. நாம் மறவாது அவனுக்கு காட்ட வேண்டியது பணிவிடை ஒன்றே.

சிவனாரின் கருணை அளவிட முடியாது. எல்லா உயிர்களும் அவர் உணவிலும் உணர்விலும் தான் வாழ்கின்றன. இது எவராலும் மறுக்க இயலாது. ஆன்மீகத்தில் மிதந்து கொண்டு இருந்தாலும் திளைத்திருந்தாலும் ஈசனாரின் கருணையை உணராமல் இருக்க இயலாது. வாழ்க்கை சக்கரத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் அவரின் அத்தன்மை புலப்படும். இதுவே இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடும் கதை. உணர்ந்தார் உய்வடைகிறார்கள். உணர என்ன வழி? என்ன வழி என்று எண்ணம் வந்து விட்டால் அதுவே அவரை நெருங்கிவிட்டதற்கான அறிகுறி.

வாழ்வில் இன்பம் துன்பம் என்பது என்ன? இது போன்று ஏதும் இல்லை. ஆனால் நாம் நமக்கு சாதகமாய் இருப்பதை இன்பமென்றும் அது அல்லாததை துன்பம் என்றும் வேறுபடுத்தி பார்க்கின்றோம். இது சரியா? நடப்பன முன்பே முடிவான முடிவு. இதை உணர்ந்து கொள்ளும் பக்குவநிலை தருவதுதான் ஆன்மீகம். அப்பக்குவ நிலையை அடைய பல படிகட்டுகள். பல வழிமுறைகள். பல ஆச்சரியமான நிகழ்வுகள். அனைத்தும் அவன் செயல் தான் என்பதை விளக்கவேண்டியதில்லை.

இறைவன் ஈயவேண்டும் என்று எண்ணிவிட்டால் தடுக்க எவரும் இல்லை. இதையே மாணிக்கவாசக பெருமானின் சிவபுராணம் "காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே' அவரின் திருவாசகத்தில் ஆனந்த கீதப்பகுதியில் "மாறிலாத மாக்கருணை வெள்ளமே' என்றும் வியந்து உணர்ந்து பாடுகிறார். இவர் நேரடியாக ஈசனாரின் கருணையை அனுபவித்தவர். இறைவனை கண்டவர். ஆகவே தான் மாக்கருணை வெள்ளம் என்கின்றார். அவரின் அனுபவம் நமக்கு பாடம். வழி.

எனவே நமக்கு ஒவ்வாத நிகழ்வுகளை துன்பம் என்று எண்ணாது அவையும் வாழ்வின் ஒரு அங்கம் என்று எண்ணப் பழகுதலே ஈசனாரின்

Koviloor Digital Library

இன்னடி ஏக சிறந்த நிலையான துரிதமான நல்வழி. அது இறைத்தொண்டால் நமக்கு என்ன முடியும் என்று திறனாய்வு செய்து செயல்படுத்துதலே சாலச்சிறந்தது. இதையே " பூவொடு நீர் சுமக்கும் " என்று பாடி பரவுகின்றார் திருஞானசம்பந்தர். நாமும் அவ்வாறே செய்தல் நலம்.

3. இருள்

இருளை அனுபவிக்காதவர் யார்? இருள் என்று உணர்ந்து கொள்வது எப்போது? அனைத்திற்க்கும் விடை ஒளி என்பது தான். வெயிலின் அருமை நிழலில் என்பார்களே அது போன்று. ஒளி இல்லாவிட்டால் இருளை பற்றி கவலைப் படுவோர் யார்? ஆக ஒளி என்பது இருளின் உள்ளே ஒளிந்து கொண்டு இருக்கிறது. இருளில் அனைத்தும் ஒன்றாகத்தானே இருக்கிறது. ஒளி வரும்போது வித்தியாசம் தெரிய ஆரம்பிக்கிறது.

ஆக உள்ளே ஒளிர்ந்து கொண்டு இருக்கும் ஒளியை எவ்வாறு பரிமளிக்க செய்வது. அதற்க்கு இறையனாரின் துணைவேண்டும். அவரின்றி ஓர் அணுவும் அசையாது. காரணம் அவரே அதுவாய் இருக்கின்றார். அவரே அதனுள் இருக்கின்றார். அவரன்றி வேறு யாரும் அதை செய்ய இயலாது. அதனை அவர் செய்விக்க அவரை நாட வேண்டும். நாடாமல் செய்விக்கவும் வருவார். அவ்வாறெனில் அதன் தாக்கம் தாங்கவொண்ணாது.

அறிவில் இருள் மனதில் இருள் எண்ணத்தில் இருள் இயக்கத்தில் இருள் என்று பல்வேறு நிலைகளில் இருள் மண்டி அலைந்து திரிகின்றோம். நிலையில்லா எவற்றிற்க்கோ நிலையின்றி அலைகின்றோம். செய்வது இன்னதென்று அறியாது செய்கின்றோம். இருளோடு வாழ்ந்து ஒளியின் இன்பம் உணராது இறந்து போக துடிக்கின்றோம். சில நேரங்களில் அதன் தாக்கம் பொறுக்காது துவண்டும் போகின்றோம். இதற்கு வழி ஈசனாரை இறுக பற்றிக்கொள்வதை தவிர்த்து வேறு என்ன இருக்க முடியும்.

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே- என்கின்றார் மாணிக்கவாசக பெருமான் தன்னுடைய சிவபுராணத்தில்.

இருள் கடிந்து அருளிய ஊர்தி - என்றும்
இருள் கெட அருளும் இறைவா போற்றி - என்றும்
இருளே வெளியே இகபரமாய் இருந்தவனே-

Koviloor Digital Library

என்று திருவாசகத்தில் பாடி பரவுகின்றார்.

ஆக நம்முள் இருக்கும் இருளை போக்க சிவனாரை வேண்டுவதைத் தவிர வேறு முகாந்திரம் இல்லை என்பதே உண்மை. நம்முடைய தின இயக்கத்தை இறைவன் பால் இறுத்திக் கொள்வது போன்று மாற்றிக் கொள்ள வேண்டும். முழுமையான ஈடுபாடு கொள்ள இயலாவிடினும் சில மணித் துளிகளேனும் இறைவனை ஏகுதல் நலம். அங்கு தான் இறைவனா? இங்கு இல்லையா என்ற கேள்வி எழுமே யானால் அக்கேள்வியிலேயே பதில் உண்டு என்பதை அவர்களே உணர்வார்கள்

அல்லது உணர்த்ப்தபடும்.

4.அருள்

இறைவனார் ஐந்தொழில் செய்பவராய் சொல்லப்படுகிறது. அவை படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்பதாகும். அருளல் என்பது கடைசியாகத்தான் தரப்படுகின்றது. அந்தந்த உயிரின் நிலையறிந்து அருளால் நடைபெறுகின்றது. அந்நிலை இம்மண்ணுலகில் உழலும் பொழுதே நிர்ணயிக்கபடுகிறது. அந்நிர்ணயத்திற்க்கு பல்வேறு சோதனைகள் இடப்படுகின்றது. அவை நமக்கு இடர்களாய் படுகின்றது. காரண்ம் அனைத்தும் நாம் எதிர்பாரததாய் இருப்பதுதான். அவைகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எதையும் எதிர் நோக்காது இருக்கும் போது அடையப்பெறுகிறோம்.

நாம் படைக்கப்பட்டு காக்கப்படும் போது கடைசியில் உள்ள அருள் பெறுவது எக்காலம்? இறைவனின் அருள் நிச்சயம் உண்டு. எவ்வாறு? அழித்தலையும் மறைத்தலையும் நாம் இந்த ஊன் உடம்பை தவிர்த்து உயிருக்கு காட்ட பயிலவேண்டும். அப்பயிற்சி இறைவனின் துணையல்லாது செய்வது பெரும் இடர் ஆகும்.

உலக சூழலில் சிக்குண்டு இன்பம் என்று எண்ணி துன்பத்தையே பெறுகின்றோம். முள்செடியை தின்று அதனால் வழியும் இரத்தம் தன் இரத்தம் என்று அறியாது செடியின் ருசி என்று ஏமாந்து சுவைக்கும் ஒட்டகத்தை போன்றுதான் நம் வாழ்'க்கை சுழல்கின்றது.

அருள் என்பது என்ன? அது இறைவனின் ஆற்றல். அது நூறு கோடி மின்னலுக்கு ஒப்பானது என்று புராணங்களும் வேதங்களும் கூறுகின்றன. ஒரு மின்னலின் தாக்கத்தை தாங்க முடியாத மனித ஊன் உடல் எவ்வாறு அருள் பெற்றதாக ஆகும். அது மூளையின் பலகீனம் இல்லாது வேறு ஏதாக இருக்க முடியும். ஆயிரமாயிரம் அருளாளர்கள் தோன்றி பல அதிசயங்களை நிகழ்த்திய பூமி இது. அவர்கள் யாரும் குதிப்பதில்லை குடிப்பதில்லை குலாவி அலைவதும் இல்லை. குறை குடம் கூத்தாடத்தான் செய்யும். ஆனால் அவன் கூத்தின் முன் இவையெல்லாம் தூசுதான்.

அருளார்களால் மட்டும் எவ்வாறு முடிந்தது? அவர்களின் கட்டுப்பாடான வாழ்க்கை முறை உயிர்களுக்கு உதவும் உயரிய நோக்கம் பக்தியின் வலிமை பரமனோடு அவர்களுக்கு இருந்த தொடர்பு அவர்களின் குறிக்கோள்களின் மேல் அவர்கள் கொண்ட திடமான எண்ணம் இறையானரின் அருள் இருந்தும் அவர்கள் வாழ்ந்த எளிய வாழ்க்கை இவைதான் காரணமாய் இருக்க முடியும் என்பதைத்தவிர வேறு ஏது தெளியமுடியும். இறந்த பிணத்திற்க்கு உயிர் கொடுக்கவும் அஸ்தியாய் போன அழகிய பெண்ணுக்கு உயிருடன் உருவும் இன்றைய விஞ்ஞானம் தருமா? அது அருளாளர்களால் மட்டுமே முடியும். இது தான் அருள். மற்றவை எல்லாம் இருள்.

5.விருப்பு

இது நிறைவேறிவிட்டால் மனம் மகிழ்கிறது. இல்லையெனில் துன்புறுகிறது. ஆக இது மனம் சம்பந்தபட்டதாக தெரிகிறது. மனம் எங்கே இருக்கிறது? என்ன செய்து கொண்டு இருக்கிறது? புரியாத புதிராக இருக்கின்றது. மூளையின் ஒரு பகுதி இதற்காகவே இயங்குதென்று கூறுகிறார்கள். இது இப்படி இருக்கட்டும். விருப்பு என்பது என்ன என்பதை ஆராய்வோம். பல உணர்வுகளின் கடைசி முடிவானதாக விருப்பு அறியப்படுகிறது. இதுவும் ஒரு உணர்வுதான். ஆனால் மனதில் மறைந்துள்ள ஆசையின் வெளிப்பாடு. புர்வ புண்ணியங்களின் மேல்பூச்சு. அதன் அலங்காரம். ஆகையால் விருப்பு நிறைவேறுகையில் மனம் இன்புறுகிறது.

நம்மோடு இணைந்து வந்த அந்த இருவினைகள் அமைதியாய் இருப்பதில்லை. உடம்பின் ஒன்பது வாயில்களின் வழியாக பெறப்படும் அந்த இந்திரிய சுகங்களின் ருசியே இந்த விருப்பு. இது தூக்கி எறியப்படவேண்டிய ஒன்று. நம்மை நாசம் பண்ணுவதற்கும் (நமனின்

Koviloor Digital Library

அருகில் செலுத்துவதற்க்கும) நம்வினைகளால் ஏவப்படும் அரக்கன். மிக வலிமையானவன். மிக மிக கொடுரமானவன். இவனிடம் இருந்து தப்பிக்க அய்யனை நாடுவதை தவிர வேறு வழியில்லை.

தேனின் சுவையில் விருப்புற்று உடம்பை புண்ணாக்கிய கதை நாம் அறிந்ததுதான். விரும்பி மணம் செய்து வெதும்பி உள்ளவரும் உண்டு. இறைவன் அளித்ததை அது துன்பமாயினும் இன்பமாயினும் விரும்பி ஏற்போருக்கு இடர் வந்ததாய் சான்றுகள் இல்லை. மனம் பக்குவப்படவைத்து அதன் மூலம் அவனை உணர வைப்பது தான் பரமனின் கருணை.

விருப்பும் வெறுப்பும் அற்ற அவன் தன் ஆக்கங்கள் அவதியுறும் போது அருகமர்ந்து அணைத்து அறவழிகாட்டி அன்பு காட்டி அற்புதங்கள் பல நிகழ்த்துகிறான். தன் விருப்பாய் கருத்தில் இருத்தி வழிகாட்டுகிறான் என்பது தான் உண்மை. சதா அந்த சதாசிவத்தை நினைத்திருந்தால் சாவு கூட சலனமற்று போகுமென்பதும் உண்மைதானே.

6.பெருமை

மனம் திறந்து வாயால் பேசப்படும் வார்த்தைகள்தான் என்று இல்லை உள்மனம் எண்ணும் எண்ணம் கூட நன்மை பயக்கும். நமக்கு அணுசரணையானவற்றை பெற இது தேவைப்படுகிறது. மனதினில் பலவிதமான எண்ணங்கள் இருப்பினும் இதை உபயோகப்பட எத்தனிக்கும் போது எவையெல்லாம் சொல்லப்பட்டால் நம்மவர் குளிர்வாரோ அவைகளையே மனம் வெளிப்படுத்துகிறது. அதனால் மனம் அதாகவே மாற பழகிக் கொள்கிறது. காரியம் வேண்டி பெருமை பேசாது காணும் போதெல்லாம் நல்லவைகளாய் மனதிலிருந்து எடுத்து பேசுவது நன்மை பயக்கும்.

அண்டம் அலற கர்ஜித்த நரசிம்மரின் கர்ஜனை பிரகலாதனின் பெருமை வார்த்தையால் அடங்கி போனது. அடிமுடி காண இயலாது அனல் உருவாய் நின்ற எம்பெருமானின் உரு பிரமன் திருமாலின் பெருமை வார்த்தையால் அவர்களுக்கும் தரிசனம் தந்தது. எம்பெருமானின் ருத்திரதாண்டவம் உயிர் இனங்களின் பெருமை வார்த்தையால் ஆனந்ததாண்டவமாய் காட்சி அளித்தது.

நமக்கு நன்மையே செய்யும் இறைவனை நாம் பெருமை பேசி மகிழ்வதில் இன்பம் பெருகவே செய்யும். அதனால் நம் மனமும் குறை பேசா மனமாக மாறிவிடும். அவ்வாறு மாறுதலே நல்ல முன்னேற்றமாகும். வாழ்வில் இன்பம் சூளும். மனம் விசாலமடையும். வேற்றுமைகள் ஒழியும். தீவினைகள் அகலும். நரகமாய் அனுபவப்படும் இப்பூலோகம் சொர்க்கபூமியாய் தெரியும்.

எந்த ஒரு காரியமும் ஒரு காரணத்தோடுதான் இயங்குகிறது படைக்கப்பட்டும் இருக்கிறது. அதனை நன்மையே செய்யும் நோக்கில் நமக்கு அளித்த இறைவனின் பெருமை பேசி பாடி மகிழ்வதைத்தவிர வேறு எதில் இன்பம் காண இயலும். உலக வாழ்க்கையில் முடிவு என்ன? முடிவே அறியாத ஒரு வாழ்வை வாழ்ந்து கொண்டு முடிவான விசயங்கள் என்று எதை செய்வது?. எல்லாம் அவன் கையில் இருக்கும் போது நாம் ஏன் முடிவை முடிவு செய்யவேண்டும்? பின் அதனால் வருத்தமுற வேண்டும்.

மனத்தை பஞ்சாக மாற்ற இது ஒரு நல்ல வழி. மனத்தின் அழுக்கை போக்க ஒரு மருந்து. மனத்தை இறைவனிடம் செலுத்த ஒரு நல்ல வழித்தடம். இறைவன் நம்மை ஆட்கொள்ள ஒரு எளிய வழி. ஆகவே இறைவனின் பெருமை பேசுங்கள். அவன் புகழினை பாடுங்கள். அதில் சுதி லயபேதம் தேவையில்லை. அனுபவம் தேவையில்லை. பயிற்சி தேவையில்லை. பாண்டித்தியம் தேவையில்லை. தேவையெல்லாம் நாம் அவனுக்கு செய்யும் சேவையே. இச்சேவையை செய்வதற்க்கு வசதி ஒரு பொருட்டல்லவே. எந்நேரமும் இறைவனின் பெருமையை நினைத்த வண்ணம் இருப்பதும் அதில் திளைத்த வண்ணம் இருப்பதும் ஆனந்தம் கலந்த இன்பம் தான். அனுபவித்து

பாருங்கள். புரியும்.

7.மாற்றம்

நம்முள் தினம் தினம் ஏற்பட்டு கொண்டே இருப்பது. மனத்தாலும் உடலாலும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இது நடவாது இருந்தால் என்ன ஆகிவிடப்போகிறது? முன்னேற்றம் இருக்காது. தெளிவு உண்டாகாது. ஞானம் பிறக்காது. நல்லவை உணரப்படமாட்டாது.

மனித உயிரிலிருந்து எல்லா உயிர்களும் ஒரு மாற்றத்தை கண்டுதான் இருக்கின்றன. மாறியவைகள் எங்கே போயின? புரியவில்லை அல்லவா? மாறியவைகள் எங்கும் போய்விடவில்லை.

Koviloor Digital Library

இங்குதான் இருக்கின்றன. வேறு உருவில் வேறு நிலையில். அன்று கல்லாய் இருந்தது இன்று மண்ணாய் கிடக்கின்றது. மரமாய் நின்றது கரியாய் போனது. கரியாய் போனது வைரமாய் மின்னுகின்றது. டார்வின் தத்துவமாய் இருந்தாலும் மாறது சில இயக்கங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

மாறும் மாறா இயக்கங்களின் நாயகன் மாறாது இருக்கின்றன். அவன் இன்அருள் மாறாதது. மனித இனமாயினும் மிருக இனமாயினும் எந்த இனமாயினும் அவன் கருணை அருள் மாறது நிற்க்கின்றது. மாற்றங்களின் மூலகாரணமாய் இருக்கின்றான். ஆகையால் தான் உலக நியதிகள் மாறவில்லை. உருவங்கள்தான் மாறியிருக்கின்றன. கருப்பொருள் மாறவில்லை கருக்கள் தான் மாறியிருக்கின்றன. மாறியிருக்கின்றன என்பதைக்காட்டிலும் மாற்றப்பட்டு இருக்கின்றன என்பது உண்மை. மாற்று வித்தவன் அந்த மகேஸ்வரன் அன்றி வேறு யாராய் இருக்க முடியும்?

அவன் மட்டுமே மாற்றம் இல்லாதவன். அவன் மட்டுமே மாசு இல்லாதவன். அவன் மட்டுமே அவனாய் நிற்பவன். இதையே பகவத் கீதையில்(கடவுள் மனிதனுக்கு சொன்னது) பகவான்

எதைக்கொண்டு வந்தாய் எதைக்கொண்டு போவாய்
இன்று உன்னுடையது நாளை வேறு யாருடையதோ

இதையே மாணிக்கவாசகபெருமான் தம் சிவபுராணத்தில்(மனிதன் கடவுளிடம் சொன்னது)

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
திருமூலதேவரும் சூட்சுமமாய் தன் திருமந்திரத்தில்
யார் யாரோ நட்ட குழி யார் யாரோ இட்ட கழி
என்றும் அம்மையின் அபிராம பட்டரும் தன் அபிராம் அந்தாதியில்
பொன்றாது நின்று புரிகின்றவா
என்று போற்றுகின்றனர்.

எனவே உலகின் மாற்றங்கள் அனைத்தும் அவன் செயலாய் நிற்கின்றது. அது போன்று நம்வாழ்வின் மாற்றங்கள் அனைத்தும் அவன் இயக்கத்தால் நடைபெறுகின்றது என்பதை

Koviloor Digital Library

உணர்ந்து மாற்றங்களை கண்டு கலங்காது மாற்றம் இல்லா அவன் தாளினை பற்றி அவன் நினைவாக வாழ்தலே நல்வாழ்வின் வழி.

8. ஆற்றல்

அளவில்லா ஆற்றல் உடையவன் இறைவனே. இதில் சந்தேகம் இருக்க முகாந்திரமே கிடையாது. இவ்வாறு சொல்வதற்க்கும் காரணம் இருக்கின்றது. என்னவென்றால் ஆற்றல் உள்ள அவனால் மட்டுமே விந்தைகள் செய்ய இயலும். ஒரு சிறு ஆலமர வித்திலிருந்து ஊருக்கே நிழல் தரும் பிரமாண்டமான ஆலவிருட்ச்சம் எவ்வாறு முளைத்து வரும்?. ஒரு பெரும் பூசணிக்காயை சிறு தண்டு எவ்வாறு தாங்கிக் காக்க முடியும்? ஒரே மாதிரியான அவயவங்கள் இருந்தும் ஒரே மாதிரியான உருவம் மனித இனத்தில் இல்லையே ஏன்? இதுபோன்று பலபல. அவைகள் யாவற்றையும் ஆக்குபவனாய் அவனே இருக்கின்றன்.

அவனின் ஆற்றல் அளவிடமுடியாததாக இருக்கின்றது. எல்லை இல்லாததாய் இருக்கின்றது. எங்கும் நிறைந்து இருக்கின்றது. விசித்திரமானதாயும் இருக்கின்றது. விளங்கமுடியாததாய் உள்ளது. வினாவினுள் வினாவாக விரிந்து பரந்து இருக்கின்றது. ஆற்றமிக்கவன் ஆதலால் தலைவனாய் இருக்கின்றான். ஒருவனாய் இருக்கின்றான்.

அவனின் செயலும் ஆக்கமும் இடைவிடாது நடந்து கொண்டுதான் இருக்கின்றது. அது தடைபடுவதும் இல்லை. தடுப்பவர் யாரும் இல்லை. நெருங்கும் அடியாருக்கு தன் அருள் கரத்தை நீட்டுகின்றான். அவர்களுக்கு வல்லமையை கொடுக்கின்றான். ஆவனை முழுமையாக உணரும் வாய்ப்பை தருகின்றான். உணர்வார்க்கு உணர்வாய் நிற்கின்றான். நம் உணர்வை அவன் மேல் விடும்போது நாம் ஒன்றும் இலாது ஆகிவிடுகின்றோம். ஒரு வித்தியாசமான உணர்வை பெறுகின்றோம். நம்மை சுற்றி நடக்கும் சிறு நிகழ்வானாலும் அதை அவன் ஆற்றலாய் காட்ட தயங்குவதில்லை. நாமும் அதை உணராது இல்லை.

உணர்வாய் அவன் கலந்து விடும் அந்த தருணத்தில் தான் நாம் இன்ப நிலையை அடைகிறோம். அவனை சுவைக்கின்றோம். அவனோடு கலக்கின்றோம். அவனோடு சிவமாய் அலைகின்றோம். இன்ப பெருக்கெடுத்து ஓடும் மனத்தின் நெகிழ்வில் ஆனந்த கண்ணீர் சொரிகின்றோம். இறைவன் நம்மோடு வருவதை உணர்கின்றோம்.

Koviloor Digital Library

அன்புக்காக உறவுகளிடம் உருகுவதும் காதலுக்காக காதலியிடம் உருகுவதும் வசதி வாய்ப்புகளுக்காக வருமானத்தின் மேல் உருகுவதும் வாழ்வதற்காக உணவின் மேல் உருகுவதும் இந்த உலகத்தில் வேதனையையே கொடுக்கும். இறைவனிடம் உருகுவதே இம்மைக்கும் மறுமைக்கும் இன்பத்தை கொடுக்கும். உணர்வாரை உணர்ந்து உருகினால் இவ்வுலகம் சொர்க்கமே. தனியாக சொர்க்கம் ஏதும் இல்லை.

10.மெய்

இதற்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. உண்மை என்றும் உடம்பு என்றும் கொள்ளப்படுகிறது. இரண்டு வேறுவிதமான அர்த்தங்கள் இருந்தாலும் இரண்டும் ஒன்றுதான் என்பதை யாரும் அறியாததாக இருக்கிள்றது. அவ்வளவு ஒற்றுமை. காரணம் அதனுள் அதே இருப்பதுதான்.

உண்மை என்பதை எடுத்து ஆராய்ந்தால் நிலையுள்ளவை மட்டும் உண்மை என்பது புரியும். நிலையில்லாத எதுவும் உண்மை இல்லை. நாம் வாழும் வாழ்க்கையும் அது போன்றுதான். ஆனால் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கும் இந்த புழு உடல் பூத உடலாகும் வரை மெய்தான். அதன் பின் மெய் இல்லை. வெறும் சாம்பல் தான்.

இரண்டும் இவ்வாறு இருக்க இதில் எது வெல்கிறது என்பதுதான் இந்த வாழ்வின் முடிவாக இருக்கிறது. மெய் அழிந்து விடுகிறது. உண்மை அழிவதில்லை. அல்லது எது அழிவதில்லையோ அதுதான் உண்மையாகிறது. அழியாதது ஊழிகாலம் முதல் உள்ள காலம் வரை நிலைத்து நிற்பது ஒன்றோ ஒன்றுதான். அது அவன் தாள் என்பதைத்தவிர வேறு ஏதாக இருக்க முடியும். உண்மையும் நன்மையும் அதுதானே.

என்றும் மாறாத நிலையான உறுதியான அவன் ஊழியை படைத்தும் ஊழியை புடைத்தும் காக்கின்றான். அது கண்கூடான உண்மைதானே. கோடானு கோடி உயிர்களை ஐந்தொழிலால் ஆட்படுத்தி அன்பாய் இருக்கின்றான். அவன் உண்மை பொருளாய் அல்லாவிடில் இது எவ்வாறு முடியும். அவன் எல்லா இடமும் எல்லா நிலையிலும் எல்லா வகையிலும் இருக்கின்றான்.

Koviloor Digital Library

இதனை தன் சிவபுராணத்தில்

மெய்யே உன்பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன் என்றும்

திருவாசகத்தில்

வெந்து விழும் உடல் பிறவி
மெய் என்று வினை பெறுக்கி ... என்றும்

மாணிக்கவாசக பெருமானார் உணர்த்துகின்றார்.

அதலினால் உண்மைப் பொருளை காண விழைந்தால் அறிய விருப்பு கொண்டால் இம்மையில் நமக்கு தரப்பட்டு இருக்கின்ற இப்பூதஉடலுக்கான சேவையை குறைத்து உடலில்லா பிறவிவேண்டி உண்மை பொருளாம் இறைவனை வேண்டுவதும் அவனுக்கு சேவை செய்வதும் தான் அவனை அடையும் வழி என்பதை உணர வேண்டும்.

ஆக உண்மை நிலையானது
உண்மை மென்னையானது
உண்மை நன்மையானது
உண்மையே உண்மையானது
உண்மையே இறையானது என்று கூறவும் வேண்டுமோ.

11.அல்லல்

மனிதவாழ்வு மயக்கம் உள்ளதாய் இருக்கின்றது. அம்மயக்கம் வாழ்வில் தொடருமேயானால் அது அல்லல் நிறைந்ததாக கருதப்படுகிறது. நம்மில் பலர் அம்மயக்கத்தை ஏற்றுக் கொள்ள அஞ்சுகிறோம். அஞ்சுவதால் அம்மயக்கம் நிலைபெயர்ந்து சென்று விடுவதில்லை. இதை நம்மனம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விட்டில் பூச்சி மீண்டும் மீண்டும் விளக்கில் வீழ்ந்து மாளுவதைப் போன்றும தான் கக்கியதை தானே உண்ணும் நாய் போன்றும் நாம் சூழலில் சிக்கி தவிக்கின்றோம். காரணம் அம்மயக்கத்தின் மீது நமக்கு ஒரு ஈர்ப்பு. அதனால் வேதனை அல்லல்.

இம்மயக்கத்தை கொடுத்தது யார்? இதனை யாரும் கொடுக்கவில்லை. நாமே சுமந்து வந்தோம். ஏன்? நம்முடன் வந்த முன்வினைகளை போக்க. ஆனால் அதையே வாழ்வின் பாதையாக நல்வழிகாட்டும் கருவியாக பயன்படுத்தினோம் அல்லல்லுருகிறோம். வணங்க வந்த நெருப்பை இணக்கமாக வைத்துக்கொள்ளாமல் அழிவுக்கு பயன்படுத்தி அல்லல்லுருகிறோமே அது போன்று. வாழவந்த நாம் பிறரை வாழவைக்காது அல்லல்லுருத்துகிறோமே அது போன்று. தேவையில்லா எண்ணங்களை மனதில் தேக்கி தேறுதல் தேடி அலைகின்றோமே அது போன்று. இப்படி எவ்வளவோ போன்றுகள். இதற்கெல்லாம் காரணம் நாம் அன்றி வேறு யாராய் இருக்க முடியும்.

நினைவில் நிற்பதே நிலையாய் நிற்க்கும். இது உலகநியதி. ஏதுவாக எண்ணுகிறோமோ அதாக ஆகின்றோம். சிந்தனை செய்து பார்த்தால் இதன் நுட்பம் புரியும். கீதையின் சாரமும் இதுவே.

இம்மயக்கம் தீர அம்மயக்கத்தை அருளினானே அவனை நாடுவதைத் தவிர வேறு வழி என்ன? கொடுத்தவன் தான் பொறுப்பு என்று அவனிடம் சரணனடைந்தால் அவன் பார்த்துக் கொள்வான். பாரத்தை அவன் மேல் சுமத்தினால் நமக்காக அந்த பரந்தாமன் சுமப்பான். நாம் அதை செய்வதில்லை. நாமே எல்லாம் என்று எண்ணுகின்றோம். கடைசியில் அல்லல்பட்டு அழுகின்றோம்.

காலம் நம்கையில் இல்லை. செயல் நம்கையில் இல்லை. பின் ஏன் இந்த தயக்கம். மயக்கம் தீர மருந்து அந்த மகேஸ்வரனின் தாள் ஒன்றுதான். அல்லல் தீர வழி அந்த ஆண்டவனின் பாதம்தான். சொல்லால் அளவிட முடியாத ஆற்றலோடு அமர்ந்திருக்கும் அவன் தாளில் தான் பூலோக சொர்க்கமே.

12.வஞ்சம்

தலைப்பு சற்று வித்தியாசமாக இருக்கிறது அல்லவா? இது ஒருவராலும் ஒத்துக்கொள்ள முடியாத ஒரு குணம். இக்குணம் ஒதுக்கப்படவேண்டிய ஒன்று. மனம் என்னும் குரங்கு மயங்கிய நிலையில் எடுக்கும் விஸ்வரூபம். வஞ்சம் நெஞ்சில் நிறைந்து விட்டால் அதன் வலிமை வியாபித்து விடுகிறது. ஆதலினால் துன்பம் மிகுகிறது.

இப்பூவுலகில் தான் நரகம் சொர்க்கம் உள்ளது. தனியாக இல்லை. அசுரர்கள் தேவர்கள் யாரும் இல்லை. அனைத்தும்

Koviloor Digital Library

நம்மிடமே உள்ளது. அனைத்தும் குணங்களின் வேறு வேறு விதங்கள். உணர்ச்சிகளின் உருவ அமைப்பு. நற்குணம் கொண்டோர் தேவர்களாகவும் தீயகுணம் கொண்டோர் அரக்கர்களாகவும் கணிக்கப்படுகிறார்கள். நரகத்திற்க்கும் சொர்க்கத்திற்க்கும் இடையில் கிடந்து அல்லாடுகிறோம். இந்த ஆட்டத்திற்க்கு முடிவுதான் என்ன?

வஞ்சம் என்ற எண்ணத்தால் அதன் பிரிவினையாக பல்வேறு குணமாற்றம் உண்டாகிறது. உடல்மாற்றம் உண்டாகிறது. பாலில் கலந்த நஞ்சு போல ஆக்கூட்டத்தில் புகுந்த சிறுத்தை போல கணிணியில் புகுந்த வைரஸ் போல. நம் நற்குணம் கரைக்கப்படுகிறது. நல்ல எண்ணங்கள் மங்கிவிடுகின்றன. நற்குணம் நிறைந்திருந்த மனம் அத்தீய குணம் புக இடம் மாறி சென்று விடுகின்றது. சந்தனமரத்தைக் காட்டிலும் முள்மரம் விரைவில் வளர்வதைப்போல விரிந்து பரந்து நம்மை ஆக்கரமித்து கொள்கிறது. இதிலிருந்து மீள வழி?

இறைவனின் படைப்பில் அனைத்திற்க்கும் விடிவு உண்டு. அனைத்திற்க்கும் வழி உண்டு. அனைத்திற்க்கும் மீளுதல் உண்டு. இம்மாறுபட்ட குணங்களின் மூலம் யாரென்று கண்டால் இது முடிந்து விடும். அவனன்றி வேறு யார்?

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட-

என்று மாணிக்கவாசகப் பெருமானார் இறையனாரின் அருள் தான் வஞ்சகத்தை கெடுக்கும் என்று போற்றுகிள்றார். வஞ்சம் வருங்கால் நெஞ்சம் முழுதும் இறைவனின் அருள் இருப்பின் அது வஞ்சம் நசுங்கி பொசுங்கிப் போகும்.

அது மட்டும் அல்ல

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்ச
புலன் ஐந்தின் வழி அடைதது

என்று ஐம்புலன்களால்தான் வஞ்சம் மிகுகிறது என்று அவரே கண்டு அதற்க்கு வழியும் தன் திருவாசக தேனில் இனிக்க விட்டிருக்கிறார்.

புரிந்தால் வழியுண்டு. புரிந்தார் புண்ணியர்களே.

Koviloor Digital Library

13. அழகு

பல பேருக்கு மகிழ்வைத் தரும் விசயம். ஆனால் இதில் ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்தால் மனம் விக்கித்து போகும். அழகு என்பது ஏதாவது ஒன்றோடு ஒப்பிட்டு ஆய்வதாகும். ஒன்றை வைத்து மற்றொன்றை மதிப்பிடுதல் ஆகும்.

இறைவனின் படைப்பில் அழகற்றது என்று ஏதும் இல்லை. ஒன்று அழகாக இருப்பதாய் மகிழ்ந்தால் அதைக் காட்டிலும் அழகு வாய்ந்தது இருக்கத்தான் செய்கிறது. அப்படியாகில் இந்த உணர்வோடு படைத்த அவன் எவ்வளவு அழகாய் இருப்பான். எவ்வளவு அழகுணர்ச்சியோடு இருக்கிறான். தான் எவ்வாறெல்லாம் இருக்கவேண்டும் என்று ஒரு தாய் தன் மகளை அலங்கரிப்பதைப்போன்று ஒரு ஓவியன் தன் ஓவியத்திற்க்கு அழகு சேர்பது போன்று ஒரு குயவன் குடத்திற்க்கு வடிவமைப்பதைப் போன்று அவன் அழகை அள்ளி தெளிக்கின்றான்.

அது இவ்வுலகப் படைப்புகளை உற்று நோக்கினால் அவன் கருணை அவன் தன்மை உணரப்பட்டு விடும். பூக்களில் வர்ண அழகையும் கொடுத்து சில பூக்களுக்கு மட்டும் வாசனையை கொடுத்தான். அழகான விலங்குகளை படைத்தான் ஆனால் சிலவற்றை கொடூர எண்ணம் உள்ளவைகளாய் ஆக்கினான். வெளி அழகற்ற பழங்களை படைத்து உள்ளே தேன் போல் சுவை வைத்தான். அழகிய நாகம் படைத்து உடன் நஞ்சையும் தந்தான். அவைகளின் பாதுகாப்பிற்க்கும் இனப்பெருக்கத்திற்க்கும் பலவற்றை இணைத்திருந்தாலும் கூட அதையும் அழகுற படைத்தானே அவன் பெருமையை நாம் வியக்கவேண்டியுள்ளது.

மனித இனமும் அவனிடம் விதிவிலக்கில்லை என்பது உள்ளங்கை நெல்லிகனியாகும். அனைத்து உயிர்களையும் சம நோக்கில் பார்ப்பவன் அவன் ஒருவனே. அனைத்திலும் இரண்டாய் இருந்து ஒன்றாய் நிற்க்கின்றான். உருவத்தில் சிவனாயும் இயக்கத்தில் சக்தியாயும் இருக்கின்றான்.

ஆக நாம் காணும் அனைத்து உருவமும் அவனே ஆகிநிற்கின்றான். தன் அழகை தன் படைப்புகளில் தவழவிட்டிருக்கின்றான். நம் மனம் போல் மாறி நிற்கின்றான்.

ஊனக்கண் காண உருவமாயும் ஞானக்கண் காண அருவமாயும் விரிந்து பரந்து நிற்கின்றான். அவன் அழகை காண்பதே அற்புதம்.

அதுமட்டுமல்லாது குணங்களில் அழகு வேண்டும் என்பதை பூக்களின் வாசமாய் நின்று உணர்த்துகிறான். பழங்களின் இனிமையையாய் காட்டுகிறான். விலங்குகளின் தன்மையில் புரியவைக்கின்றான். நாம்தான் புரிய உணர அறிய மறுக்கின்றோம். திரை போல் அஞ்ஞானம் பரவ பரிதவிக்கின்றோம். திரை விலக இறை தெரியும் என்பதே உண்மை. காலம் தாழ்த்து வோமானால் அது பூவின் வாசம் போல் மங்கி போகும்.

திரை விலகவேண்டும். இறையைக் காணவேண்டும். அவன் அழகின் ஆற்றலில் மெய்மறக்கவேண்டும். அவன் அழகின் இன்பத்தில் ஆனந்தம் உடலெல்லம் பரவ வேண்டும். அவன் அழகின் வாசத்தில் மனம் இல்லாமல் போகவேண்டும். அவன் அழகின் ஒளியில் நாம் கடைத்தேற்றப்பட வேண்டும். அவன் அழகின் நெகிழ்வில் நாம் கண்அயர்ந்து தூங்க வேண்டும். வேறு என்னதான் வேண்டும்?

14. மென்மை

அதன் உச்சரிப்பும் அதையே உணர்த்துகின்றது. இப்பதம் நமக்கு நல்விசயங்களையே தெரிவிக்கின்றது. எந்த ஒரு தமிழ் பதமும் மை என்று முடியுமானால் அது ஒரு தன்மையையோ பண்பையோ காட்ட வந்ததாய் எடுத்து கொள்ளலாம்.

சாதாரணமாய் மென்மையான தன்மையில் இருக்கும் பொருட்களை எடுத்துக் கொண்டால் அவைகளின் தன்மை புரியும். மயில் தோகையைச்சொல்லலாம். பருத்தியைச் சொல்லலாம். ஏன் எல்லா உயிரினங்களின் இளம் பிராயத்தை சொல்லலாம். எல்லா உயிரினங்களும் இளம் பிராயத்தில் மென்மையாய் இருந்தும் பின் வன்மையாய் மாறுவிடுகின்றன. அதன் காரணம் என்ன? அனுபவம். அதனால் முதிர்ச்சி. அதனால் வன்மை.

எந்த ஒரு பொருளும் அதன் கால ஓட்டத்தில் மென்மையை இழந்து விடுகிறது. ஆனால் மென்மையாய் உள்ளவை அப்படியே இருக்கின்றன. காரணம். அது அதன் தன்மையில் இருந்து மாறாமை. அவை மட்டும் ஏன்? அனைத்தும் மென்மையாகத்தான் படைக்கப்படுகிறது. ஆனால் பயன் என்று வரும்போது சில அத்தன்மையுடன் இருக்கின்றன சில மாறிவிடுகின்றன. மலர்கள்

மாறுவதில்லை. ஆனால் மனிதர்கள் மாறிவிடுகிறார்கள். மாறாமல் இருக்கும் வரை துன்பமில்லை. துன்பத்தை அனுபவிக்க இன்பத்தை நாடும் போதுதான் தன்மை மாறிவிடுகிறது. இதை மாற்ற வழியில்லையா? வழியுண்டு.

படிமங்களாய் படிந்து விட்ட அந்த ஏடுகளை களைந்து எறியவேண்டும். இருளாய் மனதில் இறங்கிவிட்டவைகளை ஓட்ட வேண்டும். நம்மோடு பின்னி பிணைந்து விட்ட அந்த பாச வலையை வேரோடு அறுத்து எறியவேண்டும். நம்மில் கலந்து விட்ட அந்த கொடிய நஞ்சை பிரித்து எறியவேண்டும். பாவவினையாய் வந்து நம்மை பற்றிய அப்பற்றை நீக்க வேண்டும். அறியாமவ் கொண்டு வந்தது வேறு உடன் இருந்து அச்சுறுத்துகின்றது. அதையும் அனுபவித்து மேலும் சுமை ஏற்றாது தற்போது சேர்த்ததையும் தொலைக்கவேண்டும். மிகுந்த நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளோம் அல்லவா?. என்ன செய்வது. வந்து பிறந்து வாழத்தெரியாமல் வகுத்தவன் வழி செல்லாது போனால் இதுதான் நிலை. இதற்கு விடிவு? அவன் தாளினை பற்றுதல் அன்றி வேறு என்ன?

கடலில் பெருங்காயத்தை கரைப்பதைப்போன்று பெருங்கருணை கடலான இறைவனின் அப்பெருங்கடலில் நாம் நம்மை கரைத்துக் கொள்ள வேண்டும். நாம் கரைக்க முற்படும் பொழுதே நம் கரத்தைப்பற்றி கரை சேர்ப்பான். நம்மை புளியை கரைப்தைப்போல கரைத்து குப்பைகளை களைந்து நம்மை மென்மையாக்குவான். அவன் கருணையில் திளைத்த நாம் அவனோடு நிச்சயம் கரைந்து போவோம். புது அனுபவம் பிறக்கும். பயம் நீங்கி தைரியம் பிறக்கும். மனம் லேசாகிவிடும். பஞ்சு போல் ஆகிவிடும். அந்த அனுபவமே ஒரு இன்பம்தான்.

இதனை உணர்ந்தார் பலர். அவரில் சிவபுராணம் வகுத்த செம்மலின் அனுபவம் நமக்கு தூண்டுகோளாய் ஊன்றுகோலாய் உள்ளது. காரணம் சிவபுராணம் மனிதன் கடவுளார்க்கு சொல்ல அவர் அனுபவித்து எழுதியது. அதில்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி- என்றும்

தம் திருவாசகத்தில்

சீலமின்றி நோன்பின்றி செறிவேயின்றி அறிவின்றி
தோலின்பாவை கூத்தாட்டாய் சுழன்று விழுந்து கிடப்பேனை-
என்றும்

பாடி பரவிய மாணிக்கவாசக பெருமானார் இறைவனின் அருள் பெற்று மனம் மென்மையாக்கப்பட்டு தன் அனுபவங்களை உரையிட்டு சென்றிருக்கின்றார். அதுவே வழிகாட்டி.

15. ஆர்வம்

அனைத்து உயிரினங்களுக்கும் உள்ள ஒரு குணம். அளவுதான் வித்தியாசப்படுகிறது. அது எதன் மேல் என்பதைப் பொருத்தே அது மாறுபடுகிறது. பெரும்பாலும் எல்லா உயிர்களுக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

இந்த வேறுபாடு உள்ளமையினால் தான் ஒரே மாதிரியான உயிர்களிடம் வேறுபாடு காண முடிகிறது. தூவரங்களை உண்ணும் உயிர்கள் ஒரே மாதிரியாகவும் ஊனை உண்ணும் உயிர்கள் ஒரே மாதிரியும் இருக்கின்றன. ஆனால் இரண்டையும் கலந்து உண்ணும் உயிர்களில் தான் ஆர்வம் தடுமாறிய நிலையில் இருக்கின்றது. இது எதைக்காட்டுகிறது. ஆர்வத்தின் அளவைப் பொறுத்தே இன்னலின் தாக்கம் இருக்கிறது. இது முற்றிலும் உண்மை.

அதே போன்று ஆர்வம் இருப்பதைப் போல மாயையை ஏற்படுத்தி அதில் சிக்குண்டு சிதைந்தவர் பலருண்டு. இவ்வார்வ தடுமாற்றம் தான் நம் வாழ்வின் எதிரிகள். ஆர்வத்தை சிந்தனை செய்து தெளிவு உண்டாக்கி அதில் நிலைத்திருந்தால் இன்பம் வேறுஇல்லை. முறையான பயிற்சி முழுமையான இறை நம்பிக்கை ஒன்றே இதை செய்து முடிக்கும்.

திடமான முடிவு முடிவான நம்பிக்கை நம்பிக்கையான வழிபாடு ஒன்றே இதனை சாதிக்கும். இது சாதனையாளர்களின் முடிவை ஆய்ந்தால் புரியும். ஆர்வம் தேவையற்றதின் மேல் அமைந்து விடுமேயானால் கொடி ஏற உதவிய கொம்பின் நிலைதான். கொடிதான் தெரியுமே அன்றி கொம்பு தெரியாது. அது அதனுள் மூழ்கிவிடுகிறது. வலையில் தானே அகப்பட்ட எலி போல.

இதை எவ்வாறு நிலை நிறுத்துவது?. கேள்வி சுலபம். பதிலும் சுலபம்தான் புரிந்து கொண்டால். ஆர்வம் மனம் சம்மந்தப்பட்ட விசயம். மனம் ஐம்புலன்களின் ஆட்சியில் செயல்படுகின்றது. ஐம்புலன் மனத்தின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. அதாவது ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையதாக இருக்கின்றது. ஆனால் ஐம்புலன்களின் தகவல்

இல்லாமல் மனம் தனித்து இயங்க முடியாது. இதில் முக்கியமானது கண். காரணம் அதுதான் தூரமாக சென்று தகவலை தருகின்றது. மற்றவைகளுக்கு தகவல் தேடி வருகிறது. ஊதாரணமாக வாசனை மூக்கை தேடித்தான் வருகிறது. ஒலி காதைத்தேடி தான் கேட்க செய்கிறது. ஆகையால் தான் தியான வழிபாட்டு முறைகளில் கண்களை மூடிக்கொள்ள சொல்கிறார்கள்.

ஆக ஐம்புலன்களின் கட்டுப்பாட்டை வேறுபாதைக்கு திருப்பினால் அன்றி யாதும் செய்ய இயலாது என்பது தெளிவாகிறது. இதையே ஔவை பெருமாட்டி

ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம் - என்று விநாயகர் அகவலில் குறிப்பிடுகின்றார்.

பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவிர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யில் கிடந்து புரளாதே.- என்று திருவாசகத்தின் யாத்திரைப்பத்து பகுதியில் மாணிக்கவாசகப்பெருமானார் தெளிவுபடுத்துகிறார்.

இறைவனை காணுதலில் ஆர்வம் இறைதொண்டு செய்வதில் ஆர்வம் இறைபாடல்களை பாடுதலில் ஆர்வம் இறைச்செய்திகளை படிப்பதில் ஆர்வம் என்ற நம் ஆர்வத்தை திசை திருப்பி நல்வழிப் படுத்திவிட்டால் உள்ளும் புறமும் இன்ப நிலை எய்கும் என்பதை சொல்லவும் வேண்டுமோ?

16. ஆக்கம்

எல்லா உயிர்களுக்கும் தேவையான ஒன்று. இது உயிருடன் கலந்து வந்த பண்பு. சிறந்து நிற்பதும் வியந்து உணர்வதும் அவ்வுயிரின் சக்தியை பொறுத்தது.

மானுடப்பிறவியில் மயக்கங்கள் நிறைந்து காணப்படுகிறது. அதில் தானாய் வந்தது கொஞ்சமும் நாமாய் சேர்தது மிகுதியுமாய் சேர்ந்து அல்லலுறுகின்றோம். இது எவ்வாறு நிகழமுடியும்?. தெளிவில்லா சிந்தனைதான் இதற்கு காரணம் என்றால் மிகையாகாது. ஆக்க பூர்வமாய் நாம் சிந்திப்பதில்லை. எதுவும் நம் முழுமையான

சிந்தனையின் வெளிப்பாடாய் இருப்பதில்லை. நம்முடைய நோக்கு வேடனின் பார்வை போல் கூர்மையாக இல்லை. அத்தோடு கூர்மையாய் ஆவாதற்கான ஆக்கம் நம்மிடம் இல்லை என்பதே உண்மை.

ஒரு பறவை தன் இனங்கள் சுகமாய் வாழ எவ்வளவு ஆக்கத்தோடு வலை பின்னுகிறது? ஒரு எறும்பு தன் இனத்தவர் வாழ மழைக்காலத்திற்க்கு முன் தானியங்களை எவ்வாறு குவிக்கிறது? ஒரு விலங்கு தன் இனத்தோடு மகிழ்ந்து விளையாடி எங்ஙனம் இன்புறுகிறது? அது போல மனித இனத்தில் இல்லையே ஏன்? ஆக்கம் இல்லை. அதுதான் இந்த தொல்லை. இறைவன் பரிபாலணத்தில் எல்லா உயிர்களும் ஒன்றுதான். ஆனால் மனித உயிர்களில்மட்டும் இந்த இழிநிலை. காரணம் ஆ்க்கம் இல்லை. அப்படியாயின் ஆக்கம் என்றால் என்ன?.

நன்மை பயக்கும் எண்ணம். நாம் எண்ணி செய்யும் அனைத்து செயல்களின் முடிவு அந்த இனத்திற்க்கு நன்மை தருவதாக வேண்டும். நற்பயன்கள் அளிப்பதாய் வேண்டும். நல்வாழ்வு தருவதாய் அமையவேண்டும். நலமே விளைவிக்கும் பெரும்பணியாக இருக்க வேண்டும். அதன் மூலம் அந்த உயிர்ஆனந்தப்படவேண்டும். அந்த ஆன்ந்தத்தில் இறைவனை காணவேண்டும். பேரானந்நம் மிக வேண்டும். இன்ப களிப்பில் உயிர் திளைத்து கண்ணீர் சொரிந்து தன்னாலே மன்டியுிட்டு நெஞ்சமெல்லாம்இ கரும்பின் கடித்த பின் பருகும் சுவையை மனம் பருக வேண்டும். அந்த இன்ப நிலைதானஇ அந்த ஆனந்த நிலைதான்இ அந்த உள் ஆக்கத்தின் நிலைதான் “முத்தி” என்று அழைக்கப்படுகிறது.

இதுவே சிவபுராணத்தின் சிவ சிந்தனையாக
ஆக்கம் அளவு இறுதி இல்லான்- என்று இறைவனாரை மாணிக்க வாசகப்பெருமானார் நோக்குகின்றாார்.

17. அணைத்தல்:

இரு பொருள் பட உள்ளது. ஆனால் இச்செயலின் இறுதி ஒன்றுதான். துயிருறுவாரை அவரின் துயரின்னின்று விடுவிக்க இவவணைதல் தேவைப்படுகிறது. விளக்கை அணைப்பதானாலும் விரும்பியவரை அணைப்பதானாலும் அதில் ஒரு குளிர்ச்சி ஒரு இதம் தேவைப்படுகிறது. அதுதான் அணைத்தலின் இயல்பு.

அணைத்தல் கட்டுப்பாடற்ற மனத்தை திடப்படுத்துகிறது. ஒரு குழந்தையின் அழுகை அதன் தாயின் அணைப்பில் நின்றுவிடுகிறது. ஒரு குஞ்சின் கதறல் கோழியின் அணைப்பில் இன்பமூட்டுகிறது. ஆக ஒரு உயிர் இடர்படும் பொழுது மற்றோர் உயிரின் அணைப்பு தேற்றுகிறது. அத்தருணத்தில் அவ்வுயிர்க்கு தெளிவு கிடைக்கின்றது. அதோடு மட்டும் அல்லாது துயருற்ற அவ்வுயிர் மேலும் பாவங்கள் செய்யாது காக்கப்படுகிறது. முடிவில் நன்மையே ஏற்படுகிறது. இது எல்லா உயிர்களுக்கும் மட்டுமல்லாது தாவரங்களுக்கும் கூட பொருந்துகிறது.

அணைத்தல் என்பது செய்கையாய் மட்டும் அல்லாது பேச்சில் செயலில் இயக்கத்தில் நடை முறைப்படுத்த படவேண்டும். அதுவே நன்மை பயப்பதாகவும் இருக்கும்.

ஆனால் இப்பூவுலக வாழ்வில் அவ்வாதரவினை தருபவர்கள் மிக மிக குறைவு. அப்பேர்பட்டாரை அணுகுதலும் தீமையே பயக்கும். அப்படியானால் நம் இடர்கள் எவ்வாறு களையப்படும்? நம் அருமை யாருக்குத் தெரியுமோ அவரால்தான் முடியும். நிச்சயம் அவர் நம்மை கைவிடப்போவதுமில்லை. காரணம் நம்மை அனுப்பிய அவருக்குதான் நம் மீது கவலை அதிகம் என்பதை நாம் உணரவேண்டும். உணர்த்தும் நிலையை நாம் உண்டுபண்ணாது இருக்க வேண்டும். அப்படியாகில் அவரின் அரவணைப்பு (அரவம்-பாம்பு) நமக்கு நிச்சயம் உண்டு.

ஆதிஅன்னையின் அமுதப்பாலுண்ட ஆளடைப்பிள்ளையான திருஞான சம்மந்தப்பெருமானார் தன் இடர்களையும் பதிகத்தில்

நின்று உனை நைவார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே- என்றும்

அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே- என்று அபிராமி பட்டர் அன்னையின் அருளை புகழ்ந்தும் வியக்கின்றனர்.

நம் மனம் எத்திசையெல்லாம் இறைவனை காண்கின்றதோ எவ்வுருவிலெல்லாம் பகவானை பார்க்கின்றதோ எந்நேரமெல்லாம் அவன் திருவடியை சிந்திக்கின்றதோ அப்போதெல்லாம் அவனை விடாது மனத்தால் அணைத்து கட்டுண்டு இருக்குமாறு இறைஞ்சல் வேண்டும்.

Koviloor Digital Library

நம் மனம் அவன் ஆழ்ந்து அதுனுள் அமிழ்ந்து கிடக்கும் படியான பக்குவத்தில் இருக்க வேண்டும். விசாலமானதாய் மென்னையானதாய் உண்மையானதாய் பண்பானதாய் இருத்தல் அவன் இருத்தலுக்கு அவசியம். முயன்று வெல்வோம்.

18. பாவம்:

பாவம் என்பது நாம் செய்யும் வினையின் வெளிப்பாடு என்று கொள்ளலாம். எவ்வினையும் செய்யாது இருத்தல் முடியாது. இதில் நல்வினை தீவினை என்று ஏதும் இல்லை. அனைத்தும் நம் மனத்தை பொறுத்தது. மனம் நம் கட்டுப்பாட்டில் இயங்கினால் துன்பம் ஏதுமில்லை. அதன் இயக்கத்தில் நாம் இயங்கும் போதுதான் துன்பமுறுகிறோம். அனைத்து உறுப்புகளும் ஒரே மாதிரியாய் படைத்த இறைவன் மனம் என்பதைமட்டும் தனித்தனியாக படைத்து விட்டான். ஏன்? சிந்தனை வேறுவேறு விதமாய் இருக்கவேண்டும் என்பதால்தான். அதனால் வேறு வேறு விதமான உணர்வுகள் தோன்ற வேண்டும் என்பதால்தான். அதன் மூலம் உயிர்கள் தெளிவு பெறவேண்டும் என்பதால். தெளிவனால் பிறப்பில்லா உயிர் பல அவனை வந்து அடையவேண்டும் என்பதால். இந்த தொடர் இயக்கத்தின் பலன்தான் இந்த பாவம் என்பது.

சுருங்க கூறின் ஒரு உயிர் தன்னால் எந்த விதமான துன்பத்தை மற்றோர் உயிருக்கு தருமேயானால் அதுதான் பாவம் என்று கருதப்படுகிறது. ஆது மட்டுமன்றி அத்துன்பத்தை எதிர் உயிர் ஏற்று அதனை துன்பமென்று கருதவில்லை யானால் அதுவும் துன்பத்தை கொடுத்த உயிருக்கு பாவக்கணக்காகிறது. ஆக பிறர்க்கு துன்பம் தரும் செயல் செய்யாது இருப்பது நன்று. அதோடு பிறர் தரும் துன்பத்தை இன்பமாய் மாற்றிக் கொள்ளும் பக்குவம் வளரவேண்டும் அல்லது மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது தேவையாகிறது. எந்நிலையில் இருப்பவராயினும் இது நிச்சயம் தேவைப்படுகிறது. பாவங்களை சுமக்க அஞ்சும் நாம் இதனை செய்யாதிருப்பதில்லை. செய்தும் அறியாது செய்து விட்டதாய் அங்கலாய்க்கிறோம். நிச்சயமாக நம்மை அறியாது ஏதும் நாம் செய்வதே இல்லை. மனம் இட்ட கட்டளையை அதன் போக்கில் செய்ய முயன்றால் முடிவு பாவ சுமைதான்.

இதனை மாற்ற தாக்கத்தை குறைக்க ஒரே வழி இறைவழிபாடுதான். இறைஉணர்வு ஏறஏற மனம் மாறுகிறது. மனம்

பஞ்சுபோல் நைந்து விடுகிறது. இதில் தாமே முயன்று மனத்தை பல வழிகளில் பயிற்சியின் மூலம் மாற்றுவோரும் உண்டு. இறைவனிடம் மன்றாடி மன்றாடி பெறுபவர்களும் உண்டு. இதனை தான் குரங்கு முறை பூனை முறை என்று பகுத்து வைத்திருக்கிறார்கள். இதில் குரங்கு முறையே சிறந்ததாக கொள்ளலாம். காரணம் அதில் நம் முயற்சி மிக தேவைப்படுகிற்து. இறைவனை சென்று அடைய சிறந்த வழியாகவும் இருக்கிறது.

இறைவழிபாட்டை தனித்து வைத்து பாராது வாழ்வின் செயல்பாட்டிலேயே கொண்டு வந்தால் எளிதாக செல்ல இயலும் நாம் தினம் செய்யும் அன்றாட செயல்களைப் போல. நம்மில் பெரும்பாலர் அவ்வாறு இல்லை. துன்ப வேலையில்தான் துணை தேடுகிறோம். அதனால் அல்லல் அடைகிறோம்.

முயன்றால் முடியாததில்லை.

19. கண்ணீர்

மூலம் தெரியாது. காரணமின்றியும் காரணத்தோடும் சொரியும் நீர். ஏன் வருகிறது?

எங்கு இருந்து வருகிறது? ஒரு சுரப்பி இருக்கின்றது. அதில் இருந்துதான் சுரக்கின்றது என்பது விஞ்ஞான அறிவு. எப்போது என்பதும் எங்கிருந்து என்பதும் இறையருளினால் உணர முடியும்.

இந்நீர் ஆனந்தமாய் இருந்தால் விழிகளின் வெளி ஓரத்திலும் துன்பமாய் இருந்தால் உள்ஓரத்திலும் வழியும். இன்பக்கண்ணீர் சிறிது இன்சுலையாகவும் துன்பக்கண்ணீர் உப்புக்கரித்தும் இருக்கும். எங்கிருந்து வருகிறது என்பதுதான் சூட்சுமமான உண்மை.

நாம் பல புண்ணிய நதிகளிலும் ஆறுகளிலும் கடல்களிலும் மூழ்கி புண்ணியம் அடைந்து விட்டதாக நினைத்து மகிழ்கிறோம். அல்ல. எல்லா புண்ணியநதிகள் உடலின் பாவத்தை போக்குமேயல்லாது உயிரின் பாவத்தை அது தீர்க்காது. அது கண்ணீரால் மட்டுமே கழுவ இயலும். கண்ணீர் அவ்வளவு புனிதமானது. அது மூளையின் தூண்டுதலால் நெற்றியின் மேல்புறத்திலிருந்து கசிந்து வருகிறது. ஆக அதுதான் கங்கையை சடையுள் வைத்த ரகசியம் ஆகிறது. எப்போது நாம் செய்த பாவம் நம்மால் உணரப்பட்டு மனம் துடித்து இறைவனிடம் மன்றாடுகிறதோ அப்போது தான் அக்கண்ணீர் சொரிய ஆரம்பிக்கிறது. இது தான் உயிரின் பாவத்தை ஊழ்வினையை போக்கும் நீராகிறது.

நினைத்த போதெல்லாம் வருவது நீலி கண்ணீர் என சொல்லப்படுகிறது. அது பாவத்தை நீக்காது. ஒரு உயிர் வேதனை அடைவதைப்பார்த்து இன்னொரு உயிர் கண்ணீர் விடுவது தான் அன்பு என்பது. பிரிந்து விட்ட உயிர் சேரும் போதும் கண்ணீர் லரும். ஆது மகிழ்வில் சொரிவது. இவையெல்லாம் வெளிப்புற நீரகளே அன்றி உள்நீர் ஆகாது. உள்நீர் ஒன்றே பாவத்தை போக்கும். அது இறைவனிடம் மன்றாடும் போது கைகளில் காலை பனியின் பன்னீர் தெளித்த பூ கண்களில் கண்ணீர் சுமந்து செல்லும் அனைவரையும் இறைவன் தன்

பால் ஈர்த்துக் கொள்கிறான் என்பதே உண்மை.

இதையே பூவொடு நீர் சுமக்கும்- என்று திருஞானசம்பந்தனார் நினைவுறுத்துகின்றார்.

20. பக்குவம்

இதைப்பற்றி நாம் சற்று விரிவாக சிந்திக்க வேண்டும். காரணம் பக்குவம் இல்லாத நிலையில் நிரம்ப விசயங்களை புரிந்து கொள்ள இயலாது. இப்பக்குவம் யாராலும் திணிக்க முடியாது. அனுபவம் ஒன்றுதான் இதை கொடுக்க முடியும். இதில் பல்வேறு நிலைகள் இருக்கின்றன. அடைவதற்க்கும் நிரம்ப வழிகள் இருக்கின்றன. இதை புரிந்து கொள்ள ஒரு சிறு கதை. அறிந்தது தான் என்றாலும் புரிதலுக்கு வேண்டி உள்ளது.

ஒரு குருவும் சீடனும் ஒரு ஆற்றைக்கடக்க நேரும் போது அங்கு ஒரு அழகிய பெண்ணும் கடக்க வழியறியாது நின்றிருக்க குரு மறுத்து விட பின் வந்த இளம் சீடன் அவளுக்கு உதவி அவளை தூக்கி வந்து மறுகரையில் விட்டு செல்ல இரண்டொருநாள் கழித்து குரு சீடனை அழைத்து சீடனாய் இருக்க அவன் தகுதி இல்லை என்று சொல்ல சீடனும் குருவின் பக்குவம் கண்டு அவரை விட்டு விலகிச்செல்லுவதுதான் அக்கதை. இக்கதைப்படி சீடனின் நிலை நாம் பெற நல்ல விதமான ஒரு குரு வேண்டும். அந்நிலை எப்போது கிட்டும்?. அப்பக்குவம் எப்போது வரும்?

கடையில் காய்கனிகள் வாங்கும் போது ஒரே மாதியானவைகளாய் இருந்தும் நம் சுவைக்கு ஏதுவானவைகளாக எவ்வாறு நாம் தேர்வு செய்கிறோமோ அதுபோல. பெருங்கூட்டத்திலும் நம்மை சேர்ந்தாரை எவ்வாறு கண்டு கொள்கின்றோமோ அதுபோல. பல குழந்தைகள் அழுதாலும் தன் குழந்தை அழும்போது பால் சுரக்க ஓடி வரும் தாய் போல நம்

பக்குவ நிலை அறிந்து இறைவன் நம் அருகில் ஓடி வருவார். அப்பக்குவம் நாம் அவரை எப்போதும் நினைத்த வண்ணம் இருந்தால் கிடைக்கப்பெறலாம். அவருக்காக தொண்டு செய்தால் பெறலாம். வினையேன் என்று அழுதால் பெறலாம். கையில் பூவொடும் கண்ணில் நீரோடும் வாயில் பாவோடும் பூசித்து நின்றால் பெறலாம். ***இறைத்தொண்டாய் எந்த ஒரு உயிரையும் மனதாலும் துன்புறுத்தாது இருந்தால் பெறலாம்.***

ஒரு நாட்டின் முதலமைச்சராய் இருந்த மாணிக்கவாசகப் பெருமான் குருந்தை மரத்தினடியில் வீற்றிருந்த அடிகளாரை நோக்கியவுடன் அருள் பெற்று பரவசமாய் ஆனாரே அது பக்குவம்.

3 வயது நிரம்பிய திருஞான சம்பந்தப்பெருமான; "அம்மே அப்பா" என்று அலற பெருமாட்டி தாயாய் நின்று பாலுட்டினாலே அந்த பக்குவம்.

இல்லற இன்பத்தில் இன்புற்று இருந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளை ஒரு ஓலை கொண்டு ஈர்த்த போது அவருக்கிருந்த பக்குவம்.

கல்லை கட்டி கடலில் வீசிய போதும் அக்கல்லின் அடத்தியை நீக்கி அதனை மிதக்க விட்ட போதும் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு இருந்த அந்த பக்குவம்.

இவையெல்லாம் எவ்வாறு சாத்தியமாகும். இறையருள் ஒன்றில்லாது முடியுமோ?. அப்பக்குவம் நமக்கு வர நாம் முயலுதல் முக்கியமாகிறது அல்லவா?

21. தன்ஆய்வு

மிக மிக தேவையான ஒன்று. ஒவ்வொரு உயிரும் அனுபவமாய் பல விசயங்களை கடந்து வந்திருக்கின்றது. அவ்வாறு பெற்ற அனுபவ பதிவுகளை புரட்டி பார்ப்பதுதான் தன்ஆய்வு என்று கொள்ளப்படுகிறது. இது செய்யப்பட்டால் தவிர மனம் பண்படுவதற்கு வேறு முகாந்திரம் இல்லை.

ஆய்வு என்று வந்து விட்டால் ஒற்றுப்பார்க்க ஒரு அளவு கோல் தேவையாகிறது அல்லவா?. அது எவ்வாறு பெறுவது? எங்கு

பெறுவது? இதுதான் கேள்வி முள்ளாய் நம் மனதை குத்துகிறது. வழி தெரியாது விழி பிதுங்குகிறது.

ஒன்று மட்டும் நீங்கள் உணரலாம். நமக்கு ஆய்வு செய்ய வேண்டும் என்று எண்ணம் தோன்றிய பொழுதே நம் நிலை நமக்கு புரிந்து விடுகிறது. எவ்வளவோ நடந்த வாழ்க்கை பாதையில் இத்தருணம் தான் இறைவனார் நம்மை நெருங்கிய தருணமாகிறது. அப்போது நமக்கு அளவுகோல்கள் உணர்த்தப்படுகிறது. இன்னொரு உயிரை ஒத்து ஆய்வு நடப்பதில்லை. அனுபவப்பட்டதை உணரப்பட்டதினால் ஆய்வு செய்யப்படுகிறது. ஆகையால் இனி நடக்கும் நிகழ்வெல்லாம் ஏன் என்று கேட்க மனது இறையனாரை நாடுகிறது. அவர் ஒருவரால் மட்டுமே நமக்கு உணர்த்தப்பட வைக்க முடியும். காரணம் அவர் ஒருவருக்குதான் அனைத்தும் தெரியும்இ நமக்கென்று எது என்பதும் தெரியும்.

நமக்கு அந்த உணர்த்துதல் வரும் போதுஇ அதை முழுமையாக நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நிச்சயம் இது நடக்கும். நடந்து கொண்டும் இருக்கிறது. இறைவனார் முடிவு செய்துவிட்டால் அதை மாற்ற எவராலும் மாற்ற இயலாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு சிறு கதை- ஒரு தருணத்தில் வாழ்வில் வெந்து நொந்து போன ஒருவன் மேல் கருணை கொண்ட கருணை கடல் எம்பெருமாட்டி, பெருமானிடம் அவனுக்காக விண்ணப்பித்தாள். பெருமான் அவனுக்கு இன்னும் அத்தருணம் வரவில்லை என்று அறிவுறுத்தினார். அம்மையின் வற்புறுத்தல் காரணமாய் பெருமானும் செய்வதாய் கூறி, ஒரு பொட்டலம் நிறைய மாணிக்க கற்களை நிரப்பி, அவன் செல்லும் வழியில் இட்டு வைத்தார். அவ்வழி சென்ற அவன் இவ்வளவு தூரம் கண்விழித்து நடந்தோம். சிறிது தூரம் கண்ணை மூடி நடப்போம் என்று மனதால் நினைத்து கண்ணை மூடி நடந்து இறையனார் அருளித்தந்த மாணிக்க கற்களை கடந்து சென்று விட்டான். ஆக அவனும் திரும்பி பார்க்கவில்லை. பெருமானும் அறிவுறுத்தவில்லை.

இது போன்று நம்மிலும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. தன்ஆய்வு இறையுணர்வோடு தொடர்புடையதாய் இருக்கிறது.

அருளாளர்களில் வயதில் முதிர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகளுக்குமே அவ்வுணர்வு தோன்றி தன்னை திருத்திக்கொண்டார். திருமறைக்காட்டின் திருத்தலத்தின் கோவிலை திறக்க பல பாடல் பாடிய அவர் அதனை மூடிக்காட்ட திருஞானசம்மந்தர் ஒரு பாட்டு பாட கதவு தாழ் இட்டு கொண்டது. தன் பக்தியின் திறம் போதாது போலும் என எண்ணி இறையனாரிடம் வேண்ட திருஞானசம்பந்த பெருமானால் விளக்கம் அளிக்க வைத்தார் எம்பெருமான்.

அவருக்கே அவ்வாறெனில் நம் நிலைக்கு ???.

22. மாசு

இதைப்பற்றி பேசாதவர் யார்?. ஐம்பூதங்களும் முடிந்தவரை மாசு செய்யப்பட்டுவிட்டது. இதற்கு காரணம் என்ன? மனிதர்களின் மனதில் மாசு நிறைந்து இருப்பதே காரணம். தன்னிடம் இருக்கும் மாசு காரணமாய் மற்றதின் மாசைப்பற்றி கவலைப்படுவதுஇ ஏன் நினைப்பதே இல்லை.

மனத்தின் மாசை நீக்குவது எவ்வாறு என்பது கேள்வியாய் இருந்தாலும் பல வழிமுறைகள் பலபேரால் சொல்லப்பட்டாலும் அதனை முழுமையாக நீக்க முடியவில்லை என்பதுதான் உண்மை.

மனத்துக்கண் மாசு இலன் ஆதல்-என்னும்

செந்நாப்போதரும் கூட "ஆதல்;" என்றுதான் உணர்த்துகிறார். ஆக மாசு இருக்கும் என்று அவரும் அறிவுறுத்துகின்றார்.

மாசு இல்லாமல் செய்ய மாசு உள்ளவைகளால் முடியுமா? அழுக்குத்துணியால் சுத்தம் செய்ய இயலுமா? சாக்கடை நீரால் சுத்தமாக்க முடியுமா? மாசு உள்ள நம் மனம் மாசு இல்லா மனத்தினாலொடு கூடினால் அன்றி சுத்தமாக சாத்தியம் உண்டா? மாசு இல்லா மனத்தை எங்கு சென்று தேடுவது? எங்கு இருப்பதாய் அறிவது? நமக்கு நன்மை கிடைக்குமானால் நாம் முயன்றுதான் ஆகவேண்டும். சற்று கடினப்பட்டுதான் ஆக வேண்டும்.

மாசில்லா மா கருணை வெள்ளமே-என்றும்

மாசற்ற சோதி மலர்ந்த மலர் சுடரே-என்றும்

மாணிக்க வாசகப் பெருமானார் இறைவனைப்பற்றி இயம்புகின்றார்

மடைதிறந்த வெள்ளம் போன்று அவர்கருணை நம்மை மூழ்கடிக்க காத்திருக்கின்றது. அம்மடையை நாம்தான் கர்நாடகம் போல் இல்லாமல் திறந்துவிடவேண்டும். அதன் திறவுகோல் நாம் அவர் மேல் செலுத்தும் பக்தி, அன்பு, சேவை, உருக்கம், இணக்கம், நினைவு, மறவாமை.

வேண்டும் போது வழிபாடு, வேண்டாத போது தன் வழி படி நடந்தால் அதற்கு உள்ளது தான் கிடைக்கும். நீரில்லா கிணற்றில் நெற்றிவேர்வை சிந்த இறைத்தாலும் இருந்தால் தானே கிடைக்கும். தாகம் எடுக்கும் போது மட்டும் தண்ணீர் குடித்தால் உடலின் நிலை ஓய்ந்து போகும். டெபாசிட் செய்தால் தான் ரிட்டேன் கிடைக்கும். முன் கை நீண்டால்தான் முழங்கை நீளும். உணர்வு இருந்தால்தான் உணரமுடியும்.

ஆக எதுவும் தானாக வாராது என்பது தெரிந்து விட்டபின் தயங்கி கிடப்பது மூடத்தனம். மாசு மண்டிய நம் மனம் அம்மகேசனை அண்டினால்அன்றி மகிழ்ந்து இருப்பது கடினமே. மாசு இல்லா அவனால் மட்டுமே நம்மை நல்வழி படுத்த முடியும். அவன் நமக்கு தந்தவைகளை அனுபவிக்க செய்ய முடியும். இன்பமாய் வைத்துக்கொள்ள இயலும். இருக்கும் வரை இன்னலின்றி இருக்க இயலும். மனத்தின் மாசற்ற வாழ்வு ஒன்றே தெய்வீக வாழ்வாகும். அது அவன் கருணையினால் மட்டுமே முடியும்.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"- இருத்தலே அளப்பறிய இன்பம்

24. அருமை

இதன் மகத்துவம் தெரியாது பலர் அலைகின்றனர். நாம் சொல்வது நம்மை பற்றிதான். உங்களுக்கு புரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

அருமை அறியாது என்னவெல்லாமோ செய்கின்றோம். தெரிவதற்க்கு முன் அது சென்று விடுகிறது. தெரிந்த பின் நமக்கு வருத்தம் தான் மிஞ்சுகிறது. தாய் தந்தை இருக்கும் போது அவர்களின் அருமை தெரிவதில்லை. ஆனால் விட்டு சென்ற பின்?

நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும். நிழல் யாரையும் அழைப்பதில்லை யாரையும் வெறுப்பதும் இல்லை. இவை அனைத்தும் நம் சொத்து. துணையின் அருமை வெறுமையில் புரியும். அணையின் அருமை தவிப்பில் தெரியும். தண்ணீருக்கு நாம் தவிப்பது புரிந்திருக்கும். தவிக்கவிட்டாலும் தந்து கொண்டுதான் இருக்கிறான்.

Koviloor Digital Library

ஆக நம் அருமையை நாமே எவ்வாறு அறிந்து கொள்வது. நம்மை நாமே சொல்லிக் கொண்டால் சற்று வித்தியாசமாக படும். நம்மை அறிந்தவர் சொன்னால் மனம் சந்தோசப்படும்.

இயற்க்கை தானே என்று கூறுவது எனக்கு கேட்கிறது. என்ன செய்வது மனம் இதைத்தானே விரும்புகிறது. நம் அருமை நாமே சொல்லிக் கொள்ள ஒரு இடம் உண்டு அது தான் கோவில். கோவில் நம் வேதனைகளை போக்கும் இடம் மட்டும் அல்ல நாம் நம் அருமை பேசும் இடமும் கூட. ஆலையத்தின் உள்ளிருக்கும் ஆண்டவன் அவங்களை போக்க மட்டுமல்ல நம் அருமையை அறிய ஆவலாய் உள்ளான். காரணம் நாம் அவன் தோற்றமல்லவா? தோற்றுவித்து தொய்ந்து கிடப்பானா என்ன? நம் அருமையை அவன் மூலமாய்தான் நாம் அறிய இயலும். இது மிகுந்த சுலபம்தானே. ஏன் யாரையேனும் எதிர் நோக்க வேண்டும். அவனிடம் செல்வோம்

அருமை பெறுவோம். இதனை திருஞானசம்மந்த பெருமானார்

அருமையான எளிமையன் அழல் விடம் இடறினன்- என்கின்றார். அருமையான அவன் அனைத்து நேரமும் நமக்காக நம்முள்ளே நாமாக நன்னி நிற்க்கின்றான். நின்று பாருங்கள் புரியும்.

24. பிரதோசம்.

அமாவாசைப் பிரதோசம். அருகில் உள்ள கோவிலுக்கு போவீர்கள் தானே. செல்லும போது உதிரிபூக்கள் கொண்டு செல்வீர்கள் தானே. அதை அர்ச்சகரிடம் கொடுக்கும் போது நம் மனத்தையும் அதில் இழைப்பீர்கள்தானே. இது நிச்சயம் செய்யப்பட வேண்டும். உங்களுக்கு புரிந்திருக்கும். இறையனார் காத்துக் கொண்டு இருக்கிறார். நமக்காக உலகத்தின் தீய சக்திகளை ஒன்றாக்கி தினம் விழுங்கி தன் கண்டத்தை நீல நிறமாக்கி கொண்டு இருக்கிறார். இது புராணக்கதையாய் இருந்தும் நல்ல விசயத்திற்காக சொல்லப்பட்டு இருக்கிறது.

மனம் என்பதை இறையாக்கி இதன் செயல்பாட்டை சத்தியாக்கி உணர்ந்தால் சிந்தித்தால் பல விசயங்கள் தெரிய ஆரம்பிக்கும். பிரதோசம் என்பது ஒரு கால அளவு. கிட்டத்தட்ட 24 மணி நேர திதியில் ஒரு 90 நிமிடம். இது எல்லா திதிகளுக்கும் பொருந்தும். ஆதிகாலைஇ அந்திவேளை ஆகிய இரண்டு 90 நிமிடங்கள் தான் பிரம்ம முகூர்த்தம் அதாவது அமைதியான பிரம்ம உணர்வான எதையும் ஆக்கக் கூடிய வேளையாக கண்டாய்ந்து சொல்லப்பட்டு இருக்கிறது. இது ஒரு அனுபவ உண்மையே.

இதில் மூன்றாம் பிறை இளம் சந்திரனை தன் முடியில் அணிந்த சிவனாரை வேண்ட உகந்த நேரம் என்று ஆய்ந்துள்ளனர். அமாவாசையும் பௌர்ணமியும் சந்திரனின் இரு பக்கங்கள். ஆகையினால் மூன்று தினங்களுக்கு முன் உள்ள அந்திவேளை பிரம்ம முகூர்த்தத்தை பிரதோசம் என்று குறிப்பிடுகிறோம். அதே போல் மூன்றாம் பிறை பார்ப்பதும் உயிரின் மனத்திற்க்கு மிக நல்லது. மனம் அமைதியுறும். நந்தி என்பதை உடம்பாக்கி இரு கொம்புகளை இன்பதுன்பமாக்கி அவ்வேளையில் நம் மனம் அவ்விரண்டு மலங்களை விட்டொழிந்து ஆனந்த தாண்டவம் ஆடும் என்பதே உண்மை. அதை உணர்த்தவே இந்த கால நிலை. தனி மரம் தோப்பாகாது. தனி முயற்சியின் காலம் நெடியது. ஆகவேதான் கோவிலில் மந்திர மறை ஒலி முழக்கி அனைவரும் பயன் பெற செய்யப்படுகிறது.

இத்தருணத்தில் உடலைவிட்டு உயிர் தனித்து நின்று இறையனாரை உணருகிறது. உணரவேண்டும்.. அந்த 90 நிமிட வழிபாடு சுமார் 360 மணிநேரத்திற்கு அதாவது 21600 நிமிடங்களுக்கு தாங்குகிறது. அனைத்திலும் 9 விளையாடுகிறது. ஒரு சிறு தகவல்- நாம் ஒரு நாளைக்கு 21600 முறைதான் சுவாசிக்கிறோம். அதில் காலை 108 மாலை 108 முறை சுவாசித்தலில் இறை மந்திரத்தை கலந்தால் தெய்வீக உணர்வு கிட்டும். இதுவும் அனுபவ உண்மை. முயன்று பாருங்கள். புரியும்.

ஆக உடவின் இன்பத்திற்க்காக செய்யும் சேட்டைகளை அத்தருணத்தில் நிறுத்துதல் வேண்டும். மறத்தல் வேண்டும். ஐம்புலன்களின் கட்டுப்பாடு பெறப்படுகிறது. அப்போது பேரானந்தம் பிறக்கிறது. இதனை படிக்கும் அன்பர்களும் இதை உணரவேண்டும் இறையனாரின் இன்அருள் உங்கள் உயிருக்கும் பெறப்படவேண்டும் என்பதை ஆவலாய் வைத்து அனைவரும் தீபஒளி நாளில் முடிந்த அளவு தீபம் ஏற்றி வழிபாடு செய்ய வேண்டுவதோடு அருள் நிறை அடைய அவன் தாள் பணிகிறேன்.

-அவன் அருளாளே அவன் தாள் பணிந்து-

சைவர்கள் சிவபுராணத்தையும் வைணவர்கள் திவ்வியபிரபந்தத்தையும் அனைவரும் திருக்குறளின் அருளுடைமை அதிகாராத்தையும் ஓத வேண்டுகிறோம்.

Koviloor Digital Library

25. நுண்ணறிவு:

அறிவு என்பது புரிந்து கொள்ள முடிகிறது. நுண்ணறிவு என்பதுதான் சற்று வித்தியாசமாக இருக்கின்றது. அறிவு என்பது என்ன என்பதை சற்று ஆழமாய் புரிந்து கொண்டால் வித்தியாசம் புலப்பட்டு விடும்.

அறிவில் பல வகை இருக்கின்றது. மெய்யறிவு புலனறிவு கற்றஅறிவுஇ கேட்டஅறிவு உணர்வறிவு அனுபவஅறிவு உலக அறிவுசுய அறிவு பொருளறிவு இன்னும் பல. அப்படியானால் அறிவுக்கு எல்லை இருப்பதாக தெரிகிறது. அந்த எல்லையை மீற முடியாமலும் இருக்கிறது. அதே நேரம் ஒருவருக்கு ஒரு விசயத்தை பற்றிய இருக்கும் அறிவு மற்றொறுவரிடம் வேறுபாடாய் இருக்கும். அப்போது நம்மிடம் இருக்கும் அறிவு பொய்யாகவோ குறைவாகவோ ஆகிவிடுகிறது. ஆகையால் அறிவு நிலையற்றதாகிவிடுகிறது. வேறு வேறு விதமாய் அறியப்படுகிறது. மாறிக்கொண்டே இருக்கின்றது. அன்று நிலாவுக்கு சாத்தியமில்லை என்று இருந்த அறிவு இன்று பொய்யாகி மாறிவிட்டது. அன்று நீரினுள் கண்டறிதல் கேள்வியாய் இருந்தது இன்று அது வெளிச்சம் போட்டு காட்டும் அளவிற்க்கு மாறி நிற்கிறது. இது போன்று எவ்வளவோ மாற்றங்கள் அறிவு மாற்றத்தை கொடுக்கின்றன.

ஆக மாற்றம் அல்லாத பொய்யில்லாத நிலையான அறிவுதான் நுண்ணறிவு ஆகின்றது. அது எவ்வாறு பெறப்படுகின்றது என்பதில்தான் முக்கியத்துவம் பிறக்கின்றது. இறையருள் அன்றி வேறு எவராகிலும் அது தர இயலாது என்பதே உண்மை.

தான் தங்கியிருந்த ஊரின் மக்கள் வறுமைப்பிணி அகல இறைவனை வேண்டி பொற்காசு பெற்றனரே திருஞானசம்மந்த பெருமானும் திருநாவுக்கரச பெருமானும் அவ்வறிவுதான் நுண்ணறிவு.

தன்மகவைதன் கையால் அரிந்து இறைவானார் என்று அறியாதும் சமைத்து இட்டு முத்தி பெற்ற சிறுதொண்ட நாயினாரின் தன்நினைவில்லாத அறிவுதான் நுண்ணறிவு.

இறைவனாரைக்காண தன் உடல் நரம்பை நாணாக்கி இசைத்து மயக்கிய இராவணனனின் அறிவுதான் நுண்ணறிவு.

Koviloor Digital Library

இறைவன் அருளால் மாடுமேய்க்கும் காளிதாசனுக்கும் கவிதைத்திறன் வந்ததே அவவறிவுதான் நுண்ணறிவு.

இவ்வாறு ஏராளமாக சொல்லிக் கொண்டே போகலாம். முடிவாய் இறை அருள் அன்றி நுண்ணறிவு ஏற்படுவது மிக கடினம்.

இதைத்தான் சிவ புராணத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே-

என்று மாணிக்கவாசகப் பெருமானார் பாடி பரவுகின்றார்.

நுண்ணறிவு இறையருளால் மட்டுமே பெற முடியும். ஏனெனில் அதுதான் மாறாதது மயங்காதது மறுக்க முடியாதது மாண்புடையது. நாம் இதைப்பெற்றே ஆகவேண்டும். அதற்கான முயற்சியை உடன் செயல்படுத்த வேண்டும்.

26. மயக்கம்

இது மிக ஆபத்தானது உடலுக்கு ஏற்பட்டால். மிக தேவை உடலின் சிகிச்சைகளுக்கு. பொல்லாதது மனத்தை பொருத்த மட்டில். தேவையற்றது உல்கியல் வாழ்க்கைக்கு. தேவை

மனஇயல் வாழ்விற்க்கு.

இவ்வார்த்தையை திரும்ப திரும்ப கூறினாலே இதன் உணர்வு புரிந்து விடும். ஆக இது உணர்வுடன் தொடர்புடைய ஒன்று. உணர்வு, வெளியில் அதாவது, உடலின் இயக்கத்தில் சம்பந்தப்பட்டதில் தேவையற்றதாய் உள்ளது. மருந்தின் மயக்கத்தில் உள்ள ஒருவரின் மனம் இயங்கிக்கொண்டுதான் இருக்கிறது. ஆக அது உடலுக்கு தரப்பட்ட மயக்கமாகிறது.

மனம் ஒன்றும் ஆவதில்லை. கிட்டதட்ட கருவில் இருந்த உணர்வே அந்த உயிர் பெறுகிறது. எனவே உடல் வெளிமயக்கத்தில் உழல்வதால் தான் இவ்வளவு வேதனைகள். அதனால் மனம் அதற்க்கு தகுந்தாற் போல் இயங்குகின்றது. இயக்கமும் வேறுபாடகிறது.

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சை செய்யும் பொழுது உடலின் வேதனைகளை மனம் கண்டு கொள்வதில்லை. ஏன்? அப்படியானால்

தெளிந்த பின் எவ்வாறு தொடர்புக்கு வந்தது. அது ஏன் மயக்கமில்லதா போது செய்ய இயலவில்லை. அப்படியானால்

Koviloor Digital Library

அத்தொடர்பின் தாக்கம் முடிச்சு எங்கே இருக்கிறது? மயக்கத்தில் உள்ள போது அது எங்கே போனது? என்ற கேள்விகள் எழத்தானே செய்கிறது.

இக்கேள்விகளில் இருந்து நாம் தெரிந்து கொள்வதுஇ மனம் இரண்டு வித மயக்கத்தில் உழல்கின்றது என்பதேயாகும். அது உடலில் இருந்தும் இல்லாமலும் நம்மை இயக்குகின்றது என்பதே அவ்வுண்மை. ஆக உடலைவிட்டு மனத்தை ஒரு மயக்கத்தை கொடுத்து மீளலாம் என்பதும் புலப்படுகின்றது. அம்மயக்கத்தை செயற்கையாக உண்டாக்கியும் உடலைவிட்டு பிரிந்து இருக்கலாம் என்பதும் தெளிவாகிறது. வெளி உலகின் மயக்கத்தை தவிர்த்து செயற்க்கையான மயக்கத்தை எவ்வாறு மனத்திற்க்கு தருவது? அதையும் ஏன் தரவேண்டும்? தேவையா இந்த விசபரீட்சை? பேரானந்தம் பெறவேண்டுமானால் இது தேவையே. வேதனைகளை மீளவேண்டுமானால் இது தேவையே. முத்தியின் முழு இன்பத்தை பெற இது தேவையே.

எவ்வாறு என்று எண்ணும் போதுதான் இறைனாரின் துணை தேவைப்படுகிறது. அவர் ஒருவரால்தான் வெளிமயக்கங்னளை அறுத்து எறிய முடியும். இல்வாழ்வில் இருந்து கொண்டே அவரின் அருளோடு பேரானந்தம் பெற இயலும். 63 நாயன்மார்களும் ரிஸி முனிவர்களும் இல்வாழ்வில் இருந்து இறையனாரின் அருளோடு இம்மண்ணுலக மயக்கத்தை தவிர்த்து இன்புற்று இருந்திருக்கின்றனர்.

உடலின் இன்பத்திற்குண்டான இம்மயக்கத்தை அறுத்து எறியவேண்டும். அதற்க்கு முயலவேண்டும். முடியும் வரை முயலவேண்டும். முயற்ச்சி தொடங்கும் போது இறையருள் பெற நாம் தயாராகிவிட்டோம் என்ற உணர்வு நம்முள் தோன்ற ஆரம்பிக்கும். இறையனாரும் நம்மை நெருங்க ஆரம்பிப்பதை அவரே உணர்த்துவார்.

இதை வாழ்வில் உணர்ந்து அதனை தொடர்ந்து இறையனாரின் திருவடி தீட்சை பெற்று மயக்கமறுத்த நல்சோதி என்று பகர்கிறார் மாணிக்கவாசகனார்.

இது ஒரு அனுபவ உண்மை.
இது நிச்சயம் நாம் உணரவேண்டிய ஒன்று
இதுவே வாழ்வின் குறிக்கோள்.
இதைவிட்டு அதைப் பெறுவோம்.

Koviloor Digital Library

27. இன்பம்

இதே நிலையில் இருக்க வேண்டும் என்று தான் எண்ணுகின்றோம். ஆனால் முடியவில்லை. காரணம் இன்பம் எது என்பது தெரியவில்லை. இன்பத்தின் கடைசி எல்லையை கண்டுவிட்டால் இந்த கேள்விக்கு விடைகிடைத்து விடும் தானே.

இன்பம் என்பது துன்பம் இல்லாது இருப்பது தான். ஆக இன்பத்தின் மூலம் துன்பத்தில்தான் இருக்கிறது. அதனால் எல்லா இன்பங்களும் துன்பத்திலேயே முடிகிறது. குனி இருப்ப காய் கவர்ந்தற்று என்று வள்ளுவ பெருந்தகை அறுதியிட்டதைப் போல. அவரும் கவர்ந்தற்று என்று சூசகமாக அதன் கவர்ச்சியை உரைக்கிறார். காரணம் காய்தான் கவர்ச்சியுடையதாக இருக்கிறது. ஆனால் நாம் உண்ணும் உணவில் காய்கள்தான் உடலுக்கு உகந்ததாக உள்ளது. காரணம் அதில் கனியும் காயும் கிடைப்பவை பிரித்து காட்டப்படுகிறது.

ஆக துன்பத்தின் மேல் நமக்கு நாட்டம் இல்லை. நாட்டம் இல்லாதது நம் மீது படும் போது துன்பமாய் நமக்கு தோன்றுகின்றது. தோன்றுதல்தானன்றி அது துன்பமில்லை என்பதை புரிந்து கொள்ளும் பக்குவம் நமக்கு இருக்க வேண்டும். அல்லது அதை அவ்வாறு ஏற்றுக் கொள்ளுமாறு நம்மை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? துன்பம் என்று ஏதும் தனியாக இல்லை என்பதுதான். இன்பமாயினும் துன்பமாயினும் நாம் அதனை ஏற்றுக் கொள்ளும் முறையில் இருக்கிறது.

அம்முறையை எவ்வாறு பெறுவது? எவ்வாறு பழகுவது? யாரிடம் சென்று கற்றுக்கொள்வது?

எங்கும் செல்ல தேவையில்லை. யாரிடமும் சென்று கற்றுக் கொள்ள அவசியம் இல்லை. இது ஒன்றும் யோக தியான முறையன்று. குணமாறுதல். மனச்சமன். மதியின்வழி. ஊழின்விதி. நாமே நம்மை மாற்றிக்கொள்ளும் முறை. கற்று பயின்றது கடைப்பிடித்தல் வரை நிலைக்கும். குணமாறுதல் வாழ்வு முடிவுவரை உடன் இருக்கும்.

குணம் மாறுதல் பெற இறைவழிபாடுதான் சிறந்த வழி. இதற்க்கு யாரின் உதவியும் தேவையில்லை. நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் இறைவன் ஆறு அடி அருகில் வருவான். இதைப்பற்றி நிரம்ப தெரிந்து கொண்டுள்ளோம். இறை வழிபாடுஇ அதிலிருந்து அடியவருக்கு உதவுதல்இ அவர்களை அவர்கள் எந்நிலையில் இருந்தாலும் பேணுதல் மதித்தல்இ அன்போடு பழகுதல்இ ஆதரவு காட்டுதல்இ வசதிக்கு தகுந்தார் போல் உதவுதலஇ திருப்பணிகளில் தன் நிலைதாழ்ந்தும் ஈடுபடுதல்இ வேண்டுவன வேண்டி பெருதலஇ வேண்டுவோர்க்கு முடிந்த அளவு உதவுதல் போன்ற பல நிகழ்வுகளில் நாமாய் ஆட்படுத்திக்கொண்டால் இறையனாரின் ஆட்கொள்ளல் லகுவாக சேரும் என்பது அனுபவ உண்மை.

இறையனார் ஒருவர்தான் இரண்டாய் இல்லாது ஒன்றாய் பலவாய் படர்ந்து இருப்பவர். அவரன்றி எவரும் நம்மை காக்க முடியவே முடியாது. அவரன்றி எவராலும் நம்மை நெருங்க முடியாது. அவரன்றி எவரும் நம்மேல் அக்கறை செலுத்த இயலாது. அவரன்றி எவரும் நமக்கு உண்மை இன்பத்தை தரஇயலாது.

இதனை நாம் உணர இன்பமும் பிறப்பும் இறப்பினோடு துன்பமும் உடனே வைத்த சோதியன் என்று திருநாவுக்கரச பெருமானும் இன்பமே உன்னை சிக்கென பிடித்தேன் என்று மாணிக்கவாசகப் பெருமானும்

தாங்கி நில்லா அன்பினொடு தலைவ நின்தாள் நிழற்கீழ் என திருஞானசம்மந்தப் பெருமானும்

மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இறையனாரை நினைந்து நினைந்து இல்வாழ்வின் நிகழ்வுகளை இன்பமாக்கி கொண்டாகள். கடைசியில் பேரின்ப வாழ்வு பெற்றார்கள் என்பது நமக்கு சான்றான ஒன்று.

ஆகவே இறைவழிபாடுதான் வாழ்வின் குறிக்கோள் நடப்பவை அனைத்தும் அவன் உணர்த்துதல். அவற்றை இன்பமாய் அவனின் அருளாய் அவன் அளித்த கொடையாய் அவன்

வழிகாட்டுதலாய் எடுத்து அதனை இன்பம் துன்பம் என பிரித்து நோக்காது வாழ்வில் அது ஒரு

நிகழ்வு என கருதி துணை அவனே என சேர்த்து வாழ்வை அனுபவித்தால் எப்போதும் இன்பம் தானே.

நாம் செய்வதாய் நினைத்து செய்தால் அது வஞ்சனைக்கு இட்டு செலுத்துகின்றது. இவற்றின் எல்லா செயல்களுக்கும் மூலகாரணம் யார்? நம் மனம் தான் என்பது புரிந்திருக்கும்.

அம்மனம் அதாய் செய்து விடுமா? அல்ல.

ஐம்புலன்களின் ஆதிக்கத்தில் இருக்கும் அது என்ன செய்யும்? பாவம். பாவம் தான் செய்யும். ஆக வழி. ஐம்புலன்களின் அடக்கல்தான். சொல்வது யார்க்கும் எளிது. ஆனால் அதற்க்கு ஒரு சுலபமான வழி இருக்கிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள பதிகத்தை படித்தால் புரிந்து விடும்.

மாறிடும் வஞ்சபுலனைந்தின் வழியடைத்து அமுதே- என்று மாணிக்கவாசகப் பெருமானார் தன் திருவாசகத்தில் அறிவுறுத்துவது சொல்லாமலே புரிந்திருக்கும். ஆம் இறை உதவி ஒன்றுதான் இதைச் செய்ய இயலும். இறை சிந்தனையோடு இறைத் தொண்டு புரிந்து இறை பராமரிப்பில் இருந்தால் இன்பம்தான். இருப்போம்தானே.

30. வினை

தமிழில் பொருள் பார்த்தால் செயல் என்று இருக்கிறது. செயல் என்றால் நாம் செய்வதைத்தான் குறிக்கிறது. நாம் யாருடைய தூண்டுதலால் செய்கிறோம் என்பதும் இதனுள் ஒழிந்து இருக்கிறது. ஆக ஒரு வினை செய்யப்படுவதற்க்கு ஒரு தூண்டுதல் தேவைப்படுகிறது. அத்தூண்டுதல் மனத்தில் இருந்து வெளிப்படுவதாய் வைத்துக்கொண்டால் அதை இயக்குவது யார்? நாம்தானே. ஆக நாமே நமக்கு வினை செய்து கொள்வது போல் ஆகிறது. ஆனால் நடைமுறையில் அப்படி அல்லவே. நாமே நமக்கு கெடுதல் செய்து கொள்வோமா? இதுவும் வினை என்றால் கெடுதல் தானா? நல்லதே அல்லையா?. நல்லதும் கெட்டதும் நம்மால் தானே விளைகின்றது. ஆக வினை என்பது பொதுவாகிப்போனது. நாம் நினைத்துக் கொள்வதே சரியென்று சொல்ல நம்ப இயலாதல்லவா?

வினையில் பிரிவினை இல்லை. அது சென்று அடையும் விதத்தை வைத்தே கணிக்கப்படுகிறது என்பதே மாற்ற முடியாத உண்மை. யார் அதில் ஈடுபட்டுள்ளார்களே அவர்களைப் பொறுத்து

மாறுபடுகிறது. ஆக வினையில் பாகுபாடு இல்லை என்புத தெளிவாகிறது. இதில் என்ன ஊழ்வினைஇ செய்வினைஇ கருமவினை என்ற ஒரு பிரிவு. அவ்வாறு ஏதும் இல்லை. ஆனால் உயிரின் உடல்மாற்றத்தில் சில வினைகளின் பயன் ஒட்டிக்கொண்டே வருவது என்னவோ உண்மைதான். எவ்வாறெனில் எல்லாவினைகளும் நம்மனத்தின் வெளிப்பாடாய்தான் உள்ளது. ஒரு உயிரின் வினை மற்றொரு உயிருக்கு வினையை சேர்க்குமானால் அது அவ்வுயிருடன் ஒட்டியே செல்கிறது. நம் மனத்தின் தூண்டுதலில் நாம் செய்யும் போது இது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் மனம் உடலின் இயக்கத்தில் இல்லாது அதனின் இயக்கத்தில் இருந்தால் இவ்வினைகள் சேரா. குழந்தைப்பருவம் போல. அதற்க்கு உறுதுணை இறையருளே. இறைவன் அருளன்றி ஏதும் செய்ய இயலாது. அதனால் தான்

அவன் அருளாளே அவன்தாள் வணங்கி - என்றார் மாணிக்கவாசகனார். ஏன்னென்றால் இதே சிவபுராணத்தில்

பொல்லாவினை ஏன் புகலுமாறு ஒன்று அறியேன்- என்கின்றார்.

ஆக வினையின் தாக்கம் குறைய தொடராது இருக்க இறையருள் தேவைப்படுகிறது. இறையருளைப் பெறுவது பெரும் கடினமானது தான். பெற்றுவிட்டால் பெருங்கடினமும் துரும்புதான். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவர் அருகில் வரவேண்டுமஇ நாம் சுத்தமாகி அவரை நாம் நாடவேண்டும் என்பதால் தான் இவ்வினை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. நூடி சென்று விட்டால் ஏது வினை. அனைத்தும் தூளாகி நீற்று பொடிபோல் ஆகிவிடும். ஆதலால் தான் நீறு பூசியவர் அருகில் வினை வர அஞ்சுகிறது. அஞ்சுபவர் பூசுவது நீறல்ல. வெறும் கற்பொடி தான் என்பதை உணரவேண்டும்.

31. குணம்

சில விசயங்கள் நமக்கு அடுத்தவர்கள் சொல்லி தெரிகிறது. நம்மைப் பற்றி அவர்கள் சொல்வது விமரிசனமாய் எடுத்துக் கொண்டால் நமக்கு வேதனையோ மகிழ்வோ ஏற்படுகிறது. அவர்களின் கணிப்பில் அதுவே நம் குணம் போல தோன்றுகிறது. அது நல்ல விதமாய் எடுத்துக்கொண்டால் நல்ல குணமாயும்இ வேறுவிதமாய் அவர்களின் கணிப்பில் இருந்தால்இ கெட்ட குணமாயும்

சொல்லப்படுகிறது அல்லது நிர்ணயிக்கப்படுகிறது. உயிர்களில் குண வித்தியாசம் இல்லை. உதாரணமாக பாகற்காய் கசக்கும் என்பது அதன் குணம். அதனை உபயோகிப்பவரின் நிர்ணயித்தில் தான் நல்லது கெட்டது என்பது இருக்கிறது. ஆக அதன் குணம் மாறவில்லை. மாறவும் முடியாது. இடமாற்றத்தால் (சூழ்நிலை) குணத்தின் தின்மை குறையுமே அன்றி வேறு மாற்றம் ஏதும் நிகழாது.

உதவிசெய்து கண்டவர் அதை சிறந்த குணம் என்பார். உதாசீனப்படுத்தி பழகியவர் அதை உயர்ந்த குணம் என்று பறைசாற்றுவார். அவர் அவரின் நிலையில் அது சரியே.

ஆனால் உயிர்களின் உறவாடலில் மகனாக மகளாக கணவனாக மனைவியாக அம்மாவாக அப்பாவாக மாமாவாக அத்தையாக இவ்வாறு பல்வேறு உறவுகளாய் ஒரே உயிர் உலாவரும்போது குணம் சீர்படவேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். ஆனால் அவற்றின் இணைப்பில் இன்பம் மட்டுமே காணவேண்டும் என்பதால் குணமாற்றம் ஏற்படுகிறது. உண்மை அதனுள் மறைந்து போகிறது. எவ்வாறு நம் உடல் வேறு சூழ்நிலைக்கு மாறும் போது உபாதை ஏற்படுகிறதோ அது போலத்தான். அப்படி ஆகும் போது அது இறைவனின் விருப்பத்திற்க்கு வேறுபாடாகிறது. அதனால் அவன் கருணை குறைகிறது. தூரமாய் தள்ளப்படுகிறோம். முட்செடியை யார் தொடுவார். தொட நினைத்தால் அதற்க்கு வேண்டியதை செய்துதானே ஆகவேண்டும். அது நடக்கும் போது வேதனை நம்மை வாட்டுகிறது. வேண்டாததெல்லாம் பேசச்சொல்கிறது. ஆக்கியவரின் மீது அவதூறு சொல்ல முனைகிறது. தூரம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது.

புரிதலுக்கு ஒரு கதை: தேள் ஒன்று தண்ணீரில் தத்தளிக்க அதை காப்பாற்றிய சாதுவினையே அது கொட்டியது. அதனால் அது நீரில் விழ மீண்டும் அதனைக்காப்பாற்றஇ இதனை கண்ணுற்ற ஒருவனஇ ஏன் இந்த வேதனை என்று கேட்க சாதுஇ கொட்டுவது அதன் குணம் காப்பாற்றுவது என் குணம் என்று பதிலுறைத்தார். சிறிது புரிந்திருக்கும்.

மற்றொரு கதை ஒரு நாகம் ஒரு ஊரில் இருந்து கொண்டு வருவோர் போவோரை தீண்டி துன்புறுத்திக்கொண்டிருந்தது. அப்பக்கம் வந்த ஒரு சாதுவிடம் மக்கள் இதைச்சொல்ல அவரும் அந்த

நாகத்திடம் சென்று நீ இனிமேல் யாரையும் தீண்டாதே என்று கூறிச்செல்ல நாகம் அவர் வாக்கை தெய்வவாக்காய் எண்ணி அமைதியடைய அதனை அறிந்த மக்கள் அதனை கல்லால் அடித்து துன்புறுத்த அது குற்றுயிரும் குலை உயிருமாகி செயல் இழந்து போகும் தருணம் அச்சாது திரும்ப வர நாகத்தின் நிலை கேட்டு வருத்தமுற நாகத்தின் குணமாற்றம் கண்டு சந்தோசப்பட்டாலும் தீண்ட வேண்டாம் என்றுதான் சொன்னேன் சீற வேண்டாம் என்று சொல்லவில்லையே சீறியிருந்தால் உனக்கு இவ்வாறு ஏற்பட்டு இருக்காதே என்று வருத்தமுற்றதாயும் ஒரு கதை இருக்கிறது.

இவ்விரு கதைகளும் குணத்தைப்பற்றியது தான் என்பது புரிந்திருக்கும்.

ஆக நம் குணம் மாறாது இருக்கவும் குணவளர்ச்சிக்கும் இறையருள் தேவைப்படுகிறது. காரணம் எண் குணங்களை உடையவன் அவன். எல்லா குணங்களும் உடையவன் அவன். சிறு குணம் உள்ள நம்மால் அவனை புரிந்து கொள்ளுதல் அரிது. ஆனால் அவன் குணமோடு ஒப்பிடும் அளவிற்க்கு நம் செய்கை இருக்குமானால் அவனை நெருங்க இயலலாம். அதற்கு நம் குணம் பதப்படுத்த படவேண்டும். அது வெளிப்படும் செயல்கள் செயலாக்கப்படவேண்டும். அதுதான் இறையனாரை நெருங்கும் நல்ல சுருக்கமான திடமான வழி. நெருங்கும் வரை விடாது முயலுதல் வேண்டும். வேண்டும் போது வேண்டி முடிந்த பின் பின் நோக்கி செல்வது உண்டதை மீண்டும் உண்டதைப் போல் ஆகிவிடும். புரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். மாறா குணம் வேண்டி நிற்பது நம் கடனே.

32. போக்கு

இது ஒரு மூலவார்த்தை. இதிலிருந்து பல வார்த்தைகள் தோன்றி உள்ளன.ஆனால் மூலக்கருத்து இருக்கும் இடத்தைவிட்டு போவது தான். எங்கு போகிறோம் எதற்க்கு போகிறோம் என்பதெல்லாம் நாம் எடுத்துக் கொண்ட காரியத்தை பொருத்து புரிந்து கொள்ள முடியும். ஆனால் நாம் இதன் மூலநோக்கத்தை கொண்டு ஆய்ந்தால் இவ்வுலகத்தை விட்டு இறைப்பதம் அடைவதைத்தான் குறிக்கும்.

அவ்வாறெனில் எங்கிருந்து போவது? ஏன் போவது? எதற்காகப் போவது என்பது போன்ற கேள்விகள் இயற்க்கையாகவே தோன்றத்தான் செய்கிறது. நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கு

தான் செல்லவேண்டும் என்பது சாதாரண விதி. ஆனால் நாம் வரும்போது இருந்ததைப் போல் இப்போது இல்லையே. வேறு விதமான ஒட்டலோடு அல்லவா நாம் இருந்து கொண்டு இருக்கின்றோம். அவைகளெல்லாம் ஒழிந்த பின்தானே நாம் வந்த இடத்தை அடைய முடியும். இதுவும் ஒரு சாதாரண விதிதானே.

ஏன் எதற்க்கு போவது என்பது தான் முக்கியமான கேள்வி. நாம் இங்கு உடலெடுத்து பிறக்கின்றோம். இறையனார் விதித்த விதிப்படி செயல்படவேண்டும். அதனை மாறி, மீறி செயல் படும்போது திரும்ப அழைக்கப்பட்டு தூரமாய் நிறுத்தப்பட்டு வேறெங்கோ அனுப்ப படுகிறோம். அங்காவது வந்ததை புரிந்து செய்கிறோமா என்பது தான். மற்றும், வந்து, விதித்ததை செய்து, இறையனார் மனம் நெகிழ்ந்து விட்டால் அவர்பதம் சென்று, அவன் அருளாலே அவன் தாள் பணியலாம். சில நேரம் அவர் பிரதிநிதியாய் ஒரு திருஞான சம்பந்த பெருமான் போல திருநாவுக்கரசு சுவாமிகள் போல சுந்தரமூர்த்தி சுவாமிகள் போல மாணிக்கவாசக பெருமான் போல ஏசுநாதர் போல நபிகள் நாயகம் போல ரமணமகரிசி போல இப்படி எவ்வளவோ இறையாளர்கள் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். இறையனார் போக்கும் வரவும் இல்லாதவர். யார் போக்கு சரியல்லவே அதை மாற்றுபவர். சரியானவர்களை தன்னுள் கொள்பவர். தானே அதனுள் புகுந்து நிலைத்தும் நிலையாமலும் இருப்பவர்.

ஆயினும் அவரின்றி ஏதும் நடைபெறாது. அவரே எல்லாம் என்றால்இ விதியில் இருந்து மாறி செயல்பட வைப்பதும் அவர்தானே என்ற கேள்வி எழுவதும் ஞாயம்தான். உட்பொருளை உணர்ந்தால் இக்கேள்வி எழாது. எவ்வாறெனில், ஒரு உயிர் விதியினின்று மாறி அடுத்த உயிருக்கு செய்ய வேண்டியதை, அதுதானே செய்ய வேண்டும். அதுவுமல்லாமல் அவ்வுயிர்க்கு வேறு வேலை உள்ளது என்பதும் முன்னமே முளைத்ததுதானே. எதிலும் இரண்டு உண்டு. இறைவனைத்தவிர. ஆம் இல்லை என்பதுதான். விதிப்படி இருந்தால் இறைப்பதம் உண்டு. இல்லை என்றால் வேறு இடம் வேறு உருவம் வேறு குணம் வேறு உறவு. தொடர் பிறப்பாகிறது. தேவையில்லை என்றால், நம் பிறப்பின் போக்கு கண்டு நாம் இயங்கவேண்டும். எவ்வாறு என்பது தெரியவில்லை என்று புலம்பினால் உதாரண இறையாளர்கள் இருந்த பாதை இருக்கிறது. இருந்து கொண்டு வாழ்பவர் பாதை இருக்கின்றது. அதை அறிந்து கொள்ளத்தான் ஆறாவது அறிவு. அசிங்கமாய் சிந்திக்க அந்த அறிவு இல்லை.

அப்படி ஆகின் அற்புதங்கள் நிகழும். சாதரண நிகழ்வு கூட அற்புதத்தனமாய் நமக்கு விளக்கப்படும். உணர்ந்தால் உயர்வடையலாம். இல்லை யாகில் நம் போக்கு கால் ஒடிந்த பேக்காக அலையவேண்டியதுதான்.

இதையே

போக்கும் வரவும் புணர்வும் இல்லா புண்ணியனே என்று சிவபுராணமும் தெளிவாய் இயம்புகின்றது.

புரிந்து
அறிந்து
துறந்து
மறந்து
கரந்து
வாழ்ந்தால் இறைப்பதம் பெறுதல் எளிதாமே.

33. முடிவு

எந்த ஒரு காரியத்திற்க்கும் இயக்கத்திற்க்கும் ஒரு முடிவு இருக்கத்தான் வேண்டும். முடிவில்லாவிட்டால் தொடர் நிகழ்வாய் தோன்றும். அது சிறப்புற்றதாய் இருக்காது. காரணம் முடிவு இருந்தால் தான் புதிய தொடக்கம் இருக்கும். நம் அன்றாட வாழக்கையில் நாம் இதை உணர்ந்து கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால் நம்ப மறுக்கிறோம். முடிவு இல்லை என்று எண்ணி ஏமாந்து துன்பம் நிறைந்து விட்டதாய் நமக்கு நாமோ புலம்பிக்கொண்டு அலைகிறோம். ஆனால் நம்முடைய முடிவை தெரிந்து கொள்ள துடிக்கிறோம். தெரிந்து கொண்டால் திட்டமிடலாமே என்று எண்ணுகின்றோம். அறிவு பெற்ற உயிர்களின் நிலை அறிந்து தான் இவ்வுயிரை ஆக்கியவன் முடிவு என்பதை சூட்சுமமாக வைத்தான்.

ஆனால் அதைப்பற்றி கவலைப்படாத உயிர்களுக்கு அதை உணர்த்திக் கொண்டு தான் இருக்கின்றான். உதாரணமாக முனிவர்கள் யோகிகள் போன்றோரைச் சொல்லலாம். இவர்கள் வேறு ஏதும் அறிந்திராது தெய்வ சிந்தனையில் இருப்பதே அவர்கள் அதனை ஒரு பொருட்டாக நினைக்காததிற்க்கு காரணம். ஆனால் நாம் அப்படி இல்லை. பாசகடலில மூழ்கி தத்தளித்து கொண்டு எப்போது முடிவு

எப்போது முடிவு என்று ஏங்கி பயந்து போயிருக்கிறோம். அந்த பயம்தான் நாம் மேலும் தவறுகள் பண்ணாது நம்மை காக்கின்றது. அந்த பயம்தான் நம்மை இறைவன் பால் ஈர்க்கின்றது.

இது தெரிந்து விட்டால் நமக்கு நல்ல விதமான முடிவு ஏற்படவேண்டும் என்று வேண்டுவோரும் முடிவுக்குள் சிலவற்றை முடித்து விடலாம் என்போரும் உண்டு. இது நாம் நடைமுறையில் உயிருக்கு போராடும் போது எண்ணுகின்றோம்.

வராது வராது என்று எண்ணி இறுமாந்து வந்த பின்னே வந்து விட்டதே என்று புலம்பும் எண்ணிக்கைதான் அதிகம். இருக்கும் போது இவ்வாழ்க்கையை நொந்து கொள்வதும் முடிவு வரும்போது அதற்கு புலம்புவதும் வாடிக்கையான வாழ்க்கையாகிவிட்டது. இருக்கிறது என்பதை உணர்ந்தால் இந்த இறுமாப்பும் அவலமும் உண்டாகாது தானே. ஆரம்பமும் முடிவும் நம் கையில் கட்டுப்பாட்டில் இல்லைதானே.

ஆனால் பிறர்க்கு நன்மை செய்ய செய்ய அவர்கள் வாழ்த்த வாழ்த்த இன்னும் வாழவேண்டும் என்ற ஆசை மற்றவர்களுக்கு தோன்றும். அதுவே இறையனார் இன்னருள் புரிய சரியான பக்குவம். அவரும் அருள்வார்.

திருநாவுக்கரச பெருமான் உடல் தளர்ந்தும் எலும்பெல்லாம் தேய்ந்தும் முடிவை அறிந்தும் கவலைப்படாது இறைவனடியை தன் பூத உடலோடு கண்டார். அவருக்கு இருந்த வைராக்கியம் நம்மில் இல்லையே. என்னதான் தெளிந்ததாக நினைத்து நடித்துக் கொண்டாலும் தனக்கென்று வரும்போது நினைவு பிரள்கிறதே. ஏன்?

நம்பிக்கையின் திறம். திறத்தின் தன்மை. தன்மையில் உள்ள உண்மை. உண்மையின்

நிலைமாறாமை. இதுவே அத்திறத்தை நமக்கு இறையனார் அளிக்கும் வழியாகும். முயன்று பார்க்கலாமே.

34. பிரிவு

இது முன்னரே நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. உறவு எனும் போது அதனுள் இது ஒளிந்து தான் இருக்கின்றது. தெரிந்தும் இருக்கின்றது. வேடிக்கை என்னவென்றால் தெரிந்தும் தெரியாததது போல் இருப்பதுதான். பிரிவு இல்லாத செயல் ஏது? பிரிவு இல்லாத உறவு ஏது?

இவ்வுலக வாழ்வில் இது உண்டுதானே. பிரிவு எதனால். உறவு உண்டாக்கப்பட்டதினால். அந்த உறவை உண்டாக்கியது யார்?

ஏன் செய்தார்கள்? அதன் விடிவு என்ன? இதை நாம் சிந்தித்தால் விடை கிடைத்து விடும்.

பல பிறவிகளாய் வந்த நாம் பல நிகழ்வுகளை கடந்து வந்திருக்கின்றோம். அவைகளின் தாக்கம் தொடர்ந்து தான் வருகிறது. அதுவே முன்வினை என்று சொல்லப்படுகிறது. நாம் இறையனார் பதம் நெருங்க நெருங்க அவ்வினைகள் பொசுக்கப்படுகின்றன. சூரியனுக்கருகில் செல்லும் எதும் போல. ஆனால் சூரியனுக்கருகில் எவ்வாறு செல்ல இயலும். பூமியின்

விசையிலிருந்து விலகினால் முடியும்தானே. தூசிபோல. காற்றிலே பூமியின் சக்தி எடுபடாது. ஆகாயத்திலே பறக்க. ஐந்தாய் பூமியான இறைவன் நான்காய் நீராகி மூன்றாய் நெருப்பாகி இரண்டாய் காற்றாகி ஒன்றாய் ஆகாயமாய் விரிந்து பரந்து செங்கதிரில் செஞ்சடைவிரித்து ஆடுகின்ற கூத்தனாயிற்றே. அவனோடு சேர்ந்தாட அவன் நெருப்பென்னும் அனலால் அருளால் சாம்பலாகி சாம்பல் துகளாய் காற்றில் கலந்து ஆகாயத்தில் நம் தற்போதைய காயம் இல்லாமல் ஆடுவது இன்பமல்லவா? அதை அவன் தான் செய்கின்றான். அதைச்செய்ய அவனே உறவை உண்டாக்கி உணர்த்துகிறான். உறவாயும் நமக்காக வருகின்றான். நாம் பக்குவப்பட்டால் தன் அடிசேர்க்க பிரிவை உண்டு பண்ணுகின்றான். பக்குவப்பட வைக்கவும் பிரித்து வேறெரு இடத்தில் வேறு விதமாய் இணைக்கின்றான். அது மட்டுமல்லாது எங்கிருந்து வந்தோம் என்பதை நாம் அவனை நெருங்கி வேண்டினால் உணர்த்துகின்றான்.

அவ்வாறு உணர்ந்தவர்களில் சிலந்தியாய் பிறந்து கோச்செட்செங்கண்ண சோழனும் ஒருவர் ஆவார். அவர் தன் முன்வினை உணர்த்தலால் யானை புகா மாட கோவில்கள் பல சிவனார்க்கு செய்து தன் நன்றியை தெரிவித்துக் கொண்டான் (இன்று குடமுழுக்கட்டப் பெற்ற கூத்தைப்பார் அருள்மிகு கூந்தையப்பர் கோவிலும் தான்). இதுபோல் எத்தனையோ உண்மை

நிகழ்வுகள் நம்மண்ணிலே நடந்தேறியிருக்கின்றன. சேக்கிழப்பெருமானின் திருத்தொண்டர் புராணமான பெரிய புராண அருள் கடலில் புகுந்தால் இதுபோன்ற ரத்தின புதையல்கள் மிகுந்து

கிடைக்கும். ஒவ்வொரு மனிதனும் இக்கடல் நீரின் ஒரு சொட்டையாவது பருகினால் அன்றி இப்பிறவி கடைந்தேறது என்பதே உண்மை.

Koviloor Digital Library

ஆக பிரிவு என்பது நமக்காக நாம் பக்குவம் அடையவேண்டும் என்பதற்காக நம்மை ஆக்கியவர் செய்யும் நன்மையே என்பதை நாம் புரிந்து அதனை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். தேக்குமரம் நல்ல பலன் கொடுக்க வேண்டும் என்பதற்காக அதன் கிளைகளை வெட்டுவதைப்போன்று ஒளிவிட வேண்டும் என்பதற்காக வைரம் பட்டை தீட்டப்படுவதைப்போன்று. ஆகவே பிரிவு என்பது நம் வாழ்வின் நடைமுறை என்று உணரவேண்டும். அதுவும் வாழ்வின் அங்கம் என்று புரிந்து கொள்ளவேண்டும். அதனாலே நமக்கு கிடைக்கப்பெறுவது இறையனாரின் அருகாமை. அவரின் அருட்பார்வை. அவரின் அன்பு. அவரின் தனிப்பெருங்கருணையில் இன்பம் எல்லாம் நமதே.

35. அறிவு

சாதாரணமாய் அனைவரும் புரிந்து கொள்ளும் ஒன்று. ஆனால் ஒரு முனைப்பாக இருக்கவேண்டும். கல்வியினால் பெறும் அறிவு மற்றவர்களின் அனுபவத்தை நமக்கு அறிவுறுத்துவதாக இருக்கிறது. இது நாம் இவ்வுடலோடு இங்கு வாழ்வதற்க்கு வழி செய்வதாக

இருக்கிறது. அனுபவ அறிவையே கொடுத்துஇ அதன் வழியிலேயே சிந்தையை நடத்தும் அறிவாக இருக்கிறது. இவ்வறிவு பெற்றுஇ அது எவ்வாறு ஏற்பட்டது என்று சிந்தனை வளரும் போது ஞானம் பெறப்பட்டதாகிறது. அப்போது கற்ற கல்வி பயனற்று போய் வேறு அனுபவம் கிடைக்க ஆரம்பிக்கின்றது. அதுவே அவ்வுடலையும் உயிரையும் வழிநடத்தி செல்கிறது.

ஆக கற்ற கல்வியறிவு என்பது வேறு, பெற்ற அறிவு என்பது வேறு என்று ஆகிவிடுகிறது. கற்ற கல்வியால் பதவிகள் கிடைக்கலாம் ஆனால் பெற்ற கல்வியால் கிடைத்தற்கு அரிய திருவருளே கிடைக்கப் பெறுகின்றோம். திருவருளால் பெற்ற அறிவு பேரறிவாகிறது. அது பேராண்மையைப் பெற்று தருகிறது. தரவல்லதாயும் இருக்கின்றது. அதனால் கிடைக்கும் ஐயங்கள் அவனாலே அவன் அருளாலே தீர்க்கப்படுகிறது. தீர்மானமாகிறது. தெளிவு உள்ளதாகிறது.

இகபர வாழ்வில் கல்வி அறிவு நமக்கு தேவையானதே. ஆனால் அதே வாழ்க்கையாகிவிடாது. அது ஒரு பாதைதானே அன்றி, அதுவே முடிவானதுமில்லை என்பதை வலியுறுத்துவதே இங்கு முயற்சியாக

Koviloor Digital Library
உள்ளது. ஆகவே அவ்வறிவாம் நுண்ணறிவை பெறுவதே நம் வாழ்வின் நோக்கமாய் இருக்கவேண்டும்.

திருஞான சம்பந்தப் பெருமானார் மூன்று வயதில் அன்னையின் அருட்பால் அருந்தி ஞானம் பெற்றார். அவர் எங்கும் குருகுல கல்வி கற்றவராய் செய்திகள் இல்லை. அருள் சுரக்க அருந்திஇ முதல் பாடலாய்இ அவர் திருநா மொழிந்தது, " தோடுடைய செவியன் விடையேறி"

என்று துவங்கும் பன்னிருதிருமுறையின் முதல் தேவாரப்பாடல். இலக்கணம், பண்பாடு, கலாச்சாரம் முறைமைகள் நிறைந்த பாடல். அவர் பெற்ற அவ்வாற்றல் எல்லா துறையையும் தன் பதிகங்களில் மிக வைத்திருக்கிறது. இது எவ்வாறு சாத்தியப்பட்டது என்பது நுண்ணறிவின் திறத்தை குறிக்கிறது.

ஆக அவ்வறிவு பெருமான் அன்றி யார் நமக்கு அளிக்க இயலும்? முறையாக யாரால் அளிக்க இயலும்? அவரின் ஊட்டுதலில் எத்தனை செய்முறை பயிற்சிகள்? எத்தனை சோதனை கட்டங்கள்? எவ்வளவு முன்னேற்றங்கள்? எத்தனை பரிசுகள்? எவ்வளவு ஆற்றல்கள்? எவ்வளவு சிந்தனைகள்? எவ்வளவு உண்மைகள்? எத்தனை தெளிவான முடிவுகள்? அத்தனையும் அவரின் கருணையன்றோ?.

மிகுந்த நம் அன்பர்கள் நம்பால் கேட்கும் கேள்வியெல்லாம் இத்தனை செய்திகளைஇ சிந்தனைகளை எவ்வாறு பெறுகிறீர்கள் என்பது தான். அத்துனை அன்பருக்கும் சத்தியமானதாக யாம் தெரிவிப்பது

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்டமுழுதும் தருவோய் நீ

என்ற மாணிக்க வாசகப்பெருமானாரின் வாசகமே பதிலாகும். அவன் தாள் பணிந்து அருளுக என்று வேண்டி மன்றாடி அழுது புலம்பினோம். அருளுகின்றார். எழுதுகின்றோம். சிந்தனை திறம்பட

Koviloor Digital Library

தீண்டுங்கள் ஈசனை. சிந்தனை வளம்பெற நாடுங்கள் ஈசனை. சிந்தனை செயல்பட வாழ்த்துங்கள் ஈசனை.

36. கடமை

இது ஒரு செயலைக் குறிக்கும் சொல்லாக இருக்கின்றது. ஆனால் பெருத்த முக்கியத்துவம் வாய்ந்ததாக சொல்லப்படுகிறது. அதன் காரணம் என்னவென்று ஆராய்ந்தால் ஒரு உண்மை புலப்படுகிறது. ஏதோ ஒரு செயலுக்கு ஏதோ ஒன்றை நினைத்து ஏதோ செய்ய வேண்டி இருக்கிறது. ஆனால் முழுமையாக சொல்ல இயலவில்லை. முயன்றாலும் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம் இது நமக்கு நாமே வைத்துக் கொண்ட வார்த்தைஇ செயல் என்றே தோன்றுகின்றது. நன்றி பாராட்டுவதற்காக வந்ததாய் இருக்கலாம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அப்படியானால் எதற்காக இது வந்தது என்று நாம் ஆராய்ந்தால் நமக்கென்று நாம் செய்யவேண்டிய செயல்களை குறிப்பதற்காக வந்தது என்று வைத்துக் கொண்டு நாம் யோசிக்கலாம். அதனால் நாம் அறிவது பல செய்திகள். பல அனுபவங்கள். தாய் மகனுக்கு செய்ய வேண்டியது மகன் தாயிக்கு செய்ய வேண்டியது மனையாள் கணவனுக்கு செய்ய வேண்டியது. கணவன் மனைவிக்கு செய்யவேண்டியது என்று உறவுகளுக்குள் செய்து கொள்ள வேண்டியவைகள் கடமையாக சொல்லப்படுகின்றன. இது நாமே நிர்ணயித்துக்கொண்ட ஒன்றுதான். வாழ்வு முறை சிறப்பாக இருப்பதற்க்கும் நடத்தப்படுவதற்க்கும் இவை இருந்தால் நன்மையாய் முடியும் என்ற யாரோ ஒருவரின் அல்லது ஒரு சாராரின் திட்டமாய் இருக்கின்றது. வழி வழியாக செய்யப்பட்டதால் வழிமுறையாகி வழக்கமாகி பழக்கமாகி விட்டது என்பதுதான் உண்மை.

ஆனால் வாழ்வியல் முறையில் உடலை வளர்க்க அதன் சுகங்களை காக்கத் தான் இவைகள் உண்டாக்கப்பட்டுள்ளன. உயிரைச்சார்ந்து நாம் செய்யப்படவேண்டியவைகள் தெளிவாக இல்லை. அவைகள் தெளிந்தால் அன்றி வாழ்வதில் அர்த்தமில்லை. ஆகையால் தான் வேதனை வரும்போது மட்டும் வேண்ட ஆரம்பிக்கின்றோம். உயிரின் முக்கியத்துவம் அப்பொழுதுதான் உணரப்பட்டு அதற்க்கு வேண்டியவைகளை செய்து இருந்து விட முயலுகிறது. பின் தோற்று தேற்ற முடியா நிலைக்கு தள்ளப்படுகிறது.

Koviloor Digital Library

பணிவிடைகளை கடமை என்று உருவாக்கிய மனிதன் உயிருக்கென்று ஏதும் வைத்துக்கொள்ளவில்லை என்றுதான் நினைக்க தோன்றுகிறது. உடல் வேறு உயிர் வேறு என்று பலதரம் அறிவுறுத்தியாகிவிட்டது. ஆகையால் உயிருக்கு நாம் செய்ய வேண்டியது நிறைய இருக்கின்றது. அதற்கு செய்வதை பணிவிடை என்று வைத்துக் கொள்வோம். அதுவும் அல்லாதுஇ அதை கண்ணும் கருத்துமாய் செய்யவேண்டி உள்ளது. உடலுக்கு என்னென்வெல்லாம் செய்கின்றோமோ அத்தனையும் உயிருக்கும் செய்தாக வேண்டும். நடைமுறையில் உயிருக்கு வேண்டியதை செய்து பழகிவிட்டோம். காரணம் உடல்தானே கண்ணுக்கு தெரிகிறது. ஆனால் அதனை இயக்குவதே உயிர்தான் என்பதை உணராது வாழ்தல் முறையல்லவே.

சிவலிங்க ரூபத்தில் லிங்கம் சிவமாகவும் ஆவுடை அம்மையாகவும் கருதப்படுவதற்கு காரணம் இதுதான். நாம் சிவத்திற்க்கு செய்யும் அபிசேகம் அனைத்தையும் அம்மையாய் இருந்து அய்யன் ஏற்றுக் கொள்வார் என்பதுதான் சூட்சுமமான உண்மை. லிங்கம் உடலாக தெரியும். ஆவுடை உயிராக தெரியாது. ஆக இந்த உடலாலல் உயிருக்கு நாம் செய்ய வேண்டியது நிறைய இருக்கின்றது. உயிர் கொடுத்த அந்த ஒருவனை நாம் நினைக்கவேண்டாமா? தலையே நீ வணங்க வேண்டாமா? கண்ணே நீ அவனை குளிரசெய்து காணவேண்டாமா? செவியே அவன் புகழை கேளவேண்டாமா? வாயே நீ அவரை வாழ்த்த வேண்டாமா? மூக்கே நீ அவரை முகர முயலவேண்டாமா? கைகளே அவரை பூவொடு நீர் சுமந்து தொழாது கண்ட கருமங்களை செய்யலாமா? உடம்பே அவர் தந்ததை அவருக்கு பணிசெய்யாது ஏய்க்கலாமா? அவரிடம் அவர்தந்த உயிர்தானே இந்த உடலை விட்டு செல்லும். நீ கொஞ்சி குலாவும் உடல் கூட வருமா? என்று புரிந்து கொள்ள பல கேள்விகளை நாம் சொல்ல வில்லை இறைஅருளை பெற்று இன்புற்ற நம் இறையாளர் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளுகிறார். புரிந்து திருந்துவோம் தானே.

37. மருந்து

உடலின் உபாதைகளுக்கு இது தேவைப்படுகிறது. உடலுக்கு உபாதை நோய் ஏன் வரவேண்டும்? உபாதை என்றால் தான் என்ன?

Koviloor Digital Library

இவைதான் நமக்கு எழும் கேள்வி. சுகமாய் இருக்கிறோம் என்றால் உபாதைகள் இல்லாமல் இருப்பது என்று ஆகிறது. சுகமாய் இருப்பதென்றால் அது அது அதன் செயல்பாட்டில் இருக்கவேண்டும் என்றுதானே ஆகிறது. ஆக அதன் அதன் வேலையை அது செய்வதால் சுகமாய் இருப்பதைப் போல் தோன்றுகிறது. கை அதன் வேலையையும் கால் அதன் வேலையையும் அது போல் மற்ற அவயவங்கள் உறுப்புகள் அதன் வேலைகளை செய்வதே சுகமான வாழ்விற்கு வழி. மாறினால் நோய் மருந்து என்று அலைய வேண்டியது தான். அவயவங்கள் அதன்வேலையை செய்ய வேண்டுமானால் அதற்கு தேவையானவற்றை கொடுக்கவேண்டும்.அப்படியானால் ஒவ்வொன்றிற்கும் ஒன்று தேவைப்படுகிறது என்று ஆகின்றது. இதை எவ்வாறு பார்த்து பார்த்து செய்வது. முடியாது மொத்தமாக சாப்பிடுகிறோம் அதற்கு தேவையானதை அது எடுத்துக்கொள்கிறது அல்லது அனுப்பபடுகிறது. இல்லையா?

இதில் மாறுபாடு நிகழும் பொழுது மருந்து தேவைப்படும் சூழ்நிலை உண்டாகிறது. ஆனால் நாம் அப்படி இருக்கின்றோமா? பெரும்பாலான பதில் இல்லை என்பது தான். ஆக நாம் தேவைக்கதிகமாகவே குறைவாகவோ எடுத்துக்கொள்கிறோம் என்பதே தெளிவாகிறது. ஆனால் அதன் மூலகாரணம் என்ன என்பது புரியாததாக சொல்லிக்கொண்டு இருக்கின்றோம்.

இறைவனார்படைப்பில் இது புரியாத பதிரா உள்ளது அல்லவா. ஆனால் அனைத்தும் தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொரு உயிருடன் இணைக்கப்பட்டே பிறக்கின்றது. அதுமட்டுமல்ல அவை எங்கிருந்து பெற எப்போது செல்ல வேண்டும் என்பதும் அதிலிருந்து மீளுகிறதா மூழ்குமா என்பதும் யாரால் யாரைஅறிவுறுத்த வேண்டும் என்பதும் அது என்ன உணாத்த வேண்டும் என்பதும் முறையாக சேர்க்கப்பட்டுள்ளது என்பதை நாம் நமக்கு இதுவரை நடந்த கிடைத்த அனுபவங்களை வைத்து புரிந்து கொள்ளவேண்டியது கட்டாயமாகிறது.

சாதாரண நிலையில் உள்ள நாம் எவ்வாறு அதனை புரிந்து கொள்வது? எழுதியவரிடம் கேட்பதுதானே முறை. அது தான் "அவன் அருளாளே அவன் தாள் வணங்கி" என்ற சிவபுராண தங்க வரிகள். 95 வரிகளான அச்சிவபுராணமே நம் நோய் தீர்க்கும் மருந்து என்றால் மிகையாகாது.

Koviloor Digital Library

38. விருந்து

இவ்வார்த்தை இன்பம் தருவதாய் அமைந்திருக்கின்றது. காரணம் இது நிறைவை அளிப்பதனால் என்று வைத்துக் கொள்ளலாம். எது நிறைவை அளிப்பதானால் அதுவே விருந்தாய் சொல்லப்படுகிறது. உதாரணமாய் கண்களை எடுத்துக்கொண்டால் கானும் காட்சி விருந்தாய் அமைகிறது. இதனையே காதுகளுக்கும் சொல்லிக்கொள்ளலாம். அதுபோலதான் வயிற்றுக்கும். புசி என்பது ஒரு உணர்த்துதலாக இருக்கின்றது. மற்றவை உணர்த்துதலின்றி அதுவாய் வர உணரப்படுகிறது. ஏன்?

ஐம்புலன்களும் பெற்று உணரவைத்து உயிரை காக்க இறைவனால் கொடுக்கப்பட்டது. அதே நேரம் பசி என்பதும் அவராலே நமக்கு அளிக்கப்பட்ட ஒரு உணர்வே. இது எதனால் அறியப்படுகிறது என்பதுதான் சூட்சுமமாக இருக்கின்றது. இவ்வுணர்வு எங்கே அறியப்படுகிறது? வயிற்றில் என்றால் வயிறு இடபாகத்தில் அல்லவா இருக்கின்றது. பின் நடுவிலே அவ்வுணர்வு எவ்வாறு? ஏன்?

இப்பொழுது நாம் திருமூலரை நெருங்கினாலே விடையும் விடிவும் கிடைக்கும். உள்ளம் பெருங்கோயில் என்ற பாடலில் சீவன் சிவலிங்கம் என்பார். சீவன் நம் முதுகுத்தண்டின் பாதிக்கு முன்னரும் உடம்பின் நடுவாக இருக்கும் ஒரு லிங்க வடிவமானதின் ஆவுடைப்பகுதி போல் உள்ள ஒரு சுரப்பியிலிருந்து அப்பசிஉணர்வு அறிவுறுத்தப்படுகிறது. அந்த சீவனே நாம் அனுப்பும் அபிசேக பொருட்களுக்காக காத்து இருக்கின்றார். சாப்பிடும் பொழுது அது சாந்தமாக்கப்பட்டு பசி குறைகிறது தணிகிறது. மறைந்து விடுவதில்லை. அதுவும் சாப்பாட்டின் உணர்வு அறிந்தவுடன் பசி தணிகிறது. ஆக பசி என்பது ஒரு சிறு வினாடியில் தணிக்கப்படுகிறது என்பதே உண்மை.

அவ்வாறு இறைவன் பசி ரூபனாய் நம்முள் உணர்வாய் இருப்பவனை தணிக்க இவ்விருந்து தேவைப்படுகிறது. அதனை நாம் நம் பசியின் நிலையறிந்து இடவேண்டும். மீறினால் தொல்லைக்கு ஆளவோம் என்பது நிச்சயம். அது மட்டும் அல்லாது பசி உடலுக்காக இறைவன் கொடுத்தது. மற்ற புலன்களெல்லாம் உயிருக்காக கொடுக்கப்பட்டது. ஆனால் மனிதன் அந்த ஐவரின் ஆட்டத்தில் ஆட்பட்டு சீரழிந்து சிதைந்து போகிறான். அதைத்தான் மாணிக்கவாசகப்பெருமானார் தம் திருவாசகத்திலே "இந்திரியவயம்

மயங்கி இறப்பதற்க்கே" காரணமாய் என்கின்றார். ஆக நாம் விருந்தின் மேல் விருப்பம் கொள்ளாது இறைவிருந்தே பருகி யாரும் பெறா பேற்றினை பெறுவோமாக.

39. அருந்து

ஒரு மாதிரியான தலைப்பாய் இருக்கின்றது என்று எண்ணத் தோன்றுகிறதுதானே. உண்மை. அருந்துதல் என்பது ஒரு செய்கைதான். ஆனால் அது எதைப்பற்றி என்று விரித்துரைக்கும் போது முரன்பட்ட கருத்தை தெரிவித்து நிற்கிறது.

இச்சொல் இரண்டு பொருள்படுவதாய் இருக்கின்றது. ஒன்று உடலுக்கு துணைபுரிவதாயும் ஒன்று உயிருக்கு துணைபுரிவதாயும் இருக்கின்றது. உடல் ரீதியாக எடுத்துக் கொண்டால் பருகுதல் என்ற பொருளில் திரவஉணவுகளை ஏற்கும் பொழுது இதன் பொருள் புலப்படுகிறது. பொதுவாக திரவ பொருள்கள் தாம் அடையும் இடத்தை பரவி பரப்பி நிற்கும். திரும்ப பெறுவது கடினம். அது போன்று நாம் உண்ணும் உணவின் செரிமானத்திற்க்கு உறுதுணையாக இருப்பது நீர். ஆதை நாம் அருந்துவதால் உடலின் வேட்கை தணிகிறது. உடலில் ஒருவிதமான தெம்பு உண்டாகிறது. உடலின் வளர்சிக்கும் சக்திக்கும் உதவுகிறது. அதே நேரம் அருந்துதல் என்பது மிகஎளிதானது விழுங்குவதைக் காட்டிலும். அதனால்தான் நோயாளிகளுக்கு திரவ மருந்து கொடுக்க ஏற்றப்படுகிறது. திரவ உணவு உடலுக்கு உகந்தது. அது உடலுக்கு நன்மை செய்வதாய் இருக்கின்றது. பெருக்க விடுவதில்லை. ஆக அருந்துதல் என்பது உடலை பொருத்தமட்டில் மிகமுக்கியமான செயலாய் இருக்கின்றது.

அதைப்போன்று உயிரின் நிலையிலிருந்து பார்த்தால் அருந்துதல் என்பது வாய் தவிர மற்ற புலன்களின் வழியே நடைபெறுகிறது. அவ்வாறு நடைபெறுவது உணவாக இல்லாமல் உணர்வாக இருக்கிறது. உணர்வே உணவாக உயிரால் பெறப்படுகிறது. அந்த உணர்வின் தன்மையை ஒப்ப உயிர்நிலைபாடு இருக்கின்றது. கண்களால் ஒரு இழப்பை காணும் பொது உயிர்பரிதவிக்கிறது. அதே நேரத்தில் நேரிடையான காரியங்களில் அதற்கு தருந்தாற் போல்செயல்படுகின்றது. ஆனால் உயிர் அருந்த வேண்டியது பெறப்படவேண்டியது இறைவனின் திரு அருளே அன்றி மற்ற ஏதும் இல்லை. அதனைப் பெறும் பொழுது நாம் அதை

விழுங்க முடியாமல் விக்கும் தடைக்கு ஆக்கப்படுகிறோம். அந்த விக்கல் அந்த தடை நம்முடைய வனைபளே அன்ற மற்ற ஏதாய் இருக்க முடியும்.

இதையே மாணிக்க வாசகப்பெருமானார்

" உன் அருள் ஆரமுதத்தை விழுங்குகின்றேன் விக்கினேன் என் வினை இன்மையால்"

என்று பதறுகிறார். கிடைத்த பெறும் பேற்றை விட்டுவிட்டேனே என்று புலம்புகின்றார். அந்நிலையில் இருந்து நாம் தாழ்ந்துதான் இருக்கின்றோம். விடிவு? நம் கையில்தான்

40. பொருந்து

பொதுவான கருத்தாக கொண்டால் நாம் செய்ய வேண்டிய செயலாக இருக்கின்றது. அத்தோடு ஒரு பெரும் செயலுக்கு ஆட்படுத்துவது போன்ற செய்கை உடையதாய் இருக்கின்றது. ஒரு நன்மை கருதியோ இன்பம் வேண்டியோ நடத்தப்படுவதாக இருக்கின்றது. எவ்வாறு உயிர் பொருத்தமான உடலில் புகுந்து வாழ்கிறதோ அதுபோல. அத்தோடு காரணம் கருதி நடந்ததாக உள்ளது. இச்செய்கை தவறுமேயானால் வாழ்வு துக்கம் நிறைந்ததாய் துன்பம் சூழ்ந்ததாய் ஆகிவிடுகிறது. இது ஒரு திட்டமிட்ட செயலாய் நடத்தப்பட்டு இருக்கின்றது. யானையின் வாலுக்கும் குதிரையின் வாலுக்கும் காரணம் இருப்பதைப்போல. அதன் அதன் வால் அதன் துணைக்காக உள்ளதைப்போன்று.

ஆக பொருந்து என்பதில் பல விபரங்கள் இணைந்து தான் உள் இருப்பதைக் காட்டுகிறது. நாம் இதனை இரண்டுவிதமாய் ஆராயலாம்-ஆராய நேரம் உண்டுதானே- பொருந்து என்றால் வேறு யாராவது வந்து பொருந்த வேண்டும் என்பதைப்போல புலப்படுகிறது.. அப்பொழுது அப்பொருந்துதல் இணக்கமானதாக இருக்கவேண்டும். அதுவே நட்பாக காதலாக மனைவியாக மகனாக மகளாக உருவெடுத்து நம் வாழ்வில் இணைகிறது. அதுவும் ஒரு காரணம் கருதியே என்பதை நாம் உணரவேண்டும். அது நமக்கு இறைவன் அளித்த ஒரு ஊன்றுகோல்தான் என்பதை உணரவேண்டும்.

பொருத்தமில்லா எச்செயலும் நல்ல முடிவை விடிவைத் தராது. நல்ல முடிவைத்தரவேண்டுமாகில் நம்மை முடிக்கி விட்டவன்தான்

செய்ய இயலும். அத்தோடு நமக்கு பொருந்தும் என்று எண்ணுபவைகளை தாம் நாம் ஆசைப்படுகிறோம். ஆனால் நம் ஆசையின் காரணமாய் மாயையான வெளித்தோற்றங்களை கண்டு நாம் துன்பத்தில் சிக்கி தவிக்கின்றோம். தவிக்கும் பொழுதுதான் இறைவனைப்பற்றி நினைக்கின்றோம் . மற்ற நேரங்களில் மறந்து விடுகிறோம். இது ஒரு தேவையற்ற செயலாகும். நமக்கு இது பொருந்தும் என்பதால் அவன் பொருத்தி அனுப்பி உள்ளான். ஆதனை புரிந்து கொள்ள நாம் தயங்குகின்றோம். வெளித்தோற்றமான கை கால்களும் உள் தோற்றமான குணம் மனம் அவனது பொருத்துதல்தானே. மறை பொருளாக அவன் இருக்கவேண்டி அவன் முன் காட்டப்படும் மாயையையும் பொருத்தியுள்ளதை புரிந்து கொள்ளது புலம்புதல் முறையா?

41. தகுதி

இது தானாக கிடைத்து விடுவதும் இல்லை முயன்று பெருவதும் இல்லை. ஆனால் அந்த பண்போடு வந்திருக்கின்றோம் என்பதை புரிந்து கொண்டால் அதுவே பெரிய ஞானம். காரணம் கல்வியினால் நாம் பெரும் பதவியும் பண்பும் தகுதியாக கொள்ளப்படுவதில்லை. கல்வி உயிர்வாழ்வதற்க்கு நாமாய் விதித்துக் கொண்ட வரை அளவுதான். அது அதன் பணிமுடிந்த பின் உதவுவது இல்லை. இதை நாம் பொய்அறிவு என்று கொள்ள வேண்டும்.

கல்வி என்னும் அல்லலில் பிழைத்தும் - என்கிறார் மாணிக்கவாசகப் பெருமான். காரணம் அக்கல்வி அறிவு மாறுபடுதலுக்கு உட்பட்டதாய் இருக்கின்றது. பொய்யாய் இருக்கின்றது. அதனால் எத்தகுதியும் கிடைத்து விடாது. பதவிகள் பெறலாம். ஆனால் பண்புகள் பெறப்படுவதில்லை. குணங்கள் ஊட்டப்படுவதில்லை. இவ்வுண்மை யார் அறிந்து வாழ்கிறார்கள். அவ்வாறு வாழ்பவர்கள் புனிதனாக ஆகிறார்கள்.

மேற்சொன்ன எல்லாவற்றையும் பெறும் தகுதி யார் பெறுவார்கள்? இலாது போனால் யார் தருவார்கள்? அல்லாது போனால் யார் ஊட்டுவார்கள்? கேள்வி கேள்வியாக சிறிது நேரம் இருக்கட்டும்.

தகுதி என்பதுவே ஒரு குணம். அதை தரும் அவர் மிகுந்த தகுதி உடையவராய் உப்பைத்தரும் கடல் போல எல்லாம்

மிகுந்தவராய் எல்லாம் பண்ன் தரும் வாழை போல எப்போதும் தருபவராய் ஏற்றியவுடன் ஒளிதரும் தீபத்தைப் போல கேளாது தருபவராய் எதிர்நோக்காது கதிர் தரும் கதிரவன் போல அறிந்து தருபவராய் வான மழை போல இவ்வளவும் நிறைந்தவராய் எவருள்ளாரோ அவர்தான் அதை அளிக்க முடியும். இல்லையா? ஆனால்

குணங்களும் குறிகளும் இல்லா குணக்கடல்
நிறங்களும் நெறிகளும் இல்லா தூயவன்
பதங்களும் அதங்களும் இல்லா இனியவன்
புறங்களும் இடங்களும் இல்லா இடபதன்
வேண்டுவன வேண்டாது அருளும் மாபண்டாரகன்
அறிவதும் தெரிவதும் அல்லா பரஞ்சுடர்
திசைகளும் இசைகளும் இல்லா இன்பதன்
அம்மை அப்பன் என்று அனைத்திலும் நின்ற

அவன் தானே நமக்கு தகுதி என்ற ஒன்றை அவனை பேணும் தகுதியை அவனைப் பூணும் தகுதியை அவனைக்காணும் தகுதியை அவனைப் போற்றும் தகுதியை அவனைப் புகழும் தகுதியை அவனை ஏற்றும் தகுதியை அவனை உண்ணும் தகுதியை அவனை உணரும் தகுதியை தரமுடியும். இறைவனே தகுதியின் மூலம். இறைவனே தகுதியின் வடிவு. இறைவனே தகுதியின் விடிவு. நாம் எப்போது அவனை போற்ற ஆரம்பித்தோமோ அப்போதே நமக்கு தகுதி மிகுந்துள்ளதாய் ஆகின்றோம். மற்ற தகுதிகளும் அதனை ஒட்டியாதாக இருக்க அதையே மெய்யென்றால் அது சுத்த பொய் மூடத்தனம் என்றாவது ஞானிகளையும் அருளாளர்களை உணர்ந்தால் புரியும்.

42. வழி

சாதாரண சொல்தான். இதனுள் பொதிந்து இருக்கும் கருத்து பலபல. எந்த ஒரு செயலும் இது இல்லாது நடைபெறாது. இது ஒரு முக்கியமான தேவை. எந்த ஒரு செயலும் வழி முறை இன்றி செய்ய இயலாது. எந்த ஒரு இடத்தையும் ஒரு வழி இன்றி அறிதல் முடியாது. பல வழிகள் இருக்கலாம் ஆனால் வழியே இல்லை என்று எப்போதும் ஆகிவிடாது. இதனை கண்டறியும் தன்மை வேண்டுமானால் மாறுபாடாய் இருக்கலாம்.

நல்வழி தீவழி என்று ஏதும் கிடையாது. இடரில்லாது சென்று அடைவோமெனில் அது நல்வழியாக சென்றவர்களால் சொல்லப்படுகிறது. அதற்க்கு புறம்பாய் செல்வோமெனில் அது தீவழியாக வகுக்கபடுகிறது. ஆக வழி என்பது ஒன்று தான் அதன் நோக்கத்தை பொறுத்து. நம் நோக்கம் தெளிவுற இருக்கும் பொழுது வழி சுருக்கமாக இருக்கின்றது. தெளிவில்லாத போது முடிவில்லா வழியாக புலப்படுகிறது. தெளிவு வர வர வழி சுருங்கிக்கொண்டே இருக்கிறது. அதே போன்று நோக்கமும் வழியை அமைப்பதற்க்கு உதவியாக இருக்கின்றது.

இவ்வழிகளையெல்லாம் வகுத்தது யார்? என்பது தான் இப்போதைய கேள்வி.

கேள்வி சிறிது ஆனாலும் அதன் விளக்கம் பெரிதாக இருக்கின்றது. கருவாகும் உயிர் தாயின் யோனியிலிருந்து அவளின் கருவறையை அடைய வழி அமைத்தது யார்? சென்ற வழியே மீண்டும் வெளியில் வர வழி வலியோடு அமைத்தது யார்? வந்த பின் அது வளர்ந்து தானே இயங்க தாயின் மார்பில் பால் சுரக்க வழியமைத்தது யார்? சூன்யமான மூளையில் இந்த உலகத்தின் சூட்சுமங்களை புரிந்து கொள்ள வழி அமைத்தவன் யார்? சூட்சுமங்கள் புரிந்து அடுத்தவாக்கு அதன் உண்மை வழியினை சொல்ல வழி அமைத்தவன் யார்? புரியாது உழன்று புரிந்ததாக நடித்து வாழ்ந்த பின் வந்து சேரும் வழி அமைத்தவன் யார்? என்ற கேள்விகளின் நாயகன் இறைவன் அன்றி யாராய் இருக்க முடியும்.

"போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே" என்று திருப்பள்ளியெழுச்சியிலும்

"வாழ வழியருளி வந்திருந்து" என்று திருஅம்மானையிலும்

"வாழ்வற வாழவிக்க வந்த மருந்தே" என்று பிடித்தபத்திலும் மாணிக்கவாசகப்பெருமானார்

வாழும் வழி யார்? எது? ஏன்? என்று அறுதியிடுகிறார்.

இந்த பூவுலகில் வழியில்லாது எந்த உயிரும் இல்லை. எல்லா உயிரையும் படைத்து காத்து அழித்து மறைத்து அருளும் இறையனார் பலிதேற்றி பாவத்தை அறுத்து பக்குவமாக்க பல வழிகளை செய்து விளையாடி உறவாடி உடனாயும் வேறாயும்

Koviloor Digital Library

இருந்து நம்மை வழிநடத்துவதை யார் அறியாது இருக்கப் போகிறார்கள்? அடியும் முடியும் நீளமும் அகலமும் முளையும் முடியும் இன்பமும் துன்பமும் இல்லா அப்பரம் பொருள் நம்மையே உறவாக ஊராக கொண்டான் உவந்து என்பதை யார் அறியாதார். வழியற்று வற்றல் மரம் போல் நிற்க்கும் நமக்கு வழியே அவன்தானே. அவனன்றி நமக்கு வேறு வழிதான் எது?

அருளார்களும் ஞானிகளும் சித்தர்களும் அடியார்களும் நடத்துபவன் அவனே நாம் ஏன் வேறு வழி அமைத்துக் கொள்ளாது வழியின் விதியில் தெளிவாக சென்றமையால் இறைவனின் திருவடியை சென்று சென்று கண்டு கணடு ஆனந்தித்து அவனது திருநடனத்தையும் உணர்ந்து இன்புற்றார்கள். அவ்வின்பம் நாம் பெற வேண்டாமா? அவ்வழி நமக்கும் அவன் அருள வேண்டாமா? முனைப்படும் போது வழி தானே முளைக்கும் தானே?

43. பலி

தலைப்பே பயங்கரமாய் தோன்றுகின்றதா? ஒரு சொல்லில் என்ன இருக்கிறது. அதன் பொருள் அதைப்படித்தவுடன் நமக்கு ஒன்றை உணர்த்துவதனாலே இது போல் எண்ணத் தோன்றுகிறது. சொல்லின் பொருளே இவ்வளவு கடுமையாக நாம் புரிந்திருப்பதைப் போல் அதன் முழுமையான பொருள் அறிந்தால் மகிழ்ந்துதான் போவீர்கள். நாம்தான் எதையும் சரியாக புரிந்து கொள்வதில்லையே. வேறு பொருளை புரிந்து அல்லது சொல்லப்பட்டு அதன் வழியே சென்று கெட்டு அழிந்து வருந்துகிறோம். இதுதான் நடைமுறையில் நடந்து கொண்டு இருக்கிறது. ஒரு பொருளை பற்றி விரிவாக தெளிவாக தெரிந்து புரிந்து கொள்வதால் ஏமாற்றங்கள் தடுக்கப்படுகின்றன.

பலி என்ற இச்சொல்லுக்கு நாம் செய்து கொண்டு இருப்பது மிருகங்களையும் பறவைகளையும் கொல்லுவதாய் சொல்லப்பட்டு அது நடைமுறைபடுத்தப்பட்டு காலகாலமாய் செய்யப்பட்டு வருகிறது. நம்மில் சில பேர் அது ஒரு வேண்டுதல் வழிபாட்டின் ஒரு முறை என்று நம்பி செய்து கொண்டும் பேசிக்கொண்டும் நியாயப்படுத்த பலவழிகளை கையாண்டும் செய்து கொண்டு இருக்கிறோம். இது மனதிற்கு வேதனை அளித்தாலும் உண்மை உறைக்கத்தான் செய்யும். உயிர்களாய் எண்ணி நாம் அவைகளை நினைத்தோமாகில் அவற்றை பலியிடும் எண்ணம் தோன்றாது. காரணம் உயிருக்கு

அளவில்லை. எறும்பு முதல் யானை வரை எல்லாம் ஒரே அளவு தான். உருவங்கள் வேறு.

புல்லாகி பூடாகி புழுவாகி மரமாகி பல்விருகமாகி பறவையாய் பாம்பாய் கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய் வல்அசுரராகி முனிவராய் தேவராய் என்று பிறப்பின் உண்மையை சிவபுராணம் வாயிலாய் அருளாளர் மாணிக்கவாசகனார் உணாத்துகின்றார். இதையெல்லாம் கொடுத்தவனுக்குத்தான் எடுக்கும் உரிமை இருக்கிறது. அவனுக்காக நான் எடுக்கிறேன் என்றால் உன்னை எடுக்கும் போது எடுத்தவனுக்கு தண்டனை ஏன்?. இது ஒரு முற்றுப்பெறா நீண்ட விள்க்கமாய் சென்று பின் முடியும். இது இத்தோடு இருக்கட்டும்

மேல் உள்ள அனைத்து பிறப்பும் கொடுத்தவன் கொடுப்பவன் இறைவனே அவனே அதனை நடத்த உகந்தவன் உரிமையுள்ளவன். பணம் போட்டவனுக்கு எடுக்கும் உரிமை இருப்பதைப்போன்று. ஆனால் இறைவன் கேட்கும் பலி எல்லாம் பொருள்களும் உயிர்களும் அல்ல. நம் மனத்தின் வேண்டுதல். நம் எண்ணங்களின் தூண்டுதல். நம் போற்றுதலின் பிரதிபலிப்பு. இறைவன் அதையே விரும்புகிறான். அதனாலேயே அவனுக்கு கபாலி என்று ஒரு திருநாமம் உண்டு. ஆகையால் நாம் செய்யவேண்டியதாக தீருநாவுக்கரசு பெருமான்

"தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேறும் தலைவனை தலையே நீ வணங்காய் "

என்கிறார்.

நாவுக்கரசர் சொல்லுக்கு வேறு சொல் ஏது உண்டு?

இறைவனின் பாதத்தில் நம் மனபலிகளை இடுவதே வேண்டும். இடையில் யாரும் தேவையில்லை. யாதும் தேவையில்லை. அவன் நம் பலிகளை தன் தலையால் எடுத்துக் கொள்ள உங்கள் அருகில் உங்கள் உள் உங்கள் எதிரில் உருவாய் அருவாய் இருக்கின்றான். எங்கே இடுவது? அதற்குதானே கோயிலில் பலிபீடம். இடம் தெரிந்து விட்டதல்லவா? இடவேண்டியதுதான்.

44. கழி

இரண்டு பொருள் படுவதாய் உள்ளது. கழி என்பது நீக்குதல் என்றும் குச்சி என்ற பொருள்படுவதாயும் இருக்கின்றது. இரண்டு பொருளும் ஒரு உள்ளர்த்தத்தை குறிப்பதாய் உள்ளது. பெரிய குளத்திலிருந்து குப்பைகளை எடுப்பதற்கு குச்சி தேவைப்படுவதைப்போல. இச்சொல் நம் வாழ்வோடு தொடர்புடையதாய் இருக்கின்றது. வாழ்வியலில் பல செய்கைகள் நம்மில் இருந்து கழிக்கப்படவேண்டியவைகளாக இருக்கின்றது. ஒருமரம் நன்கு வளர எவ்வாறு தேவையில்லாதவை கழிக்கப்படுகிறதோ அது போன்று. ஏன் அவைகள் கழிக்கப்பட வேண்டும்? எங்கிருந்து அவைகள் வந்தன? எப்படி வந்தது? என்பன போன்ற கேள்விகள் எழுந்தால் தெளிவு கிடைக்கின்றது.

நம்முடைய பிறப்பே தொடர்கதையான ஒன்று. நம் ஆரம்ப நிலை பிறப்பில் ஏதும் இல்லை. ஆனால் சிறிது ஒட்டுதல் நம்மின் பிறப்பு அறுக்க ஒட்டப்பட்டது. அது மிகுந்த ஒட்டுதலின் காரணமாய் மிகுந்து பிறப்பு தொடர ஆரம்பிததுள்ளது. அதனாலே ஒட்டிக்கொண்ட வினைகள் நாம் வந்த காரணத்தை நாம்அறிய முடியாதவாறு நம்மை பாழ்படுத்திவிட்டன. இவைகளையும் நாம் நம்முடைய வாழ்க்கையின் துணைகள் என்று எண்ணி ஏமாந்து வாழ்ந்து கொண்டு இருப்பது தான் வெட்கக்கேடு. இக்கேட்டை ஒழிப்பதற்கு ஒரு கழி தேவைப்படுகிறது. அது எது என்பதுதான் நம்முள் எழும் கேள்வியாக இருக்க முடியும். இல்லையா? வேறு யாராக இருக்க முடியும்? வேறு யாரால்தான் அறுக்க முடியும்? அனைத்தும் இயக்கம் இறைவனல்லாது வேறு யார்தான் நமக்காக இந்த உதவியை செய்ய முடியும்? அவனே கொடுத்து அவனே எடுத்து நம்மை நல்வழிப்படுத்த அவன் செய்யும் முயற்சிக்கு நாம் துணை போவதுதான் முக்கியம். அது அவனை போற்றுதலில் இருக்கிறது.

இது இப்படி எனில் அவனை போற்றத்தான் இதையெல்லாம் இறைவன் செய்தானா என்று கேட்கும் கேள்வி நம் காதில் விழத்தான் செய்கிறது. போற்றுதலுக்கு அப்பாலாய் நிற்கின்ற இறைவனுக்கு அவன் படைத்த உயிர்கள் உய்த்து அவன் அடி வந்து அடையவேண்டும் என்பதே நோக்கம். ஆகையினால் அனைத்திலும் அவன் நின்று அதற்க்கு உதவிக்கொண்டே இருக்கிறான். அதற்கு ஒரு கழியாக இருந்து உதவுகிறான் என்பதே உண்மை. ஆனால் அதனை உணராது மனித உயிர் மட்டுமே அஞ்ஞானத்தில் மூழ்கி

பாவவலையாம் பாசவலையில் சிக்கி படுகுழியில் விழுந்து பரிதாப நிலைக்கு சென்று நொந்து வெந்து போகின்றது.

இவையெல்லாம் உண்மையா? அல்லது கதையா? அவனைத் தொழுது அவனைக்காண அழுது அவனாலே பழுது நீக்கப்பட்டு அவனை அடைய முயன்று அவன் தந்த சோதனைகளை வாழவின் செயலாய் எண்ணி ஏற்று முடிவினில் அவன் பாதம் அடைந்து இப்பொழுதும் நம்மோடு வாழ்ந்து கொண்டே இருக்கும் அருளாளர்களின் வாழ்வும் எழுத்தும் எண்ணமும் நமக்கு அக்காண முடியா இறைவனின் பாதம் காண அவர்கள் விட்டுச் சென்ற படிகற்கள். அதில் நம்பிக்கை என்னும் கழி ஊன்றி பயணப்பட்டால் அவன் நம்மை ஏற்க தயாராய் இருக்கின்றான்.

"மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே"
"நம்இடர்கள் போய் அகல எண்ணி எழு கோகழிக்கு அரசை"
என்று

எம்குருநாதனாம் மாணிக்கவாசகப் பெருந்தகை தம் மாணிக்க வாசகமாய் திருவாசகத்தில் அறுதியிடுவது எம்பெருமானைத்தான் என்பது உங்களுக்கு புரியாதா என்ன? வாழ்வில் மீள அவனது கழி வேண்டும். வாழும் முறையிலும் அவனது கழிவேண்டும். கழிதீரவே அவனது கழி எனும் துணை வேண்டும். அதற்கு அவனை எப்பொதும் வேண்டும் மனம் வேண்டும். உண்டுதானே.

45. அற்புத நாயகி

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான அன்னை சக்தியை உணர்ந்து நின்றவர்கள் கோடானுகோடி. உணர்ந்து உறைந்தவர் கோடானுகோடி. உள்ளத்தில் நிறைத்து அவளின் அருள் இன்பத்தை சுவைத்துக் கொண்டிருப்போர் கணக்கில் அடங்கா. ஏன் இந்த ஏக்கம்? ஏன் இந்த பரிதவிப்பு? ஏன் இந்த வாட்டம்? ஏன் இந்த எதிர்பார்ப்பு? அவள் யார்? எங்கே இருக்கிறாள்? ஏன் இருக்கிறாள்? என்பதெல்லாம் மனதில் எழும் கேள்விகள். அவளின் அருமை அறிய அவளே ஏற்படுத்திய அந்த கேள்விக்கெல்லாம் பதில் தேடி பல மனித மனங்கள் நெஞ்சில் பக்தியுடனும் பாரத்துடனும் அலைந்து திரிந்து கொண்டே இருக்கின்றன. கேள்விகளுக்கு பதில் கிடைத்தனவா - கிடைக்கலாம். கிடைக்காமலும் போகலாம். ஆனால் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கிடைத்த கொடி கொம்புகளை

பிடித்து பிரயாணிப்பவர்களுக்கு அன்னை அருள்புரிகிறாள். அருள் குருவாய் நின்று வழி காட்டுகிறாள். நெறிமுறையான பயணம் அன்னையின் பாதங்களை அடைய சரியான முடிவான தெளிவான வழியாகும். முறையற்ற முயற்சி வீண் ஏனபது நிச்சயம். அவள் பாதம் தரிசிக்க, அவள் தரிசனம் பெற்று மகிழ பன்னிரு திருமுறையில் தேர்ச்சி வேண்டாம், பட்டாடைகள் வேண்டாம், பல்நூறு பதார்த்தங்கள் வேண்டாம், படித்து பட்டம் பெற்றிருக்க வேண்டாம், வேதங்களில் விற்பன்னம் வேண்டாம், வேள்வியில் முதன்மை வேண்டாம். வேண்டுவதெல்லாம் அவளை வேண்டுவதுதான். "அம்மா... அம்மா" என்ற அந்த உள்ளம் உருகி, மனம் ஒருமித்து, கண்களில் கண்ணீர் துளி விழுந்தும் விழாது, அவளுக்காக கண்ணீர் மொட்டாய் பூவாய் அவள் பாதத்தில் விழுந்து அதன் கனலில் அவள் உயிர்த்தெழுந்து ஓடோடி வந்து, அருகமர்ந்து, ஆசீர்வதித்து, அன்பை பொழிந்து அரவணைப்பாள். கண்ணீர்ப் பூக்கள் சுடுமா? சுடும். எப்போது? மனம் அவளையே எண்ணும்போது. எண்ணம் தீர்க்கமாய், திடமாய் அவளை நெருங்கும்போது. அவளை நெருங்க முடியுமா? அவளைப்பற்ற முடியும்மா? அவளின் நிழலில் ஒன்றிக்கொள்ள முடியுமா? முடியும். அவள் என்ன அந்நோன்யமில்லாதவளா? அவளென்ன நமது நலம் கருதாதவளா? அப்படி இருந்திருந்தால் ஏன் இத்தனை படைப்பு? ஏன் இத்தனை இயக்கம்? ஏன் இத்தனை செயல்பாடு? ஏன் இத்தனை மாற்றம்? அனைத்திலும் நின்று, நிலைத்து, நடத்தி, கடத்தி வருபவளும் அவளே. ஒன்றாக இருந்து பலவாக விரிந்து பரிதவிக்கும் உயிர்களுக்கு வேண்டுவதை வேண்டும் நேரத்தில் அருள்பாலிக்கும் அவள் இல்லாத இடம் ஏது? அவள் இருக்கும் இடம் இதுதான் என்று அரிதியிட்டவர் யார்? அவள் கருணை அவள் அன்பு அவள் அருள் அதன் நீள அகலமென்ன? தெரியாது. தெரியாத ஒன்றை தெரிந்து கொள்வதில் அவள் உயர்ந்து நிற்கிறாள். ஆசி தருகிறாள். ஆனால் ஒன்றே ஆன அவள் உருவாய் தெரிவாள். அருவமாய் மகிழ்விப்பாள் பல்வேறு குணங்களாய் உணர்த்துவாள். இனித்து இன்புற வைக்கும் கனியில் இருந்து பல உருவங்களில் பல வண்ணங்களில் பல வடிவங்களில் தித்திப்பதைப் போல நிர் குணமானவள். நமக்காக பல குணங்களில் வருவாள். நாம் அவளை எந்த விதத்தில் எண்ணுகிறோமோ அவ்வாறு எழுந்து நிற்பாள். கொஞ்சி குலாவுவாள். விளையாட்டாய் கோபித்தும் கண்டிப்பாள். அவள் சாந்த சொரூபினி. சத்திய வேதினி. அமர்ந்த இடத்தில் இருந்து அருகாமையில் வருபவள்.

Koviloor Digital Library

அன்னையின் ஆயுதம் பல உண்டு. அவைகளெல்லாம் யார் சொன்னார்கள்? அதை யார் உருவகித்தார்கள்? அத்தனையும் ஒரு குணம். அத்தனையும் ஒரு நிலை. அத்தனையும் அவள் சக்தியின் செயல்பாடு. சிவசக்தி ரூபினியான அவள் நமக்காக நமது பாவம் போக்க காட்டும் குறியீடுகள். ஏன் செய்ய வேண்டும?. நாமெல்லாம் அவள் குழந்தைகள் அல்லவா.

தன் ஆக்கம் அவதியுற்றால் அவள் பொறுப்பாளோ. அவள்தான் ஆக்கினாள். அவளே அதை நீக்கினாள். ஏன் ஆக்க வேண்டும? ஏன் நீக்க வேண்டும்? வாழ்க்கையின் முறைபாடு என்ன? இன்பமும் துன்பமும். அதன் விகிதம் என்ன? முன்வினையின் முடிவான கணக்கு. அதை தீர்ப்பது அவளின் பொறுப்பானது. நெருங்கியவர்களை வலியின்றி வினை தீர்ப்பாள். மற்றோருக்கும் அவள்தான். அவளின் நினைவு இருந்தால் வினையின் தாக்கம் சுடாது. நினைவு அற்றால் தாக்கம் தாங்கவொண்ணாது. மனம் அவளை நெருங்க நெருங்க விசாலமாகிறது. தெளிவு பெறுகிறது. எதிர்பார்த்தல் குறைகிறது. ஏற்றுக்கொள்ளல் வளர்கிறது. முடிவாக இன்பம் பெருகுகிறது. துன்பத்தோடு இருந்தாலும் அனலின் நடுவில் குளிர்ச்சி தருபவள்தான் இந்த அபூர்வ நாயகி.

46. அன்பு

இது என்னவாய் இருக்கும் என்று மனம் எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கும். உடம்புக்கு உடம்பு காட்டும் பரிவா? உயிருக்கு உயிர் சீராட்டும் கருணையா? ஆன்மாவுக்குள் நடக்கும் ஆன்மாவின் ஆக்கிரமிப்பா? புரியவில்லை. உடம்புக்கும் உடம்புக்கும் என்றால் அது அழிந்தபின் இது இருக்குமா? ஏன் அது ஆசையாக இருக்கக் கூடாது? ஏன் அது காமமாக இருக்கக் கூடாது? உயிருக்கு உயிர் சீராட்டல் என்றால் உயிர் பிரிந்தபின் இது மறைந்து விடுகிறதா? அல்லது தொடர்கிறதா? இது ஒரு விந்தையான பண்பு. பற்றிக்கொண்டால் விடாது. ஆழ்ந்த நம்பிக்கையில்தான் இது முளைத்து எழுகிறது. ஆன்மாவோடு ஒன்றி உறவாடுகிறது. அன்பு என்பது அம்மாவில்தான் ஆரம்பிக்கிறது அவள் உருவாக்கியவளாகவும் இருக்கலாம். பெற்றவளாகவும் இருக்கலாம். வளர்த்தவளாகவும் இருக்கலாம். அன்பு மிகமிக நற்பண்புகளும், நல்ல வழிமுறைகளும் நல்லவர் சேர்க்கையும் அதிகரிக்கிறது. அது குறைய குறைய ஆசை வளர்கிறது, அமைதி குலைகிறது, பொறாமை உயர்ந்தோங்குகிறது. துன்பம் இணைந்து படுத்துகிறது. ஆதலால்

அன்பு செய்யுங்கள் என்று ஆன்றோர்கள் பணிக்கின்றனர். இறைவனுக்கு பக்தி செலுத்துவதில் அன்பு இருந்தால் ஒழிய முக்தி நெறி புலப்படாது.

அன்பு நிறைந்த எங்கும் அமைதி இருக்கிறது. அகங்காரம் ஒழிகிறது. ஆன்மா சுத்தப்படுத்தப் படுகிறது. பிறவிப்பிணி கரைந்தோடுகிறது. ஆக பக்திதான் அன்பு என்பது. இறை பக்தி எதிர்பார்ப்பு இல்லாத ஒன்று. அதுவே நலம் செய்யும். எதிர்பார்ப்பு இல்லாத எந்த காரியமும் இறைத் தொண்டுதான். எதிர்பார்த்தல் குறைய குறைய ஏமாற்றங்கள் ஓடி ஒழிகிறது. நிதர்சனம் தோன்றுகிறது. இறைவனின் தரிசனமும் சித்திக்கிறது. அன்பால் கட்டுண்டு அழிந்துவிடும் உடம்பின் ஊழினை மீண்டவர்கள் எண்ணிலடங்காது. அது இறையின்பால் கொண்ட அன்பு. அன்று கண்ணப்பர் காளத்தியப்பரின் மேல் கொண்ட அன்பு, மாணிக்கவாசகர் ஆவுடையரின் மேல் கொண்ட அன்பு, பிரகலாதன் நாராயணனின் மேல் கொண்ட அன்பு, ரமண மகரிசி அண்ணாமலையார் மேல் கொண்ட அன்பு ஆகியவை அவரவர்களுக்கு அருளிய அருளாற்றல் நம் கண்முன் நெல்லிக்கனியாய் நிற்கிறது.

ஏன் மனித இனம் தவிர மற்ற உயிரினங்களின் மேல் அன்பு கொண்ட இறைவன் அவர்களுக்காக ஓடோடி வந்தது நமக்குத் தெரிந்த ஒன்றுதானே. அவைகள் என்ன நிதம் பூசைகளும் புனஸ்காரங்களும் செய்தனவா? இல்லை. ஆனால் மனதால் செய்த அன்பு மறவாமல் திருப்பி காட்டப்படுகிறது. அவ்வாறெனில் இதை என்னவென்று சொல்வது? பக்தி என்பதா! பாசம் என்பதா! கருணை என்பதா! காதல் என்பதா! புலப்படாத ஒன்றா! அல்ல. புரிந்துகொள்ள வேண்டிய ஒன்று. பழகிக் கொள்ள வேண்டிய ஒன்று. பயன்படுத்தப்பட வேண்டிய ஒன்று. தாயின் நாவில் கன்று உணரும் உணர்வு. வாலின் அசைவில் வாரி வழங்கும் நாய்க்குட்டியின் செல்லம். பேன் பார்ப்பதால் மேய்ந்து உணரும் குரங்குக் கூட்டத்தின் அந்நியோன்யம். மலரின் இதழில் வண்டினம் பதிக்கும் சத்தமில்லா முத்தம். கூரிய வாயினால் கூந்தல் கிளரும் குருவிகளின் பொறுப்பு. இவற்றில் எதில் அன்பில்லை? எதில் பாசமில்லை? எதில் கனிவில்லை? எல்லாம் இறைவனின் படைப்புதானே. கோடானு கோடி உயிர்களை படைத்தாலும் இறைவன் அனைத்து உயிரிலும் வைத்த பண்புதான் இந்த அன்பு. அனைத்து உயிர்களிலும் நிறைந்து இருக்கும் உணர்வுதான் இந்த

அன்பு. இது உணர்வு பூர்வமானது. இனம் இல்லாத ஒன்று. கலப்படமில்லாத ஒன்று. நடிக்க முடியாத பாத்திரம். இழக்கக் கூடாத குணம். கிடைத்தற்கரிய பேறு. இறைவனை சென்றடைய குறைந்த தொலைவான வழி. இன்னல்கள் அகல சரியான நெறி. அமைதியின் ஆழத்தை உணரும் கருவி. அன்பு செய்யுங்கள்! அன்பு செய்யுங்கள்! அதுவே ஊழை வெல்லும் வழி!

47. பழி

அஞ்சவேண்டிய ஒன்று. மற்றவரை அந்நிலைக்கு தள்ளப்படக்கூடாத ஒன்று. நம்முடைய செய்கைகள் இதை இம்மியளவும் உணர்த்தாது இருக்கவேண்டும். நம் எண்ணங்கள் இதனை பிரதிபலிக்காது பாாத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய நடத்தைஇ குணம் இதனை வெளிப்டுத்தாததாக இருக்க வேண்டும். அதற்கு நம் மனம் விசாலமானதாக இருக்கவேண்டும். அப்படி ஆயின் மனத்தின் அளவென்ன? அளவில்லா ஒன்றின் அளவை எவ்வாறு விவரிக்க இயலும். நாம் எவ்வளவு தூரம் எண்ணுகிறோமோ அது விரிந்து நிற்கிறது. ஆனால் அதில் என்ன எண்ண அலைகள் உள்ளன அல்லது சேர்கின்றன என்பதுதான் கேள்வி. நம்முடைய மனத்தின் அளவைப்பொருத்தே நம்முடைய வாழ்வு அமைகிறது. அதில் பழி குணம் மிகுந்தால் அபாயகரமானது. அது மற்ற நல்ல குணங்களை அழித்து விடுகிறது. நல்ல எண்ணங்கள் நல்ல சிந்தனைகள் நிறைந்து இருக்கவேண்டிய மனதில் இந்த ஒரு எதிர் மறையான குணத்தால் அது பாழ்படுகிறது. இது எவ்வாறு உண்டாகிறது? ஏன் உண்டாகிறது?

ஒன்றை எதிர் நோக்கி இருந்து அது பெறப்படாத போது, அது பழி உணர்வாக மாறி பதிவாகி களைந்து எறிய முடியாத வடுவாக படிந்து விடுகிறது. எவ்வாறு இதனை களைய முடியும்? நாம் இறைவனை நாடாது இதனை செய்ய இயலாது. மனத்தின் மூலை முடுக்கெல்லாம் இறைஉணர்வை பெருக்க வேண்டும். அதற்கு இறைசிந்தனை வேண்டும். அதற்கு இறைவழிபாடு வேண்டும். அதற்கு இறைபோற்றுதல் வேண்டும். இது மேலோட்டமாய் இருக்குமாகில் உரிய பலன் தராது. உள்ள உணர்வு உயிர்த்தெழுந்ததை போன்று இருக்கு வேண்டும். இதுவே சித்தமெல்லாம் சிவமாக்குதல் ஆகும். இதுவே முத்தி நிலையாகும். இதுவே பரகதியாகும். இது ஒன்றே நம் மனத்தின் பழி குணங்களை கரைத்து அழித்துவிட வல்லது. ஆனால் அதிலேயே நிலைத்திருக்கும் நிலை உருவாகாது. அப்படி ஆனால் திரும்ப இயலாது. அதுவே இறைவனின் பேரானந்த

பெருங்கடல். விட்டு வர மனம் வராது. வேறு எண்ணம் தோன்றாது. வேறு குணம் உருவாகாது. இதுவே வாழ்வின் வழியாகிப் போகும். அவ்வுணர்வு யாவரும் பெற வேண்டும். ஓர் முறை அனுபவித்தால் அது மீண்டும் வேண்டும் போல் தேட ஆரம்பிக்கும். அதுவே இறைசக்தி. அருள்சக்தி.

மாணிக்கவாசக பெருந்தகை அரசு பணத்தில் ஆண்டவனின் கோயிலை ஆவுடையார் கோயிலீல் கட்ட பெரும்பழிக்கு ஆளாகி பல தண்டனைகள் அனுபவித்து பின் பல விந்தைகளை பெருமான் நிகழ்வித்து மாணிக்க வாசகபெருமானின் மனமெல்லாம் இறைவன் நிறைந்து யாருக்கு குருவாய் இருந்து அக்கோயிலை கட்ட பணித்தாரே அதே இறைவன் அவர்முன்னே அமர்ந்து அவர் பாட இவர் எழுதி ஒரு பிரதி ஓய்வு நேரத்தில் படிக்க எடுத்து சென்று விட்டதாய் சொல்லப்படுகிறது. திருடன், அரசு துரோகி என்ற பெரும் பழியிலிருந்து அவரை மீட்டவன் இறைவன். அவனால் எல்லாம் முடியும். அவனால் மட்டுமே முடியும்.

அதே போன்று பட்டினத்தாரை ஆட்கொண்டதும் அருணகிரிநாதரை அரவணைத்ததும் திருநாவுக்கரசு பெருமானை காப்பாற்றியதும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை சுவீகரித்ததும் அவர்களின் பழியிலிருந்து அவர்களை ஆட்கொண்டு அருளாளர்களாய் ஆக்கிவிட்டான் அய்யன்.

நம் குணங்கள் எப்போது மாறும்? எப்போது நாம் இறைவனை காண்பது? எப்போது நம் குணமாற்றம் ஏற்படும்? எப்போது அந்த அந்தமில்லாதவன் நம்மை ஆட்கொள்வான்? எப்போது நம் பழிகளை ஒழிப்பான்? பாதை சீரானால் பயணம் தெளிவானால் சித்தமெல்லாம் சிவமாக்கல் எளிதுதானே?

"அவன் அருளாளே அவன் தாள் வணங்கி
"நீறு பூசி நினைவெல்லாம் அவனானால்" இது நிச்சயம் சாத்தியம். உங்கள் முடிவு என்ன?.

48.அச்சம்

நாம் வாழ்வில் பலவிதமான நேரங்களில் அச்சத்திற்கு ஆட்பட்டுஇருக்கின்றோம். அதனால் பலவிதமான அல்லல் உறுகின்றோம். சிலருக்கு இது ஒரு நோய் போல் இருக்கிறது.

அதனாலேயே வாழ்வு வேதனை மலிந்ததாய் இருக்கின்றது. உணர்வுகளும் மாறி விடுகிறது. உள்ளமும் அதிலேயே மூழ்கி வேறு எண்ணங்களை ஏற்காத சிந்திக்காத நிலைக்கு தள்ளப்படுகின்றது. தன் நிலை மாறி நிலையில்லாமல் தவிக்கும் பிதற்றும் நிலையை அடையச்செய்து விடுகின்றது. இதுவே மனிதன் கேடு உடையவனாக கெட்டொழியும் படி செய்யும் ஒரு குணமாக உருவாகிறது. இது ஏன்? எவ்வாறு அதனை களைந்தெறிவது? எவ்வாறு இதனிலிருந்து மீள்வது?

முதலில் இது எங்கிருந்து தோன்றுகின்றது என்று அறிந்தால் சுலபமான வழி கிடைத்து விடும். அச்சம் என்பது ஒரு வெற்றிடம் போன்றது. ஏதும் இல்லாதது. ஆதாவது இல்லாததை இருப்பதாக எண்ணி கற்பனையில் மிதப்பது. உதாரணமாக அப்பா அடிப்பார் என்ற அச்சம் மகனுக்கு ஏற்படுவது அந்த கோபம் என்பது எவ்வாறு இருக்கும் எப்போது பிறக்கும் என்று தெரியாது இருப்பது. அதே போல ஒரு பூதகரமான உருவம் இருந்து அதன் குணம் தெரிந்து பழகினால் அச்சம் விலகுகிறது. அன்போடு பழக முடிகிறது. நம்பிக்கையாக ஏதும் செய்ய இயலுகிறது. இதே போன்று தான் ஆவிகளும் பேய்களும் பூதங்களும் காத்துகளும் கருப்புகளும். இல்லாத ஒன்றை அல்லை என்று எண்ணாமல் அச்சத்தோடு வாழ்வது வேதனை. இல்லை என்ற நம்பிக்கை பிறக்க பிறக்க அச்சமின்மை வளர்கிறது. தைரியம் பிறக்கிறது. அன்பு மலர்கிறது. அச்சத்தின் மறுபக்கம் அன்பு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். காட்டு மிருகங்களோடு அன்பாய் பழகுபவர்களை கண்டால் இது உண்மை என புலப்படும். ஆக அச்சம் தவிர்த்தால் அன்பு மிகும்.

அச்சம் தவிர் ஆண்மை தவரேல் என்பது ஔவையின் வாக்கு. பொன்வாக்கு.

ஆனால் இத்தீகுணம் போக யாது செய்யவேண்டும்? யாரிடம் போகவேண்டும்? நான் வேறு ஏது சொல்லப் போகிறேன் நம்முடைய இறைவனிடம்தான் நாம் செல்லவேண்டும். காரணம் அவன் தான் இல்லாது இருக்கின்றான். இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணிக் கொள்வது தான் ஆன்மீகம். காரணம் இல்லாதது தோன்றாது. உள்ளது அழியாது. இறைவனை கண்டு அஞ்சி பின் அவன் பொன்அடியின் நிழல் பெற்று அச்சம் தீர்த்த பின் அவனோடு அன்பாய் இருத்தலே பேரானந்தம். அந்த ஆனந்தமே நிரந்தரம். புரிந்தவர் யார்? அனுபவமே

சான்றாய் அமையும். இறைவனிடம் நெருங்கும் யாரும் அஞ்சுவதில்லை. அதுவே சுடுகாட்டரசனின் சாகசம். அவன் ஆடும் நடன அரங்கம். அந்த அச்சம் தீர்த்தமையினாலே நம்பியாண்டார் நம்பி விநாயக பெருமானுக்கு அமுது ஊட்டினார் திருமுறைகள் கிடைத்தன. அச்சம் தீர்த்தமையால் கண்ணப்பர் தன் கண்ணையே இடந்து இறைவனுக்கே அளித்தார் ஆறே நாளில் முத்தி கிட்டியது. அச்சம் தீர்த்தமையால் அபிராம பட்டருக்கு அன்னை காட்சியளித்தாள் நமக்கு அருமையான அபிராமி அந்ததி கிடைத்தது அவருக்கு அன்னையின் அருள் பிரவாகித்தது. அச்சம் தீர்த்தமையால் அறிவிலியான காளிதாசனை அன்னை அரசுக்கு நிகராக்கினாள்.

அத்தோடு நாம் அஞ்சவேண்டியது என்று சில உண்டு. அவையெல்லாம் நம்முன் நடப்பவைதான். பற்று மிகுதியாய் கொள்ளலே நாம் தவிர்க்க வேண்டிய அச்சம். அதற்கும் இறைவனின் அருள் கடைகண் பார்வை வேண்டும். எடுப்பதும் கொடுப்பதும் அவன்தானே. அவன் அன்றி ஒரு அணுவும் அசையாதே.

மாணிக்கவாசகப் பெருமான் தன் திருவாசகத்தில் "அச்சப்பத்து" என்ற ஒரு பதிகமே பாடியுள்ளார். அதில் அவர் அஞ்சுவதாக பாடி இருப்பது படித்தால் உங்களுக்கு நிரம்ப சிந்தனைகள் கிடைக்கும். படித்து தான் பாருங்களேன்.

49. ஆயுள்

ஆயுள் என்பதைப்பற்றி பலர் பலவிதமாக கூறுகிறார்கள். இதனுடைய முழுமையான தோற்றம் என்னவாய் இருக்கமுடியும் என்பதை நாம் எண்ணிபார்க்க விழைகிறோம். எந்த ஒரு படைப்பும் அது உயர்திணையாக இருந்தாலும் சரி அ.ஃறிணையாக இருந்தாலும் சரி இந்த ஆயுள் என்பது அங்கு வந்து நிற்கிறது. அப்படியானால் இதன் முக்கியத்துவம் என்ன?. இந்த சிந்தனையில் நம் கண்முன் தோன்றுவது பல கேள்விகள் பல சந்தேகங்கள் பல வழிமுறைகள் பல கருத்து வேற்றுமைகள். நாம் சற்று சாதரண நிலையில் இருந்து யோசித்தோமானால் சில உண்மைகள் புலப்படும்.

ஊதாரணமாக ஒரு பேட்டரிசெல்லை எடுத்துக்கொள்வோம். அதன் ஆயுள் என்பது அது பயன்படும் மணிக்கணக்கை வைத்து தீர்மானிக்கிறோம். ஆகா அதன் ஆயுள் அது படைக்கப்படும் பொழுது அதாவது ஆக்கப்படும்போது நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. ஒரே தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் எல்லா பேட்டரிகளும் ஒரே

மாதிரியான உபயோகத்திற்க்கு செல்வதில்லை. ஒரே மாதிரியாக அதன் சக்தி வெளிப்படுவதும் இல்லை. அது காமிரக்களில் உபயோகப்படுத்தபட்டால் ஒரு கால அளவிலும் டார்ச்சு லைட்டர்களில் உபயோகப்படுத்தபட்டால் ஒரு கால அளவிலும் ரேடியோக்களில் உபயோகப்படுத்தபட்டால் ஒரு கால அளவிலும் பயன் தந்து செயல் இழக்கிறது. இதே போன்று மனித ஆன்மா பிறவி எடுத்து இம்மண்ணுலகில் எங்கே படைக்கப்படுகிறதோ அது அந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதன் கால அளவு நிர்ணயிக்கப்படுகிறது. அந்த உயிர் பகவானின் ஆக்கத்தில் அந்த உயிருக்கு தேவையான அனைத்து ஆசா பாசங்களும் அனைத்து இந்திரிய சுகதுக்கங்களும் உறக்க விழிப்புகளும் உணவு அளவுகளும் அறுதியிடப்பட்டு பாவங்களும் புண்ணியங்களும் இணைக்கப்பட்டே இறைவனால் இம்மண்ணுலகில் இயக்கப்படுகிறது. ஆக அதன் கால அளவு இம்மண்ணுலகில் அதன் இயக்கத்தை பொறுத்தே அமைகிறது. அதுவே அதன் ஆயுள் என்று அறியப்படுகிறது. அதாவது ஓர் உயிர் அதனுடன் இணைக்கப்பட்ட எல்லா உடைமைகளையும் அனுபவித்த பின் அதன் காலம் முடிவடைகிறது. நிச்சயமாக ஏதும் குறை இருப்பது இல்லை. ஆனால் எவ்வாறு பல பேட்டரிகள் இணைந்த ஒரு கருவி பலவிதமாய் பலனளித்து அதனால் அந்த பேட்டரிகளின் அல்லது பேட்டரியின் காலம் நீட்டிக்கவோ குறைக்கவோபடுவது போல உயிரின் கால அளவும் அமைகிறது.

அதே போல நமக்கும் சில நேரங்களில் சில சூழ்நிலையில் நடைபெறுகிறது. இந்த அமைப்பும் முன்னமே முடிவாய் இறைவனால் வகுக்கப்பட்டு அந்த உயிர்களின் பாவங்களை குறைத்து அதன் அழுக்கு முற்றிலும் தீரும் வரையில் நில்லாமல் முற்றிலும் தீர்க்க வைத்து எல்லா உயிர்களையும் தன்னுடைய பாதத்தில் சேர்க்கிறார் எம்பெருமான்.

அப்படியானால் இறைவனை வணங்கிக் கொண்டேயிருந்தால் ஆயுள் வளருமா?. இறைவன் மகிழ்ந்து நமை மட்டும் அதிக நாள் மண்ணுலகில் விட்டு விடுவாரா?. அல்ல. இறைஉணர்வில் இறைத்தொண்டில் மகிழ்ந்திருந்தால் மற்ற உயிர்களின் தாக்கம் நம்மை நெருங்காது. நமது நினைவும் எண்ணமும் சேவையும் இறைமார்க்கமாக இருக்கும் போது மற்ற உயிர்களின் பாவ சுமைகள் நம்மீது செலுத்தப்படுவதில்லை.

உயிரின் காலஅளவில் ஆயுள் என்பது ஒரு முடிவான விசயம்தான் முன்னமே கூறியது போல் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்டு இந்த பிறவி உருவாக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை நாம் உணர்ந்தால் மட்டுமே தெளிவு கிடைக்கும். பயமற்ற தன்மை உண்டாகும். நம்மோடு இணைக்கப்பட்ட அந்த பாரங்களான உணவு உடை பழக்கம் எண்ணம் பாவம் புண்ணியம் போன்ற எல்லா இந்திரிய சுகங்களும் உயிரின் உதவிக்காக அனுப்பட்டதுதான். இவற்றை அனுபவிக்குங்கால் அதனால் பாவங்கள் சேர்ப்பதும் புண்ணியங்கள் ஏற்பதும் அவரவரின் நடைமுறை வழக்கங்களின் முடிவாகும். இந்த ஆயுளின் அளவை கூட்ட இயலுமா?. இயலும் என்றே தோன்றுகிறது.

எவ்வாறு எனில் ஒரு பேட்டரியின் உபயோகத்தில் ஒரு கட்டுப்பாடு ஒரு ஒழுக்கம் ஒரு வரைமுறை இருந்தால் அதனை உபயோகப்படுத்துவதில் கவனம் இருந்தால் அந்த பேட்டரி நீண்ட நாட்கள் இறுதிவரை மற்ற பேட்டரிகளைக் காட்டிலும் நன்கு பயன்பட்டே செல்லும். அதுபோலத்தான் நமது உயிரின் ஆயுட்காலம். அப்படியெனில் நாம் நமக்கு விதிக்கப்பட்ட உடைமைகளை எவ்வாறு உபயோகப்படுத்துகிறோமோ அதன்படிதான் அந்த உடைமைகளின் உபயோக காலம் நீட்டிக்கப்படுகிறது. ஆக அதன் உபயோக வழிமுறையில் ஒரு கட்டுப்பாடு ஒரு ஒழுங்கு இருந்தால் அது நீண்ட நாள் உபயோகத்திற்க்கு கிடைக்கும் என்பது உண்மையாகிறது. 1 கிலோ பருப்பை 1 வாரத்தில் தீர்ப்பதும் 1 மாதம் நீட்டிப்பதும் நம் வழிநடத்துதலில்தானே இருக்கிறது. வறுமையின் காரணமாய் அதே பருப்பு நீண்டநாட்களுக்கு வரலாம். வளமையின் காரணமாய் அளவுக்கு அதிகமான பருப்பும் செலவாகலாம். இவைஎல்லாம் உபயோகத்திற்க்கு நம் கையில்தானே உள்ளது. அதனை தீர்ப்பதும் சேர்ப்பதும் நம்மின் இயக்கத்திற்குள் தானே இருக்கிறது.

இதை எவ்வாறு சாத்தியப்படுத்துவது?. நமது நடைமுறை பழக்க வழக்கங்களை சீரமைத்தால் மட்டுமே இது சாத்தியப்படும். அதற்கு ஒரே வழிதுணை வழிகாட்டி இறைத்தொண்டும் இறைச்சிந்தனையும் தான். சித்தர்களும் முனிவர்களும் யோகிகளும் ரிசிகளும் நீண்ட காலம் வாழ்ந்தார்கள் என்றால் அவர்கள் சுவாசிக்கும் காற்றை கூட நீண்ட நாட்கள் சுவாசிக்காது பின் தேவைப்படும் போது தான் உபயோகித்தார்கள். உணவுகளும் அப்படித்தான். தவத்தில் அமர்ந்திருந்த அவர்கள் உணவை மறந்து இறைச்சிந்தனையில் திளைத்தனர். உறக்கத்தை விட்டு இறைஅன்பை

Koviloor Digital Library

உணர்ந்தனர். நீரை மறந்து இறைஅமுதத்தை உண்டனர். பாலை துறந்து இறைஇன்பத்தில் ஊறினர். ஆகையால் தான் அவர்களின் ஆயுள் நீண்டு இருந்தது.

நமது நடைமுறை பழக்க வழக்கங்களில் நமக்கு இறைவனால் படைக்கப்பட்ட விதிக்கப்பட்ட சுமைகளை சுமைகளாய் எண்ணாது அவைகளை ஒதுக்கிவைத்து இறைச்சிந்தனையில் இருந்தால் நமது சேவையில் தொண்டில் இறைவனே மகிழ்ந்து அந்த மகிழ்வை நாம் பெறும் வண்ணம் அவரே அருள் புரிவார். அஃதின்றி இறைவன் அளித்த அவற்றை அவசர அவசரமாய் அனுபவித்து அனுவிப்பதிலேயே நம்கருத்தினை செலுத்திய வண்ணம் இருந்தால் சீக்கிரமே செயல் இழக்கும் பேட்டரி போல கால அளவு குறைந்துதான் போகும். இதனோடு வாழும் சூழ்நிலையும் இதன் தாக்கத்தில் ஒரு பங்காக இருக்கிறது. அச்சூழ்நிலையில் நாம் இணைந்து வாழ ஆசைப்பட்டால் அந்த காலசக்கரத்தில் நாம் சிக்குண்டு சீரழிந்து விடுவோம் என்பது உறுதி. குடும்ப சூழ்நிலையாக இருக்கலாம். உறைவிட சூழ்நிலையாகவும் இருக்கலாம். அவற்றை நமக்கு சாதகமாக மாற்றிக் கொள்ள இறைச்சிந்தனை இறைத்தொண்டு துணைபுரிகிறது. இவைகளின் மூலமாகத்தான் வெல்ல இயலும். சூழ்நிலையை வென்று சுமைகளையும் வென்று விட்டால் மனம் அமைதியுற்று இறைச்சிந்தனையில் இறைநிலையில் நிலைத்து விடும். அப்போது அதன் கட்டுப்பாட்டில் நாம் சென்று விடுகிறோம். தேவையை தேவை இல்லாதது ஆக்கிவிடும். அல்லது தள்ளிப் போடமுடியும். அதனால் நம் வாழ்நாட்கள் நீட்டிக்கபடுகிறது.

மூச்சுபயிற்சி பிரணயாமம் தியானமுறை யோகமுறைகளும் இந்த நிகழ்வை மையமாக கொண்டு நடைமுறைபடுத்தப்படுகின்றன. ஆனால் நாம் உபயோகப்படுத்தாதினால் அவை இல்லை என்று ஆகிவிடாது. இறைச்சிந்தனையின் காரணமாய் நமக்கு கிடைக்க வேண்டியதை நாம் அனுபவிக்க வேண்டியதை சற்று காலதாமதமாக நாம் அனுபவிக்க இயலும். அதற்குண்டான மனபக்குவம் நம்முள் வளர்க்கப்படும். அதனால் நம் வாழ்வின் சூழ்நிலைகள் சொர்க்கலோக இன்பங்களாய் தென்படும். மரணபயங்கள் மறைந்து விடும். சொர்க்கம் நரகம் என்ற இரு வேறு உலகங்கள் நம்முள் இருக்கிறது. அது நமக்கு புலப்படுவது நமது நடைமுறை பழக்கங்களையும் அனுபவிக்கும் முறைகளையும் பொறுத்தே உணரப்படும்.

50. பலன்

பலன் என்பது ஒன்றை தருவதாக இருக்கின்றது. அதுவும் நாம் விரும்புவதாக இருக்கின்றது. நான் இதைச்செய்கின்றேன் இதனால் எனக்கு பலன் என்ன என்ற கேள்வி எதார்த்த வாழ்வில் சாதரணமான கேள்விதான். ஆனால் அதன் உள்ளார்ந்த பொருள் என்ன என்று நாம் யோசித்ததில்லை யோசிப்பதும் இல்லை.

ஏன் நாம் அதை ஒரு பொருட்டாக எடுத்து அதனால் அல்லல் உறுகிறோம் என்பதே நமது சிந்தனையாக இருக்கின்றது. நம்முடைய மனம் அதனை எண்ணி ஏன் வருந்துகிறது?. நம் எதிர்பார்ப்பு பொய்த்து புறமானது என்பதிலேயே நம் மனம் நம்மை அதனுடைய பிடியில் சிக்க வைத்து துன்புறுத்துகின்றது. அந்த உணர்வு ஒரு வலையை பின்னி நாம் மீளமுடியாது காத்து கொண்டு இருக்கின்றது. அந்த பின்னலில் இருந்து நாம் முயல்வதும் இல்லை அது விடுவதும் இல்லை. இதன் காரணம் நம் செய்கையின் பலனை நாம் எதிர்நோக்குவதுதான். இப்போது பிள்ளையை நாம் இவ்வாறெல்லாம் கொண்டு சென்று ஆளாக்கினால் பின்னால் அவனால் நமக்கு இது விளையும் என்ற பேராசை பிணக்கின்றபோது கனக்கின்றது உண்மைதான். விதைத்தால் விளைச்சல் வரவேண்டும் என்பது பொருளாய் இருந்தால் பொருந்தும். அது உணர்வாய் இருந்தால் வருத்தமே மிஞ்சும் என்பதே உண்மை.

உலகியல் வாழ்வில் பலன் என்பது நாம் அமைத்து கொண்ட ஒன்று. அது இறைவனால் அறுதியிடப்பட்டு அனைத்து உயிர்களின் உய்யிம் வழியாக ஒன்றின் பலனை மற்றொன்றின் உதவியாய் அமைத்திருப்பதை நாம் உணரவேண்டும். இதுவே சக்தியின் சுழற்சி என சொல்லப்பட்டு வருகின்றது. அதில் மாறுதல் செய்வது யாராலும் முடியாத ஒன்று. மாறுதலை தன் மயக்கத்தின் காரணமாய் செய்த மனித இனம் துன்பம் என்ற சாகரத்தில் அழுந்தி தினமும் துயருறுகின்றது. ஆனாலும் அதன் மேல் உள்ள மோக மயக்கம் ஒழியவில்லை. உதாரணமாக இறைச்சி உண்பது. மனிதனின் உணவில் அது இல்லவே இல்லை. அதனை உண்ண முற்பட்டதின் விளைவு வைத்தியசாலைகள் பெருக்கத்திற்கும் ஆயுளின் சுருக்கத்திற்க்கும் வழிவகுத்து பிறஉயிர்கள் துன்புறுகின்றன. ஏன் நாம் இதைச்செய்யவேண்டும்? ஞானிகளும் யோகிகளும் முனிவர்களும் எந்த முறையில் சொன்னாலும் கேட்பதை இன்பமாக்கி செயலில் முன்னேற்றம் இல்லாது ஏன் இருக்கின்றோம்?.

Koviloor Digital Library

வினையின் பயன் என்பது உண்மையாகினும் விதியின் வழியே போவதாய் எண்ணி மதியிலியாய் அந்த இந்திரிய் சுகங்களின் பலனை ருசித்த காரணத்தால் அதிலிருந்து விலக மறுக்கின்றோம் வேதனை உறுகின்றோம். அதற்கு வேறு ஆளை காரணம் சொல்கின்றோம் என்பது தான் உண்மை. ஒரு செயலின் பலனை இன்னொரு செயலுக்கு துண்டுதலாக்காது அப்பலனை நாமே அடையவேண்டும் எண்ணும் போது இறைவன் அதை அதனுடைய பாதைக்கு இட்டுச்செல்கின்றான். அது நாம் எதிர்பாராத ஒன்றாக இருக்கின்றது. அதுவே துன்பமாகின்றது. கடைசியில் அவனை எண்ணி வேண்டும் நிலை உண்டாகின்றது.

இறையனாரின் செயல்வடிவாய் இருக்கின்ற பஞ்சபூதங்களின் பலன் நமக்குதானே. மண்ணில் தோன்றும் அனைத்து பொருட்களும் இவ்வுலக உயிர்களுக்குதானே. நீரிலிருந்து பெறும் அனைத்தும் இவ்வுலக உயிர்களுக்குதானே. தீயின் விளைவால் பெறப்படும் நன்மைகள் யாவும் இவ்வுலக உயிர்களுக்குதானே. காற்றினில் திரியும் எல்லா வாயுக்களும் இவ்வுலக உயிர்களுக்குதானே. வான் வெளியில் ஒளிரும் கோளங்கள் எல்லாம் இவ்வுலக உயிர்களுக்குதானே. இதில் எதை இறைவன் எடுத்துக்கொண்டார். ஆனால் அவரின் ஒரு இமைப்பொழுதின் செயல் எவ்வளவு உயிர்களுக்கு துன்பமும் உதவியென்ற வழியில் எத்தனை உயிருக்கு நன்மையும் உண்டாயிற்று என்பதை சுனாமியின் விளைவாய் இந்த பிறவியில் நாம் அனுபவித்து விட்டோம். இதுவும் அவனின் உணர்த்துதலே.

இறைவனின் செயலில் எப்போதும் ஒரு உண்மை புலப்படத்தான் செய்யும். காரணம் அவன் எல்லாமுமாய் இருப்பவன். இதையே எம் குருநாதமணியாம் மாணிக்கவாசகப்பெருமான்

வேண்டதக்கது அறிவோய் நீ
வேண்டமுழுதும் தருவோய் நீ

என்று தமது திருவாசக வேதநூலிலே விளைந்து சொல்வது திருவாசகத்தை முகர்ந்தால் உமக்கே புரியும். முகருங்கள். உணருங்கள்.

51. கயிறு

இதனை நாம் பொதுவாக கட்டுவதற்கும் ஒன்றை கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்கும் பயன் படுத்தும் பொருளாய் வாழ்வியலில் நினைத்து செய்து கொண்டும் இருக்கின்றோம். சிறு சிறு இழைகளாய் உள்ளதை ஒன்றாக்கி இறுக்கத்தை உண்டாக்கினால் இது கிடைக்கும் என்பது

நாம் அறிந்த ஒன்று. அந்த சிறுஇழைகள் பொதுவாக மெல்லியதாயும் மிருதுவாயும் இருக்கும். அதனை ஒன்றாய் சேர்த்து உருவாக்குகின்ற போது அது மிகுந்த கெட்டியானதாக பயனள்ளதாக அதனுடை எடையை விட அதிகம் தாங்குவதாயும் இருக்கின்றது என்னவோ உண்மைதான். அந்த திண்மையானது அது ஒன்றாய் இணைத்ததால் வந்ததா அல்லது அதனை இணைக்கின்ற போது தரப்படும் அமைப்பினால் வந்ததா அல்லது வேறு ஏதாகிலும் செய்யப்படுகின்றதா?

நாம் நம்முடைய சிந்தனையை இங்குதான் தொடரவேண்டும். வேண்டாம் என்றால் ஞானம் பெற இயலாது. நுண்ணறிவு செயல்பட துவங்காது. மனம் தெளிவுறாது. நுண்ணறிவு என்பது இறைவனின் கருணை இருந்தால் அன்றி பெற இயலாது.

"நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணறிவே"

என்று இறைவனையே நுண்ணறிவாய் அறிவிக்கும் சிவபுராண திருவாசக வாக்காய் எம்குருநாதர் மாணிக்கவாசகப்பெருமான் வர்ணிக்கின்றார் என்றால் நுண்ணறிவு இறைவன் அருளுதலின்றி பெற இயலாது என்பதனை இப்போது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கயிறு அதனுடைய திண்மையை பொறுத்து பயன்பட்டு வருகிறது. இதையே நாம் ஆன்மிகத்தில் பல வகைகளில் பயன்படுத்துகின்றோம். எமனின் பாசக்கயிறு அல்லாமல் சுவாமி மூர்த்தங்களில் கயிறு ஆயுதமாய் அமைக்கப்படுகிறது. அப்படியானால் இதன் பயன் வேறு பொருளை அல்லது செயலைக் குறிப்பதாய் இருக்கின்றது. அப்படித்தானே.

அதே நேரத்தில் நாம் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். சித்தாந்த வகையிலே நம் உயிரை பசு என்றும் இறைவனை பதி என்றும் இவை இரண்டும் பாசத்தால் கட்டுண்ட காரணத்தால் பசு இறைவனை விட்டு அகலாதபடி அந்த பாசக்கயிறால் கட்டப்பட்டுள்ளது நம்முடைய உயிர் என்றும் சொல்வார்கள். இதிலே கண்ணுக்கு புலப்படாத உயிரை அதே பொன்று புலப்படாத கயிறால் கட்டப்பட்டு இருப்பதாய் சொல்வது ஏன் என்பது தான் இந்த கட்டுரையின் நோக்கம்இ எம் ஆசை எல்லாமும்.

மெல்லிய நூல் இழைபோன்ற உணர்வுகளால் ஆனதுதான் உயிர். அந்த உணர்வுகள் அழிய அழிய உயிர் இறைவனின் அருகாமையை பெறுகிறது. ஆனந்தம் கொள்கின்றது. நூல் இழைகள் அறுந்து போக போக அதன் திண்மை குறைகிறது. திண்மை குறைய குறைய மென்மையான ஒருசில இழைகள் இறைவனோடு நம்மை தொடர்பு உடையராக ஆக்குகின்றது. அதுவே இறைநிலை அடைய சிறந்த வழியாகிறது. எவ்வாறு இதனை பெறுவது?

இதுதான் யாரும் அறியவிரும்பும் பெரும் கேள்வி. அது வெள்ளத்தனைய மலர் நீட்டம் என்பதைப்போன்றது. குணத்தில் மென்மை செயலில் தன்மை விழியில் கருணை மனதில் உண்மை இருக்குமேயானால் இது சாத்தியம் சத்தியம். என்ன செய்ய ஏதும் முடிவதில்லையே. எவ்வாறு பெறுவது?

அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்க மூடி

என்ற மாணிக்க வாசகப் பெருமானின் வாக்கு நமக்கு பதில் அளிக்கும். அறங்கள் செய்ய செய்ய பாவம் குறைய கட்டி உள்ள கயிறின் இறுக்கம் குறைந்து இறைவனை நெருங்கும் என்பதும்இ நல்ல செயல்களும் அடுத்த உயிருக்கு துன்பம் செய்யாமையும் அறத்திற்க்கு ஒப்பானது என்பதும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றுதானே.

52. திகைப்பு

இதனை நாம் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வதில்லை. ஏன்? இது வரும் போகும் என்பதலா? அல்லது இதனால் நமக்கு என்ன ஆகிவிடப்போகிறது என்பதாலா? இல்லை இதனால் நாம் என்ன பெறப்போகிறோம் என்பதாலா?

இவற்றின் விடை சிறிது சிந்தித்த பின்னே புலப்படும். திகைப்பு என்பது நாம் எதிர்நோக்காத ஒன்று ஒன்றை எதிர்நோக்கி செய்கின்றபோது நிகழுமேயானால் நம்முடைய உணர்வு மாறாது நம்முடைய நோக்கிலே இருப்பதனாலே இந்த உணர்வு உண்டாகிறது. அது வேறு வழி அறிவிக்காது வருவதலே அதனை மனம் ஏற்றுக்கொள்ளாது நாம் செய்த செயலே சிந்திக்க வைத்து அதனுள்ளே சிக்குறுச் செய்து முடிவு ஏதும் இன்றி நம்மை நிலைகுலையச் செய்கின்றது. ஆனால் நடந்தது இதுதான் நடக்கும் என்பது மனதிற்கு தெரியும். அதை சிலநேரம் தெரிவித்தாலும் அதனை

நம் மனம் மறைத்து வேறு பாதையில் இட்டுச்சென்று திகைத்து நிற்க்கும் படியாக நம்மை ஆக்குகிறது. காரணம் மாயையின் மறுபதிப்புதான் இந்த மனம். பேதலிக்கும் குணம்தான் இந்த மனத்திற்கு உண்டு.

சரி வேறு பாதையில் ஏன் இந்த மனம் என்னுள் இருக்கின்ற மனம் இதைச்செய்ய வேண்டும்?. இதனால் நமக்கு பயன் என்ன? அல்லது இதன் வேலைதான் என்ன? இது போல செய்து கொண்டே இருந்தால் என்னுள் ஒரு துரோகி இருப்பதைப்போன்று எனையே கெடுக்கும் மனமாய் ஏன் இருக்கின்றது? இதனால் இதற்கு என்ன லாபம்? ஆல்லது எனக்கு என்ன லாபம்? இது தேவையா?

உடன் இருப்பதான் சகுனி போல. உள்ளே இருப்பது தான் நாகத்தின் நஞ்சு போல. அதன் கட்டுப்பாட்டில் செல்கின்ற போது. சாரதியாய் பரந்தாமன் இருக்கும் போது அர்ச்சுனன் மனம் மாயையை விட்ட போது அந்த ஐந்து குதிரைகளை பூட்டிய தேர் மிகப் பெரும் போரிலும் வெற்றி பெற்றது எதைக்காட்டுகிறது. ஐந்து குதிரைகள் ஐந்து புலனான மெய் வாய் கண் மூக்கு செவி என்பதாய் அடக்கும் நிலை மனமாய் தெளிவு காட்டும் தேரோட்டியாய் இறைவனாய் இருந்தாலே மனம் மாயையில் இருந்து விடுபடும். திகைப்பு திகைத்து ஓடும்.

இதனையே எம்குருஞான வள்ளல் மாணிக்கப்பெருமானார் தம் திருவாசகத்திலே

தேறும் வகை நீ திகைப்பு நீ
தீமை நன்மை முழுதும் நீ
தேறும் வகை என்? சிவலோக
திகைத்தால் தேற்ற வேண்டவோ

என்பது யாரை? அந்த திகைப்பை நீக்கும் வழி என்ன என்பதனை எளிதாய் எடுத்து இயம்பினார் எம் குரு.

இறைவானால் முடிவான செயல் அவனால் ஆன இந்த மானிடப்பதரால் அறிய இயலாது. முடிவான செயல்களின் முடிவை காண முயல்வது தான் மூடத்தனம். நாம் சிந்தனை சிவமாக்கி செய்வன அவன் செயலாய் எண்ணி முயன்றால் அவன் முடிவு சிறப்பானதாய் இருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இதில் முரண்படுகின்றபோது திகைப்பு அடையும் முடிவுகள் நம்மை திகைக்க வைக்கின்றன. ஆனாலும் அத்திகைப்பை போக்க நாம் நாட வேண்டியது இறைவனைத்தான் என்பதை உணரவேண்டும்.

திகைத்த பின் அரனை நாடாது எப்போதும் அவனடியே எண்ணி முயலும் எக்காரியமும் அவனால் முடிக்கப்படும் என்பது திருவாசக வாக்கு.

மனத்தின் நிறம் மாற இறைவனின் கருணை தேவையாகின்றது. தினந்தோறும். பசிக்கு புசிப்பதைப்போல. இறையோட்டத்தோடு ஓடும் தூசு கூட துன்புறவதில்லை. காரணம் அதன் முடிவை அது முடிவு செய்வதில்லை. இடரும் படரின் சுடரின் ஒளியினின்றி அகலா மனமே சுகப்படும். அது இறைவனின் பிடியில் அகப்படும். பின் திகைத்தலும் தேற்றலும் தானே தன் வழி செல்லும்.

53. விரதம்

பலவாரான விரதமுறைகள் நம்முள் இயங்கி கொண்டு இருக்கின்றது. இதெல்லாம் இதைச்செய்யஇ பெறஇ வழிகள் என புகுத்தப்பட்டு சில விழுக்காடுகள் மனதின் திறத்தாலே வெற்றியானதாக நாம் எண்ணி அதனை மற்றவர்க்கும் விதைத்து அதன் வழி வந்தவையை விரதமாக கொண்டு வாழ்கின்றனர்.

ஊனேடு பிறந்த நாம் ஊனையும் வளர்ப்பதுவே உயிர் வளர்க்கும் வழியாகும். உண்பது என்பது நமக்கு நாம் செய்து கொள்ளும் வழிபாடுதான்.

உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ள தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ள புலனைந்தும் காளாமணி விளக்கே.

இது திருமூலரின் திருமந்திர வாக்கு. மற்ற மந்திரமெல்லாம் திறமும் தரமும் இல்லாதது என்பதே பொருள்.

இவரின் கூற்று என்ன? ஊனுடம்பே ஆலயம். நம்முடைய சீவனே சிவலிங்கமாக இருக்கின்ற இவ்வுடம்பை பேணுதல் நம்கடமை ஆகின்றது. அந்த சிவலிங்கத்திற்கு திருமஞ்சனம் தினம் செய்ய வேண்டியது முறையாகின்றது. நம் உடம்பை பாதுகாக்கும் முறையிலேயே இறை வழிபாடும் அமைகின்றது. நாம் இறையானர்க்கும் தினம் செய்யும் பணிவிடையும் இதுதானே. கள்ள புலன்களான மெய் வாய் கண் மூக்கு செவி இவைகளின் வழியே

Koviloor Digital Library
நிலம் நீர் தீ காற்று ஆகாயம் முதலிய பூதங்கள் உணரப்பட்டு ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்ற ஐந்து தொழில்கள் செய்யும் பணி கொண்ட இறைவனை நாம் பெறுவதே நம் உடலின் வழிதானே.

அவ்வுடலை உண்ணாது உறங்காது விரதம் என்ற ஒரு செயவின் மூலமாய் வதைப்பது எவ்வாறு சரியாகும்? யோசிக்கவேண்டும். தடையும் கட்டுப்பாடும் எப்போது வருகின்றது? மிதமிஞ்சும் போதுதானே? அதை ஏன் நாம் செய்ய வேண்டும். பின் தடையின் பிடியில் சிக்குண்டு சிதயவேண்டும். தேவைஇல்லாத ஒன்றை தேவைக்கு அதிகமாக்கி பின் திணவெடுத்து வேதனையுறுவதைக் காட்டிலும் தேவையான அளவு எடுத்துக்கொண்டால் சேதாரம் இல்லையே. எனவே விரதம் என்ற பெயரிலே உடம்மை வருத்துவது குற்றமாகும்.

அதனை விடுத்து

தினம் ஒரு கோவில் செல்வேன்
தினம் ஒரு ஏழைக்கேனும் உணவே உடையோ தானமளிப்பேன்
ஏழைக் குழந்தைக்கு கல்வி செய்வேன்
ஏழைக் குழந்தைக்கு பால் வார்ப்பேன்
தினக்கூலியில் ஒருபகுதியை இறைபணியாக்குவேன்
தகுதியான ஏழைக்கு கடன் இருந்தால் தன் வசதிக்குள் தீர்ப்பேன் ஏமாறாமல்
தனக்கு தெரிந்த செய்தியையோ வித்தையையோ பிறர்க்கு இலவசமாக கற்று கொடுப்பேன்
ஆடம்பரம் இல்லாது வாழ்வேன்
கோவில் வழிபாட்டில் தகுதிபாராது பணிசெய்வேன்
கோவிலுக்கு இவ்வாறான ஆடம்பரமில்லாத உடையோடு செல்வேன்.

என்று நம்முடைய நடை முறையிலும் குணமுறையிலும் மனமுறையிலும் வரும் புதிய தமிழ் திருஆண்டிலிருந்து ஒரு விரதமுறையை மேற்கொள்ளலாமே. அப்போதுதான் புத்தாண்டு ஒரு புதிய திருப்பத்தை நிறைவை கொடுக்கும்.

சரிதானே.

Koviloor Digital Library

54. திருமஞ்சனம்.

இந்த வார்ததையை பலபேர் பலமாதிரி உபயோகப்படுத்துவதால் இதன் விளக்கம் என்ன என்பதை விளக்க முயல்கிறேன் அறிவுக்கு அறிவுறுத்திய அளவிற்க்கு.

அபிசேகம் என்ற வடமொழி சொல்தான் திருமஞ்சனம். என்பது. வைணவர்கள் இதை சரியான முறையில் உச்சரிக்கின்றனர். சைவர்கள் தான் இன்னும் அபிசேகம் என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். திரு- தெய்வத்திற்கு செய்யும் மஞ்சனம்-தொழுகை வழிபாடு உபசரிப்பு என்று பொருள். மஞ்சம் என்றால் சுகப்படுத்துவது என்ற ஒருபொருளும் சாந்தி பண்ணுதல் என்ற பொருளும் உண்டு.

நெஞ்சே நீ நினையாய் நிமிர்புண்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நினையாய்-

என்பது அப்பர் பெருமானின் பாடல். அதில் அவர் சொல்லும் மஞ்சாடுதல் என்பதுதான் நாம் செய்யும் வழிபாடு.

எல்லாம் படைத்த இறைவனுக்கு இது தேவையா?

நல்ல கேள்விதானே. படைத்தவன் தனக்கென்று ஏதும் வைத்துக்கொள்ளாது தான் படைத்த உயிர்னங்கள் வாழட்டும். அது வாழும் முறைமையில் தன்னை பணிகொள்ளட்டும் அதன் வழி தன் தன்மையனாய் மாற்றி தன்னோடு சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற இறைவனின் கடப்பாடே இந்த ஏற்பாடு.

திருமஞ்சனம் எவ்வாறு செய்யப்படவேண்டும்?

அவனே ஆக்கி அவனே உணர்த்தி அவனே ஏற்றுக்கொள்ளும் அற்புதத்தை என்னவென்று உரைப்பது? நாம் நம் உடல்நலத்தில் என்னமுறை செய்கின்றோமோ அதே போன்றுதான் இறையனாரும் ஏற்றுக்கொள்கிறார். இதை எப்படி ஒத்துக்கொள்வது. வேளியாக நிற்கும் திருமேனிளுக்கு பசுக்கள் தாமே சென்று பால் சொரிவதை அறிந்ததில்லையா? திருவானைக்காவில் யானை துதிக்கையில் பூவோடு நீர் சுமந்து பூசித்து அதன் வழியாய் சிலந்தி இறந்து பின் கோசெங்கண்ணனாக பிறந்து 72 யானை புகா மாடக்கோவில் நிர்மாணித்தது நாம் அறியாத திருஆனைக்கா வரலாறா? திருஞான சம்பந்தப்பெருமான் தன் நெடுங்களபதிகத்தில் பூவொடு நீர் சுமக்கும்

நின் அடியார் என்ற கருத்தை மறந்து விடுவோமா? பூக்கையால் அட்டி போற்றி எண்ணாத என்ற அப்பரின் அருமையான வரியை மறந்து விடுவோமா? பூவொடு நீர் சுமந்தேத்தி புகுவார் அவர் பின் புகுவேன் என்ற அய்யாறு பாடலைதான் துறந்து விடுவோமா? இவையெல்லாம் அறிவுறுத்துவது குறைந்த பட்சமாக நீரால் திருமேனி கழுவி பூவால் போற்ற வேண்டும் என்பதுதான். நாம் நம் உடம்பை பாதுகாத்துக் கொள்வதைப்போல. ஆனால் நம்முடம்பு ஊனால் ஆனதாலே அதன் பக்குவத்திற்கு பொருட்களும் திருமேனி விக்கிரகமாக இருப்பதானாலே இயற்கையான பொருட்களை எந்தவித பக்குவப்படுத்தாமல் நாம் பயன் படுத்துவதைப் போல செய்ய வேண்டி இருக்கின்றது.

ஆக முதலில் நீறும் பின் சுத்தம் செய்யும் திரவியங்களும் பின் வாசனை பொருட்களும் பின் பூசைப்பொருட்களும் பின் உண்ணும் பொருட்களும் திரவங்களும் பின் அலங்காரமும் பின் போற்றுதலும் நடத்தப்படுவதுதான் சாதாரண திருமஞ்சன நிகழ்வாகும். இதன் முறைதவறி செய்வதும் முன்பின்னாக செய்வதும் முழமையான நிகழ்வில்லை. பலன் தராது. எல்லாம் செய்யவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. தகுதிக்கு தரத்திற்கு செய்வதே மிக சிறந்தது. கடன் வாங்கி கடவுள் காரியம் கிடையாது.

விரதம்

விரதம் திருமஞ்சனம் என்று ஒரே தொடர்புடைய செய்திகளை கடந்த சில நாட்களாய் தெளிந்திருப்பீர்கள். நாம் உண்பதும் இறைவனை உண்ண வைப்பதுமான இரண்டு செயல்கள். செயல்கள் வேறாய் இருந்தாலும் மூல பொருள் ஒன்றுதான் என்பதையும் புரிந்திருப்பீகள் தானே. அதனோடு தொடர்புடைய செய்திதான் நாம் இப்போது சிந்திக்க இருப்பது. தலைப்பே இல்லாமல் ஆரம்பித்திருக்கும் இதன் தலைப்பை கடைசியில் நீங்கள் விளங்கி கொள்வீர்கள்.

உட்பொருளாக இருப்பதுதான் முக்கியம். ஊயிர் வேறு உடல் வேறு என்று பிரித்து நோக்கும் தன்மை உணர்வு நம்முள் மிக வேண்டும். அது நாம் இன்பமாய் வாழ வழி செய்யும். எவ்வாறெனில் உடலுக்கு தேவையானதை கொடுத்து விட்டு உயிரின் வழியே செல்வோமே ஆனால் உடலின் தாக்கங்கள் நம்மை துன்புறுத்தாது. ஊதாரணமாக நமக்கு நெருங்கிய ஒருவர் ஒரு விபத்தில் சிக்க அதனை நாம் கண்ணார பார்க்க அவரை காப்பாற்ற அவரை எடுத்துக் கொண்டு ஓட மருத்துவ சிகிச்சையில் அவரின் நிலை பதைபதைப்பை கொடுக்க மீண்டும்

அவரை பாதுகாக்க மருந்து இரத்தம் என்று யார் யாரையோ கெஞ்ச பின் பிழைத்து விட்டார் என்று செய்தி கேட்டவுடன் மகிழ்வும் அதனை தொடந்து நம் காலிலேபட்ட காயத்தின் வலியும் காலையிலிருந்து சாப்பிடாது இருந்த பசியும் நேரத்திற்கு சாப்பிடவேண்டிய தேநீரின் நினைவும் அப்போதுதானே நினைவுக்கு வருகிறது. அதுவரை அது எங்கே போயிருந்தது. ஆக உடலின் உணர்வுகளினால் நம்முடைய மனமானது வேறை சிந்திக்காது தான் எடுத்துக்கொண்ட செயலிலே முழுமையாக ஈடுபடுகின்ற போது வேறு உணர்வுகளை தூண்டுவதில்லை என்பதை நாம் அறிய முடிகிறது.

ஆக மனத்தை ஒருமுகமாக செயல்படுத்துவது என்பது இதில் அறியப்படுகிறது. இதே போல அந்த இரண்டு செயல்களும் மனம் ஒருமைபட்டு செய்யுமானால் நிச்சயம் இறைவனின் திருஅருள் நம்பக்கம் திருப்பப்படும். இறைவனின் திருஅருள் ஒன்றே மறைபொருளாக இருக்கின்றது. அதுவே நம்வாழ்வின் கருப்பொருளாயும் இருக்கின்றது. அதுவன்றி ஏதும் இங்கு இல்லை. அது கிடைகப்பெற்றால் ஏது வினை ஏது அல்லல் ஏது துன்பம்? அதற்குதானே இத்தனைபாடு. அதற்குதானே இத்தனை ஆண்டுகள். அதற்குதானே முனைப்பான நம் வழிபாடுகள். அது ஒன்றுதான் நூல் இழைபோல அந்த இரண்டு செயல்களிலும் ஒளிந்து இருக்கின்றது.

அது அது தானே நடக்கின்றது. இதில் இறைவனின் அருளால் என்ன நிகழ்தல் மாறுதல் ஏற்பட்டு விடப்போகின்றது என்ற எண்ணம் நம்முள் பல நேரங்களில் தோன்றும்.. இல்லை என்று சொன்னால் அது பொய். ஆனால் மனம் அதை ஏற்றுக்கொள்வதில்லை. காரணம் அது இறைவனின் திருஅருளை கண்டிருக்கின்றது. அதன் சுவை அறிந்திருக்கிறது. அதன் அளவு புரிந்திருக்கிறது. அதற்கு காரணம் அது நமக்கு முன் இறைவனிடம் இருந்தது. ஆதனாலாலே அந்த வாசனை தெரியும். தானாக நடக்கும் நிகழ்வுக்கும் இறையருள் இணைந்து நடக்கும் நிகழ்வுக்கும் வித்தியாசம் அதற்கு தெரிகின்றது. ஆதனாலே அவனுடைய அருளின் மேல் அந்த மனத்திற்கு சந்தேகம் எழுவதே இல்லை.

திருநாவுக்கரசு பெருமான் சமணவஞ்சகத்தாலே சுண்ணாம்பு அடுப்பினுள் வைத்து எரியூட்டியபோதும் அவர் மனம் மாசில் வீணையும் மாலை மதியமும் என்று இறைவனின் திருஅருளோடு இருந்து அதனை உண்டு பின் வெளியில் அனைவரும்வியக்கும் வண்ணம் வந்து தான்

அறிந்த அருளை அனைவரும் பெரும் பொருட்டு அதன் உண்மை நிலையைப்பாடி வைத்து சென்றார் அதனை கற்றால் பாடினால் நிச்சயம் சிநிதளவாவது அருள் கிட்டும். காரணம் அவரின் பக்குவம் நம்மிடம் இல்லையே. முயன்றால் முடியாதது ஏது? முயற்சியே முதல் அடி. அதுவே இறைவனின் திருவடி. அவரின் அருட்பாடலை பாட முயற்சிக்கலாமே?

55. வேண்டுதல்:

எல்லோரும் செய்யும் செயல். இதை இறைவனிடம் பெற்றுவிட்டால் மகிழ்வாகி மனமாற வாழ்த்துவது. என்னவெல்லாமோ செய்வது. கடன் வாங்கி கூட அதனை செய்து விட வேண்டும் என்ற ஒரு முனைப்பு. தன் தகுதிக்கு மீறி செய்வது. ஆர்ப்பாட்டமாக செய்வது. இது வெல்லாம் நாம் வேண்டிக் கொள்வது நடந்தால் மட்டுமே. இல்லாவிட்டால?

ஒரு தேவை ஒருவரை நாடிச்செல்ல காண முடியாமல் தவித்து பாதி தேறினால் பரவாயில்லை முழுதும் கிடைத்தால் மனமகிழ்ச்சி. அதற்காக அவருக்கு ஏதாவது அன்பளிப்பு. இதற்கும் அதற்கும் என்ன வித்தியாசம்?

கேள்விதான் மிச்சம். முன்னதில் வேண்டுதல் நிறைவேற திருமஞ்சனம் திருவிழா கோலம். பின்னதில் தருவது லஞ்சம் என்று சொல்லப்படுகிறது. முன்னது நிரந்தரம். பின்னது தற்காலிகம். முன்னது பெற வேண்டியது. பின்னது தேவையில்லாதது. முன்னதில் முனைப்பு வேண்டும். பின்னதில் அது தேவையற்றது.

ஆக எது செய்ய வேண்டும் என்று நீங்கள் கேட்பது எனக்கு கேட்கின்றது. ஏதும் கேட்க வேண்டியதே இல்லை என்பதே நல்ல கருத்து.

வேண்டதக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் பரிசு ஒன்று உண்டுடென்னில் அதுவும் உந்தன் விருப்பன்றே.

இதை நானாக சொல்லவில்லை. இறைவனின் திருவடியை தன் தலையில் தாங்கிய பெருமானார் தான் இறைவனுடன் கொண்ட

தொடர்பினால் பெற்ற பேற்றை இவ்வாறு பாடுகின்றார். வேறு யாரும் இல்லை நம் திருவாசகம் தந்த மாணிக்கவாசகப்பெருமான் தான். ஆனுபவித்தவர் அனுபவத்தை ஏற்றுக்கொள்தல் நல்லதுதானே.

ஆக நாம் இறைவனிடத்திலே செல்லுகின்றபோது மனதில் எந்தவிதமான வேண்டுதல் இன்றி செல்லுதலே முறையாகும். இதில் ஒரு முக்கிய செய்தியுண்டு. இறைவன் நம் திறமறிந்து இடுவான் என்பதே. நடப்பதும் நடந்ததும் அவன் அறியாததா என்ன. எது செய்ய வேண்டும் என்பது புரியாதவனா என்ன? இது மிகுதலாலே வாழ்வின் மீது நாம் எந்த பற்றும் இல்லாது போக முடியும். கவலைகள் மாய்ந்து போகும். இன்பம் மிகுந்து இறைவனின் நிழலிலேயே இருக்க தோன்றும். மனமெலாம் அவன் நினைப்பாய் மாறும். நினைவெல்லாம் அவன் முகமாய் தெரியும். அருகில் இல்லையே என்று தோன்றும் போது கண்களில் கண்ணீர் ததும்பும். நினைப்பதை அவன் நடத்தி வைக்கின்ற போது கண் பனித்துளியாய் மலர்ந்து நிற்கும். வேண்ட நினைப்பது வேதனை இல்லாமல் எளிதாய் வருகின்றபோது மனம் இன்பவெள்ளத்தில் மிதக்க அதற்கு கண்ணும் துணை செய்து நான் என்ன செய்து விட்டேன் கருணாகரா வேணடுவதை வேண்ட நினைக்கும் முன் நீ இதையா வேண்ட எண்ணினாய் என்று காட்டமாட்டானா? காரணம் அவனுடைய அருகாமையை நாம் உணர்கிறோம் காரணம் எந்நேரமும் அவன் சிந்தனையாய் இருக்கிறோம். நம்மை பற்றி நினைக்க அவன் இருக்கும் போது நமக்கு வேறு சிந்தனை ஏன்? வாழ்வின் நீரோட்டத்தில் நீரோட்ட இயக்கத்தோடு சென்று விட்டால் நம் வாழ்வு சுகப்படும் தானே. அதற்கு நமக்கு துணை இருப்பவை அருளாளர்களின் அனுபவங்கள். அவர்களின் பாடல்கள். அவர்களின் கருத்துகள். அவர்கள் தரும் வழிமுறைகள். பொருளுக்காக சொல்லப்படும் எதிலும் நாம் செல்லவேண்டாமே. என்ன நாம் சொன்னது சரிதானே.

56. இறப்பு:

இதனை அனுபவிக்காதார் யார்? இதுவும் ஒரு அனுபவந்தான் ஆனால் கடைசி அனுபவம். இதன் தன்மையை யாரும் சொன்னதில்லை. எழுதியதும் இல்லை. ஆக சொல்லப்படாத எழுதப்படாத ஒரு ரகசியம். ஆனால் அனைவரும் தெரிந்து கொள்ளப் போகின்ற ரகசியம். இதன் உண்மை நிலைமை என்ன?

செயல்பாட்டின் முடிவா? உறுப்புகளின் தேய்மானமா? உயிரின் பிரிதலா? நோயின் தன்மையா? விதியா? மதி வெல்லுமா? விரதம் விளக்கம் அளிக்குமா? விளக்கினால் விளங்க கூடியதா? எது? எது?

இந்த சந்தேகங்கள் எல்லாம் உயிரோடு இருக்கும் போதுதான். இறந்து விட்டால்? இதுதான். ஆனாலும் அதன் தன்மை அறியப்படும். அதன் குணம் தெளியப்படும். அதன் வழி புரியப்படும். அதன் மூலம் சொல்லப்படும். எப்போது?

இறப்பின் ரகசியம் அறிந்த ஒருவன் அருகிலே இருப்பனேயானால் அது அவனால் காட்டப்படும். உணரப்படும். அதன் பயம் தெளியப்படும்.

அவனை எங்கே தேடுவது? அவன் விலாசம் என்ன? எப்படி இருப்பான்? என்ன வழியில் கிடைப்பான்? ஆராய்வோமா? தயாரா? தெரிந்த பின் பின் வாங்கக் கூடாது என்ற நிபந்தனையோடு அழைத்து செல்கின்றேன்.

பிறந்தோம் தவழ்ந்தோம் நடந்தோம் அப்போது யார் உடன் இருந்தார்கள? ஊட்டப்பட்டோம் காட்டப்பட்டோம் அதை யார் செய்தார்கள்? உறவுகள் இரவுகள் கடந்து இன்புற்றோமே அதை யார் செய்தார்கள்? பதவிகளும் உதவிகளும் பெற்றோமே யார் செய்தார்கள். பாசமும் வேசமும் போட்டோமே அதை யார் கொடுத்தார்கள்? அல்லலும் கண்ணீருமாய் அலைந்தோமே யார் துடைத்தார்கள்? அன்பாயும் பண்பாயும் இருந்தோமே அதை யார் பெற்றார்கள்? நாம் போன பாதையெல்லாம் உடன் யார் வந்தார்கள்? இதனை இத்தனை பேரா செய்தார்கள்? அவர்கள் எல்லாம் யார்? ஏன் இதைச்செய்தார்கள்? நம்மேல் இவர்களுக்கு என்ன வந்தது? இந்த அக்கறை எதற்காக? நம்வாழ்வின் ஓட்டத்தில் இவர்களின் பங்கு என்ன? என்ன எதிர்பார்ப்போடு இதைச்செய்தார்கள்? அது நிறைவேற்றப்பட்டதா? ஏன் நிறைவேற்றப்படவேண்டும்? நிறைவேற்றப்படாமல் இருந்திருந்தால் என்னவாயிருக்கும்? இதற்கெல்லாம் யார் பதில் கூறுவார்கள். சோதிடனா? குறிசொல்பவனா? குடுகுடுப்பைக்காரனா? கோவில் குருக்களா? மந்திரவாதியா? பூசாரியா? கோடங்கியா சிவாச்சாரியாகளா? வேதவிற்பன்னர்களா? மூடத்தனம். யார்?

Koviloor Digital Library

யார் பிறப்பைப்பற்றிய உண்மை தெரிந்தவனோ யார் இறப்பின் தன்மை அறிந்தவனோ யார் இறப்பே இல்லாதவனோ யார் இறவாமலும் பிறவாமலும் இருப்பவனோ யார் யாரும் இல்லாதவனே யார் எதையும் எதிர் நோக்காவனோ யார் உறவே இல்லாதவனோ யார் உறவை செய்தவனோ யார் உணரவைத்தவனோ யார் உணர்வாய் இருக்கின்றானே அவன்தானே செய்ய முடியும். அவனால் தானே சொல்ல முடியும். அவனால் தானே உணர்த்த முடியும். உணர்த்தி ஜிவசமாதியான சித்தர்கள் எத்தனை பேர். அருளார்கள் எத்தனை பேர். அவர்கள் உணர்ந்தார்கள் உரைத்தார்கள் சென்றார்கள். நாம் பார்க்கின்றோம் பயனடைய மறுக்கின்றோம். படிக்கின்றோம் புறம்பாய் நடக்கின்றோம். பின் எவ்வாறு அறிய இயலும். வாழும் போது இறைவனின் வழியே நடந்தால் வாழும் வழிகாட்டுபவன் சாவையும் காட்டி அதைச் சந்திக்கின்ற தன்மையும் தருவான் தானே.

57. நோய்:

இந்த ஊனுடம்பு பஞ்சபூதங்களான நிலம் நீர் நெருப்பு வாயு ஆகாயம் என்பதால் ஆனது என்பதும் அது பஞ்சஇந்திரியங்களான மெய் வாய் கண் மூக்கு செவி என்பதால் இயங்குகின்றது என்பதும் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்ற செயல்களை செய்கின்றது என்பதும் நாம் பலதடவை தெரிவித்து அறிந்திருப்பீர்கள். இதில் ஏது மாறுபட்டாலும் அதை நோய் என்றே சொல்லப்படுகிறது. மாறுபாடு என்பது கூடுதல் குறைதல் என்பதாகும்.

இதனோடு இணைந்து நாம் இங்கு பிறக்கின்ற போது ஒரு அட்டவணையோடுதான் முதல்முதலில் பிறந்தோம் என்பதையும் மனதில் நினைவு கொள்ள வேண்டும். அந்த அட்டவணையில் மீதம் அல்லது சேர்த்தது இருக்குமேயானால் அதுவும் சேர்த்து இந்த பிறவியில் அதன் வீரியம் உணரும் பொருட்டு அந்த வினையின் தாக்கத்தை உணர்த்தும் பொருட்டும் நோய் என்ற ஒரு நிகழ்வு நடக்கின்றது. ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நோயும் நம் வினையின் பயனே. அதனை அனுபவிக்க அனுபவிக்க வினை களைந்து குறைக்கப்படுகிறது. பொதுவாக மனித உயிர்கள் மட்டுமே நோயின் வலி உணரும் மனமுண்டு. காரணம் அதன் மூலம் என்ன என்பதை உணரவேண்டும் என்பதனால் இப்பிறவி கொடுக்கப்பட்டு அந்த வலியும் தெரியச்செய்து அது தீரும் முறையும் தீர்க்கும் மருந்தும் வினைகழியும் நேரத்தில்

தரப்படுகிறது. வலியின் தன்மை உணர்ந்தால் வலிக்கு பின் ஏற்படும் இன்பம் விளங்கும்தானே.

இந்த மாற்றத்தை செய்பவன் யார்? ஏன் செய்ய வேண்டும்? இவனுக்கு என்ன வேறு வேலைகிடையாதா?

ஆக்கியவன் அன்றி இதை வேறு யாரால் செய்ய இயலும்? அவனே தான் படைத்த உயிரின் மீது அன்பு கொண்டு அதனை மீட்க வேண்டுமே என்று எண்ணி அதனை மீட்கவே பூதங்களாய் நின்று தான் நினைத்ததை முடிக்கின்றான். அதில் அவன் பிசகுவதே இல்லை என்பது உலக நடவடிக்கைகளை காணும் போது நமக்கு புரியும். சுனாமியும் நிலவெடிப்பும் நிலச்சரிவும் நமக்கு கண் கூடாகும் செயல்கள். பஞ்சபூதங்களின் செயலில் ஒரு சிறு மாற்றமே நம்மை இந்த வியப்பில் ஆழ்த்தும் போது அவன் ஆற்றல் என்னவென்பது.

ஆக அவனே நோயாக அவனே மருந்தாக இருக்கின்றான் என்பதே உண்மை. இதில் வேறு கருத்து இருக்க ஞாயமில்லை. தீர்க்க முடியாத நோயெல்லாம் அவன் கருணையாலே தீர்ந்து போவது கண்கூடு. எவ்வாறு பசியும் கொடுத்து அதற்கான உணவைப்படைத்தனோ எவ்வாறு காட்சியை படைத்து அதைக்காண கண்கள் கொடுத்தானோ எவ்வாறு உறவுகள் கொடுத்து அதனுள் இன்பம் பெற வைத்தானோ எவ்வாறு உலகைப்படைத்து நமக்கு அவைஉதவ பலவற்றை படைத்தானோ அது போன்று நோயின் தாக்கம் தீர மூலிகைச் செடிகளையும் படைத்தான். அதனை தெரிந்து செய்ய சிலஉயிர்க்கே அறிவுதந்தான். உதாரணமாக நாய் பனிக்காலத்திலே ஒருவகை இலையை சென்று தின்பதைப்பார்த்திருப்பீர்கள். அது குளிரைத்தாங்கும் தன்மை அதற்கு தருகிறது. கீரியானது பாம்புடன் சண்டையிட்டபின் ஒரு மூலிகையை சாப்பிட்டு விசத்தை முறித்துக்கொள்கிறது. இதுபோலவே மனித உயிருக்கும் அதன் அறிவை சிலருக்கு உணர்த்தி அவர்கள் வாயிலாய் அவர்கள் வினையையும் மருந்து சாப்பிடுபவர் வினையையும் தீர்க்கும் வித்தை இறைவனன்றி யாருக்கும் இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இதிலிருந்து நாம் அறிவது இறைவனை நோக்குங்கால் நம்முடைய முறையீடு அதாவது அவனுடன் மனதில் பேசுவது நான் நன்றாக இருக்கின்றேன் இப்போதே எல்லா நோயும் எனக்களித்து அவைகளை

தாக்கமின்றி தீர்த்தருளவே அருள் புரியவேண்டும் என்று அவனோடு சிந்திப்பதே இத்தருணத்தின் முடிவாகும்.

நோயுற்று மூத்து நான் நுந்து கன்றாய் - என்கின்றார் மாணிக்கவாசகபெருமான்

கூற்றாயினவாறு விலக்க அகலீர் கொடுமை பல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே

என்று தன்வாயிற்று வலி தீர அருள் மருந்து பெற்ற திருநாவுக்கரசப் பெருமானும் இறைவனை மருந்தாய் உண்டு நம் நோய்க்கு அது உடலானலும் உள்ளமானாலும் எது மருந்து என்று இயம்பிச் சென்றதை திருமுறை வழியே காணலாமே.

58. திதி
பஞ்சமி திதி
ஐந்தாம் நாள்
பிரம்ம பாகம்

எதையும் ஆக்குவிக்க நல்ல காலம்- முகூர்த்தம் திருகுடமுழுக்கு போன்றவை.

திதியின் மூன்றாம் பாகம்- முதல் ஐந்து பிரம்மா-இரண்டாம் ஐந்து திருமால்-மூன்றாம் ஐந்து
சிவன்.
ஆக்கல்-காத்தல்-அழித்தல் — விரித்தல்-வளர்பிறை-பௌர்ணமி-முழுநிலா
அழித்தல்-மறைத்தல்-அருளல் — ஒடுக்கம்-தேய்பிறை-அமாவாசை-மறைநிலா-தர்பணம் — புரிந்திருக்கும்

திரும்ப தொடர் சுழற்சியே இயக்கம்

Koviloor Digital Library

உயிர் மறைவதில்லை- உடல் அழிந்து போம்- உயிர் சுத்தமாகும் வரை பிறக்கும்- சுத்தம் செய்ய வல்லது சிவபணியே- வாழ்வியல் 25 பங்கு அதில் 100 பங்கு சிவபணியாய்- மனைவிக்கு உதவுவது கூட மனமுவந்து அத்தருணத்தில் அவளை சிவமாய் பாவித்து அவளுக்கு செய்வதும் நாம் அவளிடத்து பெற்றுக்கொள்வதும். இதுபோல் பிள்ளைகளிடத்து உறவினர்களிடத்து அவன்படைத்த எல்லா உயிர்களிடத்து பற்றில்லா இல்வாழ்க்கை அவர்கள் தேவையை சிவபணியாய் செய்ய உயிர் புனிதம் பெற்று பிறப்பறுத்து அவனடி சென்றடையும் எளிய வழி சிவபணியே. வழிபாட்டுக்கு வழிசெய்தல் வழிபாடு செய்தல் வழிபட ஊக்குவித்தல் வழிபடுவோரை முயன்றளவு கவனித்தல் எல்லாம் அந்த 75 பங்கில் அடக்கம். அதுவே நமது மன்றத்தின் பணி. அதில் இணைய அழைக்கின்றோம்.

புரள்வார் தொழுவார் புகழவாராய்
.இன்றே வந்து ஆள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பார் ஆர்?
மதியுள் கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இது செய்மின்
சிவலோகக்கோன் திருப்புயங்கன்
அருள் ஆர் பெறுவார் அகல் இடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே!

இது நான் சொல்லவில்லை. எம்குரு மாணிக்கவாசகப்பெருந்தகை அருளியது. அனுபவித்து

பாடியது. புரிந்து கொள்ளவே எடுத்தாண்டோம். புரிந்திருக்கும். அந்தோ என்ற அந்நிலை நமக்கு

வேண்டாமே. ஆகவே

புரள்வோம் (ஆக்கல்)

தொழுவோம் (காத்தல்)

புகழ்வோம் (அழித்தல்)

மருள்வோம் (மறைத்தல)

மயங்குவோம் (அருளல்)

திருப்புயங்கன் அருள் பெறுவோம்.

பஞ்சமியில்-பஞ்சாட்சரம்-பஞ்சபுராணம்-பஞ்சபூதவழிபாடு-பஞ்சேந்திரியநெறி- பஞ்சபுலனடக்கம்-

பஞ்சநாதன் தரிசனம்.

இன்று சப்தமி

ஏழாம் நாள்

ஒலிகள் ஏழு-

சரிகமபதநி ஆரோகணம்-உயர்த்துதல்-அதனால் முதல் எழுத்து ஆ-வளருதல்- வளர்பிறை

நிதபமகரிச அவரோகணம்-இறக்குதல்-அதனால் முதல் எழுத்து அ-சுருங்குதல்- தேய்பிறை

ஓசை

ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாசமலரெல்லாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
தேசவிளக்கெல்லாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலா செம்பொன் சோதி.

தேவாரமாய் எம்குரு திருநாவுக்கரசு பெருமானின் தெவிட்டாத தேனமுதம்.

ஓசையாய் ஒலியாய் இருக்கின்ற இறைவனை அவ்வோசையாலே போற்றுவதுதான் முறை. ஒலி கண்கள் அறியா. ஒளி கண்கள் அறியும். அறிந்தும் அறியாத நிலை. தூலம் சூட்சுமம். இருள் ஒளி. இன்பம் துன்பம். இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களில் ஒலிகள் பல. ஆனால் எல்லாம் ஒரு உணர்வை காட்டுவதாய் இருக்கின்றது. குயிலிசை மகிழ்வு. யானையின் பிளிரல் பயம். வண்டின் ஒலி ரீங்காரம். பசுவின் ஒலி அன்பு. காகத்தின் ஒலி கெஞ்சல். குருவிகளின் ஒலி கொஞ்சல். குரங்கின் ஒலி கிண்டல். கழுதையின் ஒலி கதறல். ஆந்தையின் ஒலி அலறல். ஆற்றின் ஒலி நளினம். சேற்றின் ஒலி தாளம். காற்றின் ஒலி இன்பம். இடியின் ஒலி வீரம். இசையின் ஒலி நாதம். வீணையின் ஒலி மயக்கம். குழலின் ஒலி கிறக்கம். எவ்வளவு ஒலி. எத்தனை உணர்வு. அத்தனையும் தந்தவன் அவனே. அதுவே இந்த பாடலின் முதல் வரி.

இறையருள் பெற நாம் சொல்லும் ஒலியே. அகரத்தையும் உகரத்தையும் மகரத்தையும் ஒன்றாக்கி அ, உ, ம், என்பதன் ஒலி வடிவே ஓம் என்ற மூலமந்திரமாகும். இந்த ஓம் என்ற மந்திரத்தை நம்

தொண்டையில் உள்ள குரல் நாண்களில் தொடர்ந்து ஒலிப்பதின் மூலம் உடலில் உயிர்சக்தி மேலோங்குகிறது. அதனால் நாம் சொல்லும் சொற்களின் அதிர்வு அதிகரிக்கிறது. ஆற்றல் அவ்விடத்தில் பரவி நிற்கிறது. ஒரு ஒலி தூணாய் விளங்குகின்றது. இத்தூண்தான் ஒலிசக்தியாய் உயிர்சக்தியாய் கோயிலின் கருவறையில் நிலைத்து நிற்கின்றது. அந்த தூணில் அனலை செலுத்தும் போது அதன் தன்மையோடு வெறுமனே தட்டில் இடப்பட்ட திருநீறு உயிர்சக்தி நிறைந்த நீறாக மாறுகிறது. அந்நீறு இறைவனின் அருளோடு நெற்றியில் இட அது மருந்தாகி மனநிலை மாற்றும் சக்தியாகின்றது. இக்காரணத்தால் அன்பருக்கு எச்சரிக்கையாக சொல்லுவது தீபதட்டோடு காட்டப்படாத நீறு பெறுவது முறையல்ல. எந்தவித பிரயோசனமும் இல்லை. அது வெறும் கரிச்சாம்பலே.

ஒலியின் சக்தியை நீங்களே தனி அறையில் ஒரு பாத்திரத்தின் விளிம்புவரை நீர்விட்டு ஏதாவது பாடி சொல்லி பரிசோதித்து பார்க்கலாம். அதுபோல ஒருவர் ஒருவீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு செல்லும் போது நாம் முதல் வீட்டில் செய்த அந்த ஒலித்தூணை செல்லும் வீட்டிற்கு எடுத்து செல்லவேண்டும். எவ்வாறு எடுத்து செல்வது?

அவ்வொலித்தூணை பழைய வீட்டில் விட்டுச்செல்வது தவறு. ஒன்று நாம் புதிய வீட்டில் திரும்ப முனைய வேண்டி இருக்கும். இரண்டு வேறு யாரும் பழைய வீட்டில் குடிவர மாறுதலே தேறுதலே பெற நேரிடும். முறை- ஒரு பித்தளை அல்லது தாமிரம் அல்லது கலவையில்லாத உலோகம் அல்லது பொருள் நீர் விட்டு அதில் மாவிலையோ அல்லது தர்பை புல் அல்லது அருகம் புல்லை அதில் சிறிதளவு போடுவதற்கு முன் அந்நீரில் கிராம்பு கஸ்தூரி மஞ்சள் ஏலக்காய் கடுக்காய் பச்சைகற்பூரம் இவை ஐந்தையும் பொடி செய்து சிறிதளவு போட்டு அதில் மாஇலையை வைத்து அச்செம்மை எந்த இடத்தில் நாம் தினமும் பூசை செய்கின்றோமோ அங்கே வைத்து விளக்கேற்றி தினமும் செய்யும் வழிபாடு செய்ய வேண்டும். பின் மனதால் இறைவனை வேண்டி தீபம் மூன்று முறை அந்த செம்பின் மேல் சுற்ற வேண்டும். கடைசிசுற்று செம்பின் விளிம்பைத்தொடாமல் அந்த வாய் வரை காட்ட வேண்டும். அங்கிருக்கும் இறைவனை அதில் எழுந்தருளுமாறு வேண்ட வேண்டும். பின் அன்று இரவோ அல்லது அடுத்த நாள் காலையே அச்செம்மை புதிய வீட்டிற்கு எடுத்துச்சென்று பூசை ஆரம்பிக்கும் இடத்தில் வைத்து விளக்கேற்றி

வழிபாடு செய்து விளக்கை செம்பின் வாய் பகுதியில் இருந்து ஆரம்பித்து பெரிய வட்டமாய்மூன்று முறை சுற்றி பின் அந்நீரை அந்த

இலையால் வீடு முழுதும் தெளித்த பின் அந்த குடும்பத்தார் சிறிது அருந்திக்கொள்ள வேண்டும். வெளி ஊராய் இருந்தால் ஒரு பாத்திரத்தில் அந்நீரை விட்டு கொண்டு செல்லவேண்டும். பிளாஸ்டிக் பயன்படுத்தப்படக்கூடாது. அதன்பின் விரும்பினால் கணபதி பூசை செய்யலாம். முதலில் அந்த செம்புதான் நீரோடு புதிய வீட்டின் உள் செல்ல வேண்டும்.

செய்யுங்கள் பலன் பெறுங்கள்.

49. ஏகாதசி
ஏகா- ஒன்று
தசி- பத்து தசம்-நூறு
பதின்ஒன்றாம் நாள்

ஒருவனாய் இருக்கின்றவன் எட்டு திசைகளுமாய் மேல் நடு கீழாய் பதினொன்றாய் இருக்கின்றான்.

நீக்கமற நிறைந்திருக்கின்றான். ஒன்று என்ற நாம் சொல்லும் போது அதில் பல இருக்கின்றது

என்பது மறைந்திருக்கின்றது. ஒன்று இல்லாது போனால் யாதும் வர இயலாது. இருப்பதினாலே இல்லாததாக சிலருக்கு புலப்படுமேயானால் அது இல்லை என்று ஆகிவிடாது. கரு இருப்பது

யாருக்குத்தெரியும். விதையில் விருட்சம் இருப்பது யாருக்குத்தெரியும். பிறப்பில் இத்தனை செயல்கள் இருப்பது யாருக்குத் தெரியும். நீரில் இவ்வளவு இருப்பது யாருக்குத்தெரியும். தீயின் தன்மை யாருக்குத்தெரியும். காற்றின் தன்மை யாருக்குத் தெரியும். நாம் அறிந்து கொள்வது ஔவை மொழிபோல கைம்மண்தான். அதைக்கையில் வைத்துக்கொண்டு அதுதான் உலகம் என்று கண்ணன் வாயைத்திறக்கச்சொல்லி பார்க்க முடியாது. அது அறியவேண்டுமானால் தனை நாடவேண்டும். அதனை இயக்கவேண்டும். அதனை நெருங்கவேண்டும். யாவரும் பயமுறும் பாம்மை அதன் தன்மை அறிந்தவன் ஆட்டுவதைப் போல.

ஆக
ஒன்றாய் முளைத் தெழுந்து
எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை
நாய்சிவிகை ஏற்றிவித்து
என்தாதை தாதைக்கும்

எம்மனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வார்க்கே
சென்று ஊதாய் கோத்தும்பீ

இறைவனின் ஆற்றலின் ஒரு தூசியாய் நம்மை படைத்து அவன் எங்கிருக்கின்றான் என்று

காணும் ஆர்வத்தை ஊட்டி அதன் காரணமாய் நாய் போல் அலையவிட்டு நம்முடைய பாட்டனுக்கும் தந்தைக்கும் குலத்திற்க்கும் பெருமானாய் இருக்கின்ற செல்வனின் கருணை என்ன சொல்லவது என்ற இக்கருத்தை குருமாணிக்கவாசகப்பெருமானார் சொல்ல விருத்தனாகி பாலனாகி வேதமோ நான்குணர்ந்து என திருஞானசம்மந்தப்பெருமான் மகிழ ஒன்றாய் இருந்து பலவாய் விரிந்து இவ்வேழு புவனங்களுக்கும் நன்றாய் செய்த- என்று அபிராம பட்டர் அதிசயக்க

எல்லாம் சிவனென நின்றாய் போற்றி
எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே - என்று திருநாவுக்கரசு பெருமானும்

ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்- என்று சுந்தரமூர்த்திநாயனாரும் பரவுவது அந்த
ஒருவனைதான் என்று நாம் எப்போது உணர்வது?

விடுமின் வெகுளி வேட்கை நோய்
மிக ஓர்காலம் இனிஇல்லை
உடையான் அடிகீழ்பெரும் சாத்தோடு
உடன் போவதற்கு ஒருப்படுமின்
அடைவோம் நாம் போய் சிவபுரத்துள்
அணியார் கதவுஅது அடையாமே
புடைபட்டு உருகி போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே

என்று யாரைப்பார்த்து எம்குரு மாணிக்கவாசகப்பெருமான் புலம்பவேண்டும். அவருக்கு என்ன வந்தது. கடை விரித்தேன் கொள்வார் இல்லை என்று திருநாவுக்கரசு பெருமான் புலம்பியதைப்போன்று இவரும் ஏன் புலம்பவேண்டும். நம்மை பற்றி இவர்கள் ஏன் கவலைப்படவேண்டும். நம்முடைய சிந்தனையெல்லாம் பத்தை நூறாக்குவதும் பற்றை

வளர்ப்பதுமாய் இருக்கின்றதே ஏன்? திருமுன் நிற்கின்ற போது கண்களில் கண்ணீர் வாராது

நாம்கொடுத்த தேங்காய் பூ அங்கே முன்னே இருக்கின்றதா? என்று நோக்குவது என்ன நினைப்பு. அதுதான் இறைத்தொண்டா? குறைத்தொண்டு. ஏன் இந்த மடநெஞ்சு அவரை உள்ளே வைத்துக்கொண்டு அவரைக்காட்டாமல் அவருக்கு தொண்டு செய்ய ஊக்கப்படுத்தாமல் தொண்டு செய்வாரோடு இணங்க விடாமல் துரோகம் செய்கின்றது?

உற்றார் யார் உளரோ உயிர் கொண்டு போம் பொழுது. அரச மரத்தை சுற்றி சுற்றி அடிமடியில் கைவைத்து பார்த்து என்ன? முயல வேண்டாமா முழுவதுமாய்? துணைவருவானே துயர்வருங்கால். ஏன் புரியவில்லை? எப்போது புரியும்? என்ன செய்தால் புரியும்? அது

செய்யப்படவேண்டுமா? அதுதான் உடையான் அடிகீழ் பெரும் சாத்தோடு உடன் போவதற்கு ஒருப்படுமின். எப்போது அதைச்செய்ய வேண்டும். அணியார் கதவு அது அடையும் முன்பே என்று வற்புறுத்தி புலம்புகின்றார் மாணிக்கவாசகபெருந்தகை.

சொன்னதெல்லாம் நினைவிருத்தி சிந்தியுங்கள். ஒருப்படுதல் நடக்கும்.

60. மகிழ்வு

மகிழ்வு என்ற வார்த்தை ஆழ்ந்த ஆழத்தில் இருந்து பெறப்படவேண்டும். அது மனத்தின் எண்ணங்களில் இருந்து விலகி இறகு கட்டி பறக்கும் உணர்வு. மெல்லிய மலர்படுக்கை காற்றினில் விரிக்கப்பட்டு மலரின் வாசத்தோடு அதில் மிதப்பதில் ஏற்படும் ஒரு உணர்வு. தாயின் அன்பில் தளிர் பெரும் உணர்வு. நாவின் தடவலில் கன்று பெறும் உணர்வு. பாலின் நிறத்தில் உள்ளிருக்கும் சுவையின் உணர்வு. பரமன் அவன் திருஅடியில் நம்மை தாலாட்டும் ஒரு உணர்வு.

இதை வேண்டாம் என்று யாரேனும் சொல்வார்களா? விலகி யாராவது ஓடுவார்களா? ம் ம் என்றுதடையாய் தலைஆட்டுவார்களா? நாமென்ன அதன் அருமை உணராதவரா?

அதனை போன்று செய்ய மாட்டார்களா?

யாரோடாவது இணைத்து என்னை இதை உணரவைக்கமாட்டார்களா என்ற ஏக்கம் நம்மில் இல்லையா? இதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று பரிதவிப்போர் இல்லாமலில்லை?

ஆனால்.....

இவ்வளவும் நமை அறியாது நாம் பெரும் முயற்சி எடுக்காது நாம் எதிர்நோக்காது நமக்கு 18-09-2005 அன்று கிடைக்கப் பெற்றோம் என்பதை நிச்சயமாக உணர்ந்திருப்போம் தானே. அத்திருப்பட்டூர் நாயகரும் ஊட்டத்துார் உலகவனும் ஒருவனாய் நின்று நடத்தி நம்மை வழிநடத்தி நாடகத்தால் அவன் அடியார் போல் நம்மை நடிக்க வைத்தானே அதைச்சொல்கிறேன். ஒவ்வொருவரின் முகத்திலும் என்ன மகிழ்சி. என்ன பேரானந்தம். என்ன ஒரு ஆர்வம். என்ன ஒரு ஒருமித்த சிந்தனை. என்ன முயற்ச்சி. தன்னுடைய தோட்டத்திலே விதையிட்டு

நட்டதைப்போன்றதொரு உணர்வு. தானே சிவமாய் நின்ற திருக்காட்சி. என்னவாயிற்று இவர்களுக்கு இந்த உள்ளடங்கிய ஊட்டத்துாரிலே வந்து விழாக்கோலமாய் செய்கிறார்கள்

என்று அப்புறத்தார் வியக்க வைத்த செயல். செயற்கரிய செயல். யார் செய்வார். திருவள்ளுவரின் பொன் மொழி. செயற்கரிய செய்வர் பெரியர். இது போதததா இந்த பிறவி கடைத்தேற்ற. அடுத்த பிறவி அந்த மரத்தின் வித்தாய் பிறந்து அதன் அருகில் நின்று எந்நாளும்

இறைவனைப் போற்றியே நிற்கும் கதி கிடைக்கப் பெறுவோம் தானே.

ஒரு சிறிய விதையில் ஒரு ஊர்காக்கும் ஆலவிருட்சம் இருப்பதை யார் அறிவார். ஒரு சிறிய செயல் என்று ஒரு சிவபணி செய்ய இவ்வளவு மகிழ்வு ஆனந்தம் கூத்தாட்டம் இதனுள்ளே இருக்கின்றது என்பது யார் அறிவார் நம்மையன்றி. நாம் பெரும் பேறு பெற்றோம். தென்னையை வைத்தால் இளநீரு. தென்னன் நினைத்தால் மனமெல்லாம் பன்னீருதான்.

இப்பணி தொடரும் சூழ் அன்று உரைக்கப்பட்டது. ஆதீனம் அவர்களின் திருவாய் அதனை செப்பி நம்மை நம்பணியை செம்மையுறச்செய்து விட்டது. இதுதான் அடியார் கூட்டம் என்று ஆணித்தரமாய் அணித்தலைவரும் அறுதியிட்டுவிட்டதும் நம்பணி கொண்டவனிடத்திலே. இதற்கு

மேல் வேறு என்ன வேண்டும்.

வேண்டதக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ

தக்கதை அறிந்து அருளும் அதுவும் முழுதுமாய் அருளும் அண்ணல் இருக்கும் வரை

Koviloor Digital Library

யான் ஏதும் பிறப்பஞ்சேன் .....
உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும் .....
நாதன் நம்பணி கொண்டவன் .....
அவன் பணி நாம்செய்ய
நம் பணி அவனே செய்து முடிப்பான்.
அன்பான கோயில் பிணாபிள்ளைகாள் !!

முன்னம் தெரிவித்தது போல இன்று பஞ்சமி. பஞ்ச பூதங்களின் சங்கமமே இந்த உலகம். எல்லா பொருளும் அதன் கலவையே. எல்லா பொருளின் முடிவும் அதனுள்ளே. பூதங்கள் என்று சொல்லுவது அதன் தன்மை அறிய முடியாது என்பதே பொருள். ஆனால் அது தேவைக்கேற்றார் போல் தெரியவரும். எவ்வாறு இறைவனின் தொழிலில் மூன்று தொழில்கள் மட்டும் கண்ணுக்கு தெரிகின்றதோ அதே போல் நிலம் நீர் தீ தவிர மற்ற வாயு ஆகாயம் காண இயலாது. மறை

பொருளாய் இருந்து உதவுகிறது. காற்று நமது வாழ்விற்கு முக்கியமானது ஆனால் அது கண்ணுக்கு தெரிவதில்லை. உயிர்களெல்லாம் பிரிந்து ஆகாயத்தில் ஒன்று கூடி பகுக்கபட்டு

செய்யபடுகிறது. அதே போல ஒன்றுக்கு ஒன்று ஏற்புடையதாயும் தொடர்பு உடையதாயும் இருக்கின்றதே உண்மை. மண்ணில் இருந்து நீர்கிடைக்கின்றது. நீரினாலே மண் உண்டாகிறது. இரண்டு வாயுக்கள் சேர்ந்து நீராகிறது. நிலமும் காற்றும் இல்லாது நெருப்பு எரிய முடியாது.

நெருப்பிலே இருந்து வெளிவரும் வாயுவையும் அனலையும் ஆகாயம் பெறவில்லை எனில் நெருப்பு தொடர்ந்து எரிய முடியாது. ஆகவே ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் இருக்கின்றது.

நம்முடைய உடற்கூறும் அவ்வாறே இருக்கின்றது. அதன் தொடர்புடையதாய் ஐம்புலன்கள் இருக்கின்றன. உடல் நிலையில் ஏதும் மாற்றம் உண்டானால் அதுவே நோய் என்று

சொல்லப்படுகின்றது. நம்முடைய உடல் சூட்டைக்காட்டிலும் அதிகமுள்ளதை உடல் ஒத்துக்கொள்ளாது. அதே போன்று தான் நீர் பொருளும். கோடை காலத்தில் ஒத்துக்கொள்ளும் ஜஸ்கிரீம் குளிர் காலத்தில் பொருந்தது பல நோய்களுக்கு நம்மை ஆளாக்குவதும் அங்ஞனமே.

ஆகவே அதனை உணர்ந்து நாம் நம்முடைய உணவுப்பழக்கங்களை வைத்துக்கொள்ளவேண்டும். அதையே இறைவனுக்கு படைக்கும் பழக்கம் நம்மிடையே உண்டு. அந்த அந்த பகுதியின் பஞ்சபூதங்களின் அளவிலே அந்த கோயில் அமைந்திருகின்றது என்பது சூட்சுமமான உண்மை.

அதை நீங்கள் தயவு கூர்ந்து உணரவேண்டும். அதனால் எந்த கோயிலுக்கு சென்றாலும் அந்த கோயிலின் தலவிருட்சத்தின் ஒரு இலையாகினும் நீங்கள் பெற்று அதே அங்கேயே உண்டு

விடுதல் வேண்டும். நல்ல வேளை வாழை இலை தலவிருட்சமாய் இல்லை.

இதே முறைதான் அந்த அந்த ஆலையத்தின் தீர்த்தங்கள். பருகும் தீர்த்தமும் இருக்கும் குளிக்கும் தீர்த்தமும் இருக்கும் முடிந்த அளவிற்கு இரண்டையும் அந்த இடத்தில் செய்வதுசாலச்சிறந்தது. நம்உடல் நலத்தை காத்து கொடுக்கும் அம்மூலிகை மரங்கள் மூலிகை செடிகள்

சித்த வடிவானவை.

புல்லாகி பூடாகி புழுவாகி- மரமாகி
எல்லாப்பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான் என்பது

சிவபுராண சிவவாக்கு. இப்பொழுதும் அருகம் புல் சாறு அருந்துவாறும் உண்டு. கிழங்கு வகைகளை மருந்தா பயன் படுத்துவாரும் உண்டு. புழுவாகி தயிர் போன்றவை பெறுவதற்கும்

உழவுக்கு உதவி உணவு தருவதும் உண்டு. மரமாய் இருந்து எல்லா விதத்தில் உயிர்களுக்கு உதவும் சிவபணி அவைகள் செய்து செய்து இளைக்கின்றன ஏன் இறைவனின் திருவடிகாண.

நாமும் அதில் ஈடுபடட்டுக்கொண்டு இருக்கிறோம். அந்த மகிழ்விலே இறைவன் திருவடி கண்ட நிலை பெறுகிறோம் தானே.

செம்மை நலத்தால் சிவபணிகள் செய்வேனுக்கு
இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்

அம்மை குலாத்தில்லை ஆண்டானை கொண்டன்றே. திருவாசக வாக்கு.

61. நிலை.

Koviloor Digital Library.

ஒன்று அவன்தானே இரண்டு அவன் இன்அருள்
நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்
சென்றனன் தான் இருந்தான் உணர்ந்து எட்டே.

இது திருமூலர் வாக்கு. திருமந்திரம். முதல் பாடல். அவரின் முதல் மூச்சு. மொத்த திருமந்திரத்தின் தெளிவை முதலிலேயே வடித்தார். சிவனாரின் கைலாய கணம். அவர்அறிவது நம் அறிவுக்கு எட்டுமா? எட்டும் அளவு இருந்தால் பெரும் பாக்கியம்.

இந்த பரந்த உலகம். அதைக்கடந்தஉலகம் எல்லாவற்றையும் தாண்டி நிற்கும் ஒருவன். அவன் ஒன்றுதான் இப்புவியின் ஆதாரம். இவ்வுலகத்தின் அச்சு. ஊழை ஆக்கி அதை உவப்பச் செய்ய அவன் இரண்டாய் வருகிறான் சிவசக்தியாக. இவ்வுலகத்தின் உயிர்கள் மலம் நீங்கி மகேசன் திருவடி சேர புலனாகும் தொழில்கள் ஆக்கல் காத்தல் அழித்தல் என்ற மூன்று தொழின் மூலமாய் இருந்து அவனே செய்கின்றான். அதை அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கின் நிலைக களனாய் வைத்து அதிலிருந்து வழுவாது செய்கின்றான். அதை பெறுவதற்கு ஐம்புலனின் பொறிகளாய் நின்று அவற்றை வென்று அறிய செய்கிறான். அச்செயலை மூலாதாரம சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுக்தி ஆஞ்ஞை என்ற ஆறு உடலின் ஆதாரங்கள் மூலமாய் அறிவுறுத்துகின்றான். இவ்வாறு நிலை அறிந்து வரும் வழிசெய்து தானே அதன் ஏழாம் நிலையான தலையின் உச்சியிலே நிற்கிறான். அதில் பஞ்ச பூதங்களால் ஆன இந்த உலகத்தின் அதுவாயும் அதை உணரும் ஆன்மாவின் வடிவாயும் அதனை இயக்கும் சந்திரன் சூரியனாகவும் விரிந்து இருக்கின்றான் என்பதுவே இதன் பொருளாகும்.

ஆக எல்லாமுமாய் இருக்கும் இறைவன் எதில் இல்லை என்று கொள்ள முடியும். அதனை காணும் தன்மையை பொறுத்து அது உணரப்படுகிறது. அவன் வெளிப்படுகிறான். அவன் உணரத்தக்கவன். உண்ணத்தக்கவன். நாம் அவனையே உணவாக கொண்டால் அல்லது நாம் உண்ணும் உணவு அவன் என எண்ணும் போது நம் உடலின் சக்தியாய் மலருகின்றான். அவன் கொடுக்கும் அந்த உள்உணர்வு அந்த சக்தி அந்த அருள் நிலைத்தல் உணர்வு தொடர்வதாலே பெறப்படும். மீண்டும் மீண்டும் அவன் அருளை உண்ணுவதே அது நிலைத்திருக்க உயிருக்கு நாம் செய்யும் பெரும் நன்மை. அது முயலப்பெறாவிட்டால் வெளவால்கள் போல் என்னதொங்கினாலும் ஏற்புடையதாய் இல்லை. காரணம். தெளிவில்லை. திடமில்லை. முனைப்பில்லை.

முழுதுமான நம்பிக்கை இல்லை. இதையே

வழங்குகின்றாய் உன்அருள் ஆரமுதத்தை
வாரிக்கொண்டு விழுங்கினேன் விக்கினேன் என் விதியின்மையால்
தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர் தந்து
உய்யக்கொள்ளாய் அழுங்குகின்றேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

இது இறைவனுக்கு தொண்டாய் இருந்து பிரம்படி பட்டு சுடுமணலில் வதைக்கப்பட்டு சிறையின்

கொடுமைகள் கண்டு சினத்திற்கு ஆளாகி இறைவனின் திருவடி தம் தலைமேல் வைக்கப்பட்டது என்று உணர்ந்து அதனை சுகித்து அதனோடு உறவாடி தான் பட்ட இன்னலெல்லாம் கரைந்தது கண்டு மீண்ட மாணிக்கவாசக பெருமானார் மீண்டும் அந்த ருசி பெற துடிக்கும் நிலை.

நமது ருசி என்ன? நமது நிலை என்ன? திறன் ஆய்வு செய்தாலொழிய திகம்பரன் தரிசனம் கிடைக்கப்பெறாது. அவன் இடம் ஒன்றாய் இரண்டாய் மூன்றாய் நான்காய் ஐந்தாய் ஆறாய் ஏழாய் எட்டாய் எட்டும் தொலைவில் தன்னை இட்டு நிற்க்கும் அவனை ஏன் நாம் காணாது

அலைகிறோம்? சிந்தியுங்கள்.

62. உலா.

இந்த இடைவேளை சிறிது இளைப்பாறவும் சிந்தனை வேறுபடவும் உதவியாக இருக்கின்றது. திருநெடுங்களம் திருக்காட்டுப்பள்ளி திருஆலம்பொழில் திருக்கண்டியூர் திருவேதிக்குடி திருவையாறு திருநெய்தானம் திருபாற்றுறை தாயுமானசுவாமி என்ற ஒன்பது தலங்களுக்கு செல்லும் பணியில் இருந்ததே இந்த இடைவேளை. நாம் சென்று வந்த தலங்களைப்பற்றி ஏன் சொல்லவேண்டும்? காரணம் அது தேவைப்படுகிறது. பகிர்ந்து கொண்டால் நீங்களும் அதுபோல சென்று வர வேண்டியதிருக்கும் என்பதாலும் இவ்வாறு செல்வதினாலே நம் மனம் சித்தம் புத்தி அவன் பால் எப்போதும் நிலைத்து இருக்கும் என்பதினாலே இதை எழுதினோம்.

இறைவனின் நினைவில் இருப்பதுவே முத்தி நிலை என்பதாகும். அதனை நிலைத்து வைத்துக் கொள்பவர்கள் முத்தர்களாகவும் சித்தத்தில் வைத்தவர்கள் சித்தர்களாகவும் மனதில் வைத்தவர்கள்

மனிதர்களாகவும் வாழ்கின்றனர். ஆக அந்த நிலைத்தலுக்கும் நினைவுக்கும் இறைவனின் தரிசனம் வேண்டப்படுகிறது. சாப்பிடும் போது மாற்றி மாற்றி சாப்பிடுவது போல. அதனாலே உடல் மேன்மையுறுகின்றது. அதுபோல இதனாலே உயிர் இளமைபெறுகின்றது. ஒரு புத்துணர்வு பிறக்கின்றது. அன்பான மகள் வெளியில் விடுதியில் தங்கி படிக்கிறாள். ஆவளை பாராதிருந்து பார்த்தால் தேவலையே என்று மனம் செயல் எல்லாம் மாறுதலாய் செய்ய கிளம்பிச்சென்று அவளை பார்த்து அவளோடு சிறிது நேரம் பேசி விட்டு அவளுக்கு மகிழ்வூட்டும் பல நிகழ்வுகளை பொருட்களை கொடுத்து வந்தால் எவ்வளவு நிம்மதி இன்பம். மனம் இறகு போல் ஆகின்றது. செயல் துரிதமாகின்றது. நினைவு இளமையாகின்றது. அதே போல மனைவி பிரசவத்திற்கு அனுப்பி விட்டு பரிதவிக்கும் கணவன். பையனை பேருந்தில் ஏற்றிவிட்டு தொலைபேசியில் பேசி மகிழும் தந்தை. இது போல் எத்தனையோ. அதைப்போன்றே இறைவனை நாம் பாவிப்பதும்

பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
அதைப்போன்று நம்மைக்கண்டதும் அவர் மகிழ்கிறார் என்பதைப் போன்றும்
பண்டே என் சிந்தை புகுந்தாய் போற்றி
உடலைவிட்டு உயிர் அவரிடம் சென்று உறவாடுவது போன்று
உயிருக்கு உயிர் ஆனாய் போற்றி
தாயை கண்ட சேயாய் நாம் ஆனதைப்போன்று
தாயாய் முலையைத் தருவானை
இருளில் கிடந்தனை ஒளியில் வைத்து மகிழ்வித்ததை போன்று
இருள் கெட செய்யும் எம் ஈசா போற்றி
தாகத்தில் கிடப்போனுக்கு பாலன்னம் அருளியதைப்போன்று
பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலன்
நரகத்தில் உழல்பனுக்கு நன்மை அருளியது
நஞ்சே அமுதாய் நயந்தாய் போற்றி

இதெல்லாம் அவன் நமக்குத் தரும் அருட்கொடைகள். பெற்றவர் பெருமையும் மகிழ்வும் உறுவார். பெறாதார் முயலாது இருப்பார். பிதற்றி அலைவார். பேசுவதும் யாதென்று அறியார்.

ஆக நாம் நம்தின வாழ்க்கை சக்கரத்தின் ஆரங்களாய் அதன் அச்சாணியாய் இறைவனை வரித்துக்கொள்ளவேண்டும். தினம் விடாது கோயில்களுக்கு செல்லுதல் (வீட்டு வேலையை யார் செய்வார்?- செய்து முடித்தபின்தான்) இறைவனை நம் உறவான உயிராய்

கொள்ளுதல். வாரத்தில் எப்போதாகிலும் வேறு கோவிலுக்கு செல்லுதல் மாதத்தில் ஒரு கோவிலுக்கு நிரந்தரமாய் செல்லுதல். எழும் போதும் நினைத்தெழுதல் குளிக்கும் போதும் நீரளித்த நிமலனை நினைத்தல் உண்ணும் போதும் அவனே என எண்ணி உண்ணுதல் உறங்கும் போது அவன் திருவடியில் உறங்குவதாய் எண்ணி உறங்குதல். உறக்கத்திலும் கனவாய் அவன் வரவேண்டல். கனவிலும் அவனோடு கலந்து உறவாடுதல். இவையே நம் பொழுதாய் அமைந்தால்

அப்பன் நீ அம்மை நீ அய்யனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓர்உருவும் நீ

இது அப்பர் வாக்கு. இதற்கு மேலாய் கூறுதல் முடவன் கொம்புத்தேன் போலத்தான்

63. சலனம்

அமைதியாய் இருக்கின்ற மனம் அல்லல் ஏற்படும் போது காட்டும் தன்மை. துயரமாய் ஒன்றை எண்ணி துன்பப்படுவதாய் உணரும் போது வரும் உணர்வு. பல இன்பங்கள் பெற்றும் அதன் சுவையில் ஏற்படும் உந்துதல். யாரும் நம்மை கண்டு கொள்ளவில்லை தனிமையாய இருக்கின்றேன் என்று தைரியம் பெறப்படும் போது ஏற்படும் குணம். இவையெல்லாம் சலனத்தின் வித்து. சலனத்தின் திறவுகோல்கள். இது சரிதானா?

சரியில்லை என்று சொல்லி அதற்கு ஆயிரத்தெட்டு சப்பைக்கட்டு கட்டி வியாக்யானம் பல விரித்துரைத்து செய்வது கொல்லன் தெருவில் விற்கப்படும் ஊசியாகும். இதன் நிலைபாடு என்ன? ஏன் வந்தது? வருகின்றது? என்று ஆராய்வதும் அதன் மூல செயலை புரிந்து சிந்தித்தலுமே ஒரு தெளிவு தர பயன்படும்.

சலனம் என்பது ஒரு அனுபவம். கேட்டதினாலோ அடைந்ததினாலே ஏற்படும் தாக்கம். திரும்ப அதை செய்ய மனம் உந்தப்படுவதே காரணமாகும். அதன் சுவை அறிந்த மனம் அதைப் பெற நம்மை அதுபோன்ற தொரு சூழ்நிலையில் துண்டுதலே இதன் மூலமாகும். இதன் திடம் பெற்ற அனுபவித்தலினால் மிகுதியாகி

Koviloor Digital Library

செயல்படுத்த எண்ணுகிறது. இந்த சூழ்நிலையில்தான் மனம் மற்ற ஐந்து புலன்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. இந்த ஐம்புலன்களின் ஆதிக்கம் மிகுதியாவதாலே அவைகள் மனத்தை வேறுபாதையில் இட்டச்செலுத்துகின்றது. மனதின் கட்டுப்பாடில் இயங்கி பெற்ற அனுபவத்தை அதற்கே மீண்டும் உணர்த்துவது போலவும் தூண்டுவது போலவும் ஆகிவிடுகின்றது. உதாரணமாக இனிப்பு என்பது சுவைக்கப்பட்டு இன்புற்று மகிழ்ந்த சுவை. அதன் அமைப்பை கண்ணும் மணத்தை மூக்கும் அதன் பண்பை காதும் அதன் சுவையை வாயும் அதனால் ஏற்படும் ஆனந்தத்தை மெய்யும் மனத்திற்கு நாம் அதனை உட்கொள்ளும்போது தெரிவித்து அந்த ஆசைக்கு வித்திடுகிறது. அது மனத்தின் ஏட்டிலே பதிவாகி காத்திருக்கின்றது. சுவை மிகுதலினால் அதனை சாப்பிட முடியாத நிலை ஏற்படும் பொழுது அந்த பதிவு மீண்டும் மீண்டும் வந்து சுவையை உணர்த்தி செல்கிறது. அதுவே சூழ்நிலை சாதகமாக அமையும் பொழுது மனம் தூண்டுகிறது. ஆனால் அதில் இன்பம் ஏற்படுவது இல்லை. அதற்கு பதிலாய் குற்ற உணர்வு எழுகின்றது. அது தன் ஆய்வு செய்கின்றபோது நம்மை நாமே சிறந்தவனாகவோ சீரழிந்தவனாகவோ காட்டுகின்றது. நம்முள் இருப்பதே நமக்கு துரோகம் செய்கின்றது என்பது அப்போது புரிகின்றது. சீரழிந்தேன் என்று எண்ணுகின்றவனே சிந்திக்கின்றான். அது தவறு என்று உணர்கின்றான். தன்னை மாற்றிக்கொள்ள முற்படுகின்றான். தெளிந்து விடுகின்றான்.

ஆனால் இந்த நிலையில் இருந்து மாறுவது எப்படி? யார் துணைசெய்வார்கள்? யார் மாற்றுவார்கள்? யார் இந்த ஐம்புலனை கொடுத்தார்களோ அவர்கள் தான் அதை மாற்ற இயலும். யுார் இதனை நம் உதவிக்கு கொடுத்தாரோ அவர்தானே துணை செய்ய முடியும். அவர் யா?. அல்லது அவள் யார்? வேறு யார். நம் இறைவன்தான். நாம் வேறு யாரைத்துணைக்கு அழைக்கப்போகிறோம்.

எப்படி? கண்ணுக்குத்தெரியாத அவனை நாம் ஒரு செயல் செய்யும் போது எப்படி துணையாய் இருக்கின்றான் என்று நம்பி முடியாதவைகளை முடிக்கின்றோமோ அது போல நம் மனத்திற்கு ஒவ்வாத காரியத்தை செய்ய எண்ணும் போது அவனும் உடன் இருக்கிறான் மூன்று கண்களோடு பார்க்கின்றான் என்று எண்ணினால் அந்த சலனம் கரைந்து போகும். அவனோடு வாழ்கிறோம் என்று வாழுவோமேயானால் வாழ்வு வளம் உள்ளதாகின்றது. அவன் உடன் இருக்கின்றான் என்று வார்த்து விட்டோமேயானால் எல்லா எண்ணமும்

அவன் நினைவாய் போகின்றது. பின் ஏது இடர்பாடு. வழிநடத்த அவன் இருக்கும் போது பின் ஏது தனிவழி. பாதையெல்லாம் அவன் உடன் வரும்போது வருவதின் மேல் நமக்கு பயம் என்ன வேண்டிகிடக்கின்றது. அது அவன் பார்த்து நமக்கு தகுதியானதாக அனுப்பியதாய் அனுபவிக்கவேண்டியது தானே. சலனத்திற்கு வேலையே இல்லையே.

வைத்த நிதி பெண்டீர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பென்னும்
சித்த விகார கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

என்று சித்தத்தின் கலக்கமான சலனத்தை தெளிவிக்கும் வித்தகன் இறைவனன்றி வேறு யாரும் இல்லை என்பதை அவனின் திருப்பாதத்தை தன் தலைமேல் கொண்ட மாணிக்க வாசகனாரைத்தவிர வேறு யார் அறுதியிட்டு கூற இயலும். சரிதானே?

64. ஆயுதம்:

கருவிகள் என்றும் ஒரு பொருள் இருக்கின்றது. ஒரு செயலை செய்ய பயனாகும் பொருள் என்று கொள்ளலாம். அதன் பலன் நமக்கு நலத்தை தருவதாக இருக்கின்றது. அந்த பொருள் உயிரற்றது. அது நமக்கு உதவுகின்றது. எப்போது? அதற்கு சக்தி கொடுக்கப்படும் போது. ஆக அது சிவமாய் இருக்கின்றது. செயல் படவரும் போது சக்தி தர அது அச்செயலை முடிக்கின்றது. ஒரு செயலைச் செய்ய பயன்பட்டபின் அதில் சக்தி செலுத்தப்படாதமையால் அது சிவமாய் அமர்ந்து விடுகிறது. அதனை போற்றுவதே ஆயுதபூசையாக வடிவானதாக இருக்கலாம்.

தனக்கு வேட்டையாட உதவிய கல்ஆயதங்களை தன் தற்காப்பின் போது கண்டுபிடித்தான். இரவு வந்த போது காட்டுத்தீயில் இருந்து விளக்கின் தீயின் பயனை அறிந்தான். அனுபவம். தனக்கு உதவிய கருவிகள் கல் ஆயுதம் மரஈட்டி கயிறு போன்ற மரவேர் ஆபத்தில் உதவிய மரபட்டைகள்இ இலைகள் எல்லாவற்றையும் தன் தெய்வமாய் தன் இரண்டு கைகளிலும் எந்த விதமான ஆயதங்களை தன் உணவுக்காகவும் தற்காப்பிற்காகவும் ஏந்தவில்லை

Koviloor Digital Library

என்பதை காட்ட இருகைளையும் இணைத்துகாட்டி வணங்கும் முறையாக கண்டான். மண்டியிட்டு வணங்குதலை விலங்குகளிடம் இருந்து கற்றான். ஆடல் பாடலையும் பறவைகளிடம் இருந்து கற்றான். தான் கழுவப்படவேண்டும் என்று விலங்குகளில் இருந்து கற்றான். தன் சொந்தங்கள் கவனிக்க மற்ற உயிரினங்களில் இருந்து கற்றான். அவ்வாறே தனது தினவாழிபாட்டையும் அமைத்துக்கொண்டான். வெளியில் வேட்டையாடச் செல்லும் முன் அதை வணங்கி எடுத்தான். வேட்டை முடிந்தபின் சுத்தம் செய்து பாதுகாப்பான இடத்தில் வைத்தான். அதற்கு ஒரு தனி இடம் பிரித்து வைத்தான். அதுவே அவனுக்கு வழிபாட்டுக்கு இடமாக ஆயிற்று.

இவ்வாறு இயற்கையோடு ஒன்றி அதிலிருந்து அனுபவமும் வாழ்க்கையும் பெற்ற மனிதன் அதனை ஒரு பொருட்டாய் மதியாது அதை தன்னுடைய அடிமைபோலவும் தாம் எண்ணும் போதெல்லாம் அது தமக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாயும் அதனை துன்புறுத்துபவனாகவும் தனக்கு அறிவு மிகுந்து விட்டதாய் உண்டு இல்லை என்று பிதற்றி திரிவதும் அவனுக்கு இழப்பே அன்றி யாருக்கும் நட்டம் இல்லை. கண்ணை கருப்புத்துணியால் கட்டி இருட்டில் ஒளியைத்தேடினால் பெறுவது என்ன?

செயற்கையாய் தான் உண்டாக்கியாதாக சொல்லித்திரியும் மனிதன் செயற்கையாய் தாக்கப்படும் போது அதற்கு அந்த செயற்கையால் மறுதாக்குதல் செய்கின்றான். அடுத்தவருக்கு துன்பம் விளைவிக்கின்றான். ஆனால் இயற்கை சீறினால் தாங்காது ஓலமிடுவதும் அப்போது இறைவனை வசை பாடுவதும் எங்ஙனம் சரியாகும். நாம் பரிதாபப்படவே முடியுமே அன்றி இறைவனிடத்தில் விண்ணப்பிக்க இயலுமே அன்றி வேறு யாது செய்ய இயலும். பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் அமெரிக்காவும் கண்ட சீரழிவு ஏன்? இயற்கையை போற்றாது அதனை பாழபடுத்தியது. அதனோடு இணைந்து அமைதியாய் இருந்தவர்களை துன்புறுத்தியது. வினை விதைத்தால் தினை முளைக்குமா என்ன? இயற்கையை பாழ்படுத்தினால் அது தாங்குமா என்ன?

அதனையே ஆன்மீகவாதிகள்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
கார் முகிலானாய் போற்றி
ஓதாத சத்தத்து ஒலியே போற்றி

விண்ணும் நிலனும் தீயானய் போற்றி- என்று திருநாவுக்கரசு பெறுமானும் (நாவுக்கரசின் போற்றி திருத்தாண்டகம் படியுங்கள்- பல விபரங்கள் தெரியவரும்)

கருங்குருவிக்கு அன்று அருளினை போற்றி
ஏனைக் குருளைக்கு(பன்றிக்குட்டி) அன்று அருளினை போற்றி
நஞ்சே அமுதாய் நயந்தாய் போற்றி (இணைப்பில் உள்ளதைக்காண்க)
புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி-

என்று மாணிக்கவாசக குருபெருமானும் ஓதி நின்றவை இயற்கையே நம் வாழ்வின் கருவிகள் அதை உணரும் நம் ஐம்புலன் உடலின் கருவிகள் அதனால் ஆன வாழ்வின் வளம் சேர்க்கும் கருவிகளே நம் வழியாட்டின் மூலம் என்பதை உணரவேண்டும். அதை உணர்ந்ததினாலே தான் நாம் அவருடைய பிள்ளையாக பிணாப்பிள்ளைகளாக அவர் நம்மை தோற்றுவித்த காலத்திலிருந்து தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறோம் என்பது மகிழ்வுதானே. எவ்வளவு பெருமை!!!.

65. பொழுது:

இது நேரத்தை கணக்கிட முற்காலத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டு வந்த வார்த்தை. விடியல்பொழுது, அந்திப்பொழுது, காலைப்பொழுது, மாலைப்பொழுது என்று நான்கு காலம் இன்னும் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆனால் அதிகமான நேரத்தை குறிப்பதாய் இருக்கின்றது. அதற்கு மட்டும்தான என்றால் இல்லை. எப்பொழுது, அப்பொழுது, இப்பொழுது, தற்பொழுது, நடுப்பொழுது என்றும் வழக்கத்தில் இருக்கின்றது. அதே போல் ஒன்றை குறிப்பாதாயும் சொல்ல வருகின்றது. தருகின்றபொழுது விடுகின்றபொழுது சொல்கின்ற பொழுது என்பனவாகும். இலக்கணம் போல் இருக்கின்றதா? பயம் வேண்டாம். தொல்காப்பியனாரை இன்னும் தொடவில்லை. ஆனால் தமிழுக்கு உரித்தான சுவையே நாம் நினைப்பதைச் சொல்ல முடியும் இனிமைதான். மிகச்சிறிய கால அளவை பலகாலத்திற்கு பிறகுதான் மேலை நாடுகள் கண்டன. ஆனால் நம்மவர்கள் பல்லாயிரக்கனக்கான ஆண்டுகளுக்கு முன்னே கண்டுவிட்டனர். நொடிப்பொழுது இமைப்பொழுது என்பன சில.

Koviloor Digital Library

இந்த நேரம் எங்கிருந்து வந்தது? எவ்வாறு உணரப்படுகிறது? எதை நேரம் என்று சொல்கிறோம்? இதெல்லாம் நாம் யோசித்திருக்கின்றோமா? ஒரு செயலில் இருந்து அடுத்த செயலுக்கு செல்லும் இடைவேளை என்று கொள்ளலாம். அல்லது நம்முடைய சக்தி வெளிப்பட்டு அது முடியும் வரை உள்ளதை சொல்லலாம். எவ்வாறு எடுத்தாலும் அது முடிந்து விட்ட செயலை பற்றி சொல்லுவதாய் இருக்கின்றது. ஆனால் ஒரு செயல் ஆரம்பிக்கப்பட்டு முடியும் வரையில் எது அதனை இழுத்துச் செல்கின்றது. எது அச்செயலை செய்ய வைக்கின்றது. எது அங்கு காலமாய் இருக்கின்றது. அது முடிவுறவும் தொடரவும் செய்வது எது? என்பது தான் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று. கீழே தந்தவற்றை படித்தால் சிறிது புரியத்தொடங்கும்.

ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்- திரு அப்பர் சுவாமிகள்

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் - மாணிக்கவாசக பெருந்தகை.

இக்குருமார்கள் தங்கள் மனமெல்லாம் இறைவனை நிறைத்து அதில் தங்கள் காலத்தை மறந்து காலத்தை வென்றார்கள் என்பதே உண்மை. ஆக நம்மை இயக்குவதும், இயக்கத்தின் முதலாயும், முடிவாயும் இருக்கும். இறைவனே காலத்திற்கு பொழுதிற்கு ஒப்பாகிறான். அதனால்தான் அவன் நினைவிலே வாடுவோர் வாழுவோர் காலத்தைப்பற்றி சிந்திப்பதில்லை. முடிவைபற்றியும் சிந்திப்பதில்லை. எல்லாம் அவனாகி நிற்கின்றபோது அந்த நினைப்பு எங்கே வரும். அவன் காலத்தை கடந்தவனாய் நமக்கு பின் தெரிவதை முன் அறிந்தவனாய், அருகில் வைத்தால் முன் உணர்த்துபவனாய் முடியும் செயலை முன்னதாயும, முடியாதென்று எண்ணுவதை முடித்தும் அவன் தானே வைக்கின்றான். அவனே எல்லாமாய் இருக்கின்றான் என்ற எண்ணம் மனம் வருமேயானால் அவன் வருவானே. அப்பொழுது அப் பொழுது போகாத பொழுதாய் புலராத பொழுதாய் மறையாத பொழுதாய் ஆகிவிடாதா? மனமெல்லாம் அவனாய் ஆகிவிடாது அவனையும் அதிலிருந்து விடாது இருந்துவிட்டால் இன்பமான பொழுது அதுதானே. அப்பொழுதை எப்போது பெற இயலும்.?

Koviloor Digital Library

மனதில் தப்பேதும் இல்லாது செயலில் பழுதில்லாதிருந்து குணம் குன்றாது இருந்து தந்தவனை இமைப்பொழுதும் மறவாது நெஞ்சமெல்லாம் நிறைத்திருந்தால் நிச்சயம் பொழுது போக்கிற்க்கென்று ஏதும் தேவைப்படாது. மனமெல்லாம் மணவாளன் இருந்தால் மற்றவைக்கு நேரம் ஏது? எண்ணந்தான் ஏது? செயல் அதாய் நடந்து கொண்டே இருக்க மனம் அவனை தன்னுள் வார்த்து விட பின் காலம் என்ன நேரம் என்ன? அவனே காலம். அவனே நேரம். அவனே நொடி. எல்லாம். எதைப்பற்றிய கவலை நமக்கு எதற்கு? எதைப்பற்றிய சிந்தனை நமக்குகெதற்கு. எல்லாம் அவன் காலச்சக்கரத்தில் அவன் விருப்பாய்

வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உந்தன் விருப்பன்றே-

என்ற திருவாசக மந்திரமாய் வாழ்ந்து பழகிக்கொண்டால் பின் துன்பம் ஏது? அல்லல் ஏது?. எல்லாம் இன்பமாய் அமுதாய் ஆனந்தமாய் அமைதியாய் மாறிவிடாதா? எங்கும் அவன் செயலாய் காணத் தோன்றாதா? ஏல்லாம் சிவனனெ நின்றாய் போற்றி என்ற அப்பர் வாக்கு பொய்க்குமா என்ன?

66.விடிவு:

எந்த ஒரு செயலுக்கும் இது உண்டு என்பது உண்மை. நாமாக செய்வதாக சொல்லுபவையும் பிறரால் உண்டாக்கப்பட்ட செயலுக்கும் இது பொருந்தும். முடிவு என்பது வேறு விடிவு என்பது வேறு. முடிவே இல்லாத ஒரு செயலுக்கு முடிவு காண்பதாய் செய்யப்படுவது. அதாவது ஒரு செயல் ஆரம்பித்து அதன் போக்கிலே சென்று சிந்துபாத் கதைபோல நீண்டு கொண்டே போக அதற்கு ஒரு முடிவை சொல்ல வழிசெய்வதே விடிவு ஆகின்றது. அதாவது முடிவுக்கு சற்று முந்திய நிலை. உதாரணமாக ஒரு மனிதன் வறுமையே வாழ்க்கை என்று வாழ்ந்து வருவானாகில் அந்த வறுமையில் இருந்து மீள்வதையே விடிவு என்று உரைக்கலாம். ஆனால் அதுவே முடிவாகி விடாது. அதுவுமல்லாது முடிவுக்குப்பின் தொடர்பு கிடையாது. விடிவுக்கு பின் தொடர்பு உண்டு. அது வேறு செயலின் தொடக்கமாக இருக்கலாம். இது அதே செயலின் மறுபிறப்பாயும் இருக்கலாம். அதாவது வறுமையே மீண்டும் வரலாம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் ஒவ்வொரு நாளும் விடியலுக்கு காத்துக்கொண்டு இருக்கின்றோம். காரணம் முடிவு நாம் அறிந்த ஒன்று அதுவே மரணம். ஆனால் அது நிகழவதற்கு முன் நடத்தப்படும் செயல் எதுவாய் இருக்கும் என்பதனை அறியாது சென்று கொண்டு இருப்பதனால் இந்த விடியல் தேவையுள்ளதாகின்றது. ஆனால் இது தவிர்க்கபடவேண்டிய ஒன்று. எவ்வாறு?

எந்த ஒரு செயலும் தானாய் நமக்கு நிகழந்து விடுவதில்லை. அது ஒரு இடத்தில் செயலில் இருந்து செய்யப்படுகின்றது. அது நாம் முன் செய்த செயலில் இருந்தே ஆரம்பமாகி வருகின்றது. நன்கு சிந்தித்தால் புரியும் நாம் அனுபவிக்கும் எந்த செயலும் புதிதில்லை. அது போன்று நாம் முன்னம் கேட்டதாய் அல்லது அனுபவித்ததாய் இருக்கும். அதன் தன்மை வேண்டுமானால் சிறிது மாறுபட்டு இருக்குமே அல்லாது வேறுமாற்றங்கள் இருக்க வாய்பில்லை. நாம் அதனை உதாசினப்படுத்தியோ மறந்தோ இருக்கலாம். இதனையே

நன்றே வரினும் தீதே விளைகினும். என்பார் அபிராம பட்டர்.

நாம் ஒன்று செய்ய அது ஒருவருக்கு நன்மையாக வாய்க்குமாகில் அதன் பலனாக வேறுவிதமாய் நம்முடைய தேவைக்கு அது நன்மையாகவே தரப்படுகிறது. ஆனால் அதே செயல் தீமையாக செய்யபட்டிருக்குமேயானால் அதே நமக்கு தீமையாக விளைகிறது. ஆக நாம் செய்யும் செயலின் விளைவும் விடிவும் நம்முள்ளே இருக்கின்றது. அதனால் நம்முடைய செயல்கள் அனைத்தும் பிறருக்கு நன்மை தருவதாய் செய்யப்படவேண்டும் என்பதே தேவை. இறைவன் நம்மை இங்கு அவனின் பிரதிநிதியாக அனுப்பியதே அவனுடைய பணியை செய்ய என்பதை நாம் உணரவேண்டும். அப்பணி அன்று நிறைவடைந்தால் அதன் முழமையும் இறைவனிடத்தில் ஒப்படைக்கப்படவேண்டும். அப்போது நம் மேல் எந்த பழியும் பாவமும் வந்து சேர்வதில்லை. இன்றைய தினம் இறைவன் எனக்கு பணித்தது இதுவே என்று எண்ணுவமேயானால் விடியல் தேவையில்லை. முடிவைப்பற்றிய கவலை இல்லை. அது அவன் நமக்கு வேறு யாராவது ஒருவரின் வழியே நடைமுறைபடுத்துவான் என்பதையும் நாம் உணரவேண்டும். அதுவன்றி ஏதும் தாமே செய்வதாய் எண்ணுவதும் தாம் எண்ணம் போன்று நடைபெறவேண்டும் என்று எதிர்நோக்குவதும் அல்லலை அன்றி வேறு எதையும் தராது. இவ்வெண்ணம் நமக்கு உண்டாக நாம் செய்யும் செயலின் பலன்

நம்முடைய எதிர்பார்புக்கு தேவையற்றதாய் ஆகிவிடும். ஆதனாலே பெறப்படும் விளைவு ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பெறப்படும். அதுவே இறைவன் நம்மை ஆளும் முறைமை. நம்மை ஆட்கொள்ளும் தன்மை. தன் கருணை செலுத்தும் நிலை. தன்னவனாய் நம்மை ஆக்கும் தன்மை. அதனால் நம்மனம் அமைதியுறுகிறது. சுத்தமாகிறது. ஏதும் இல்லாது போகின்றது. அங்கே விசாலமான இடம் வானம் போல் வெற்றிடமாய் ஆகின்றது. அங்கே இறைவன் அமர்ந்து இளைப்பாறுகிறான். நம்மனம் அவன் தன்மை ஆகின்றது. அவனோடு கொஞ்சுகின்றது. அவனோடு கலந்து உறவாடுகின்றது. அவனோடு இழைந்து விடுகின்றது. வேறு சிந்தனையற்று இருக்கின்றது. இதுவே முத்தி நிலை. முழமையான நிலை. வாழும் முறையில் நாம் காணும் இறைநிலை. எல்லாருக்கும் வாய்க்கும் நிலை. எல்லோரும் பெறவேண்டிய நிலை.

அந்நிலையில்

சொல்லுவது அறியேன் வாழி முறையே
தரியேன் நாயேன் தான் என்னை செய்தது
தெரியேன் ஆஆ செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்

என்பது பெருந்தகை மாணிக்க வாசகனாரின் நிலை. இந்நிலை நாம் பெறப்படுவது அறிதாயினும் அவ்வழியாய் சென்று அதனை நம் பக்குவத்தின் பயனையாய் காண மு யலுவதில் தப்பில்லையே?

67. அழுகை:

இது ஒரு விசித்திரமான தன்மை. வேடிக்கையான விளைவு. வெகுளித்தனமாக நினைக்க வைக்கும் செயல். வேதனையாலும் சோதனையாலும் சாதனையாலும் எழுந்து வரும் இயக்கம். இதன் வெளிப்பாட்டில் எல்லா புலன்களும் இயங்குகின்றது அதனால் இயக்கமானது. மனத்தின் வெளிப்பாட்டில் பிரதிபலிக்கும் தோற்றம். ஒத்து நோக்கி உருவகித்து முடிவை முற்றுப் பெறச்செய்து முடிவில் வெளிப்பாடாகும் செயல். மனதின் எண்ண பதிவேட்டில் பதிந்து மீண்டு எழுந்து வரும் எண்ணம். இதனை அனுபவிக்காதவர் யாரும் இலர். எல்லா உயிர்களும் இதைச் செய்கின்றன.

Koviloor Digital Library

ஏன் ஏற்படுகிறது? எதனால் வெளியாகின்றது? என்னவெல்லாம் ஆகின்றது? என்பதனை சிறிது சிந்திப்போம்.

தாயின் கருவறையில் இருந்து வெளிப்பட்ட நாம் இவ்வுலகத்தின் சூழ்நிலையில் தாக்கு பிடிக்க முடியாது முதலில் அழுகின்றோம். இதுவே முதல் அழுகை. இவ்வுலக வாழ்வை பருவம் பருவமாய் கடக்க அதன் பயன் தெரியாதும் பலன் தெரிந்தும் பல விதமான அழுகை. அனுவபங்கள் பெற்று அதனால் அறிவின் திறம் பெற்றபின் ஆணவமிகுதியால் செய்யப்படும் விளைவுகள் நேர் மறையாய் இருந்தாலும் எதிர்மறையாய் இருந்தாலும் இது விளைகின்றது. பல காலகட்டங்கள் கடந்து பல மேடு பள்ளங்கள் நடையாகி நடைதளர்ந்து வயது கூடி மூப்பை சந்திக்கின்றபோது தள்ளாத வயதாகி தளர்வெய்தி ஏதும் செய்ய முடியாத நிலையாகி உடம்பு கிடக்கும் போது தான் அனுபவித்த அனுபவங்களின் நிகழ்வுகளை எண்ணி இம்மனித உயிர் கடைசி அழுகை செய்கிறது. இது ஏன்?

அழுகை என்பதை ஒரு குணமாகவே அல்லது ஒரு வழக்கமாகவே கொண்டால் அதன் தன்மை அறியப்பட்டுவிடும். உண்மையும் புலனாகிவிடும். ஆனால் தன் மனத்திற்கு ஏற்படும் ஒரு ஒப்புவமையான செயலாலே மனம் மாற்றமடைகின்ற போது அழுகையானது உண்டாகின்றது. இது அழுத்தத்தை குறைப்பதாயும் ஆனந்தத்தை அனுபவிப்பதாயும் ஆற்றாமையை நீக்குவதாயும் இயலாமையை ஏற்க்க முடியாததாலும் உண்டாகின்றது. இவை அனைத்தும் மனத்தின் காரணமே. நாம் அனுபவித்ததை போன்றதொரு வேதனை பிற உயிர் அனுபவிக்கும் போது அதன் தன்மை அறிந்த மனம் அழுகையை நமக்கு உண்டாக்குகிறது. இது பரிதாப குணம் என்றும் சொல்லப்படுகின்றது. அது அவ்வாறு அல்லை என்பதே உண்மை. இதை காரியம் சாதிக்க பயன்படுத்துவொரும் உண்டு. ஆனால் அவர்கள் வாழ்வில் தோல்வியே அடைவர்.

சிலர் மனத்தால் அழுவதும் சிலர் தேம்பித் தேம்பி அழுவதும் சிலர் சிரித்துக்கொண்டே அழுவதும் சிலர் பெருத்த ஓசையோடு அழுவதும் சிலர் ஏதும் பேசாது ஒலி எழுப்பிக்கொண்டே அழுவதும் பலவிதமாய் சூழ்நிலைக்கு தக்கவாறு தன்மைக்கு தக்கவாறு செய்யப்படுகின்றது. இதன் உண்மை நிலை என்ன?

நம்முடைய வாழ்வு தீர்மானிக்கப்பட்டதாய் ஆனால் தெரியாததாய் இறைவனால் ஆக்கப்பட்டு நாம் அந்த சூழலில்

உழல்கின்ற போது நடக்கும் இன்பமும் துன்பமும் இருசெயலாய் சிரிப்பும் அழகையும் அதன் வெளிப்பாடாய் இருக்கின்றது. இவ்விரண்டும் இறைவனின் செயலாய் கொண்டு முழமையாய் அனுபவிக்கும் போது இரண்டும் ஒன்று போல் ஆவதை உணரமுடிகிறது.

இன்பமும் பிறப்பும் இறப்பினோடு துன்பமும் உடனே வைத்த சோதியான்- என திருநாவுக்கரசு பெருமான் நம் எறும்பியூரானைத்தான் சொல்கின்றார். அவனை நெருங்கும் போது **அன்பனே அரனே என்று அரற்றுவாக்கு இன்பனாகும் எங்கள் எறும்பியூர் ஈசனே** என்பார் அப்பர் சுவாமிகள்.

ஆக இறைவன் நாம் இப்பூவுலகில் பிறக்கும் போது சொல்லிக்கொடுத்த முதல் மந்திரமே இந்த அழுகைதான். தாயையும் அறியாது தந்தையும் அறியாது இருக்கும் போது அவனை அழைக்க தன் உணவான பாலுக்கு வேண்ட அவன் கொடுத்த மந்திர ஒலி இந்த அழுகைதான். அனுபவமாகி அதனை அவன் நமக்கு அளித்ததாய் ஏற்று இதெல்லாம் தந்தானே என்று அவனை எல்லா நிலையிலும் நினைக்க வைக்கின்ற மந்திர ஒலியும் அதுதான். அனுபவம் முடிந்து அவன் அடியை அடைய வரிசையில் நிற்கின்ற போது உள்ளே புக முதல் வயதில் சொல்லிக்கொடுத்த மூலமந்திரமும் அதுதான். முடிவாக அவனை அடைய எளிய வழியும் அதுதான் என்பதை நான் சொல்லவில்லை

அழுதால் உன்னை பெறலாமே- என்பார் அழுதே திருவடி பெற்ற மாணிக்கவாசக பெருந்தகை.

68. தனிமை:

இந்த மண்ணுலகத்தில் நாம் பிறக்க நேரும் போது உடன் வந்த ஒன்று. அதற்கு முன் அனுபவித்த சுகம் ஆனால் பாதுகாப்பாக அம்மை அப்பனின் அரவணைப்பில். இது ஒரு அனுபவமே அன்றி வேறு எந்த விதம் என்று கூற இயலவில்லை. இது பொதுவான சூழலலாய் இருக்கின்றது. சிலநேரங்களில் மகிழ்வைத்தருவதாயும் சிலநேரங்களில் துன்பத்தை நினைவூட்டுவதாயும் இருக்கின்றது.

Koviloor Digital Library

இதனால் பல செய்திகள் உணரப்படுகின்றன. இதனை நம் மனம் விரும்பும் நிலையாக இருக்கின்றது. காரணம் ஏதாவது ஒன்றைப்பற்றி சிந்திக்கும் போதோ செயல்படுத்த எண்ணும் போதோ தனிமை கட்டாயமாக விரும்பப்படுகிறது. ஆனால் தனிமையில் எடுக்கப்படும் முடிவுகள் வெளியில் செயலாகும் போது அதன் பரிணாமம் உணரப்படுகிறது. அதன் பயன் மகிழ்வூட்டுவதாயோ துக்கப்படுத்துவதாகவோ இரு நிலையை உணர்த்துகின்றது. ஏன் இவ்வாறு உள்ளுற ஏற்படுகிறது? இதன் தாக்கம் என்ன? இதன் உதவி என்ன? நல்லதா கெட்டதா? நடைமுறை படுத்தலாமா?

தனிமை என்பதனை ஒரு உணர்வாய் எடுத்து சிந்தித்தால் அது சுகமாய் இருக்கின்றது. செயலாய் கொண்டால் துன்பமாக இருக்கின்றது. உணர்வு என்பதை உயிருக்கு உள்ளதாயும் செயல் என்பதை உடலுக்கு உள்ளதாயும் பிரித்து சிந்தித்தால் நன்கு புலப்படும் உண்மைகள் புரியும். செயலால் ஏற்படும் அயர்வின் காரணமாய் இத்தனிமை இன்பத்தை போல் துன்பத்தை தருவதாய் இருக்கின்றது. ஆனால் உயரின் உணர்வால் உந்தப்பட்டு பெறத்துடிக்கும் தனிமை துன்பம் தருவதாய் ஆகி இன்பம் தருவதாய் இருக்கின்றது என்பதை நாம் உணரமுடியும். உணர்ந்து கொண்டும் இருக்கின்றோம்.

உடல் தேடும் தனிமை அந்த உடல் பெற்ற அனுபவத்தினால் தனிமையில் அந்த அனுபவம் பெற்றதின் சுவையை நினைவூட்டி அதன் சுவையை மீண்டும் நாட வழி தேட மனம் முயல்கிறது. ஆக அச்செயலால் வெளிப்புறமாய் நமக்கு துன்பங்கள் மிகுவதை உணர முடியும். உதாரணமாக புகை பிடித்துக் கொண்டு இருந்த ஒருவன் தான் அந்த பழக்கத்தில் இருந்து மீண்டு திருந்தியவனாக ஆகி வெளிப்புறத்தார் அவனை வாழ்த்தி அதில் மகிழ்ந்த அவன் தன் மற்ற செயல் பாடுகளின் களைப்பினால் தனிமையை நாடுகின்றபோது அந்த புகை பிடித்த சுவை அந்த தனிமையை சுட்டிக்காட்டி மனதை சலனப்பட செய்து அவனை குற்றமுள்ளவனாக திருந்தாதவனாக தனிமையில் எல்லாம் அத்தவறை தொடர்பவனாக செய்து விடுகிறது.

ஆனால் உயிரின் உயர்வால் தனிமை நாடும் மனம் செயலில்லாத உயர்வையே நாடுகிறது. அதன் இன்பத்தை மீண்டும் மீண்டும் சுவைக்கத் தூண்டுகிறது. அத்தனிமை விரும்பப்படுகிறது. காரணம் அது உணர்வான இன்பமே. அது உடலுக்கு துன்பத்தை தருவதாய் இருந்தாலும் உடலும் நாளாக நாளாக அதற்கு இணங்கி உதவுகிறது. உடலும் உணர்வும் தனிமையில் உடலை மறந்து

ஏற்கும் இன்பம் இறைநிலையையும் இறைஇன்பம் தருவதாயும் இருக்கின்றது. இது அனுபவ உண்மை. அதனாலேயே முனிவர்களும் தவசிகளும் ரிசிகளும் தனிமையில் தம்முடைய தவங்களை இயற்றினர். பேரருள் பெற்றனர். நினைத்ததை நடத்தினர். இப்பூவுலகில் நிலையில்லா புகழும் இந்த உலக உயிர்களுக்கு தாம் பெற்ற அனுபவத்தின் இன்பத்தை அனைவருக்கும் பொதுவாக்கி சென்றனர்.

அப்படியானால் இதன் சக்தி என்ன?

அளவிடமுடியாத சக்தி கொண்டது இந்த உணர்வான தனிமை. மகாபாரதத்தில் காந்தாரி தன் கண்களை கட்டி தன் உயர்வை தனிமைப்படுத்தியதனால் துரியோதனின் உடல் வைரம்போல் ஆக உதவியது. வள்ளுவ பெருந்தகை தனிமையில் பிறந்த திருக்குறள் உலகமறையாக்கி நம்மை உலகின் உச்சியில் கொண்டு சென்றது. அது போன்று தனிமையில் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தேனை யோகிவடிவான இறைவன் வந்து கேட்டு எழுதினமையால் அவன் கையெழுத்து இந்த தென்னகத்திற்கு பெறப்பட்டு பாண்டிச்சேரி அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. தனிமையில் இருந்து சிந்தித்து நாம் நேருவிடம் பெற்றது பொதுவுடைமை என்பதும் யாரும் அறியாததில்லை. அதேபோல் நாம் பெற்று பயன் பெரும் அனைத்து செயல்களும் அனைத்து கண்டுபிடிப்புகளும் அவர்அவர் தனிமையில் இருந்து பெற்ற உயர்வுகளே. தாமதமானாலும் தனிமை நல்ல உயர்வைத்தரும். காரணம் என்ன? நம்மோடு அப்போது இறைவன் இருப்பதுவே.

அவனே அதுவாய் நின்று உணர்த்துகிறான். அவனே அதுவாய் ஆகிவிடுகிறான். அவனே அதுவாய் வெளிப்படுகிறான். அவன் வெளிவர ஒருவனின் தனிமை தேவைப்படுகிறது. அதையும் அவனே தீர்மானிக்கின்றான். எவ்வாறு கருவில் இருக்கும் நம்மோடு அவன் இருந்தானோ அதுபோல. ஏவ்வாறு நாம் உயர்வாகும் போது நம் தனிமையில் உடன் இருந்து அதனை உருவகித்தானோ அது போல். தனிமையே இறைவன் நம்மோடு இருக்கும் தருணம். தனிமை அருளார்களின் கோயில். தனிமையே இறைவனின் திருவடி. ஆகவே தனிமையில் நம் எண்ணம் அவனது திருவடியின் மேல் இருக்கவேண்டும் அப்போது அவன் வருவதை நாம் உணர முடியும். அவனை அறிய முடியும். அவனோடு உறவாடும் முத்தி நிலை

பெற முடியும். மாணிக்கவாசக பெருமானின் திருவாசக தேனிலே ஒரு துளி

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்தெவ்வ.□ கரைகாட்டி ஆட்கொண்டாய்- (சுட்டறுத்தல்-7ம் பாடல்)

69. திருவடி

இதனை எண்ணும் முன் இதனை பற்றி எழுதுவதற்கு எமக்கு தகுதி இருக்கின்றதா என்பதையே யோசித்தோம். அவன் திருவடி எண்ணுவதே சிறப்பு என்று இருக்கின்றவர்களின் நடுவே நமக்கு ஏது குறை என்ற தைரியம் பிறந்ததினால் இதனை பற்றி சிந்திக்கலாயினோம். தவறு உண்டென்னில் அடியேனை பொறுத்தருள்க. பொருளில் குற்றமில்லாது எனை எம்பெருமான் உடன் இருந்து காக்கட்டும். காரணம் அது அளப்பறியது. அறிதியிட்டு கூறமுடியாதது. முயற்சி நிச்சயம் தோல்வியில் முடியும். இருப்பினும் முயற்சியே அதன் தொடக்கமாய் வைத்தமையால் அவன் அருளாலே அது பெறப்பட வேண்டும் என்பதினால் முனைய தொடங்கினோம்.

எப்புராணத்தை புரட்டினாலும் இதிகாசத்தை அலசினாலும் இலக்கியத்தில் மூழ்கினாலும் காவியங்களில் கரைகண்டாலும் இறைவன் திருவடி அடி என்று ஒருமையில் சொல்லப்படுகின்றது. காரணம் அவன் ஒருவனாய் இருக்கின்றான் என்பதினாலா அல்லது அவன் ஒருவனே என்பதினாலா அல்லது இதனை சிந்திக்கும் மனம் ஒன்றுதான் என்பதாலா அல்லது ஒருவனாலேயே அது சிந்திக்கப்படும் என்பதாலா அல்லது ஒருவழியாய் சிந்தனை இருந்தால் பெறலாம் என்பதாலா. நீண்டு கொண்டே போகின்றது. ஆனால் அதற்க்கு முன் நமக்கு எழும் கேள்வி இறைவனுக்கு அடி உண்டா? தெரிய வில்லை. இருக்க வாய்பில்லை. காரணம் அவன் அருவமானவன். ஆனால் உருவமானவனாய் உள்ள போது உண்டா? தெரியவில்லை. உள்ளது என்றால் எல்லா உருவங்களின் அடியும் ஒரே மாதிரி அல்லவா இருக்கவேண்டும். அப்படி இல்லையே? என்ன செய்வது?

இக்கட்டான நிலை. எதை வைத்து இதனை நிலைப்படுத்துவது? எதனைச் சொல்லி இதை புரியவைப்பது.

ஒருவழியாக யோசிக்க தோன்றுகிறது. அடி இருப்பதாய் உருவகித்து அதன் பண்பை அதன் குணத்தை அறிந்தோமானால் பதில் பெற வாய்பிருக்கின்றது. அடி என்பது உருவமாக பாதத்தை

சொல்லுவதாய் இருக்கின்றது. வேறு பொருளும் உண்டு. அது வேறுவிதமாக போனால் கிடைக்கும் பலனை சொல்லுவதாய் உள்ளது. அப்பாதம் பாதகமான செயலை செய்யும் போது வன்மையாகவும் சாதகமான செயலை செய்கின்ற போது மென்மையான தன்மை உள்ளதாய் இருக்கின்றது. பசு குதிரை போன்றவற்றின் பாதம் வன்மையாயும் பூனை நாய் போன்றவற்றின் பாதம் மென்மையாயும் உள்ளது. அது அதன் பயனுக்கு தகுந்தாற் போல் உள்ளது. அது போல இறைவன் நம்மை பயன்படுத்த பணிகொள்ள வருகின்ற போது நம் தன்மைக்கேற்றவாறு வருவதற்கு வாய்பிருக்கின்றது. அவரது பாதம் நம்முடைய தன்மையை பொறுத்தே அறியப்படுகிறது.

எவ்வெவர் தன்மையும் அவ்வயப்படுத்தி-

என்று திருவாசகத்தில் ஒரு வரி இருக்கின்றது. ஆக இறைவனுடைய திருவடி நம்மாலே உணரத்தான் முடியுமே அன்றி அறியப்படாது. அவ்வுணர்வும் நம் தன்மையைப் பொறுத்து அமைகின்றது. அத்தன்மை நம்முடைய குணத்தை பொறுத்து அமைகிறது. அக்குணமும் அவன் அருளாலே மாற்றி அமைப்படுகிறது. அதுவும் அவன் அருள் செய்தால் மட்டுமே. அத்தருணத்தில் அவன் அருளும் பதம் எதனை நமக்கு அருளுகின்றது என்பதே நமக்கு அவன் தரும் நிலை. அத்திருவடி நம்மேல் ஊன்றும் பொருட்டு அவன் தான் தீண்டும் பாகத்தை தகுதியாக்கிய பின் தீண்டுகின்றான். அவன் திருவடி எத்தன்மையானது என்பது நமக்கு நடந்தேறும் எதிர்பாரா செயலே சாட்சி. நாம் அனுபவிக்கும் அனுபவங்களே பாடம். நாம் அதனால் பெறும் பயனே அவன் அருள்.

அவன் திருவடி தீண்ட குணம்மாறும். கல்லின் தின்மை கரைந்து திருநாவுக்கர பெருமானை கரையில் சேர்த்ததை போல. கொண்ட கொள்கையும் மாறும். நாத்தீகனாய் இருந்தவன் ஆத்தீகனாய் அவன் அடிமையாய் ஆனதைப்போல. நிலைமாறும் நின்ற புகழும் ஒழியும். கூன்பாண்டியன் நிலை போல. மனம் மாறும் மற்றவையெல்லாம் ஒழியும். மாணிக்கவாசக பெருமானுக்கானதைப் போல. பற்றின் தன்மை பறிபோகும். பட்டினத்தார் போல. செயல் மறந்து போகும். சேந்தனாருக்கு ஆனதைப்போல. பேச்சு குறைந்து போகும். ரமண மகரிசி போல. வயது திரிந்து போகும். காரைக்கால் அம்மைக்கு ஆனதைப்போல. நின்னவு ஓடுங்கிப் போகும். திலகவதி அம்மைக்கு ஆனதைப்போல். ஒருதிருவடியில் இவ்வளவு செயல். ஆனால்

இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்

-என்று இரண்டு திருவடிகளை ஒருதிருவடியாய் தன் தலையில் பெற்ற மாணிக்கவாசகப் பெருமானாரின் திருவாசகத்தேன் அவன் பருகித்தான் மயங்கினான். தன் திருவடியை எடுக்க மறந்தான். நமக்கு?

70. நெருக்கம்:

நெருங்கி இருத்தல் என்று பொருள் ஆகின்றது. அதாவது உடலால் நோக்கினால் அருகில் இருப்பதாயும் உயிரின் வழியாய் உணர்ந்தால் மனம் இசைந்து இருப்பதாயும் சொல்லலாம். இடைவெளி குறைவாக இருப்பதாகவும் கொள்ளலாம். அதன் பயன் அதிகம் உண்டு. எதை நெருங்கி இருக்கின்றோமோ அதைப்பொருத்தே அது அறியப்படுகிறது. அதற்கு கிடைக்கும் எல்லாவற்றிலும் நெருங்கி இருப்பதனால் கிடைக்கின்றது. நெருங்கிய நண்பர் நெருங்கிய சொந்தம் பக்கத்து வீடு இப்படி பலவிதமாய் இருக்கின்றது. அதன் அதன் நெருக்கத்தை போன்று அதன் பலன் நாம் பெறுவதாய் இருக்கின்றது. இந்த நெருக்கம் எவ்வாறு ஆகின்றது?. யாராவது செய்கின்றார்களா? இது எவ்வாறு செய்யப்படுகின்றது? இதுவே நம் சிந்தனையின் வழியாகும். சிந்தித்தால் பெறும் இன்பம் அளப்பறியாதது. காரணம் அது எங்கிருந்து பெறப்படுகிறது என்பதே முக்கியம்.

நாம் இவ்வுலகத்தில் உழல வரும் பொழுது நமக்கு மிக நெருக்கமாக வைக்கப்பட்டவர்கள் தாய் தந்தை உடன்பிறந்தோர் உற்றார் உறவினர்கள். குழந்தையாய் இருக்கின்ற போது இது உணரப்படுவதில்லை காரணம் நாம் எடுப்பார் கைப்பிள்ளையாய் இருக்கின்றோம். நாம் நெருக்கமாய் வைக்கப்படுகின்றோம் நம் பாதுகாப்பிற்காக. நமக்கு உலக அனுபவங்கள் தெரிய வரும் போது அந்த நெருக்கம் தரம் பிரிக்கப்பட்டு இடைவெளி குறைந்தும் அதிகமாயும் சென்று விடுகிறது. பலவாக இருந்த உறவு சிறிய அளவில் நின்று போகின்றது. ஒரு நேரத்தில் எல்லா உறவுகளையும் இழந்ததை போன்று உணருகின்றோம். வாழ்வு அர்த்தமற்றதைப் போன்று எண்ணுகிறோம். வெற்றிடம் ஒன்று உண்டானதைப் போன்று உணர்கிறோம். ஏன் இந்த நிலை ? இது உண்மைதானா? இது தொடருமா?

Koviloor Digital Library

இல்லை.

நம்மை ஒருவன் நெருக்கத்தில் வைத்திருந்தான். அனுபவங்கள் பெற்று வரட்டுமே என்று அவனே சற்று தள்ளி நின்றான். கொண்டானா என்று நின்று பார்த்துக்கொண்டே இருக்கின்றான். பெற்றால் இன்புறுகிறான். இல்லையேல் திரும்ப ஒரு அனுபவம் தருகிறான். ஆனால் விட்டு பிரிந்தானில்லை. அவன் தரும் அனுபவம் பெறப்படும் வரையில் அவன் விடுவதும் இல்லை. அவன் அருகில் இல்லாமலும் இல்லை. யாரும் இல்லாது யாரையும் தெரியாது பசிக்கின்ற போது அம்மே என்று அழுதால் பால் கொடுக்க அருகில் இருக்கின்றான். நாம் அடையாளம் தெரிந்த பிறகு அவனை அழைக்க மறந்து விட்டதால், அவன் அருகில் இல்லாமல் போய்விடவில்லை. எந்நேரமும் நம் சிந்தனையாய் இருந்து கொண்டே இருக்கிறான். நாம் நெருக்கமாக இல்லா விட்டாலும் நாம் உறவு என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும் நாம் பழைய நெருக்கத்தை மறந்து விட்டாலும் அவன் மறப்பதில்லை. யாரவன்? இவனுக்கென்ன இவ்வளவு அக்கறை?

அவனே இறைவன்.

நம்மோடு நெருங்கி இருப்பவன் அவன். தாயாய் தந்தையாய் சேயாய் உடனாய் வேறாய் இருக்கின்றவன். நாம் தான் அவன் தந்த அனுபவத்தின் ருசியில் அவனை நினையாது அவனுக்கு துரோகம் இழைத்து விட்டோம். அவனுடைய நெருக்கத்தை குறைத்துக்கொண்டு மிக நீண்ட தூரம் விலகி நிற்கின்றோம். அவன் மற்றவருக்கு தரும் அனுபவத்தை பார்த்து பொறாமை படுகின்றோம். அவன் அருகில் இருக்கும் போது நமக்கிருந்த வசதியை நாம் நினைத்து பார்க்க வேண்டும். அழும் போது பாலும் உடல் சோம்பலில் தோளும் தூங்க மென்மையான நெஞ்சும் சுமக்க வன்மையான தோளும் உடைய தாய் தந்தையை கொடுத்து நம்மை பார்த்துக் கொண்டனே. ஆதனை விட்டு விலகும் போது உடன் இருந்து உண்மைகள் பலவற்றை உணர்த்தினானே. அதனை தாண்டி விலகி வரும் போது ஒரு உயிரோடு இணைய வைத்து உதவினானே. அதில் அவன் உதவிகள் எத்தனை எத்தனை. அப்போதும் அறிந்து கொண்டோமா? இல்லையே. ஆனாலும் அவன் விடுவதாய் இல்லை. இன்னொரு உயிரின் மூலம் அதை உணர்த்திப் பார்த்தானே. அப்போதும் நாம் உணர எண்ணவில்லை. வேறு வழியே இல்லை என்று கொடுத்ததையெல்லாம் பிரித்தெடுத்தான். அவன் பின்னிய வலைதானே. பிரிக்கும் போது அதன் வலி தெரிய அப்போது தான் அவனை நினைக்க நமக்கு தோன்றுகிறது. வலியின் தாக்கம் பொறுக்க

Koviloor Digital Library

முடியாததால் அவனை போற்றுகின்றோம் தூற்றுகின்றோம். அவன் விடுவதாயில்லை. தன் பணியை செவ்வனே செய்து முடிக்கின்றான் நம் அருகில் இருந்து. அவனின் பொறுப்பு மிகப்பெரியது. அவனது நெருக்கம் சுகமானது. அவனது நெருக்கம் வேண்டப் படவேண்டியது. அவனது நெருக்கம் வினையை அகற்ற கூடியது. அவனது நெருக்கம் நாம் மனமுவந்து பெற்றுக் கொள்ள வேண்டியது. பெற்றவர்கள் பெருமை அடைகின்றனர். நாமும் அவன் நெருக்கத்தை பெற முயலுவோமே.

71. சுடர்:

தீபத்தின் முக்கியமான பாகம். மொத்த வடிவமே தாமரை மொட்டு போல. தாமரையும் சுடரும் பக்தி நெறியில் மிக முக்கியமான இடத்தை பெற்று இருக்கின்றன. இறைவழிபாட்டில் இவை இரண்டும் தலையாய இடத்தில் இருக்கின்றன. சுடர் பொதுவாக மஞ்சள் நிறத்திலேதான் ஒளிரும். நாம் எந்த எண்ணெய்யை ஊற்றி செய்வதாய் இருந்தாலும் இந்நிறம் மாறுவதில்லை. காரணம் என்ன? விளக்கின் நிழல் வடிவமே சிவலிங்கம். மனிதனுக்கு அறிவு தெரிந்து மொழி இல்லாத காலத்தில் குறியீடாய் வரையப்பட்டது தான் லிங்க வடிவம். அதில் சுடர்பகுதியாய் இருப்பது லிங்கத்தின் தலை பாகம் அதாவது சிவபாகமாகும். அது திருநீற்றின் நிறத்தில் இருக்கின்றது. நமக்கு மஞ்சள் போல் தெரிகின்றது. குற்றமுள்ளதாய் படுகின்றது. வெண்ணிறமாய் உள்ளது என்றே சொல்லலாம். கோவிலில் தீபத்தை காட்டும் போது நாம் கண்களில் ஒற்றிக் கொள்வது இச்சுடரைத்தான். இரண்டு கையாலும் இருபக்கமும் அணைத்து கண்களில் ஒற்றிக் கொள்வோம். ஆனால் அதன் உச்சியை தொட்டவர் எவரும் அல்லை. எவரும் தொடுவதும் இல்லை. காரணம் அங்குதான் அதிக சூடு இருக்கின்றது. அத்தோடு அது சிவபாகமாய் இருக்கின்றதினால் முடியை காண அணுக இயலாது என்ற தத்துவமும் உள்ளது.

சுடரை மேலும் உன்னித்து கவனித்தால் மேலும் பல செய்திகள் தெரியவரும். அதுவே மூன்று பாகமாய் உள்ளது. ஒன்று கருத்த அடிபாகம் நீலநிற நடுபாகம் வெண்ணிற மேல் பாகம். லிங்கத்தை போன்று இதில் கருத்த அடிபாகமாய் பிரம்மமும் நீல நடுவாய் விஷ்ணுவும் வெண்ணீற்று மேலாய் சிவபெருமானை நினைவூட்டுதாய் இருக்கின்றது.

இச்சுடரின் வெளித்தன்மை இவ்வாறெல்லாம் பெறப்படுகிறது. இறைவழிபாட்டில் இதன் முக்கியமென்ன? இறைவனிடத்தில் அவர் அருகில் சென்று வந்த ஒன்று அதல்லாமல் பௌதீகமாய் அது இறையருளை பெற்றுத்தரும் கருவியாய் இருக்கின்றது. எப்படி எனில் மின் பிம்பமாய் பெரும் தூண் போல் நிற்கும் ஒலிஅதிர்வின் மொத்த வடிவம் கருவறையில் நிலைத்திருக்கின்றது. அப்பிம்பத்தில் சுடரின் அனல் உள்புகந்து அதில் ஒரு மின் அதிர்வை உண்டாக்கி அதனை தன்னை சுற்றியுள்ள அனல் பிரவாகத்தில் எடுத்து வருகிறது. அதனை நாம் ஒற்றிக் கொள்ளும் போது அந்த அனல் சக்தியே நம் உடலில்பாய்கின்றது. கண்ணின் வழியே மிக எளிதாய் சென்று விடுகிறது. ஐம்புலன்களில் மிக மிருதுவானது கண். உடன் மூளைக்கு செலுத்துவதும் கண். அதன் வழியே நமக்கு அந்த அதிர்வுகள் அருளாய் உள் செல்லுகின்றது. இதுவே இறையருளை நாம் தீப சுடரில் பெரும் வழியாகும். இது ரகசியமாக நடந்து கொண்டுள்ளது. இறைவன் அழல் வடிவாய் உள்ளவன். இறைவன் அழித்தல் தொழிலின் இணையான பிம்பமாய் இது அறிவுறுத்துகின்றது. அதனாலேயே வள்ளலார் பெருமானும்

அருட் பெரும் சோதி அருட் பெரும் சோதி
என்றார் - வள்ளலார்

சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே என்றார்-
மாணிக்க வாசகபெருந்தகை

துண்டணைய சோதிகண்டாய் -
என்றார் திருநாவுக்கரசு பெருமான்

கற்பனை கடந்த சோதி கருணையே வடிவமாகி-
என்றார் சேக்கிழப் பெருமான்

இப்பெருமகனாரெல்லாம் அத்தீபத்தை அச்சுடரை இறைவனாய் உருவகித்தார்கள். ஒளி கொடுப்பதாயும் உள்ள அழுக்கை கெடுப்பதாயும் இருளை நீக்குவதாயும் எவ்வித எதிர் நோக்குதல் இன்றி தனக்கென்று உள்ளதை தெளிவாய் செய்யும் சுடர் இறைவனுக்கு நிகரானதாய் போற்றுதலில் தவறில்லை என்பது ஆன்மீக வாதிகளின் அருதியிட்ட முடிவு.

சுடரில்லா தீபம, சுடரில்லா அறிவு, சுடரில்லா சூரியன் நம்ப முடியாதவைகள். அருள் இல்லா இறைவன் இல்லவே இல்லை. அவனை போற்றும் நாள் நாம் ஏற்றும் சுடரின் நாளெல்லாம். வரும் தீபஒளியும் நம்மின் கார்த்திகை தீபம் வடக்கே போய் வேறு பெயரிட்டு வந்திருக்கின்றது. அமாவாசை இருள் அகல தீபம் ஏற்றுவதைப்போன்று இறைவன் அத்திருநாளில் நம்முடன் இருந்து எல்லா வளமும் நலமுடனே அருளட்டும். அதற்காக தினம் ஏற்றுவோம் தீபம்.

72. அமுது:

நாம் உண்ணும் உணவு என்று எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். அமுது என்றால் அது சுவையானது என்றும் பல பொருட்கள் கலந்ததாகவும் நினைத்து உண்ணுகின்றோம். சிறு குழந்தைக்கு கூட அமுதாய் பல விதங்களில் செய்து கொடுத்து அமுது செய்து விட்டதாய் மகிழ்கிறோம். நாம் ஏற்பதுதான் அமுதா? அப்படியானால் பாற்கடலை கடைந்த போது அமுது வந்ததாய் சொன்னார்களே அது என்ன? ஒரு சிறிய குழந்தை வெண்ணெய்யை அள்ளி அள்ளி தின்றதே அது என்ன? அது எத்தன்மை உடையது? எப்படி இருக்கும்? எங்கிருந்து கிடைக்கும்? உட்பொருள் வேறு என்பதை நாம் புரிந்து கொள்ள சிறிது நேரமாகும். பரவாயில்லையா? சரி தயாராகுங்கள்.

இந்த உயிரானது தனக்கான உடலை பெற்று இங்கு முளைக்க ஆரம்பிக்கின்ற போது இறைவன் தருவது அமுது. அந்த உடல் தன் மெய்யால் பொய்யில் பொசுங்கி போகாது இருக்க தருகின்ற உணவு அமுது. அவ்வாறு பொய்யில் உழன்று அது வந்த இடத்திற்கு போக முடியாது ஆக்கிக் கொண்டவை தான் அமுது. இறைவனை மனதால் நினைத்து மனதால் தேற்றி இரவும் பகலென்று எண்ணாது துஞ்சியும் துஞ்சாதும் தன்னை காக்க அவணை அணுகும் போது அவன் எடுக்கின்றானே அது அமுது. புகமுடியும் நேரத்தில் புகச்செய்கின்றானே அது அமுது. என்ன இது இத்தனையா? வியப்பாய் இருக்கின்றது தானே. விந்தையில்லை உண்மை. விரித்து நோக்கின் புரியும். காரணம் இறைவன் விரிந்து பரந்து இருப்பவன். விரிப்போமே.

நஞ்சே அமுதாய் நயந்தாய் போற்றி- மாணிக்கவாசகர் மணிவாசகம்.

நஞ்சுண்ட கண்டன் தன்னை- திருநாவுக்கரசர் வாக்கு.

Koviloor Digital Library

ஒடுநன் கலனாக உண்பலிக்கு உழல்வானை- சுந்தரர் வாய்மொழி.

ஆல்அமுது உண்ட மிடற்று எம் ஆலவாயான்- இது பிள்ளையின் கிள்ளை மொழி.

இதெல்லாம் என்ன? அப்படியானால் நாம் படைக்கும் பொருளை அவன் ஏற்றுக்கொள்ளவில்லையா? அப்படியானால் அமுது என்பது யாது?

இறைவன் இனிமையானவன். அன்பமானவன். அன்புமிக உள்ளவன். ஆனந்தமானவன். அனைவருக்கும் பொதுவானவன். அனைவரையும் காண்பவன். காணுதற்கு எளியன். கள்வன். அழகன். அமுதன்.

என்ன இது திடீரென்று ஒரே போற்றுதலாய் இருக்கின்றது என்று எண்ண வேண்டாம். அவனை போற்றுதலின்றி அவன் நமக்கு அமுது தர இயலாது. உதாரணமாக ஒருவருக்கு உடல்நிலையில் கோளாறு. வைத்தியர் சரிசெய்கின்றார். அந்த வேதனை அகன்ற பின் நம் உடம்பு எவ்வளவு மகிழ்கிறது. அது அவன் தரும் அமுது. பசியின் வேதனை. நோகின்றோம். அவன் கருணையால் யாரோ முகம் பராதவர் அன்னமிட எவ்வளவு இன்புறுகிறோம். அந்த இன்பம் அவன் தரும் அமுது. வீட்டில் பிரச்சனை. கலங்குகின்றோம். புலம்புகின்றோம். நொந்து வெந்து போகின்றோம். அவன் கருணையால் தருணத்தில் நிலமை சீரடைய நம் மனம்பெரும் நிம்மதியே அமுது.

ஆனால் நீக்கப்பட்டவையலெல்லாம் எங்கு சென்றன? ஏன்னவானது? ஏன்று நாம் யோசித்திருக்கின்றோமா? இல்லையே. ஆக்கப்பட்டவை ஒரு இடத்தை சென்று அடையத்தானே வேண்டும். வெளியில் வந்தவை ஒரு கூட்டில் அடையத்தானே வேண்டும். புறப்பட்டவை அதன் இடத்தை அடையத்தானே வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் பதில் இறைவனே. ஏல்லாவற்றையும் நமக்காக எல்லா நஞ்சையும் தானே உண்டு தன் கண்டத்தை கருப்பாக்கி நமக்கு அவன் தருவதில் இல்லை அமுதம். அந்த நஞ்சாய் இந்த உடலின் பொய்யான இயக்கத்தில் நாம் செய்யும் அனைத்து அழுக்கை எடுத்து நமக்குத் தருகிறானே அது அமுதம். தாய் தன் குழந்தைக்காக மருந்து உண்ணுவதைப் போல. நிலம் தன்னுள் எல்லாவற்றையும் தாங்குவதைப் போல. நீர் சாக்கடையை தன்னுள் வாங்கிக் கொள்வதைப் போல. தீ தன்னுள் எல்லாவற்றையும் பெற்று

Koviloor Digital Library

சுத்தமாக்கி சாம்பல் ஆக்குவதைப்போல. காற்று எல்லா கெட்ட நாற்றத்தை தன்னுள் கொள்வதைப் போல. வானம் என்நாளும் நமக்கு நன்மை செய்வதைப் போல. நமக்காக நமக்காகவே அவன் நஞ்சை உண்ணுகிறான் அந்த உயிர் உண்ணும் பெம்மான் பஞ்ச பூதங்களின் வடிவாய். நாம் முடிந்த அளவிற்கு நஞ்சு தராது இருந்தால் பொய்யில் புரளாது அவனை நினைத்திருந்தால் எப்போதும் அந்த அமுத நிலை பெறலாம் தானே.

73. மலை:

இரண்டு பொருள் உள்ளதாய் இருக்கின்றது. ஒன்று ஆச்சரியத்தில் வியந்து நிற்பது மற்றொன்று உயரமான இடத்தை குறிப்பது. இதில் இரண்டும் பெரியது தான். எவ்வாறெனில் காணாததை கண்ட போது மலைத்தலும் கண்டது எதிர்பாராத அளவில் இருந்தால் மலைத்தலும் உண்டு. மலைகளில் சிறந்தது எது என்று நாம் இங்கே ஆராய வரவில்லை. ஆனால் மலை என்றால் கைலாயம் என்பது சைவர்களுக்கும் திருப்பதி வைணவர்களுக்கும் உள்ளதாய் வழங்கி வந்திருக்கின்றது. ஆனால் இவையெல்லாம் உயரமாய் இருப்பதானால் பேர் பெற்றனவா அல்லது வேறு காரணங்களால் இப்பெயர் விளங்ககின்றதா என்று அறிதலே நம்முடைய நோக்கமாகும்.

பொதுவாக மலைகள் பஞ்சபூதங்களின் வடிவாய் இருக்கின்றது. எல்லா மலைகளும் இக்குணத்தை கொண்டவையாக இருக்கின்றன. அதனாலேயே சித்தர்களும் ரிசிகளும் மலைமிகுந்த காடுகளில் தங்கள் வாழ்வை அமைத்து இறைவனை கண்டனர் அக்காரணங்களாலும் மலைகள் பெயர் விளங்கின என்றும் கொள்ளலாம். இறைவன் வடிவமே அது என்று அதனை சுற்றுவாரும் உண்டு. இப்பொழுது அது அதிகமாகிவிட்டது. காரணம் அண்ணாமலை. பழநி, மலை சதுரகிரி, பச்சை மலை, பவளமலை, சென்னிமலை, பிரான் மலை, அய்யர்மலை, வெள்ளியங்கிரி, சுருளிமலை, குகன் மலை, குடுமியான் மலை, சபரிமலை, கொள்ளிமலை என்பன நம் பகுதியில் நம்மக்கள் வழிபடும் மலையாக இருக்கின்றது. மலையை வணங்க வேண்டுமா என்ன? எதற்கு? அப்படி என்ன அதிலே இருக்கின்றது.

முதலில் அது பஞ்சபூதவடிவம் என்பதுவே மிக முக்கியம். இரண்டாவது அதன் வயது. மூன்றாவது அதன் தன்மை. கடினமானதா?

மென்மையானதா? நான்காவது அதன் பலன். அதனால் பலன். ஐந்தாவது அது இருக்கும் இடத்தின் சக்தி. ஆறாவது அதன் வடிவம். இப்படி நிறைய இருக்கின்றது சொல்லுவதற்கு.

எந்த வகையில் பார்த்தாலும் நமக்கு பலன் தருவதாய் இருக்கின்றது. இவை தோன்றும் போது இருந்தவைகளை அழித்துவிட்டுதான் தோன்றியிருக்கின்றது. பூமிக்கு அடியில் உள்ள நெருப்பு குளம்பின் குளிர்ந்த நிலையே மலையாகின்றது. அப்போது மூழ்கியவை கனிமங்களாய் நமக்கு பின் தரப்படுகின்றது. அதனை யாரும் உருவாக்க இயலாது. குனிமங்கள் நமக்கு வளங்களை தருவதாய் இருக்கின்றது. ஆக நின்றாலும் குறைந்தாலும் நமக்கு நன்மை செய்வதாயே மலைகள் இருக்கின்றன. இறைவனின் வடிவும் இதுதான். அதனாலேயே போற்றுகின்றோம். எது அதிகமாக இருந்தாலும் மலையைத்தான் ஒப்பிட்டு காட்டுகின்றோம். இறைவனின் அருளும் அதுபோலத்தான். அவனுடைய அருளில் ஏற்றத்தாழவு இல்லை. அவனுடைய அருளில் மறைமுகம் இல்லை. அவுனுடைய அருளில் குறைவில்லை.

மலையாக நின்று நமக்கு அருள் செய்யும் அவன் அதனின் சிறிதாய் விக்கிரகமாய் எல்லா ஆலையங்களிலும் எழுந்து நமக்கு அருளுகின்றான். அவனையும் நாம் போற்றி வணங்குகின்றோம். அவனுக்கு நன்றி பாராட்டுமுகத்தான் பூசைகளும் வழிபாடுகளும் செய்கின்றோம்.

நமக்கு அருகிலே இருக்கும் நான்கு மலைக்கோயில்கள். திருஎறும்பியூரரன்மலை, திருதாயுமானர் மலை, திருவாட்போக்கிநாதர் மலை, திருஈங்கோயில் மலை, இவை அருளாளர்களால் பாடல் பெற்ற தலமும் ஆகும்.

நுமக்கு அருகில் இருந்து நம்மையெல்லாம் இணைத்து நம்மை வாழவைத்துக் கொண்டு இருக்கின்ற திருஎறும்பியூரனின் மலை தற்போது பொலிவிழந்து காணுகின்றது. அதனை போற்றுவதும் அவன் பெருமையை சொல்லி இன்புறுவது மட்டும் நம் கடமை ஆகிவிடாது. அம்மலையை காப்பாற்றி அடுத்த தலை முறைக்கு பரிசாக தருவதும் நம் கடமையாகின்றது. அதனாலே நம் அன்பர்களின் முயற்சியோடு மற்ற ஆன்மீக அன்பர்களின் உதவியோடு சென்ற ஞாயிறுறன்று இறையனாரின் கருவறையை சுற்றி இருக்கின்ற பகுதி சுத்தம் செய்யப்பட்டது. இன்னும் பாதி வேலை செய்ய வேண்டி இருக்கின்றது. அதனை வரும் ஞாயிறன்று செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே அதில் அன்பர்கள் அனைவரும் சிறப்பாய் கலந்து இறைவனின்

Koviloor Digital Library

கருணையைப் பெருமாறு அழைக்கின்றோம். அம்மலையை மீட்டு எடுக்க பலவிதமாய் திட்டமிடப்பட்டுள்ளது. அதனை ஒரு பெரும் பொக்கிசமாய் மாற்ற எண்ணம் கொண்ட அன்பர்கள் தங்களுக்கு தோன்றும் எண்ணத்தையும் மற்றோரின் கருத்தையும் கேட்டு தெரிவிக்க வேண்டுகிறோம். இம்மலையின் சுற்றுப்புறம் தூய்மை செய்ய முயன்று கொண்டு இருக்கின்றோம் அவன் அருளாலே அவன் தாள் பணிந்து. முன் நின்று நம்மை வழி நடத்தும் அவன் அதையும் செய்வான் என்பது திணணம். ஆகவே அன்பர்கள் இத்திருப்பணியில் முன்பு போல் இதிலும் உடன் இருந்து இறைவனின் திரு அருளை பெற வேண்டுகின்றோம்.

மன்றத்தின் முன்னோடிகள் அந்தந்த பகுதியில் நன்கொடைகளையும் மாத சந்தாவையும் தயவு கூர்ந்து பெற்று சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

74. பொருள்:

என்ன விளக்கம் சொல்வது. எதைப்பற்றி சிந்தித்து இதை விளக்குவது. ஒரு பொருளற்ற செயலாய் முடியுமா? என்ற சந்தேகம் எழவே செய்கின்றது. ஆக பொருளற்ற என்று தொடங்கும் போது அது அதன் விளக்கத்தை விரிப்பதாய் வருகின்றது. சூசகமாக சொல்லும் சொல்லின் உண்மை எது வென்று விளக்கும் ஒரு செயலாகவே இருக்கின்றது. இது அறியாது அதாவது ஒன்றின் விளக்கம் அறியாது புலம்புவாரும் பிதற்றுவாரும் இருக்கத்தானே செய்கிறார்கள். விளக்கப்பட்டால் மகிழ்வு கொள்கிறார்கள். பொருள் அறியப்பட்டதால் தெளிவு பெறுகிறார்கள். மனம் ஆனந்தப்படுகின்றார்கள். மனம் உயிர் சமபந்தப்பட்டதாய் உள்ளதால் உயிர் மகிழ்கிறது. உணர்வு புத்துயிர் பெறுகின்றது. அது உணர்வு சார்ந்த உயிர்பொருள். உடற்பொருள் என்று ஒன்றும் உண்டு. அதற்கும் அல்லாடுகின்றோம். நம் பிழைப்பே அல்லாட்டமாய் உள்ளது என்பது உண்மை. உயிரின் பொருளுக்கும் அலைதல் உடலின் பொருளுக்கும் அலைதல் நடந்து கொண்டே இருக்கின்றது. சில நேரங்களில் இரண்டும் சேர்ந்தும் சில நேரங்களில் தனித்தும் இருந்து செயல் செய்கின்றன. ஆக இவை இல்லை என்றால் வாழ்வு இயங்காது என்பது போல் ஆகின்றது.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை

Koviloor Digital Library

அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை

இது வள்ளுவ பெருந்தகையின் வாக்கு. அனைவரும் அறிந்த ஒன்று. ஆக அருள் என்பதும் ஒரு பொருளாய் ஆகின்றது. அதனால் அதனையும் நாம் தேடும் நிலையில் இருக்கின்றோம். உடல் பொருள் கிடைத்தல் எளிது. காரணம் அதை இறைவன் காட்டிவிட்டான். ஆனால் உயிர் பொருள்??? அதுவே மெய்பொருள். அதுவே ஒண்பொருள். அதுவே கிடைத்தற்க்கு அரிய பொருள். நாம் எப்பொருளை தேடவேண்டும் என்பதை முதலில் புரிந்து முடிவு செய்து கொள்ள வேண்டும். அதுவே சிறந்த வாழும் வழி.

நமக்கு பார்வையும் நமக்கு காட்டப்படவேண்டிய பொருளின் மேல் ஒளியும் காட்டுவது யார்? இறைவன். இல்லையா? அதே போல் அந்த ஒண்பொருளை உயிர் தேடும் அந்த ஞானப்பொருணை காட்டுவதும் அவனாலே மட்டும் முடியும். அதற்கு அவனின் அருள் வேண்டும். அவன் நம்மீது தன் பார்வையை திருப்ப வேண்டும். அந்த அருள் ஒளி அவன் அருள வேண்டும். அந்த ஒளியிலே அந்த ஒண்பொருளான இறைவனை அவன் காட்ட வேண்டும். அவனே தன்னை ஒரு பொருளாக காட்டினாலொழிய நம்மால் அவனை எவ்வாறு காண இயலும். காட்டுவானா? காட்டுவான். எப்பொழுது? நாம் அவன் அருளைப்பெறும் பொழுது. எப்படி? அவனையே நினைத்து உருகும் போது. அவனையே நம் மனமெல்லாம் நிறைக்கும் போது அவனே நாம் என எண்ணும் போது. நமக்குள் அவனை காணும் போது. நாமும் அவனும் ஒன்றாய் இருக்கும் போது. நம்மை அவன் ஏற்றுக் கொள்ளும் போது. நாம் நாமாக இல்லாத போது. நம்மை அவன் ஆள்கிறான் என்பதை உணரும் போது. அவனுடைய ஒளியில் நம்மை நமக்கு அவன் காட்டும் போது. அடேய் நீதான் நான் காட்டும் ஒண்பொருள் என்று உணர்த்துவதாய். என்னுள் இருந்து வந்தவன் நீ என்று நம்மை அவன் இணங்காட்டும் போது. இப்படி எத்தனையோ போதுகள்.

இது எதனால்?

இறைவனின் அருகாமையை உணர்தலினால். உணர்த்துதலை பெற்றுக் கொள்வதினால். பெற்றதை பேணி வளர்ப்பதனால். வளர்தலால் அவன் நம்முள் ஒளிர்தலால். ஏல்லாம் ஒரு சுழல் இயக்கமாய் உள்ளே இயங்கிகொண்டதான் இருக்கின்றது. அதனை நாம் இயக்க முனைவதில்லை. அந்த முனைப்பை பெறுவதும் இல்லை. அதனால் அதன் இணைப்பை பெறுவதும் இல்லை. அதனால்

மனம் வெறுமையாகி வேதனையுற்று சிதரடிக்கப்படுகிறோம். அது தாங்க முடியாததாய் நம்மேல் தாக்குகிறது.

ஆனால் அவன் அந்த பொருளை மெய்பொருளை நமக்கு காட்டுவனேயானால் அவையெல்லாம் அவன் முன்னே தவிடு பொடியாகிறது. சாம்பலாகின்றது. மனம் தூ நீறாய் வெண்ணீறாய் பால் போல் ஆகின்றது. அதற்கு அவன் உதவி தேவையாகின்றது. இதனையே எம்பெருமான் மாணிக்கவாசகர் தம் தேன் வரியாய்

பொய்யாய செல்வத்தே புக்கழிந்தி நாள் தோறும்
மெய்யாய் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட.....
பொருள் பற்றி செய்கின்ற பூசனைகள் போல் விளங்க.....
பொருளே தமியேன் புகலிடமே நின் புகழ்.....
என பல்வேறுவிதங்களாய் அள்ளி தெளிக்கின்றார்.

அனுபவப்பட்டவர் சொல்கின்றார் கேட்போமே.

75. நினைவு:

ஞாபகம் என்றும் சொல்லலாம். நமக்கு எப்போது நினைவு வந்தது என்று சொல்ல இயலுமா? அதே நினைவில்லை. என்ன அப்படித் தானே. விடுங்கள். கிடக்கட்டும். அது இப்போது கேள்வி இல்லை. நினைவு என்றால் நடந்ததை அசைபோடுதல் என்று வைத்துக் கொள்ளலாமா அல்லது அனுபவித்ததை மீண்டும் உணர்வாய் காண்பதா என்பதுதான் நம்முடைய இன்றைய சிந்தனை. தேவையில்லாத வேலை என்று எண்ணிவிடாதீர்கள். சிந்தித்தால் பெறுவது அளப்பறியாத ஒன்று.

தொடங்கும் முன் இதன் தொடக்கம் எங்கே என்று சிறிது ஆராயலாம். குழந்தையாய் பிறந்து குவா குவா என்று கத்தினோமே அந்த குவா குவா எதனை நினைந்து கத்தினோம். அல்லது தாயின் வயிற்றில் அது போல கத்தினோமா. யாருக்கும் கேட்காததினால் கத்தியது அறிய முடியாமல் போனதோ. அப்படி ஆனால் கத்த வேண்டும் என்ற நினைவு எப்படி வந்தது. ஏன் பிறந்த உடன் கத்த வில்லை என்றால் கிள்ளினார்கள். கிள்ளினாலும் ஏன் ம்மே என்று மூடிய வாயிலிருந்து ம் தோன்றி மே என்று நீண்டது. அதை எந்த ஞாபகத்தில் சொன்னோம். அது எங்கே ஒளிந்து இருந்தது. புரியவில்லை. சற்று உள் சென்று சிந்தித்தால் அதுவும் புரியும். அதற்கும் இறைவனின் துணைவேண்டும். ஏன் என்பது கடைசியில் புரியும்.

முன்னமே சொன்னதைப்போல் நம் மனம் மூன்று நிலைகளாய் மனம் புத்தி சித்தம் என்று இருக்கின்றது. சித்தமே மனத்தின் மூலம் வாங்கி புத்தியில் உரை செய்து சித்தத்தில் படியவைக்கின்றது என்று முன்னம் சொல்லியிருந்தோம். ஆக முதல் வார்த்தை சித்தத்தில் பதிவாகியிருந்தால் அன்றி அது நம் வாயில் இருந்து வருவதற்கு வாய்ப்பில்லை. ஆக அது நம் சித்தத்தில் பதிய வைத்ததும் அதனை நினைவு படுத்தியதும் யார்?

இறைவனே. ஏதற்கு இவருக்கு இந்த வேண்டாத வேலை அப்படியா? இல்லை. உயிர்கள் உய்ய வேண்டுமே. கண்ணை மூடிக்கொண்டு கருத்தினில் அவனையே எண்ணி சித்தத்தில் அவனையே நினைத்த வண்ணம் அல்லவா அன்னையின் கருவில் இருந்தோம். ஆகையால் அந்த நினைவு அறுந்து விடுமா? அதுதான் வெளியில் வந்த உடன் இந்த கத்தல். உள்ளிருக்கும் போது அருட்பால் கிடைத்துக்கொண்டே இருந்தது. கவலையில்லை. அவனை பற்றிய நினைவில்லை. வெளியில் வந்து கத்தினால் கிடைக்கிறது அன்னையின் பால். ஆக நம்முடைய நினைவு கத்துவதிலேயே போய் வேறு வேறு அனுபவங்கள் பெற்று அந்த நினைவுகளை முன் பெற்ற நினைவின் மேல் அழுத்தி அழுத்தி அது எழுந்து வருவதற்கு விடாமல் செய்து விட்டு இப்போது அந்த நினைவு வேண்டும் என்றால் அழுந்தி கிடப்பது எவ்வாறு எழுந்து வரும். அம்மா என்றால் எப்படி அந்த நினைவை இறைவன் மட்டும் வைத்துக் கொண்டு இருப்பார் என்று எதிர் பார்க்க முடியும். இருக்கின்ற மற்ற நினைவுகள் விலக வேண்டாமா? அவைகள் எல்லாம் வெளியேற வேண்டாமா? அப்போதுதானே நாம் நம் நினைவில் கூப்பிடும் பொழுது இவன் வருவான். எவ்வாறு அதைச்செய்வது. ஏப்படி அதைத்திரும்ப பெறுவது?

நாயேனை ஒருபொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்
நின்னை உள்ள வண்ணம்- இது அபிராம பட்டரின் அற்புத கணிப்பு

ஈசனே என் எம்மானே எந்தை பெருமான் என்பிறவி நாசனே
நான் யாதும் ஒன்றில்லாப் பொல்லா நாயான நீசனேனை
ஆண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே

தேசனே அம்பலவனே செய்வதொன்றும் அறியேனே.-இது மாணிக்க வாசகப்பெருமானின் புலம்பல்

இவர்களின் புலம்பலின் பொருள் என்ன? பலன் என்ன? இறைவனின் அருள் பெற்றவர்களாய் ஆனார்கள். தங்களின் நினைவெல்லாம் இறைவனாக தங்களின் செயலெல்லாம் இறைவனாக தங்கள் இயக்கமெல்லாம் இறைவனாக நினைத்ததினால் இன்பம் பெற்றார்கள். அது நிலைக்க அந்த நினைவில் வாழ ஆசைப்பட்டார்கள். பெற்றார்கள் அந்த பேறு. ஆனால் நம் நினைவு எதை நோக்கி செல்லுகிறது. ஏந்த நினைவிலே இருந்து இன்புற நம் மனம் எண்ண வைக்கின்றது. எப்படி இதில் இருந்து மீள்வது?

சித்தத்தை சிவன் பாலே வைத்தார்க்கும் அடியேன்- சுந்தரரின் சுந்தர வாக்கு

சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்- மாணிக்க வாசகர் மணிவாக்கு

உள்ளம் பெருங்கோயில்- திருமூல நாயனாரின் திருமந்திரம்.

நெஞ்சே நீ நினையாய் நிமிர்புன்சடை நின் மலனை- இது நாவுக்கரசர் வாக்கு

சித்தத்துள் தித்திக்கும் தேனே- திருமாளிகைத்தேவர் வாக்கு

மீண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்- இது சேந்தனாரின் அறை கூவல்.

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்- இது சேரமான் பெருமான் கூற்று.

இதற்கு மேல் வேறு என்னவேண்டும். சிந்தையெல்லாம் சிவமானால் நினைவும் அவனுடையது தானே.

76. சுவை:

இந்த சொல்லை சொல்லி முடிக்கும் முன் உடல், மனம், தான் பெற்ற சுவைகளை ஒரு வினாடியில் வெளிக்கொணர்ந்து போவதை நீங்கள் நிச்சயம் உணராமல் இருக்க முடியாது. காரணம் மனத்தின் பதிவில் அவை உணர்த்தும் உணர்வு. சுவை என்று பொருட்சொல்லும், வினைச்சொல்லும் உண்டு. இலக்கணம் என்று பயந்து விட வேண்டாம். ஒரு விளக்கத்திற்காக எடுத்தாண்டோம். பொருட்சொல்லலென்றால் அதன் தன்மையையும் வினைச்சொல் என்றால் அதன் உணர்வையும் வெளிப்படுத்துவதாய் உள்ளது. அதே நேரத்தில் அந்த இரண்டுக்கும் தொடர்பு உள்ளதையும் அது காட்டுகிறது. அதாவது ஒரு பொருளின் சுவையை சுவைத்து சுவைத்ததை சுவைத்தால் மட்டுமே உணரமுடியும் என்பதை

Koviloor Digital Library

செய்வதாய் இருக்கின்றது தான் இதில் பெருமை. இந்த சொல் மிகுந்த பொருள் நிறைந்தது என்பது புரிய வேண்டிய ஒன்று. தானே அதாய் இருந்து தன்னை வெளிப்படுத்தி தான் இருப்பதை உணர்த்துவதாய் இருக்கின்றது. மிகுந்த சக்தி வாய்ந்த வார்த்தை இல்லையா?

மேலும் பார்ப்போம் இது எங்கு கொண்டு விடுகிறது என்று. சுவை என்பது எல்லா பொருளுக்கும் உண்டு. சுவையில்லாத பொருளே இல்லை. அதே போல சுவையில்லாத உணர்வும் இல்லை. கவிதையின் சுவை காதலின் சுவை கற்பனையின் சுவை இப்படி பலபல. ஆக பொருளாயும் உணர்வாயும் இரண்டுவிதமாய் இது நம்மை இயக்குகிறது. அதே நேரத்தில் இதன் தன்மை என்று ஆராய்ந்தால் முன்னம் சுவைத்து அறிந்திராமல் ஒன்றின் சுவை அறிய முடியாது தானே. அதாவது முன்பு நாம் அனுபவித்ததாய் இருக்க வேண்டும். வாயில் மற்றவர் சொல்லி அறிய முடியாத அறிவு இது. நாமே அனபவித்தால் அன்றி அறிய முடியாது. இது உயிருக்கு உயிர் வேறுபாடு உண்டு உணர்வாய் இருந்தால். பொருளாய் எல்லாருக்கும் பொதுவாய் இருக்கின்றது. ஆக பொருளில் பொதுவாயும் உணர்வில் வேறாயும் இருக்கின்றதும் சிந்தித்தால் புலப்படுகிறது.

மேலும் போவோம். பொதுவாய் இருப்பது உடலுக்கும் உணர்வாய் இருப்பது உயிருக்கும் சுவை அளிப்பதாய் இருப்பது அறிய முடிகிறது. அதாவது ஒரே நேரத்தில் இச்சுவையானது உடலுக்கு பயன் பட்டு உயிருக்கு உணர்த்துவதான வேலையையும் இரட்டையாக இருந்து செய்கின்றது. நாம் ஒரு செயலை செய்ய அதன் தன்மையும் உணர்வுமாய் அது செயல்பட்டு காட்டுகின்றது. அது தன் முதல் சுவையோடு ஒப்பிட்டு அதனை தரம் பிரிக்கிறது. அத்தரத்தின் செயலால் உணர்வு மேன்மை அடைவதோ கீழ்மை அடைவதோ நடக்கின்றது. ஆக தனக்கு ஏற்கும் சுவையை மனத்தின் வழியே உயிரும் நோயின் வழியே உடலும் கண்டு கொள்கின்றன. தேவையான சுவை கிடைக்காத போது மனம் உணர்வாய் உடலைத் தூண்டுகிறது. அது தவறாகவும் இருக்கலாம் நன்மையாகவும் இருக்கலாம்.

மேலும் போவோம். இவ்வளவு சுவையும் கண்ட பின்னே அதன் இன்பம் தேடி அலைகின்றது. ஆனால் கண்களுக்கும்

Koviloor Digital Library

தெரியாமல் கருத்தினுள் மறைவாய் இருந்து தன் சுவையை காட்டி காட்டி புலப்படாது இருக்கும் ஒரு உணர்வான பொருள் உண்டு. அது. வேறென்ன இறைவன்தான். பொருளாய் மறைபொருளாய் நின்று உறைந்திருக்கும் இடம் பக்குவ நிலையில் உணர்த்தி தன் சுவை என்ன தன் தன்மை என்ன என்று காட்டுபவன் இறைவனே. அவனே அவனாய் நின்று அவனை காட்டி அவனாய் நிற்பது அதிசயங்களில் மிக பெரிது. கிடைத்தற்கு அறிய பாக்கியம். பெரும் பேறு. அதற்கும் மேலாய் எவ்வாறு இருப்பான் என்பதை தன் தன்மையை தன் சுவையை தனை சார்ந்தாரின் தன்மைக்கு ஏற்ப காட்டுகின்றதே அவன் தனி பாங்கு.

தேனாய் இன்னமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்- இது மாணிக்கவாசகப் பெருமான் கண்ட சுவை

கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை மிடறினில் அடக்கிய வேதியன்- இது ஞானப்பால் பிள்ளை பெற்ற சுவை

ஆடும் ஆன் ஐந்தும் உகப்பாய்- இது நாவுக்கரசர் சுவை

ஓடநன் கலனாக உண்பலிக்கு உழல்வானை- இது சுந்தரர் பெற்ற சுவை.

கற்றவர் விழுங்கும் கற்பக கனியை- என்பது திருமளிகைத் தேவரின் திருவிசைப்பாவின் சுவை

இதெல்லாம் நாம் சுவைத்தோமா? இது போல் இருக்கும் இறைவனை சுவைத்து பார்க்க ஏதாவது வழியில் பாடலாம் பணிசெய்யலாம்இ பரவலாம, உதவலாம் என்று ஏதாவது செய்து அறிந்தவர்கள் சொன்ன வழியே சென்று அவனது சுவையை அறிய முயலுகின்றோமா? இல்லையே. தேவையான போது தேடி எடுத்து நக்கும் ஊறுகாய் போலல்லவா வைத்திருக்கிறோம். பின் எப்படி அவன் நம் சுவை காண்பான். எப்பொழுது நம்மை உண்ணுவான்? எப்போது நாம் அவனை உண்ணுவோம்? வெறுமனே சக்கரை பொங்கலும் புளியோதரையும் பஞ்சாமிர்தங்களையும் உடலின் நாவிற்கு சுவையாக தின்று விட்டு அவன் சுவை வரும்இ அருள்வான் என்று உயிருக்காக உணர்வால் அவனை உண்ணாது சுவைக்காது இருந்தால் அது எப்போது கிடைக்கப் பெறுவோம். அந்த உணர்வு எப்போது அறியப்படும்? ம் பதில் சொல்லுங்கள்.

77. கரை:

இது ஒரு சுவையான செய்தி கொண்ட வார்த்தை. இதனால் அடையாளம் கொள்ளப்படுவதும் உண்டு. இது சில பேருக்கு வேண்டியதாயும் இருக்கின்றது. சில நேரங்களில் இது இல்லாததால் இழந்தாரும் உண்டு பெற்றாரும் உண்டு. நாம் சிந்திக்க முற்படுவது உடைகளை பற்றி அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நதிகளுக்கும் கடலுக்கும் நீர்நிலைகளுக்கும் உள்ள ஒரு வரையறை என்பதனையே நாம் எண்ணுகின்றோம். நம் சிந்தனையும் அதனை ஒட்டியதாய் செல்ல வேண்டிக் கொள்கின்றோம். நீரின் கரை அதனை இயக்குவதாய் அதன் பலனை நமக்கு பெற்று தருவதாய் அதனை கட்டுப்படுத்துவாதாய் இருக்கின்றதை அனுபவபூர்வமாக நாம் உணர்ந்து இருக்கின்றோம். இப்போது அனுபவித்துக் கொண்டும் இருக்கின்றோம்.

இக்கரையின் அக்கறை அது செல்லும் வழியைப்பற்றியதாய் தான் இருக்கும். காரணம் அதனால் அது செலுத்தப்படுவதனால் அது பாயும் பரப்பு காட்டப்படுகிறது. பாயும் எதுவும் கரை அல்லது கட்டுப்பாடு உள்ளதாய் இருந்தால் பலன் தருவாதாய் இருக்கின்றது. உதாரணமாய் அம்பு பாயுமானால் அது தனக்கு விதித்த இலக்கை கண்டுவிட்டுதான் செல்லும். அதே போல் பாயும் கோபம் யாரை தாக்க பேச உண்டே அதனை நடத்திவிட்டுதான் போகும். அதே போல் பாயும் கண் பார்வையும் அங்கு சென்று ஒரு பொருளை காட்டிதான் உணர்த்தும். இவையெல்லாம் தம்முடைய இலக்கை அடைய வழிகாட்டுதலினால் முடிவுறும் செயல்கள் உணர்வுகள். ஆனால் கரையே இல்லாத ஒரு வெள்ளம் கட்டுப்பாடு இல்லாத ஒரு அருவி முனைப்பே இல்லாத ஒரு கணை ஒன்று உண்டென்றால் அது இறைவனின் அருள் வெள்ளமும் அமுதஅருவியும் கருணைகணை மட்டுமே என்பதனை உணர்ந்தார் ஒப்புக் கொள்வர். உணராதாரை பற்றி வருத்தமே மிஞ்சும்.

கரையில்லா மாக்கடல்
கருணையின் ஊற்று
கற்பனை கடந்த சோதி
கருணையின் வடிவம்
அற்புதக் கோலம்
அருமறைகளின் திறம்

எல்லாம் திருச்சிற்றம்பலத்தே கூத்தாடும் அக்கூத்தன் தான். அவனுடைய அருள் சிறை பெறா நீர் போல் சிந்தையில் பாயும். அவன் கூத்து நின்றதும் இல்லை. நின்றால் உலகம் இல்லை. அதற்கு எல்லையே இல்லை. கரையும் இல்லை. ஆனால் யாருக்கு அருள வேண்டும். யாருக்கு பலன் தரவேண்டும். யாருக்கு உணவு தர வேண்டும். யாருக்கு செல்வம் தரவேண்டும். யாருக்கு எது தரவேண்டும் என்று விதியின் வழியாய் தன் பணியை மாற்றாது ஆடிக்கொண்டு இருக்கும் அவனுக்கு அயர்வு இல்லை. தூக்கம் இல்லை. ஏக்கம் இல்லை. மயக்கம் இல்லை. மலம் இல்லை. குற்றம் இல்லை. குணங்கள் இல்லை. பாவம் அவனுக்கு அம்மை இல்லை. அப்பன் இல்லை. ஏன் அவனே இல்லை.??? இருக்கின்றான் ஏதும் கறை அல்லாதார் மனத்தே. ஏதும் வேண்டுதல் இல்லாதார் மனத்தே. ஏதும் இல்லாதார் மனத்தே. ஏதும் முரண்படார் மனத்தே. மனத்துக் கண் மாசு இலன் இடத்தே இருக்கும் இறைவன் தனக்கு தானே எவ்விதியும் இல்லாது வேண்டுவோர்க்கு வேண்டியாங்கு செய்யும் நீதியின் அரசன். குணக்குன்று. அருள் அமுதக்கடல். ஆனந்த வெள்ளம். இன்ப ஊற்று. ஈகையின் விளக்கம். உண்மையின் உரு. ஊழியாழும் உத்தமன். எண்ணில்லா உயிரன். ஏதும் செய்பவன். ஐயமற அருள்பவன். ஒண்பொருளானவன். ஓங்காரம் இசைப்பவன். ஔடதாமாய் நஞ்சையும் அமுதாக்குபவன். அஃது இஃது என்றில்லாது எதிலும் இருப்பவன் என்று உயிரெழுத்தின் உயிராய் இருக்கும் அவன் தன் அருள் வெள்ளத்தை எப்போது திறப்பான்.

வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உந்தன் விருப்பன்றே

ஏன்ற மாணிக்கவாசகனாரின் கருத்தோடு நாம் அணைந்தால் நாம் அவனின் கரையில்ல அருள் ஆரமுதத்தை பருகி அவனுடைய திருவடியை அடையலாம். இல்லையேல் மாயா உலகின் நிலை பொருளான ஆசையின் வலையில் சிக்குண்டு சீரழிந்து சின்னா பின்னமாகி அவன் திருவடி காணும் பேறு கிட்டாது போய் பாழ் நரகத்திடை பயனிலியாய் வீழ்ந்து செம்மை நலம் அறியாத சிதரரோடு சேர்ந்து அழிவின் வெள்ளமான காமச்சுரவிலே சிக்கி மாண்டு மாண்டு பிறந்து அதுதான் பிறப்பின் தொழிலாக செய்ய முனைப்படுபவராகி மீளாது கடையனாகி கரைஉடைப்பில் சிக்கிய தூசி போல வாழும் நிலை உண்டாக வாய்ப்புண்டு.

Koviloor Digital Library

ஏழுபது வயதை தரும் இறைவனுக்கு நாளொன்று ஏழு நிமிடமே ஒதுக்கி வாழ்நாளில் ஏழு மாதங்களே தருபவனுக்கு இறைவன் எழுபது வருடம் அருளுவதும். இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்போதும் என்ற திருநாவுக்கரவு பெருமானுக்கு ஐந்து ஆண்டுகளே அருளி ஆட்கொண்டது அவனது கரையில்ல கறையில்லா தன்மையில்லையா. எழுபது வருடம் துன்பம் முழமையாய் அனுபவித்து பின்னும் வர முயலுதலும். எப்போதும் அவனை நினைந்து சிறிய காலமே இங்கிருந்து மீதிக்காலமெல்லாம் அவன் திருவடியில். எது சிறப்பு? நீங்களே கரையில்லாது எண்ணங்களை ஓடவிட்டு தீர்மானிப்பீகள் தானே.

78. கனி:

ஒரு முற்றிய உயிரின் முடிவுக்கு முன் இருக்கும் நிலை. தான் பெற்ற அனுபவங்களை பிறருக்கு இனிமையாய் தருகின்ற நிலை. நன்கு பக்குவபட்ட நிலை. பதமான நிலை. இதமான நிலை. பிறருக்கு பலன் தரும் நிலை. இவையெல்லாம் உயிரை பொறுத்தது. ஆனால் பொருளாய் பார்த்தால் நீங்கள் நினைப்பது போல தான். மரக்கனிகளும் கொடிக்கனிகளும் செடிகனிகளும். கனி அந்த செடியின் பலன். அது தான் அதன் கடைசி நிலை. அதன் பின் அது உதிர்ந்து மறு உற்பத்திக்கு செல்கிறது. மறு உற்பத்திக்கு செல்லும் அக்கனிக்கு சதைபாகமாய் வைத்துள்ளது அதன் உள்விதை முளைப்பதற்கு தான். நூம் அதை சுவைத்து விடுகிறோம். திருடுகின்றோம். அதனுள் இருக்கும் விதை அது முளைக்கும் வரையில் பதமாய் வைப்பதற்கு அந்த சதைகள் தாய் பால் போல் உடன் இருக்கின்றது. முளைக்க வேண்டாதது காய்ந்து உதிர்ந்து போகின்றது. சில வெம்பி விழுந்து விடுகின்றது. இதே தானே மனித வாழக்கையிலும்.

நன்கு ஆராய்ந்தால் புரியும் கனி என்பது அனுபவத்தின் முதிர்வு. சுவையுள்ளது. அமுதானது. இறைவனின் படைப்பில் எல்லா கனியும் இனிக்கும். வேப்பங்கனியும் கூட. அதே போன்று தான். வாழ்வில் பக்குவப்பட்டு முதிர்வடையும் போது வாழ்வின் இனிமையே மிஞ்சவேண்டும். மனிதவாழ்வில் மட்டுமே இந்த முரண்பாடு இருக்கின்றது. மற்ற உயிர் இனங்களில் அது இல்லை. ஏன்?

காரணம் அந்த இனங்கள் ஆசை வகைப்படுவதில்லை. இதன் தன்மையில் இருந்து எந்த சுழ்நிலையிலும் மாறுவதில்லை. மற்றவர்கள்

வெறுக்கிறார்கள் என்பதால் வேப்பங்காய் கசப்பை மறைப்பதில்லை. மற்றவர்கள் முயலவேண்டுமே என்பதால் தேங்காய் வேரில் காய்ப்பதில்லை. அதனின் பலன் வேண்டுமானால் தான் பிறந்த இடத்தின் தன்மைக்கு ஏற்று மாறுபாடு அடையுமே ஒழிய மாறுவதில்லை. மாறுவது என்பது மனித இனத்திற்கு சொந்தமானதாக இருக்கின்றது. அதனால் தான் தன் ஆசையின் எல்லை மாறும் போது அல்லல் தொடர்கதையாகின்றது. ஆனால் அதையெல்லாம் மறந்து அடுத்தவரை கை காட்டும் பழக்கம் நம்மிடமே மட்டும் உள்ளது. அதனால் பழமையானாலும் வயதானாலும் தன் தன்மையின் மாற்றத்திற்கு பிறத்தியாரை காட்டும் குணம் இருந்து கொண்டே இருக்கின்றது. ஆனால் இக்கருத்து எல்லாருக்கும் பொருந்தது. தான் இருக்கும் தன்மையில் இருந்து மாறதவர்கள் இருக்கத்தான் செய்கின்றர்கள். இதற்கு ஒரு சுவையான கதை. ஒரு தேள் தண்ணீரில் தத்தளிக்க அதை காப்பாற்றிய யோகியை அத்தேள் கொட்ட அது திரும்ப நீரையே அடைய திரும்ப காப்பாற்ற திரும்ப இது நடக்க அதைகண்ணுற்றவன் ஏன் என்று யோகியிடம் கேட்க கொட்டுவது அதன் இயல்பு காப்பது என் இயல்பு என்று சொன்னாராம் அந்த யோகி. அது போல தன் தன்மையில் இருந்து இந்த மாயையில் உழன்றும் மாறாது இருக்கின்றார்தான் அமுதத்தை போன்று இனிமையாய் இருக்கின்றனர். இன்றும் அவரை நினைந்தால் நம் மனம் அமுதம் உண்ட நிலையை உணர்கிறதே. அது ஏன்?

கண்ணாரமுத கடலே போற்றி
தேனின் பாகாய் தித்திக்கும் சிவபெருமான்

என்றெல்லாம் மாணிக்கவாசகப்பெருமானால் இறைவனை சுவைக்க முடிந்ததே எவ்வாறு?

கற்றவர் விழுங்கும் கற்பக கனி

என்று திருமளிகைத்தேவர் எவ்வாறு உணர முடிந்தது?

அவர்களின் தன்மை. அவர்களின் இனிமையான குணம். தான் பெற்றதை யாவரும் பெற வேண்டும் என்று இத்தாவர சங்கமத்தின் இயல்பு. ஏதும் எதிர் நோக்காது செய்யும் தொண்டு. அயராது அவனின் சிந்தனை. அதனில் பெற்ற அந்த கனிச்சுவையை உடலெங்கும் பரவச்செய்து கொண்ட பக்குவம். அச்சுவை அனைவரும் அறிந்து கொள்ள எண்ணும் ஒரு பொதுநல எண்ணம்.. அதனால் பெற்ற பேரின்பம். அது இறைவன் அருளியதாய் ஏற்றது. அச்சுவையில் ஊறி அதில் மயங்கி அதில் மகிழ்ந்த வண்டாய் அவனை சுற்றி

சுற்றி வருவது. அதனை திரும்ப திரும்ப பருக நினைவது. கிடைக்கவிடில் குழந்தை போல் அவனிடம் வீம்பு செய்து பால் அருந்த குழந்தை கொஞ்சுவதைப் போல. அவனை அன்னையாய் நினைத்து மார்பில் குத்தி உதைத்து அந்த அருட்பாலை தரச்சொல்லும் குழந்தை தன்மையாய் இறைவனோடு இணைவது. அதுவே இறைநிலையின் பக்குவ நிலை. பண்பட்ட நிலை. கனிவான எண்ணம். அது எவ்வாறு கிட்டும்?

இறைவனோடு இணைந்தால் அக்கனிச்சுவை கிட்டும். இறை உணர்வோடு இருந்தால் முக்கனிச் சுவையும் கிட்டும். இறைத்தொண்டோடு இருந்தால் அவன் தண்ணீர் சேவகனாகிய நிகழ்வெல்லாம் இருக்கின்றது. தன் தன்மையாய் ஆக்கிய நிகழ்வும் இருக்கின்றது. நம்மையே அவன் பணிக்கு ஆக்கும் பாக்கியமும் இருக்கின்றது. அதனால் மனம் கனியின் தன்மையாகி அதனின் பண்பாகி எப்போதும் அதைப்பருகும் நிலை பெருகிறது. அதுவே அருட்சுவை. அதுவே அவன் சுவை. அதவே அவன் நமக்கு காட்டும் அவன் பண்பு. நெஞ்சமெல்லாம் அவனாக நினைவெல்லாம் அவனாக நிகழ்வெல்லாம் அவனுக்காக என்று இருந்துவிட்டால் மற்ற சுவை ஏது தெரியும்? மற்ற எண்ணம் ஏது தோன்றும். உண்மைதானே

மானேர் நோக்கி உமையாள் பங்கா மறை ஈர் அறியா மறையோனே

தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே. இது மாணிக்கவாசகப்பெருமானின் கனிமனமொழி.

79. வளம்:

நாம் நினைத்துக் கொண்டு இருக்கின்றோம் வளம் என்பது நீர் நிலம் செல்வம் சொல் என்பனவற்றில் இது தொடபுடையது என்று. காரணம் நாம் அப்படி பழகிவந்து விட்டோம் அதனால் அதைப்பற்றியதாய் இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு இருக்கின்றோம். வளம் என்பது இவைகளுக்கும் வேண்டும். இவையெல்லாம் வாழ்வுக்கு உறுதுணை புரிவதாக இருக்கின்றன. ஆனால் அவைகளும் நாமாய் செய்து கொள்ளவில்லை. நாம் அதற்கு காரணம் இல்லை. நாம் ஒரு கருவியாகவோ அல்லது நிகழ்விடமாயோ இருக்கின்றோமே அன்றி வேறு யாதும் செய்து விடவில்லை என்பதே உண்மை. இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்வியலில் தரப்படும் வளம் ஒரு சுகமான ஆரோக்கியமான வாழ்விற்கு

உதவுமேயன்றி வேறு ஏதும் செய்துவிடாது. ஆக இந்த வளம் நாம் அனுபவிக்க தரப்பட்டதாய் தெரிகிறது. யார் தந்தார்கள் எனபது தான் முக்கியம் என்றாலும் அதனை சிறிது சிந்தித்த பின் தொடரலாம்.

சாதாரண வாழ்கையில் வளம் எல்லோராலும் விரும்பப்படுகிறது. முயற்சி இல்லாது கிடைத்தால் மட்டற்ற மகிழ்சி. முயன்று கிடைத்தால் இன்பம். மகிழ்வுக்கும் இன்பத்திற்கும் இதுதான் வித்தியாசம். ஆனால் முயற்சியோடு பெறுவதில் அனுபவமும் தெளிவும் இருப்பதனால் எப்பொழுதும் இன்பம் பெறுவது தெளிந்து விடுகிறது. அதனால் மனம் அமைதியுறுகிறது. புதைபதைப்பதில்லை சூது செய்வதில்லை வேதனைப்படுவதும் இல்லை. ஆனால் முயற்சி இல்லாத வளம் முள் மேல் வாழ்க்கையாய் அமையும் என்பதே கண்கூடு. அது தரும் மகிழ்சி தற்காலிகமானதாக உள்ளது. ஆக அதன் மேல் நாட்டம் மிகுவது நமக்கு நட்டத்தை கொடுக்கும். என்று முயலாத ஏதும் நிலைப்பதில்லை.

ஆனால் எந்த ஒரு முயற்சியும் இறையுணர்வோடு தொடர்பு உள்ளதாய் இருக்கின்றது. அதுவே மூலக்கனல். அதுவே இறைநாட்டம். அதுவே இறையாற்றல். அதுவே ஆட்கொள்ளல். அதுவே இன்பவழி. ஆக நாம் முயலுதலினால் வளம் நம்மை வந்தடைகின்றது. இந்த முயலுதல் யாரை நோக்கி என்பதுவே நமது சிந்தனை.

மாணிக்கவாசகப்பெருமான் மிகுந்த வளங்களோடு வாழ்ந்தவர். பாண்டியனின் ஆட்சியில் மந்திரியாக பணிபுரிந்தவர். ஆகவே வாழ்வின் வளத்திற்கு அவருக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனாலும் அவையெல்லாம் வளமல்ல இறைவனின் திருவடியே வளமானது என்றவரானார்.

திருநாவுக்கரசு பெருமானின் கடைசிக்காலம். ஊழவார்பணிசெய்து கொண்டிருந்தவரின் முன் நவரத்தினங்கள் தெளிக்கப்பட்டும் அவைகளை எல்லாம் குப்பையாய் எடுத்து எறிந்த அப்பர் பெருமான்.

பிறப்பால் வேதியனாய் வளர்ப்பால் இளவரசனைப்போல வளமாய் வாழ்ந்த சுந்தரர் இறைவனிடத்தில் நட்பு கொண்டமையினால் வாழ்வில் வருவது எல்லாம் அவன் தரும் வளமே என்பதாய் வளம்

ஈந்தனன் எனக்கே என்ற எண்ணப்பாங்காய் ஏது வேண்டுவதாயினும் இறைவனை நாடுவதாய் ஆனார்.

இவர்களெல்லாம் வேண்டும் வளம் எது? நினைக்கும் வளம் எது? பெற்ற வளமும் எது? அனைத்தும் இறைவனின் திருஅருளே. இறைவனின் திருஅருள் ஒன்றே பெரும்வளம் பெறவேண்டிய வளம். அது பிறப்பின் தன்மையை மாற்றும். பிறப்பை தடுக்கும். பிறப்பை இறக்க செய்யும். வேறென்ன பிறவாமை தரும். அதுதானே நமக்கு வேண்டுவது. அதுதானே இந்த உயிரின் தேவை. அதுதானே இந்த உயிர் உய்ய வழி. அதுவே நிரந்தரமாய் நாம் பெறவேண்டியது.

இது ஏன் வேண்டும்? நம் மனம் எண்ணங்களை விளைவிக்கும் விளைநிலம். வளமில்லா நிலத்தில் வளமான எண்ணங்கள் முளைக்க உதயமாக முடியாது. ஆக நாம் வளமென்று வாழ்ந்து கொண்டு இருப்பவை கேடு விளைவிப்பதான வளமாய் தெரிகின்றது. உதாரணமாய் செல்வம் மிகுந்து இருந்தால் அது செருக்கை உருவாக்குகின்றது. நாவளம் பெறப்பட்டாராயினும் அங்கு ஆணவம் தலைதூக்கின்றது. ஆக வெளியில் நம் கணணுக்கு புலப்படுமான வளம் நமக்கு நன்மை செய்யாது மனத்தில் ஆணவம் மிகுவதற்கு உரமிட்டதாய் ஆகின்றது. மனம் கெட்டழிந்து போகின்றது. அவ்வளம் அவலம் தருவதாய் அல்லல் மிகுப்பதாய் இருக்கின்றது. அதில் மூழ்க மூழ்க நாம் இறைவனிடத்தில் இருந்து வெகுதூரம் சென்று விடுகின்றோம். அதனாலேயே வளம் மிகுந்தோரை தானம் தர்மம் செய்ய தூண்டுவதும் செய்வதுமாக இருக்கின்றது. அந்த பொருளாக உள்ள வளங்கள் அவனே அளித்து அவனே பெறுகின்றான். அதன் வழி அவரின் குணத்தை மாற்றுகின்றான். தன்மையை உயர்த்துகிறான். அருகில் வைத்துக்கொள்ள முயலுகின்றான் (முயலகன்). ஆனால் அவனின் அருகாமைபெற்று அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் அன்பருக்கு அவனே வளமாய் வந்து அருளுகின்றான்.

சிறுத்தொண்டர் சரிதத்திலே தான் மேடேற்றும் நாடகத்தின் பயன் படும் பொருளாய் ஒரு சீராள பாலகனை கொடுத்து நீக்கி ஆக்கியதை ஆறியாதார் யார்? சீர்காழி கோயிலின் வறுமையான குருக்களுக்கு ஒரு வளமான குழந்தையை கொடுத்து தானே பால் கொடுத்து தனது மானிட பிரதிநிதியாக மானுடபிள்ளையாக திருஞானசம்பந்தரை இந்நிலவுலகத்தில் அருளியது ஏன்? குதிரை வாங்க வந்த மந்திரியை கோயில் கட்டச்செய்து அதற்கு நிகராக குதிரையை கொடுத்து கோலம் பல புரிந்து தன் காலை மாணிக்க

வாசக பெருமானார் தலையில் செலுத்தியது ஏன்? வளமோடு வாழ்ந்தவனை வாழ்வு துவங்கும் தருவாயில் ஓலை ஒன்றை காட்டி அதுவல்ல வாழ்வு வேறு என்று சுந்தரருக்கு உணர்த்தியது ஏன்? இவையெல்லாம் இறைவன் அருளுதலின் பயன். அவனின் திருவிளையாடலின் வளம். தம்மை எந்நேரமும் எண்ணும் அடியாருக்கு அவன் தரும் வளமான செல்வம். வற்றாத வளம். மாறாத கருணை. மாண்பாண செய்கை. அளப்பறிய ஆற்றல். அருகில் இருந்தால் கிடைக்கும் சுகம். அரவணைக்கும் அரனின் பாவகம். தளரவிடாத அவன் தரும் மெய்யுணர்வு. இதுவே அவன் தரும் வளங்கள். உணர்வானவன் நமக்கு தரும் அமுது. என்று பெறுவோம். முயன்றால் முடியும் தானே.

80. வார்த்தை:

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமம்

என்ன முன்னமே பாடலை எழுதிவிட்டேன் என்று எண்ணுகிறீர்களா? எல்லாம் காரணத்தோடுதான். சற்று மாற்றமாய் இருக்கட்டுமே என்று தான் மாணிக்க வார்த்தைகளை முன்னின்று ஆரம்பித்தோம். வார்த்தை - இது ஒரு பயங்கரமான ஆயுதம் பிரயோகிக்கும் போது. ஒரு அழகான கத்தி பயன்படுத்தும் போது. ஒரு அற்புதமான கனி அதனை ஏற்கும் போது. ஒரு சக்தி வாய்ந்த யந்திரம் செயல்படுத்தும் போது. ஒரு மறைவான எதிரி வெளியில் விடும் போது. சுவையான கதை நன்கு படிக்கும் போது. ஒரு வார்த்தைக்கு இத்தனை வார்த்தையா? பின்னே என்ன நினைத்தீர்கள். கொண்டு வா என்ற வார்த்தை கொன்று வா என்பதால் அழகிய மன்னனும் மதுரையும் எரிந்ததே. கண்டேன் என்று ஒரு வார்த்தை கேட்டதினால் களங்கிய உள்ளம் மகிழ்வுற்றதே. இதெல்லாம் ஒரு உதாரணங்களே. இது போல் நிறைய இருக்கின்றது.

வார்த்தை என்பதே இரு வடிவாய் இருக்கின்றது. சொல் பொருள். சொல் வெறும் எழுத்துக்களின் அமைப்பு. பொருள் அதன் செயல்பாடு. அது மட்டுமல்ல சொல் சிவம் (உயிர்) பொருள் சக்தி.(உடல்)

Koviloor Digital Library

"சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்-" என்பது அபிராம பட்டரின் அந்தாதி.

தமிழ்பாடம் என்று எண்ணிவிடவேண்டாம். ஒரு வார்த்தை நம் எண்ணத்தின் வெளிப்பாடாய் ஒரு ஒலிவடிவாய் வெளிப்படுவதே அதன் வடிவம் பெற ஏதுவாகின்றது. அத்தோடு இது மனத்தின் உள்ளும் வெளியும் என இரண்டு நிலையாக செயல்படுகிறது. மனமாற சொல்லுவது. சும்மா சொல்லுவது என்று வைத்தும் கொள்ளலாம். வார்த்தையின் வடிவம் ஒரு ஒலிகலவையே. அது எந்த அளவில் எந்த அதிர்வில் எந்த இடத்தில் எந்த உணர்வில் வருகின்றதோ அதைப்பொருத்தே அதன் விரிவு இருக்கின்றது. போ என்பதை பல நிலைகளில் சொல்வதைப் போல. சொல்லும் முறையும் சொல்லும் ஒலியின் அளவை பொறுத்தும் அதன் பொருள் கொள்ளப்படுகிறது. இவ்வார்த்தையின் ஒலி அளவை வைத்தே உணர்வு அறியப்படுகிறது. அதாவது கோபம், வருத்தம் என்பன போன்று உணர்வை வெளிப்படுத்துவதாயும் இருக்கின்றது. சொல், அமைப்பு, பொருள், ஒலிஅதிர்வு, உணர்வு, காலம் முதலியவற்றை ஒரு வார்த்தை தருவதாக இருக்கின்றது. அப்படியானால் இதன் சக்தி எவ்வளவு என்பது புரிந்திருக்கும்.

வார்த்தை பிசகியதால் வாழ்வை விட்டவர்களும் உண்டு. வார்த்தையை மறந்ததால் நல்ல வாழ்வு பெற்றாறும் உண்டு. வாழ்வின் நடை முறை வார்த்தைகளின் பரிமாற்றங்களில தான் நடக்கின்றது. அதுதான் அதனை இறைவன் என்கின்றோம். ஆன்மீகத்தில் சரியை கிரியை, யோகம், என்ற மூன்று நிலை உண்டு. சரியை பேச்சும் செயலும் நிறைந்தது. கிரியை செயல் மட்டும். யோகம் ஏதும் இல்லை. ஆகையால் கிரியை என்ற இரண்டாம் நிலைக்கு செல்வதற்கு இது உதவுகின்றது. ஆனால்?

இறைநிலைக்கும் இதற்கும் சம்பந்தம் என்ன? வார்த்தை அமைப்பே நம்மை இறைவனிடம் அழைத்து செல்கின்றது. அது சென்று அடைவதாய் கண்டு கொண்டபின் வாயிலிருந்து வரும் வார்த்தை மனதிலிருந்து உதிக்கின்றது. அதுவே இறைநிலை அடைந்த நிலை. அதுவே யோகநிலை. சிவபோக நிலை. சிவசிந்தனை தன்மை. ஆக நாம் ஒரு வார்த்தை சொல்லுவதற்கு முன் எப்போது யோசித்து சொல்கின்றோமோ அப்போது இறைவன் நம்முள் குடிகொள்கின்றான். சித்தத்தில் சிவம் என்பதே முத்தி நிலை. மனம்

அவனையே சுற்றும் நிலை. வாய் அவனது புகழை பாட சொல்லும் நிலை. ஐம்புலன்களின் அடக்கம் ஆரம்ப நிலை. ஒவ்வொன்றாய் அடக்கி அடக்கி தரப்படும் நிலை. சாதாரண வார்த்தையாய் இருந்தது மந்திர ஒலியாய் மாற்றப்படும் நிலை. உணர்வை முழமையாய் உணர்த்தும் நிலை. பேரானந்த பெருநிலை.

இந்நிலை பெற்ற எம்குருநாதரின் திருவாசக பாடலைத்தான் மேலே தொடக்கத்தில் சொன்னோம். அதிலே அவர் வார்த்தையின் சிறப்பை திருவார்த்தை என்று அடைமொழியோடு கூறி அதனாலே அது திருநாமமாக கொள்ளப்பட்டு அவர்கள் காணும் பேறு என்ன என்பதே மீதிப்பாடல். படியுங்களேன்.

தரிப்பார் பொன்னம்பலத்தாடும்
தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே.

என்ன ஆழமான கருத்து. மாற்றமாய் வையகத்தின் வெவ்வேறு வந்து அறியும் அவன் நம்மையும் ஒரு பொருளாய் நயந்து வந்து நினைவின்றி ஆட்கொள்வது எங்ஙனம்? நம் வார்த்தைகள் இதமாய் யாரையும் புண்படுத்தாது அன்பாய் பரிவாய் ஈர்ப்பாய் இனியதாய் தெளிவாய் வேண்டிய உணர்வாய் தாங்கும் தன்மையாய் மந்திர சொல்லாய் இருக்குமே யானால் அவன் அருகு நிச்சயமே. மேலும் விருப்பமானால் திருவாசகத்தை புரட்டுங்கள். அதன் ருசியை அதில் உள்ள வார்த்தைகளை மனதில் கொள்ளுங்கள். அதுதரும் மனதில் தேன். அதுதரும் தேவனின் திருவார்த்தை. அது தரும் வாழ்வின் முறை. அதுதரும் எல்லாம்.

81. சிவவேர்கள்

இறைவனின் எந்த செயலும் ஒரு பெருத்த சக்தியினை விளக்கவே செய்யப்படுகிறது. பல உருவங்களில் பல நேரங்களில் பல நிலைகளில் பல நிறங்களில் அவரது வெளிப்பாடு நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அது ஒரு நிறுத்தம் இல்லா இயக்கம் அவவாறு இயங்கும் அவரின் இயக்கங்களின் பரிமாணம் அளவிட முடியாததாக இருக்கிறது. அருவமாய் நிலைத்த அவர் உருவமாய் தெரிவது எவ்வாறு?. ஒரு மரம் இலைகளுடன், பூக்களுடன், கிளைகளுடன், காய்களுடன, கனிகளுடன், மகரந்த வாசனையுடன்

Koviloor Digital Library

பழுத்த இலைகளின் அந்த மஞ்சள் நிறத்துடன் மொட்டுகளின் அந்த நீல நிறத்துடன் ஜொலிக்கின்றது. அதன் இவ்வளவு ஜொலிப்புகளுக்கும் எது காரணம்? இவ்வளவு வனப்புகளுக்கும் எது காரணம்? அதன் வேர்கள்.

அதன் வேர்கள் அதற்க்கு தரவேண்டிய உந்துதலை உணவை தரமறுத்தால் அம்மரத்தின் இயக்கம் சிறப்புறுமா? ஆயினும் தன்னை மண்ணுள் புகுத்தி பல்வேறு திசைகளில் பரவி முட்டி மோதி வளைந்து நெளிந்து சிலவற்றை பிளந்து உணவை கொண்டு வந்து தன் இயக்கத்திற்க்கும் இன்றி அம்மரத்தின் எல்லா முன்னேற்றத்திற்க்கும் அர்பணிக்கின்றதே அதன் தியாகத்தினை என்னவென்பது.

அது போன்றுதான் ஒரு உயிரின் ஆன்மாவின் வெற்றியில் புகழில் மற்றொரு ஆன்மாவின் தியாகம் அமிழ்ந்து கிடக்கின்றது. அங்குதான் இறைவன் தன் அருளாய் வெளிப்படுகிறான். ஒரு அருளாளரை உருவாக்க இன்னொருவரை அருளாளராக்கும் இறைவனின் கருணை சொல்லில் வடிக்க இயலாது. ஒரு அருளாளன் மற்றொரு அருளாளனின் தியாகத்திலேயே உருவாக்கப்படுகிறான்.

உதாரணமாக கொண்டால் மகான் திருநாவுக்கரசரின் வெளிப்பாட்டில் அவரின் தமக்கை திலகவதியம்மை இருந்ததைபோல் மகான் திருஞானசம்பந்தரின் இறைவழிபாட்டில் அவரின் தந்தை இருந்ததைப் போல் சுந்தரரின் அருளாற்றலில் அவரின் தாயும் தந்தையும் இருந்ததைப்போலஇ மகான் மாணிக்கவாசகரின் இறைத்தொண்டில் பாண்டிய மன்னன் இருந்ததைப்போல எவ்வளவோ ஆண்மக்களும் பெண்மக்களும் ஒரு அடியாரோ ஆழ்வாரோ உருவாக காரணமாய் இருந்திருக்கின்றனர் இருக்கின்றனர். அவர்களும் முடிந்த உதவிகள் செய்து ஊக்குவித்திருக்கின்றனர். இறைவனின் அருள் வெளிப்பட மறைமுகப் பொருளாய் இறைவனே உருவாக்கியவர்களாக அவர்கள் இருந்திருக்கின்றனர். இல்லறங்களில் இருந்து துறவறத்திற்க்கு வந்தவர்களும், துறவறத்தில் நிலைத்து நின்றோருக்கும் இத்துணை தேவையாகத்தான் இருந்திருக்கிறது. இறைவன் எவ்வாறு சூரியனால் ஒளிபெறவேண்டும் என்பதால் இரவு நேரத்திற்க்கென்று சந்திரனை உருவாக்கி பகல் நேரத்தில் சூரிய ஒளியை பெற்று இரவு நேரத்தில் ஒளிகொடுக்க செய்தாரோ அதுபோல் கடல் நீர் உப்பாய் இருந்தும் அதனை உயிரினங்கள் பருகி மகிழவேண்டும் என்பதற்காக மழையை படைத்தாரோ அதுபோல்

ஒவ்வொரு இயக்கத்திற்க்கும் அவரின் ஆற்றல் தெரியும் படியான இணையான இயக்கத்தை மறைமுகமாக உண்டுபண்ணுகிறார். சில சமயங்களில் அவரே வேறு வடிவில் வந்தும் செல்கின்றார். பன்னிருதிருமுறைகள் வெளிவந்த வரலாறும் மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையும் தானே எழுதி கையொப்பம் இட்டு சென்றதும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை தன்னோடு அழைத்து ஆட்கொண்டதும் காரைக்கால் அம்மையாருக்கு பேயுரு தந்தருளியதும் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு சிவபதம் அருள வந்ததும் இதற்க்கு சான்றாக உள்ளது.

ஆக இம்மண்ணுலகில் இறையாற்றலை வெளிப்படுத்திய ஆன்மீகமானாலும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் ஆனாலும் அந்த ஆன்மாவின் பின் ஒரு ஆன்மா உதவிசெய்த வண்ணமே உள்ளது. அது எந்த விதமாக வேண்டுமானலும் இருக்கலாம். சிவசக்தி ரூபமான இறைவன் சிவமாக ஒன்றையும் சக்தியாக ஒன்றையும் படைத்தே உலகில் உலாவவிட்டுள்ளான். நல்லது எது கெட்டது எது என்பதை அறியச்செய்கிறான். தடுமாற்றம் நேருங்கால் பின் நிற்ப்போர் துணைபுரிகின்றனர். அவர்களின் பணியில் வேர்போல் நின்று உதவி புரிகின்றனர். அதனால் சில தியாகங்களும் செய்கின்றனர். எவ்வாறு சிறுதொண்டரின் மகன் பிள்ளைக்கறியாக இறைவனின் திருவிளையாடலின் பாகமாக திகழ்ந்து சிறுதொண்ட நாயனாரின் இறைதொண்டை உலகம் அறிய உதவினானோ எவ்வாறு அப்பூதியடிகளின் மைந்தன் அரவம் தீண்டியும் அடியாரின் சேவையில் தன்தந்தைக்கு பங்கம் வந்து விடக்கூடாது என்று காற்றை விட வேகமாய் சென்று தான் அரிந்த இலையை தன் உடம்பில் விடம் ஏறிய நிலையிலும் தாய் தந்தையரிடம் கொடுத்தபின் உயிர் இழந்து, பெற்றானோ, எவ்வாறு பாண்டிய மன்னன் சூலைநோயில் அவதியுற்று திருஞானசம்பந்த பெருமானின் ஆற்றலால் நீறு பெற்று சமணரை விரட்ட உதவினானோ அது போன்று வேறு வேறு உருவில் இறையாற்றல் மிகுந்த அடியார் பெருமக்களுக்கு மற்றோர் நல்ல அடியார் துணைபுரிந்திருக்கிறார்கள்.

இல்லற நிகழ்வில் கணவன் மனைவி இவ்வாறு இணைவதினால் இல்லறம் இறையறமாய் திகழ்ந்து நிற்க்கும். மனையாளின் தியாகத்தில் மணவாளனின் வெற்றி புதைந்து உள்ளது என்பது திண்ணம். புதல்வர்களின் புகழ் நிலையில் பெற்றோரின் தியாகம் மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒன்றை விட்டு ஒன்று பிரிவதும்

Koviloor Digital Library

இல்லை. வேரின்றி மரம் பலன் தராது. பலன் இல்லா மரம் பயனற்று போகும். பிறர்க்கு பயனுள்ள மரமே பார் போற்ற நிற்கும்.

நாம் ஒரு முக்கியமான செய்தியை மறந்து விடக்கூடாது. மகான் திருநாவுக்கரசர் மிக ஈடுபாடு கொண்டு சமணத்தில் இணைந்து அதன் பிரதான தலைமையை பெற்று புகழ்பெற்று இருந்த போதும் கூட அவரின் தமக்கை திலகவதி அம்மையார் தன் சைவ நெறி விட்டொழிந்து நின்றாரில்லை. அவரின் விடா முயற்சியேஇ வேண்டுதலே இறைவனை நாவுக்கரசருக்கு சூலை நோய் அருளாச்செய்து சைவ நெறி தழைக்க மீண்டும் அழைக்கப்பட்டார். இது போன்று சமணமதத்தை தன் நாடே தழுவச்செய்து சமணர்களின் அடிமையாக இருக்க செய்த பாண்டிய மன்னனின் துணைவியார் பாண்டிமாதேவியார் தான் கொண்ட சைவநெறியிலிருந்து தாழ்ந்தாளில்லை. அதனால் இறைவன் மாபெரும் சமண சண்டாளர்களின் மத்தியில் திருஞானசம்பந்தரை நிற்கச்செய்துஇ பாண்டிமன்னனின் வாத நோய் நீக்கிஇ சைவம் தழைக்க செய்தார். வேர் சிறிது எனினும் அதன் வீரியம் என்றாவது ஒரு நாள் வெளிப்பட்டே ஆகும் என்பதுவே. வேரில்லா உயிரினங்கள் குறைவுதான் என்றாலும் அவைகளின் வாழ்நாளும் குறைவுதான்.

இவ்வேர்கள் தங்களை வருத்தி பிறரின் நலத்தில் அக்கறை கொண்டு செயற்கரிய செயல்களை செய்விக்க உதவுகின்றன. சிலர் ஊக்கம் அளிக்கும் ஊக்கப்பொருளாய் திகழ்கின்றனர். பொருள் உள்ளோர் அதனைக் கொண்டு தர்மதானங்கள் செய்து மற்றோரின் பசிப்பினி தீர்க்கின்றனர். சிலரோ தம் உடல் உழைப்பை ஈந்து இறைத்தொண்டில் ஈடுபட்டு மற்றவர்களையும் ஈடுபடுத்த முனைகின்றனா. சிலரோ தமது கல்வி அறிவினால் பெற்ற ஞானத்தை பிறர் வாயிலாய் மக்களுக்கு உணர்த்தி தொண்டு புரிகின்றனர். மேலே குறிப்பிட்ட அனைத்து முறைகளிலும் கர்த்தர் ஒருவராய் இருந்தும் அதனை இயக்க உதவியோர் அனைவரும் சிவவேர்களே. இவ்வேர்களாய் நம்மில் அதிகம் பேர் உழல்கின்றோம். அவ்வாறு இருப்பதே பெருமை, இன்பம், ஆனந்தம் எல்லாம். இவ்வேர்களின் முயற்சியில் எண்ணற்ற இடர்பாடுகள் வரினும் இவ்வேர்கள் அஞ்சுவதில்லை. அது அதன் கடமையை செய்ய பல்வேறு வழிகளில் முயன்று கொண்டே இருக்கிறது. இவ்வேர்களின் தாகம், அதன் பிரமிப்பூட்டும் சக்தி, மண்ணினின்று மாபெரும் விருட்சம் நிலை பெற்று நிற்கும் போதுதான் உலகுக்கு குன்றின் மேல் விளக்காய்

Koviloor Digital Library

ஒளிர்கின்றது. இவ்வேர்களின் நீண்ட கால விடா முயற்சிதான் நீண்ட சரித்திரம் படைக்கிறது. எத்தனையோ விதமான பயிர்கள் கூட வேர்களின் துண்டுகளில் இருந்து முளைவிட்டு வளருகிறது. சில நேரங்களில் இவ்வேர்கள் தங்களின் இலக்கை அடையாமல் கூட மாண்டும் விடுகின்றன.

பயன்கருதாது பலன் நோக்காது தொண்டு புரியும் இவ்வேர்கள்தான் மனித இனத்தின் மாண்பை உலகுக்கு எடுத்துக்காட்டும் கருவியாக திகழும். இவ்வேர்களின் உழைப்பால் தொண்டால் தீண்டபட்ட தூண்டப்பட்ட விளக்குகள் தான் அஞ்ஞான அறிவை வென்று மெஞ்ஞான அறிவை வளர்க்கும். எவ்வாறு தீபத்தின் ஒளியில் கருமை நிறம் இருக்கின்றதோ அதே போன்று தான் இவைகளும். இருளைப்போக்க ஒளிரும் தீபத்தின் கருமையை கண்டு கொள்ளாதார் யார்?. தான் கருகி தனனை சூழ்ந்தோரின் இருள் நீக்க உதவும் அக்கரிமுகப்பும் சிவவேர்தான்.

ஆக இறையாற்றல் எப்போதும் வெளிப்பட இடைவிடாது இவ்வேர்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அவை காலத்திற்க்கு ஏற்ப தாம் முன்னின்ற தொண்டில் இடைவிடாது முயன்று வெற்றிதான் கண்டுள்ளன. இதனின்று நாம் தெரிந்து கொள்வதெல்லாம் இம்மனிதப்பிறவீ ஒரு பயனுள்ள பிறவி. உடம்பால் தொண்டும், வாயால் பண்பாடும் தொண்டும், கண்ணால் மகேசனின் மாசில்லா கருணையை காணும் பாக்கியமும், காதால் நல்ல அவன் புகழினை கேட்கும் படி செய்யும் இப்பிறவியியை பயனுள்ள பிறவியாக மாற்றிக்கொள்ள வேண்டியது நமது கடமை.

வாழ்க்கை நடைமுறையில் அதனை கழித்து துய்பதற்க்கு சில காரியங்கள் செய்ய வேண்டி இருந்தாலும் அதனோடு நாம் இறைத்தொண்டு செய்தே ஆகவேண்டும். அதுவும் அப்பழுக்கில்லா, பலன் எதிர்நோக்கா, புகழ் வேண்டா, மனம் கோணா, மாறாத தொண்டாக இருந்து விட்டால் மகேசனின் மனம் நமை ஈர்த்து கொள்ளும். இப்பூவுலக வாழ்வு நமக்கு இன்னல் உள்ளதாய் அறியப்படாது. இறைத்தொண்டின் ஈடுபாடு இந்த ஆத்மா இன்புற ஒரு கருவி. இப்பூவுலகம் பூவனமாய் இருப்பதும் பூகம்பமாய் ஆவதும் நம் கையில் இல்லை. நம் தொண்டில் தான் உள்ளது. அவற்றிற்க்கு இவ்வேர்களே சான்று. பதராய் திரியாது பூ புதராய் செழிக்க தொண்டுகள் செய்வோம். தூய்மை பெறுவோம்.

மகிழ்வு என்ற வார்த்தை ஆழ்ந்த ஆழத்தில் இருந்து பெறப்படவேண்டும். அது மனத்தின்

எண்ணங்களில் இருந்து விலகி இறகு கட்டி பறக்கும் உணர்வு. மெல்லிய மலர்படுக்கை

காற்றினில் விரிக்கப்பட்டு மலரின் வாசத்தோடு அதில் மிதப்பதில் ஏற்படும் ஒரு உணர்வு. தாயின் அன்பில் தளிர் பெரும் உணர்வு. நாவின் தடவலில் கன்று பெறும் உணர்வு. பாலின் நிறத்தில் உள்ளிருக்கும் சுவையின் உணர்வு. பரமன் அவன் திருஅடியில் நம்மை தாலாட்டும் ஒரு உணர்வு. இதை வேண்டாம் என்று யாரேனும் சொல்வார்களா? விலகி யாராவது ஓடுவார்களா? ம் ம் என்று தடையாய் தலைஆட்டுவார்களா? நாமென்ன அதன் அருமை உணராதவரா? அதனை நினையாதவரா? அதற்காக ஏங்காதவரா? யாராகிலும் இதைப் போன்று செய்ய மாட்டார்களா?

யாரோடாவது இணைத்து என்னை இதை உணரவைக்கமாட்டார்களா என்ற ஏக்கம் நம்மில் இல்லையா? இதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று பரிதவிப்போர் இல்லாமலில்லை?

ஆனால்.....

இவ்வளவும் நமை அறியாது நாம் பெரும் முயற்சி எடுக்காது நாம் எதிர்நோக்காது நமக்கு 18-09-2005 அன்று கிடைக்கப் பெற்றோம் என்பதை நிச்சயமாக உணர்ந்திருப்போம் தானே. அத்திருப்பட்டூர் நாயகரும் ஊட்டத்தூர் உலகவனும் ஒருவனாய் நின்று நடத்தி நம்மை வழிநடத்தி நாடகத்தால் அவன் அடியார் போல் நம்மை நடிக்க வைத்தானே அதைச்சொல்கிறேன்.

ஒவ்வொருவரின் முகத்திலும் என்ன மகிழ்சி. என்ன பேரானந்தம். என்ன ஒரு ஆர்வம். என்ன ஒரு ஒருமித்த சிந்தனை. என்ன முயற்ச்சி. தன்னுடைய தோட்டத்திலே விதையிட்டு நட்டதைப்போன்றதொரு உணர்வு. தானே சிவமாய் நின்ற திருக்காட்சி. என்னவாயிற்று இவர்களுக்கு இந்த உள்ளடங்கிய ஊட்டத்தூரிலே வந்து விழாக்கோலமாய் செய்கிறார்கள் என்று அப்பறத்தார் வியக்க வைத்த செயல். செயற்கரிய செயல். யார் செய்வார்.

திருவள்ளுவரின் பொன் மொழி. செயற்கரிய செய்வர் பெரியர். இது போதததா இந்த பிறவி கடைத்தேற்ற. அடுத்த பிறவி அந்த மரத்தின் வித்தாய் பிறந்து அதன் அருகில் நின்று எந்நாளும்

இறைவனைப் போற்றியே நிற்கும் கதி கிடைக்கப் பெறுவோம் தானே.

ஒரு சிறிய விதையில் ஒரு ஊர்காக்கும் ஆலவிருட்சம் இருப்பதை யார் அறிவார். ஒரு சிறிய செயல் என்று ஒரு சிவபணி செய்ய இவ்வளவு மகிழ்வு ஆனந்தம் கூத்தாட்டம் இதனுள்ளே இருக்கின்றது என்பது யார் அறிவார் நம்மையன்றி. நாம் பெரும் பேறு பெற்றோம். தென்னையைவைத்தால் இளநீரு. தென்னன் நினைத்தால் மனமெல்லாம் பன்னீருதான்.

இப்பணி தொடரும் சூழ் அன்று உரைக்கப்பட்டது. ஆதீனம் அவர்களின் திருவாய் அதனை செப்பி நம்மை நம்பணியை செம்மையுறச்செய்து விட்டது. இதுதான் அடியார் கூட்டம் என்று ஆணித்தரமாய் அணித்தலைவரும் அறுதியிட்டுவிட்டதும் நம்பணி கொண்டவனிடத்திலே. இதற்கு மேல் வேறு என்ன வேண்டும்.

வேண்டதக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
தக்கதை அறிந்து அருளும் அதுவும் முழுதுமாய் அருளும் அண்ணல் இருக்கும் வரை

யான் ஏதும் பிறப்பஞ்சேன்
உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்

நாதன் நம்பணி கொண்டவன்

அவன் பணி நாம்செய்ய
நம் பணி அவனே செய்து முடிப்பான்.
82. திருவாசகம்

திருவாசகம் என்பது என்ன? அதை ஏன் பாட வேண்டும்? இதுற்கு மேல் கேள்விகள் உண்டா? சிந்தித்த பிறகே அது தெளிவு பெறும்.

சிவபெருமானை அறிந்தவர் யாரும் இல்லை. அறியாதவரும் யாரும் இல்லை. இதென்ன வியப்பாக இருக்கிறது. ஆம்! அறிந்தும் அறியாதவன்தான் அந்த அரவத் தலைவன். அவனது புகழ் அவன் சக்தி அவன் தினவு அவன் நெறி அவன் திண்மை அவன் அருள் யார் கண்டார்கள்? காண்பார்கள் சிலர். கண்டு கொள்ள முயற்சிக்கிறார்கள் பலர். நம்மையும் சேர்ந்துதான்.

எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கும அவனை எங்கே என்று தேடுவது மூடத்தனம். அதுதான் கண்டவர் விண்டிலர்: விண்டவர் கண்டிலர் என்பது. அவனது தன்மை உணரப்பட வேண்டும். உணர்வு பூர்வமாக இசையப் பெற வேண்டும். இன்ப நினைவாக காதலிக்கப்பட வேண்டும். கனிவான அன்பாக பக்தி செலுத்த வேண்டும் பழுதில்லா நெறியாக. அப்போது கண்களில் நிற்பான். காதுகளில் ஒலிப்பான். மூச்சாய் முழுதும் ஆக்கிரமிப்பான். அவன் இல்லாத நிலை ஏது. ஆக பல்வேறு பரிமாணங்களில் பகவானின் பாத தரிசனங்கள் கண்ட பலரில் ஒருவர் மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம் சிறிதுதான் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. சிறிதே இவ்வளவு இனிதென்றால் முழுவதும் கிடைத்திருந்தால் அப்பப்பா... என்னே இன்பம்... நினைக்கும்போதே இவ்வளவு இன்பம்... அதனை உணர்ந்தால்! சொல்லில் சொல்ல முடியா சொல் அது. அதுவும் காரணத்தோடுதான். மாணிக்கவாசகரின் நிலை வேறு. நம்முள் அமைந்த நிலை வேறு. நமக்கு இது போதும் என்று இறைவனே திரையிட்டு மூடிவிட்டான். இதாவது கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் இதன் உள் உணர்வை உணர்ந்து மகிழ்வதே நம் கடமையாகும்.

திருவாசகம் ஒரு வாசகத்தில் முடிந்து விடுவதில்லை. திரு என்றால் தெய்வம் (சிவன்) 'வா" என்றால் சக்தி. சகம் என்றால் சகலரும் இசைக்க வேண்டிய பண் என்பது ஒரு விளக்கமாக கொள்ளலாம். அதாவது சிவசக்தி வடிவமான இறைவனை சதா சர்வகாலமும் சகலரும் இசைக்க வேண்டும் என்பதாய் அர்த்தம் இருக்கலாம். இதில் என்ன அவ்வாறு இருக்கிறது. இதில் என்ன அவ்வளவு சுவையா? கேள்விகள் கேட்டால் சிந்தனை தெளிவு

Koviloor Digital Library

பெறும். புற்றீசல் போல் புதுப்புது தகவல் பிறக்கும். அது மனத்தின் மாண்பு. காரணம் இறைவன் அங்குதான் இருக்கிறான். குருவாய் அமர்ந்து நமக்கு தோன்றும்போது நாம் தேடும்போது அதைத் தருகிறான். அருகிலேயே நிற்கிறான். அழைக்கும்போதும் வருகிறான் அந்த அழைப்பை அந்த வர்ணிப்பை தான் கண்ட இறைவனின் எழிலை, தான் ருசித்த அந்த கனியை, தான் அனுபவித்த அந்த உணர்வை தான் நின்ற அந்த நிலையை பண்ணாய், விருத்தமாய் இசையின் தெளிவாய தந்து போந்தார் மாணிக்க வாசக அடிகளார்.

இவ்வளவு எளிதான இனிமையான பண்ணை அவர் எவ்வாறு இசைத்திருக்க முடியும்? இசைத்து இசைத்து ஒரு ஊமையை பேச வைக்கும் வித்தையை எவ்வாறு நிகழ்த்தியிருக்க முடியும்? நம்மால் முடியுமா? முடியும். ஏ்பபோது திடமான உள்ளம், வலுவான எண்ணம், தீர்க்கமான முடிவு இவைகளுடன் அவரின் பண்ணை இசைக்கும்போது நாம் எதுவாக வேண்டும் என்று இலக்கிட்டுப் பாடுகிறோமோ அதுவாகவே ஆவோம், அதையே பெறுவோம். இ.ஃ. து பிதற்றல் அன்று. தற்போதும் நடைமுறையில் அனுபவிக்கப்படும் உண்மை. அதனால்தான் கோவில்தோறும் இவ்வேள்வி, சிவ வேள்வி நடந்துகொண்டே இருக்கிறது. இது ஒவ்வொரு இல்லம் தோறும் நடைபெற வேண்டும்.

நாம் நம் சிந்தனையை சிதறவிடாது ஒருமனதாய் இப்பண்களை இசைத்து உருகினால் இறைவனின் நிழல் நம்மை வந்து அடையும் என்பது திண்ணம். அதற்கு வேண்டியது முறையான நடைமுறைப் பழக்கம், முனைப்பான உந்துதல் முடிவான சிந்தனை மட்டுமே. கல்லின் வடிவில் இருக்கும் அக்கருணாகரன் கண்களில் தெரிவது சாத்தியம்தான். காற்றினில் கலந்த காலதேவன் காதுகளில் ஒலிப்பதும் சாத்தியம்தான். ஆகாய வெளியில் ஆழ்ந்து அகன்ற நுண்ணியண் நம் அருகில் அமர்வது சாத்தியம்தான். இவ்றறிற் கெல்லாம் வேண்டுவது என்ன? அப்பழுக்கில்லாத இறைத்தொண்டு, சோர்வடையா அடியார் சேவை, மனம் சலியா மன்றாடல்தான். எந்த ஒரு இன்பமும் இனிதாய் கிடைத்துவிடாது. இடர்ப்பட்டுதான் சுடர் ஒளிக்கும். அவ்வாறே எம்பெருமான் ஈசனாரின் இயல்பாகும்.

சிவசிந்தனையில் தலையாய கடமை சிவ வழிபாடே. அதனின்று கிடைக்கும் பேரின்பப் பெருநிலை சொல்லில் வர்ணிக்கவெண்ணா பெருக்கருணையாகும். திருவாசகம் ஓதுவோர்

இந்த நிலையை நிச்சயம் அடைவர். இன்பம் நிறைந்த இம்மை சுகத்தை பெற்றுக்கொண்டே இருப்பர். ஐம்பததோரு பதிகத்தில் அனைத்து இன்பங்களையும் அள்ளி சொரிந்து சென்ற அப்பெருமானின் அடியாருக்கு நாம் யாது கைமாறு செய்ய முடியும்? அது அவர் சொல்லிச் சென்றதை, அவர் வாயாரப்பாடியதை, இறைவன் கேட்டு மகிழ்ந்ததை நம் வாயால் பாடும் பாக்கியம் நமக்குக் கிடைத்ததே பெரும் பேறுதான். கேட்பதிலும் இன்பம். வேட்பதிலும் இன்பம்! இணைந்து, முனைந்து இசைத்துவிட்டால் திருவாசகம் தரும் உங்கள் வாழ்வில் ஒரு வசந்தம்.

83. பஞ்சமி

முன்னம் தெரிவித்தது போல இன்று பஞ்சமி. பஞ்ச பூதங்களின் சங்கமமே இந்த உலகம். எல்லா பொருளும் அதன் கலவையே. எல்லா பொருளின் முடிவும் அதனுள்ளே. பூதங்கள் என்று சொல்லுவது அதன் தன்மை அறிய முடியாது என்பதே பொருள். ஆனால் அது தேவைக்கேற்றார் போல் தெரியவரும். எவ்வாறு இறைவனின் தொழிலில் மூன்று தொழில்கள் மட்டும் கண்ணுக்கு தெரிகின்றதோ அதே போல் நிலம் நீர் தீ தவிர மற்ற வாயு ஆகாயம் காண இயலாது. மறை பொருளாய் இருந்து உதவுகிறது. காற்று நமது வாழ்விற்கு முக்கியமானது ஆனால் அது கண்ணுக்கு தெரிவதில்லை. உயிர்களெல்லாம் பிரிந்து ஆகாயத்தில் ஒன்று கூடி பகுக்கபட்டு செய்யபடுகிறது. அதே போல ஒன்றுக்கு ஒன்று ஏற்புடையதாயும் தொடர்பு உடையதாயும் இருக்கின்றதே உண்மை. மண்ணில் இருந்து நீர்கிடைக்கின்றது. நீரினாலே மண் உண்டாகிறது.

இரண்டு வாயுக்கள் சேர்ந்து நீராகிறது. நிலமும் காற்றும் இல்லாது நெருப்பு எரிய முடியாது. நெருப்பிலே இருந்து வெளிவரும் வாயுவையும் அனலையும் ஆகாயம் பெறவில்லை எனில் நெருப்பு தொடர்ந்து எரிய முடியாது. ஆகவே ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் இருக்கின்றது.

நம்முடைய உடற்கூறும் அவ்வாறே இருக்கின்றது. அதன் தொடர்புடையதாய் ஐம்புலன்கள் இருக்கின்றன. உடல் நிலையில் ஏதும் மாற்றம் உண்டானால் அதுவே நோய் என்று சொல்லப்படுகின்றது. நம்முடைய உடல் சூட்டைக்காட்டிலும் அதிகமுள்ளதை உடல் ஒத்துக்கொள்ளாது. அதே போன்று தான் நீர் பொருளும். கோடை காலத்தில் ஒத்துக்கொள்ளும் ஜஸ்கிரீம் குளிர் காலத்தில் பொருந்தது பல நோய்களுக்கு நம்மை ஆளாக்குவதும் அங்ஞனமே.

ஆகவே அதனை உணர்ந்து நாம் நம்முடைய உணவுப்பழக்கங்களை வைத்துக்கொள்ளவேண்டும். அதையே இறைவனுக்கு படைக்கும் பழக்கம் நம்மிடையே உண்டு. அந்த அந்த பகுதியின் பஞ்சபூதங்களின் அளவிலே அந்த கோயில் அமைந்திருகின்றது என்பது சூட்சுமமான உண்மை. அதை நீங்கள் தயவு கூர்ந்து உணரவேண்டும். அதனால் எந்த கோயிலுக்கு சென்றாலும் அந்த கோயிலின் தலவிருட்சத்தின் ஒரு இலையாகினும் நீங்கள் பெற்று அதே அங்கேயே உண்டு

விடுதல் வேண்டும். நல்ல வேளை வாழை இலை தலவிருட்சமாய் இல்லை.

இதே முறைதான் அந்த அந்த ஆலையத்தின் தீர்த்தங்கள். பருகும் தீர்த்தமும் இருக்கும் குளிக்கும் தீர்த்தமும் இருக்கும் முடிந்த அளவிற்கு இரண்டையும் அந்த இடத்தில் செய்வது சாலச்சிறந்தது. நம்உடல் நலத்தை காத்து கொடுக்கும் அம்மூலிகை மரங்கள் மூலிகை செடிகள்

சித்த வடிவானவை.

புல்லாகி பூடாகி புழுவாகி- மரமாகி
எல்லாப்பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான் என்பது
சிவபுராண சிவவாக்கு. இப்பொழுதும் அருகம் புல் சாறு அருந்துவாறும் உண்டு. கிழங்கு வகைகளை மருந்தா பயன் படுத்துவாரும் உண்டு. புழுவாகி தயிர் போன்றவை பெறுவதற்கும் உழவுக்கு உதவி உணவு தருவதும் உண்டு. மரமாய் இருந்து எல்லா விதத்தில் உயிர்களுக்கு
உதவும் சிவபணி அவைகள் செய்து செய்து இளைக்கின்றன ஏன் இறைவனின் திருவடிகாண. நாமும் அதில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறோம். அந்த மகிழ்விலே இறைவன் திருவடி கண்ட
நிலை பெறுகிறோம் தானே.
செம்மை நலத்தால் சிவபணிகள் செய்வேனுக்கு
இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானை கொண்டன்றே.
திருவாசக வாக்கு.
84. பொழுது:

இது நேரத்தை கணக்கிட முற்காலத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டு வந்த வார்த்தை. விடியல்பொழுது அந்திப்பொழுது, காலைப்பொழுது, மாலைப்பொழுது என்று நான்கு காலம் இன்னும் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆனால் அதிகமான நேரத்தை குறிப்பதாய் இருக்கின்றது. அதற்கு மட்டும்தான என்றால் இல்லை. எப்பொழுது அப்பொழுது இப்பொழுது தற்பொழுது நடுப்பொழுது, என்றும் வழக்கத்தில் இருக்கின்றது. அதே போல் ஒன்றை குறிப்பாதாயும் சொல்ல வருகின்றது. தருகின்றபொழுது விடுகின்றபொழுது சொல்கின்ற பொழுது என்பனவாகும். இலக்கணம் போல் இருக்கின்றதா? பயம் வேண்டாம். தொல்காப்பியனாரை இன்னும் தொடவில்லை. ஆனால் தமிழுக்கு உரித்தான சுவையே நாம் நினைப்பதைச் சொல்ல முடியும் இனிமைதான். மிகச்சிறிய கால அளவை பலகாலத்திற்கு பிறகுதான் மேலை நாடுகள் கண்டன. ஆனால் நம்மவர்கள் பல்லாயிரக்கனக்கான ஆண்டுகளுக்கு முன்னே கண்டுவிட்டனர். நொடிப்பொழுது, இமைப்பொழுது என்பன சில.

இந்த நேரம் எங்கிருந்து வந்தது? எவ்வாறு உணரப்படுகிறது? எதை நேரம் என்று சொல்கிறோம்? இதெல்லாம் நாம் யோசித்திருக்கின்றோமா? ஒரு செயலில் இருந்து அடுத்த செயலுக்கு செல்லும் இடைவேளை என்று கொள்ளலாம். அல்லது நம்முடைய சக்தி வெளிப்பட்டு அது முடியும் வரை உள்ளதை சொல்லலாம். எவ்வாறு எடுத்தாலும் அது முடிந்து விட்ட செயலை பற்றி சொல்லுவதாய் இருக்கின்றது. ஆனால் ஒரு செயல் ஆரம்பிக்கப்பட்டு முடியும் வரையில் எது அதனை இழுத்துச் செல்கின்றது. எது அச்செயலை செய்ய வைக்கின்றது. எது அங்கு காலமாய் இருக்கின்றது. அது முடிவுறவும் தொடரவும் செய்வது எது? என்பது தான் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று. கீழே தந்தவற்றை படித்தால் சிறிது புரியத்தொடங்கும்.

ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்- திரு அப்பர் சுவாமிகள்

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் - மாணிக்கவாசக பெருந்தகை.

இக்குருமார்கள் தங்கள் மனமெல்லாம் இறைவனை நிறைத்து அதில் தங்கள் காலத்தை மறந்து காலத்தை வென்றார்கள் என்பதே

உண்மை. ஆக நம்மை இயக்குவதும்இ இயக்கத்தின் முதலாயும் முடிவாயும் இருக்கும்இ இறைவனே காலத்திற்கு பொழுதிற்கு ஒப்பாகிறான். ஆதனால்தான் அவன் நினைவிலே வாடுவோர் வாழுவோர் காலத்தைப்பற்றி சிந்திப்பதில்லை. முடிவைபற்றியும் சிந்திப்பதில்லை. எல்லாம் அவனாகி நிற்கின்றபோது அந்த நினைப்பு எங்கே வரும். அவன் காலத்தை கடந்தவனாய் நமக்கு பின் தெரிவதை முன் அறிந்தவனாய்இ அருகில் வைத்தால் முன் உணர்த்துபவனாய் முடியும் செயலை முன்னதாயும், முடியாதென்று எண்ணுவதை முடித்தும் அவன் தானே வைக்கின்றான். அவனே எல்லாமாய் இருக்கின்றான் என்ற எண்ணம் மனம் வருமேயானால் அவன் வருவானே. அப்பொழுது அப் பொழுது போகாத பொழுதாய் புலராத பொழுதாய் மறையாத பொழுதாய் ஆகிவிடாதா? மனமெல்லாம் அவனாய் ஆகிவிடாது அவனையும் அதிலிருந்து விடாது இருந்துவிட்டால் இன்பமான பொழுது அதுதானே. அப்பொழுதை எப்போது பெற இயலும்.?

மனதில் தப்பேதும் இல்லாது செயலில் பழுதில்லாதிருந்து குணம் குன்றாது இருந்து தந்தவனை இமைப்பொழுதும் மறவாது நெஞ்சமெல்லாம் நிறைத்திருந்தால் நிச்சயம் பொழுது போக்கிற்க்கென்று ஏதும் தேவைப்படாது. மனமெல்லாம் மணவாளன் இருந்தால் மற்றவைக்கு நேரம் ஏது? எண்ணந்தான் ஏது? செயல் அதாய் நடந்து கொண்டே இருக்க மனம் அவனை தன்னுள் வார்த்து விட பின் காலம் என்ன நேரம் என்ன? அவனே காலம். அவனே நேரம். அவனே நொடி. எல்லாம். எதைப்பற்றிய கவலை நமக்கு எதற்கு? எதைப்பற்றிய சிந்தனை நமக்குகெதற்கு. எல்லாம் அவன் காலச்சக்கரத்தில் அவன் விருப்பாய்

வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உந்தன் விருப்பன்றே

என்ற திருவாசக மந்திரமாய் வாழ்ந்து பழகிக்கொண்டால் பின் துன்பம் ஏது? அல்லல் ஏது?. எல்லாம் இன்பமாய் அமுதாய் ஆனந்தமாய் அமைதியாய் மாறிவிடாதா? எங்கும் அவன் செயலாய் காணத் தோன்றாதா? ஏல்லாம் சிவனனெ நின்றாய் போற்றி என்ற அப்பர் வாக்கு பொய்க்குமா என்ன?

85. போற்றி

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே
போற்றி ஓம் நமச்சிவாய
போற்றி புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய் ஆனார்
போற்றி போற்றி புயங்க பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி
போற்றியோ நமசிவாய சயசய போற்றி

இவ்வளவு நாளும் இந்த சிறு பணியை அளித்த பெருமானை நாயேனை நீயும் நயந்து வந்து ஆட்கொண்டாய் பேயேன் இவ்வறிவு அவன் வழியாய் பெற்றேன் அதற்கு வித்திட்டவள் என் தாய் அகிவத்தின் அறிவு அருள் அவளே. அருள்மிக உள்ளவர் அவர். அருள் தருபவர் அவள். ஆதலாலே அருள்மிகு அருள்தரும் என்றே நாம் எண்ணவேண்டும் எழுதவும் வேண்டும். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. நாம் எம்மாத்திரம். நான் என்று எழுதிக்கொண்டு நினைத்துக்கொண்டு இருந்தவனை நாம் என மாற்றியது அவனே. காரணம் நாம் தனித்தில்லை. அவனோடு இருக்கிறோம். அவனும் தனித்தில்லை அவளோடு இருக்கின்றாள். அவளும் தனித்தில்லை அடியாரோடு இருக்கின்றாள். அவர்களும் தனித்தில்லை அவனோடு தான் இருக்கின்றார்கள். பின் எவ்வாறு நான் என்ற எண்ணம் வரும். ஆனால் அந்த நாமில் நான் யார் என்ற எண்ணம் கேள்வி இருந்து கொண்டே இருக்க அதன் தேடுதல் நடந்து கொண்டே இருக்க அதுவே தான் இருந்த இடத்தை அறியும் வழியாக இருக்கின்றது. தான் பிறந்த மூல இடத்தை உணர இட்டுச்செல்கின்றது. முன்பு அங்கிருந்த அந்த ஆனந்த சுவையை அறிய அலைகின்றது. அது அவனோடு இருந்தாலே பெறப்படும் என்பதையும் உணருகின்றது. அவனை தினந்தோறும் தேடுகின்றது. தனக்கு அவன் தந்த எல்லாவற்றையும் நினைத்து நினைத்து ஆனந்த படுகின்றது. தன்னை காப்பாற்றியதாய் எண்ணும் நினைவை கொடுக்கின்றது. அவன் திறத்தின் ஒரு துளியை அனுபவித்த உணர்வைத்தருகிறது. அந்த அருளைப்பருகியவர்களின் தன்மையை தருகின்றது. அதனை அவர்கள் பெற்ற வழியை சொல்ல செய்கின்றது. அதனை புரிந்து கொள்ளும் அறிவையும் தருகின்றது. அதன் வழி செல்ல முயற்சியை தருகின்றது. அம்முயற்சியே அவன் மேல் பற்றை உண்டாக்குகிறது. அப்பற்று மற்ற பற்றை விடச் செய்கின்றது. அதனை விடச்செய்ய அவனை போற்ற செய்கின்றது. காரணம் அதில் எல்லாம் அவனுடையது நம்மது ஏதும் இல்லை என்பதை தெரியச்செல்கின்றது. அது தொடரவே நாம் அவனை போற்றிக் கொண்டே இருக்கின்றோம். போற்றுதலினாலே

நம்முடையது புகைந்து போகின்றது. ஆனால் போற்றுதலில் பொய் கலப்பில்லை. கலந்தால் அது புகழ்சியே ஆகும். பொருள் கிடைக்கும். அருள் கிடைக்காது. எது வேண்டும் என்பதை நாம் முடிவு செய்து கொள்ள வேண்டும். அந்த முடிவு நம் முடிவைத் தருவதாய் ஒன்றின் ஆரம்பமாய் இருக்கின்றது. முடிவும் தொடக்கமும் நம்மிடம் இல்லை. அடியும் முடியும் போல. அறிவதற்கு அரிது. அதனாலேயே போற்றி என்ற வார்த்தையின் முதல் எழுத்து "ே" இரு முனையும் சுருண்டும் தேடிக் கொண்டு இருப்பதாகி கடை எழுத்து "றி" மேல் சென்று கீழ் வந்து பணிந்து தாழ்ந்து அடி நாடி வணங்கவதே அவனை கண்டறியும் வழியென்பதை உணர்த்துவதாய் இருக்கின்றது. கீழ்நிலையான நாம் என்ன திருமால் பன்றியாய் பிரமன் அன்னமாய் வடிவெடுத்தும் காண அரிய அவன் திருவடி நமக்கு நம்முடைய போற்றுதலின் காரணமாய் கிடைக்க வாய்ப்பு நிறை இருக்கின்றது. வாய்ப்பை நழுவ விடுவது புத்திசாலித்தனமில்லை. இப்போது நமக்கு அவகாசமும் இல்லை. எவ்வளவு சீக்கிரம் அதனை பெற அடைய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அடைதல் மிக்க நல்லது. காலம் தாழ்த்த தாழ்த்த கதவு அடைக்கப்படுமேயானால் நாம் தேறுவது கனவாகி அவன் திருவடி நினைவின்றி வாழ்ந்தும் இறந்தும் வந்து கொண்டும் இருப்போம். இதெல்லாம் யாருக்கு தெரியும். இருக்கின்றவரை இன்பமாக இருந்து போவோம் என்ற எண்ணம் இருக்குமெயானால் அது தவறாகும். குாரணம் இன்பம் ஒன்றும் நிலையானதில்லை என்பது இந்த பிறவியில் அறிந்த பிறகு மற்ற உளிரினங்களின் துன்பத்தை கண்ணார கண்டபிறகும் திருந்தவில்லை என்றால் அதன் நிலை என்ன சொல்வது. நுினைக்க நெஞ்சம் பதறுகிறது. முற்ற உயிரினங்களோடு நம்மை படைத்து அந்த அனுபவத்தையும் கொடுக்கும் அசன் கருணை அறியா பதராய் இருக்கின்றோம் என்பதனாலே

செம்மை நலம் அறியாத சிதரரொடும் திரிவேனை
மும்மை மவம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளிய வாறு யார் பெறுவார் அச்சோவே

இது திருவாசக பெருமானின் தெய்வ வாக்கு. தானே எழுதவைத்து தானே எழுதி தானே மூல பொருளாய் இருந்து அதன் உட் பொருள் தான் தான் என்பதையும் உணர்த்தி அதனை தந்த மாணிக்க வாசக பெருமானுக்கு காட்சி அளித்து தன்னுள் ஈர்த்துக் கொண்டானே அவனை போற்றுதலின்றி வேறு யாது செய்ய இயலும்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசு பெருமான் 1500 போற்றிகளை போற்றி திருத்தாண்டகமாக விட்டு சென்று இருக்கின்றார். அடியாருக்கும் அடியேன் என்று தொடங்கி இறைவனை 63 நாயன்மார்களின் மூலம் வழிபட்டதாய் கொண்டு சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கு ஒரு மூலகருவை புகட்டினர் சுந்தரர். அதுவே திருத்தொண்டத் தொகை எனப்பட்டது. அதுவே இறைவனை போற்றுவாதாய் இருக்கின்றது. ஆக போற்றுதலுக்கு ஒருவனான இறைனை போற்றுதலினால் நம்முடைய அனைத்து வினையும் பொடியாகி இனி வினைகள் செய்யாத மனமாய் நம்மை யாக்கி மனம் பண்பட்டு திறமாகி திடமாகி அவனே என் துணை என்ற ஏற்ற நிலை அளித்து நம்மை காக்கும் அவனை இரவும் பகலும் பிரியாது போற்றுவோம் புகழுவோம் ஆனந்த பண்பாடுவோம். நம் சிந்தனையெல்லாம் சிவமாக்கி மகிழ்வோம். அருள்வார் பெறுவோம்.

86. முடிவு:

27.05.2003 அன்று இப்பணியை தொடங்கினோம். சற்றேறக்குறைய மூன்று ஆண்டுகள் - கிட்டதட்ட 972 நாட்கள் கடந்து வந்தாகிற்று. இது 107 கட்டுரைதான். அடுத்த கட்டுரையோடு 108 தலைப்புகளுடன் உங்கள் ஆசியுடன் நிறைவுற எண்ணம் கொண்டுள்ளோம். 972 நாட்களில் இது 1ன்கீழ் 9 பாகமே. இறைவனின் கொடுப்பினையும் இதுதான் போலும். 972 கூட்டினாலும் 9 வருகிறது !!!!. புரியவில்லை. அவன் பெருங்கருணை. இவ்வளவு நாள் விட்டு வைத்ததற்கு மிக நன்றி. அன்பர்களின் கருத்தையும் அறிய விரும்புகிறோம். இது முடிவன்று. வேரொரு பணிக்கு தொடக்கம் என்றே எண்ணுகின்றோம். இன்றைய செய்தியும் இதுதான். உலகத்தில் எந்த செயலுக்கும் முடிவில்லை. முடியுமானால் அது செயலில்லை. முடிவு என்பதும் நம்மிடம் இல்லை. காரணம் அது அதை ஆரம்பித்தவன் கையில் அல்லவா இருக்கின்றது. நாமே ஒருசெயலை தொடங்குவதாய் நினைப்போமேயானால் அது மூடத்தனம். அந்த செயல் செய்வதற்கான கருவி பொறி மட்டுமே நாம் என்பதை பலர் புரிந்திருந்தாலும் தான் சம்பந்தப்பட்டிருக்கும் போது இதனை ஏற்றுக் கொள்வதில்லை. சுயகௌரவம். சுயமரியாதை. தன்நலம் என்று எதுவேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். ஆக முடிவென்பது முடிவாக நம்மிடம் இல்லை என்பது எந்நிலையில் உள்ளவராயினும் உண்மையே. ஆனால் அதை அறிந்தவனை அறிந்தால் அதன் தன்மையில் மாற்றம் தயவு செய்ய இயலும். வறுமையை மனதார ஏற்றுக்கொள்ளும் பக்குவம் தரப்படுகிறது. அல்லலை அன்போடு

Koviloor Digital Library

அணைத்துக்கொள்ளும் பண்பு தரப்படுகிறது. அதன் தாக்கம் குறைக்கப்படுகிறது. ஆனால் முடிவு மாற்றப்படுவதில்லை.

முடிவு என்பதை நாம் கண்ணார கண்பதும் முடிவில்லை. குழப்புகிறதா? குழம்ப வேண்டாம். குழம்பினால் இவ்வளவு நாட்கள் பாடுபட்டது வீணாகிவிடும். தெளிவு வேண்டியே 106 தலைப்புகள் செய்யப்பட்டது. அது ஒன்று தான் அதன் சாரம். ஆனால் முடிவு என்று சொல்ல இயலாது. காரணம் இது வேறொன்றின் தொடக்கமாய் சிந்தனை முடிவடையாது சற்று நிலை மேல் எழுப்பச்செய்யும் செய்தியோடு இறைவனின் கருணையும் இணைத்து வருவது பெருமைதானே. வேறெரு நிலைமாற்றமே ஒழிய முடிவு என்று ஏதும் இல்லை.

அப்படியானல் முடிவு என்பதற்கு முடிவுதான் என்ன? உங்கள் கேள்வி இது தானே? இந்த கேள்விக்கு பதில் சொல்லிவிட்டால் உங்களுக்கு தெளிவு கிடைக்குமேயானால் தெளியப்படும். இறைவனின் திருஅருளோடு. காரணம் இது இறைவனின் விருப்பம். அவன் விருப்பம் நம் வழியே வருகிறது. நாம் அனைவரும் அவன் திருவடியில் இருந்து வந்தவர்கள். அவன் விருப்பத்தைதான் நாம் இங்கு இந்த பூமியில் இந்த பிறவியில் செய்து கொண்டு இருக்கின்றோம். நாத்தீகமும் ஆத்தீகமும் பேசிக்கொண்டு கேட்டுக்கொண்டு. நம்முடைய மனப்போக்கில் நாம் வாழ்ந்து கொண்டும் மகிழ்ந்தும் வருந்தியும் தேவையற்ற அல்லலை அல்லலாய் நினைத்தும் வாழ்ந்து கொண்டும் இருக்கின்றோம். இதெல்லாம் எதில் இருந்து வந்தது? எப்படி அறியப்பட்டது? இன்னும் கேள்விக்கு பதில் வந்தமாதிரி இல்லை? புரிகிறது நீங்கள் புலம்புவது. சிறிது நேரத்தில் புரிந்து விடும். பொறுமை அவசியம்.

கேள்விகள் வேள்வி போல் அனல் பறக்குமேயானால் பதிலும் சுடசுட கிடைக்கும். பதிலை நெருங்கிவிட்டதாய் உணருகிறீர்கள் தானே. அனலை கையேந்தி ஆடும் அவனின் திருவிளையாடல் எது? ஏன்? நான்கு(திசை) கைகளில் ஒன்றில் அனலும் ஒன்றில் அபயமும் ஒன்றில் திருவடியையும் ஒன்றில் உடுக்குமாய் தன் வலக்காலை(மாயாசக்தி) அந்தரமாய் தூக்கி ஒரு காலடியில் முயலகனை ஏற்றி நிற்கின்ற அவன் கோலம் ஏன்? எதற்கு? அவன் கோலமே நமக்கு பதில். அவன் நாட்டிய வடிவமே நமக்கு அருளும் நிலை. அதுவே நம் கேள்விக்கு பதில். எப்படி?

Koviloor Digital Library

ஆகாயமாய் ஒலி வடிவத்திலே இருக்கும் நான் அனலாய் இருந்து உன்னை முடிப்பேன் எப்போது நீ என் விரல்கள் காட்டும் அந்தரமாய் நிற்கும் மாயை எனும் வலக்காலை சுற்றி என் அபயமாகி வாழ்ந்து மண்ணுலக வாழ்வில் உழன்று தெளிந்து சுத்தமாகி என் காலடியில் முயலகனாக முயல முடியாது பிறக்க வேண்டி இல்லாது இருக்கும் போது என் எரிகொண்டு உனக்கு முடிவை தந்து ஆகாய உலகத்திலே ஒன்றாக இருக்கும் என்னோடு உன்னை வைத்துக் கொள்வேன் என்பதே நான் ஒரு உயிருக்கு தரும் முடிவு-

என்பதே அந்த நடராச மூர்த்தியின் உள்பொருள்.

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி -1- ஆகாயம் செவி- அருளல்
வளியிடை இரண்டாய் மகிழ்தாய் போற்றி -2-காற்று- மூக்கு- மறைத்தல்
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி -3-நெருப்பு- கண்- அழித்தல்
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி -4-நீர்- வாய்- காத்தல்
பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி -5-நிலம் - வாய்-படைத்தல்

நம்முடைய முடிவும் இதன் முறையாக நடக்கின்றது. அவனே அவனாக அதுவாக அவளாக நின்று ஆயிரம் நாமங்கள் கொண்டு அவனே அதனை ஆக்கி அவனே அதனை ஊக்கி அவனே அதனை தேக்கி அவனே அதனை மாற்றி அவனே முடித்து தன்னுள் கொள்வதே அவன் தன்மை. அவன் பெரியவன். அவன் பெருமையுள்ளவன். அவன்

அற்புதன் காண்க அநேகன் காண்க
சொல்பதம் கடந்த தொல்லோன் காண்க
அந்தமும் ஆதியும் கடந்தோன் காண்க
நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க
யாவரும் பெற உறும் ஈசன் காண்க
தேவரும் அறியா சிவனே காண்க.

என்ன கண்டீரோ முடிவை. தெளிந்தீரோ உங்கள் வாழ்வின் வழியை. இது மாணிக்கவாசக பெருந்தகையின் வாக்கு.

KOOR ANDAVAR
A. No: 36034
BRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் பெயர் : **கோ. சந்திரசேகரன்**

கல்வித்தகுதி : B.E. (இயந்திரவியல்), M.A(தமிழ்)., M.Phil.

பதவி : முதுநிலை மேலாளர்
பாரத மிகு மின் தொழிலகம்.
திருச்சி - 14

விலாசம் : 40, பிரதான சாலை
வி.எஸ் நகர், வேங்கூர்
திருச்சி - 620 013.